[அன்பளிப்பு]

உ

# அமலாதித்யன்

அல்லது

## குர்ஜரத்து அரசிளங் குமரன்.

3892.

XXV. A. 53

இந்த நாடகம்

ஷேக்ஸ்பியர் மஹாகவி ஆங்கிலத்தில் எழுதிய

'ஹாம்லெட்'

என்னும் நாடகத்தை அனுசரித்து

**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,**

அவர்களால் இயற்றப்பட்டது.

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நாடகங்கள் :—"லீலாவதி-சுலோசனை," "கள்வர் தலைவன்," "இரண்டு நண்பர்கள்," "மனோஹரன்," "சத்ருஜித்." "சாரங்கதரன்," "யயாதி," "வேதாள உலகம்," "காலவரிஷி" முதலியன.)

சென்னை

டௌடன் கம்பெனியாரால்

அச்சிடப்பட்டது.

1908.

All rights reserved.]

[விலை ரூபாய் 1.

CAF
O - 91 Ama
D8

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY FATHER.**

"He was a man, take him for all in all
I shall not look upon his like again"

*Hamlet.*

# PREFACE.

I owe an apology to the public for venturing to consider Shakespeare's 'Hamlet' capable of adaptation and by me and into Tamil. In making the attempt I had only two objects mainly in view. The first was, that I may help to render accessible in however crude a form the treasures and beauties of Shakespeare to my sisters and brothers of the Tamil land who do not possess the requisite knowledge of English to study and appreciate the original. In the second place, as one who has devoted the best years of his life to an endeavour to resuscitate and elevate the Indian Stage, I was prompted by the hope that such adaptations will serve to exalt the dramatic ideals current in the country. My friend Mr. V. V. S. seems to think that the adaptation is likely to interest even readers to whom the original is not a sealed book. I shall not quarrel with him especially if he happens to be right. The rendering is what I have called it an adaptation and not a translation. Though I have always endeavoured my best to translate as literally as conditions permitted, I have not hesitated to sacrifice literalness in the rendering to what I conceived to be the reproduction of the real sense or force of the original. I have also tried to render the names of persons and places, allusions and allegories and puns and proverbial sayings so as to suit the Tamil garb of the rendering.

I am bound to acknowledge that, in my desire to publish the adaptation, I was considerably encouraged by the appreciation of the work generously expressed of some of our eminent men such as Sir S. Subramania Iyer and The Hon'ble Mr. V. Krishnasawmi Iyer.

I shall rest satisfied if my attempt to render Shakespeare results in some measure at least in promoting the objects I had mainly in view.

I must not fail to thank my friend Mr. V. V. Srinivasan for his introduction.

MADRAS,<br>*24th November 1908.*

THE AUTHOR.

11599

# INTRODUCTION.

It was about sixteen years ago that Mr. Sambandam began his career as an author. Endowed with a fine and fertile imagination the ardent and aspiring author would not be content with anything short of original dramas. The conception of a plot was as easy as putting one and two together. The writing of the drama took as long as the physical ac of writing down demanded. Scene after scene was written off withou a single word being scored out and one almost wondered whether it was a point of pride with the budding author.

So it was in the good old days. Since then Mr. Sambandam has written over two dozen dramas of all degrees of excellence. And it would almost seem that it was not till he was tired of being original that a few years back he took to translating into Tamil some of the plays of Shakespeare.

At first sight it does appear to be the reverse of the order of development. Literary talent sharpened by exercise in translation may be expected to be put later to the more arduous task of original production. When however an author after writing original dramas, some of which are of no mean quality, deliberately turns to devote his time and talents to the comparatively degraded and mechanical task of translating and adapting dramas written in other languages, one feels inclined to exclaim that the author's powers must have become exhausted and his springs of originality dried up. But it is happily not so. It is not every production to which the term original can be extended that can rank as a literary performance over a translation be its merits however high. Character and quality are not mere matters of class or caste and an unpretentious translation may be a more valuable contribution to a literature and language than a whole library of worthless original productions, so called. And when the translation or adaptation is that of a Shakespeare and is not a miserable caricature who can doubt that the language into which the translation or adaptation is made would be more richly endowed by the effort than by a hundred, even tolerably good stories, told in dialogue and divided into scenes and acts.

It is however beyond my present purpose to estimate the exact value of the contribution to the Tamil language and literature made by Mr. Sambandam in his rendering of Hamlet. My acquaintance with Shakespeare is not that of a scholar and my knowledge of the Tamil language is less than that of an amateur. My chief object however in allowing myself to be induced to write this introduction in English, is, to make for the translation now presented to the public and thereby for such translations generally, a claim that they would abundantly repay perusal even on the part of those who are by reason of their education in a position to study and appreciate the original in English. For, the utility of such adaptations to those who are unacquainted with the English language and even to those whose knowledge of it is not sufficient to enable them to understand the finer shades of thought, will be readily conceded. It is therefore in respect of persons alone to whom the original work of art, in all its pristine beauty, is accessible and open, that the question will be sure to be asked, of what conceivable use to such can these translations or adaptations be, of what use the copy, at best of doubtful accuracy and merit, to him who owns the original painting of the artist, itself. An answer to this question in the affirmative would be seen to involve necessarily the establishment in a measure of the claim of translation to the rank of a separate literary art. It seems to me that it is even a fine art and that when its true nature and function come to be properly recognised, it will be realised how it appeals at once to the refined scholar of language and the student of the art of renderings and re-presentations.

To some indeed such a claim is apt to sound as extravagant. But it is really not so. It is the function of painting to represent the world through the medium of colour so as to body forth the beauty in it. So is it the function of music to represent the world through the medium of sound and give us a glimpse of the divine pulsations in the heart of existence and the infinite harmony of it. Even so is it the function of the fine art of translation to represent an original production in one language through the medium of another language so as to body forth the beauty of the original. The analogy indeed goes even further. As it is to the person who has seen the original of the subject of the painting that the painting speaks most eloquently, so is it that a good translation appeals most, not to a person who has never read the original but to him that has perused it a hundred times and lovingly dwelt on each word

and phrase and on the thousand points of light and shade, of subtle suggestion and inexplicable charm.

It is therefore a mistake to suppose that the translation of a literary work in one language into a different language, is, as is generally supposed, no better than a copy in colours of an original painting. The comparison would, no doubt, be accurate, if the medium of reproduction were identical, as it is in the case of the illustration. Colour is dead matter, however much life may be imparted to it on the canvas by the skill of the artist: and being dead matter, its identity is preserved whenever and however applied as a medium of expression. But it is not so with language. Language is a living medium and every language has a distinct individuality and character of its own. Hence it is that the translation of a work into a different language is claimed to be its re-presentation through a different medium and as bearing more the relation of a painting to the subject of the painting than that of a copy to its original. In the latter case, if the original is available, the other becomes unnecessary ; but in the former case even to the most practised student of the beauties of nature, the sight of the painting will be calculated to suggest points and aspects which escaped the mind in the act of direct perception. So also is it with a translation into a foreign language. Far from being useless, it is calculated to suggest to the mind points and aspects in the original which might have escaped the most refined and cultured mind critically studying the original. A sense of the difficulties that had to be encountered, and the measure of success achieved, of the countless rejections made and the selection that prevailed, of the significance attaching to forms of expression, succession of sounds, or any given order of words or ideas, of any differences in the resultant impressions and also the differences if any in the means by which the resultant impressions are produced,—these are only a few of a large number, that can be mentioned, of the aspects of a translation which enable us to perceive beauties in the original which will not be perceptible on ever so close and critical a study of the original alone. Let me add that this has been my experience and I have no doubt that a large number of those who read this adaptation of "Hamlet" by Mr. Sambandam will be inclined to agree with me.

Of all plays of Shakespeare, 'Hamlet' is perhaps not by any means one of the easiest for purposes of translation and the Tamil

language is certainly not the most adapted for such translation. The vocabulary of Tamil may even be said to be poor in terms descriptive of mental conditions and feelings so abundant in "Hamlet" with its numerous soliloquies. The phrasing and wording have reached such perfection in the play that the lady really hit it off well, who is stated to have exclaimed on reading it, that it was wholly made up of proverbs and familiar quotations. Such currency of expression is, however, attained mainly by elements which are peculiar to each language and are therefore not susceptible of translation. In the language of its origin and existence, every phrase and every word has a soul, a face and features all its own, and lives and moves clothed in its special character and with its chosen companions. It often contains a hidden figure of speech and carries with it the aroma of its previous history. Vicissitudes of fortune affect its strength, character and out-look. It contracts many alliances and makes numerous friends and enemies in the course of its long life. All these cannot be translated, however accurately the idea underlying an expression or the meaning of a word may be; and it is just by such elements that the best lines in Hamlet are constituted. Above all, it must be remembered that the highest beauty of literary art consists not so much in what is said as in what is but barely suggested or only remotely hinted at, in a something which is indefinable and whose very charm seems to consist in its eluding definition. This quality is produced for instance by a succession of the same or similar sounds, by the juxta position of words, often by a mere trick of grammar, occassionally by an unsuspected pun on the words or conveyed by the etymology of the words used and other devices of a like nature.

The difficult art of translation would thus be seen not to consist in rendering each passage word for word literally, or in loosely paraphrasing the original and writing a paragraph for a phrase. Accuracy of rendering is indispensable. Beauty of rendering is high merit. But a translation may be literally accurate and even beautiful but fail to produce on the mind that totality of effect, of thought and emotion, which is produced by the original. A translation that possesses all these qualities is rare to find. I consider it therefore a privilege to be permitted to introduce to the public, my friend's adaptation of "Hamlet", contained in the following pages. There may be faults in it of sorts and kinds. It may indeed be capable of improvement here, there and elsewhere. But

to admit all this, is only to admit that it is the work of a human being. All told however and every deduction made, Mr. Sambandam's rendering of "Hamlet" would for ever remain a specimen of high literary art.

It revealed to me the possibility of translation attaining to the excellence of fine art. It has impressed me with a sense of the untried capacity of the Tamil language. It has discovered to me new ways of understanding and appreciating Shakespeare. It will serve to indicate the direction in which high and useful literary work may be done in this country and what is more, it has set up an almost-ideal standard of excellence for all the workers in the same field. And it seems to me that it will for long remain one of the most noteworthy contributions to Tamil language and literature in modern times.

I find I have been criticising, theorising, estimating and even judging without really intending to do so, and what is perhaps more to the point, without the necessary knowledge or right. But it will perhaps be remembered that ignorance far from being a disqualification in a judge, is a quality favoring originality in the pronouncements. And having once assumed the role of a judge, I shall not let my own consciousness of my ignorance, very inconvenient if a somewhat uncommon feature, to stand in my way. Mr. Sambandam, has in his original dramas, not merely refused to be bound by the rules of the Sanscrit drama on which Indian dramas are mostly modelled but succeeded in demolishing and destroying all the well-defined land-marks and boundaries of the region of Tamil language and literature by inaugurating a new form of dramatic composition and insisting on writing in unconventional prose. But in the present venture he has, as the result it would seem of long pre-meditation and design, trespassed far beyond the original limits of that language and literature and annexed large and unexplored tracts to it. It is my conviction that such an audacious act of trespass ought not to be allowed to go without being adequately punished and that he should be condemned for the rest of the natural term of his life, which we pray might be very long, to the rigorous task of translating and adapting into Tamil, all the remaining plays of Shakespeare.

VANI VILAS,
*25th October, 1908.*

V. V. SRINIVASAN.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

# அமலாதித்யன்.

## நாடக பாத்திரங்கள்.

காலதேவன் ... ... ... ... ... குர்ஜர நாட்டு மன்னன்.

அமலாதித்யன் ... ... ... ... ... காலதேவன் தமயன் புதல்வன்.

பாலநேசன் ... ... ... ... ... பிரதான மந்திரி.

ரிஹரான் ... ... ... ... ... அமலாதித்யன் நேசன்.

லாதரான் ... ... ... ... ... பாலநேசன் புதல்வன்.

லிதமண்டலன்
ணலயன்
ராஜகாந்தன் ... ... ... பிரபுக்கள்.
கிரிதரன்
அசுரன்

பாரசீலன்
பாணதரன் ... ... ... ... உத்தியோகஸ்தர்கள்.

பிராணசீலன் ... ... ... ... ... ஓர் போர்வீரன்.

பார்த்திபநேசன் ... ... ... ... பாஞ்சால மன்னன் புதல்வன்.

ராயநர்தன் ... ... ... ... ... பாலநேசன் வேலையாள்.

கௌரீமணி ... ... ... ... ... குர்ஜர நாட்டரசி, அமலாதித்யன் அன்னை.

அபலை ... ... ... ... ... ... பாலநேசன் புதல்வி.

ஓர் பண்டாரம், வேஷதாரிகள், இரண்டு வெட்டியான்கள், பிரபுக்கள், தூதர்கள், உத்தியோகஸ்தர்கள், ஓர் ராணுவத் தலைவன், மாலுமிகள், போர் வீரர்கள், சேவகர்கள், சிங்களத்துராய பாரிகள், முதலானவரும், அமலாதித்யன் தந்தையின் அருவமும்.

கதை நிகழிடம் :—குர்ஜரம்.

# அமலாதித்யன்

அல்லது

## குர்ஜரத்து அரசிளங் குமரன்.

## முதல் அங்கம்.

### முதல் காட்சி.

*சீலனபுரம். அரண்மனைக் கெதிரிலுள்ள ஓர் கொத்தளம்.*

*பிராணசீலன் காவலி லிருக்க, மற்றொருபுறம் அவனை நோக்கிப் பாணதரன் வருகிறான்.*

பா. யார் அங்கே ?

பி. அப்படி யன்று, எனக் குரை நீயார் : நில் அங்கே, உன்னை வெளியிடு. [வில்லை வளைக்கிறான்.]

பா. வேந்தர் நெடுநாள் வாழ்வா ராக !

பி. பாணதரா ?

பா. அவனே.

பி. உன் நாழிகைப்படி வந்தனை மிகவும் ஜாக்கிரதையாய்.

பா. நாழிகை இப்பொழுது பதினைந்து ஆயது ; பிராணசீலா, படுக்கப் போ நீ.

பி. விடுவித்ததற்கு மிகவும் வந்தனம். குளிர் மிகவும் கொடுமையா யிருக்கின்றது, மனமும் வியாகுல மடைந்திருக்கின்றதெனக்கு.

பா. காவலில் ஏதேனும் கண்டனையோ விசேஷம் ?

பி. கோட்டான் கீச்சலும் கேட்டே னில்லை.

பா. சரி, போய்வா. வழியில் ஹரிஹரரையும் மாரசீலரையும் காண்பையேல், கடிதிலனுப்பிங்கு, காவல் அவர்கள் என்னுடன செய்பவர்கள்.

பி. அதோ அவர்களது அரவம் கேட்கிறதென எண்ணுகிறேன்.— நில் அங்கே! யார் அது?

[இருவரும் வில்லை வளைக்கிறார்கள்.]

ஹரிஹரனும், மாரசீலனும் வருகிறார்கள்.

ஹ. இந்நாட்டினது நண்பர்.

மா. வேந்தர தாழியர்.

பி. ஆயின் உமக்கு நல் இரவு ஆகுக!

மா. போரஞ்சா வீரனே, போய் வா சுகமாய்: உன்னை யார் விடுவித்தது?

பி. பாணாகரன் காவலிருக்கின்றான், நான் வருகின்றேன்.

[போகிறான்.]

மா. ஹே! பாணாகரா!

பா. ஆம்— என்ன! ஹரிஹரர் இருக்கின்றாரா அங்கு?

ஹ. அவரி லொருகூறு.

பா. வாரும், ஹரிஹரரே, வாரும், உத்தம மாரசீலரே.

மா. என்ன, இன்றிரவு இது மறுபடியும் தோன்றியதோ?

பா. நான் ஒன்றும் பார்க்கவில்லை.

மா. இருமுறை நாம் கண்ட இப் பயங்கரமான தோற்றம் நமது மனோப்பிராந்தியெனக் கூறி நம்பேன் என்கிறார் ஹரிஹரர்: ஆகவே இன்றிரவு இவரை, இரவின் ஜாமமெல்லாம் நம்முடன் கண் கொட்டாது கவனித்திருந்து, இத்தோற்றம் மறுபடியும் தென்படுமாயின் நாம் கண்டது மெய்யென ஒப்புக்கொண்டு அதனுடன் பேசிப் பார்க்க, என்னுடன் வேண்டி அழைத்து வந்தேன்.

ஹ. சீ! சீ! அது தோற்றாது இன்றிரவு.

பா. சற்றுட்காரும் இப்படி, நாங்கள் கூறியதை நம்பேன் எனும் உமக்கு, இரண்டிரவாய் இங்கு நாங்கள் கண்டதை, இன்னொரு முறை செவிபுகக் கூறுகிறோம்.

ஹ. சரி, உட்காருவோம். பாணதரர் இதைப்பற்றி கூறுவதைக் கேட்போம்.

பா. நேற்றிரவுதான், அதோ தூரத்தில், துருவத்திற்கு மேற்கிலிருக்கும் அதே நட்சத்திரமானது, ஆகாயத்தின்கண் இப்பொழுது எரிவிட்டொளிதரும் இடத்திற்கு வந்தபொழுது, மாரசிலரும், நானும், அர்த்தஜாம மணி அடிக்க—

அருவம் தோற்றுகின்றது.

மா. பொறு, நிறுத்து பேச்சை! அதோ பார் மறுபடியும் வருகின்றது!

பா. அதே உருவம்! மரித்த மகாராஜாவின் சாயையே!

மா. நீர்தான் படித்தவர். ஹரிஹரரே, அதனுடன் பேசிப்பாரும்.

பா. அரசரைப்போலவே இல்லையா? உற்றுப்பாரும், ஹரிஹரரே.

ஹ. அவ்வுருவே.— ஆச்சரியமும் அச்சமும் அறுக்கின்றது என்னை.

பா. தன்னுடன் பேசச் சொல்லுகின்றதுபோலும்.

மா. ஹரிஹரரே, வினவிப்பாரும்.

ஹ. நீ என்னை? மடிந்து புதைக்கப்பட்ட குர்ஜரத்தரசர் சில காற்கொண்ட அழகிய போர்க் கோலத்துடன் இந்நள்ளிரவில் துராக்கிரமித்ததென்? தெய்வத்தின்மீது ஆணைவைத்துக் கேட்கிறேன், பேசுவாய்!

மா. அது கோபித்துக்கொள்கிறது.

பா. பார், அது ஒதுங்கிவிடுகின்றது.

ஹ. நில்! பேசு, பேசு! ஆணையிடுகின்றேன், பேசு!

[அருவம் மறைகின்றது.]

மா. மறைந்தது, மறுமொழி கூறாது.

பா. இப்பொழுது என்ன சொல்கிறீர் ஹரிஹரரே ? உமது உடல் நடுக்குகின்றது, முகம் வெளுத்துக் காட்டுகின்றது. இது வெறும் சித்தப் பிரமையைவிட அதிகப்பட்ட தன்றோ? இப்பொழுது இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர் ?

ஹ. சுவாமியே என்னெதிரில் வந்து கூறியபோதிலும், இதை நான் உண்மையாக என் கண்ணாரக் கண்டிராவிட்டால் நம்பியிருக்கமாட்டேன்.

மா. அரசரைப்போ லில்லையா அது ?

ஹ. நீ உன்னை ஒத்திருப்பதைப்போலவே, அது அரசரை ஒத்திருக்கின்றது. பேராசையுடைய பார்த்திபநேசனை எதிர்த்து யுத்தம் புரிந்தபொழுது அவர் அணிந்திருந்த கவச மதுவே. விவாத மொன்றில் வெஞ்சின மூண்டு, பாலிகநாட்டினரைக் குவலயப்படக் கொன்றபொழுது, அவர் புருவ நெளித்து நோக்கிய நோக்கே, என்ன ஆச்சரியம் !

மா. இம்மாதிரி இதற்குமுன் இரண்டு முறை, சரியாய் நள்நிசியில் இந் நேரத்திற் கெல்லாம், போர்க் கோலத்துடன் கடந்து சென்றார் எங்கள் காவலை.

ஹ. இதைக் குறித்து இன்னது எண்ணுவதென்று எனக்குத் தெரியவில்லை ; ஆயினும் யோசிக்குமிடத்து, மொத்தத்தில் நமது நாட்டிற்கு நேரிடப்போகின்ற ஏதோ ஓர் பெருங் கேட்டினைக் குறிக்கின்ற உற்பாதம்போலும்.

மா. சரி, உட்காருங்கள் சற்று, அறிந்தவர் யாரேனும் கூறட்டும் எனக்கு ; எதன் பொருட்டு இரவெல்லாம் இக் கடினமான கண் கொட்டாக் காவல் ? இரவெல்லாம் இந்நாட்டு ஏழை ஜனங்களை வருத்தி வேலை வாங்குவானேன் ? போர் முகப் படையெல்லாம் ஓர் நாளும் விடாது செய்து வருவதேன் ? ஆயுதங்களை அயல்நாட்டு வணிகரிடமிருந்து தினம் வாங்குவதேன் ? மீகாமரும் மரக்கல வினைஞரும் ஓய்வு நாள் ஒன்றுமின்றி நமது நாவாய்களை யெல்லாம் ஏன் செப்பனிட்டு வரு

கிறார்கள், வருவ தென்னும் ? இரவு பகல் இடைவிடாது இவ் விதம் வியர்க்க வியர்க்க வேகமாய் வேலை செய்வானேன் ? யார் எனக்குச் சொல்ல முடியும் ?

ஹ. சொல்ல முடியு மென்றால், நான் செவியுற்ற ரகஸ்யமும் அங் ஙனமாம். சற்று முன்பாக நாம் கண்ணுற்ற அருவாய் மடிந்த மகீபன், பாஞ்சாலன் பார்த்திபநேசனால் தனி வெம்போருக் கழைக்கப்பட்டு, தனது பராக்கிரமத்தைக் காட்டவேண்டுமெ னும் ஞாயதான பௌரஷத்தால் உந்தப்பட்டவராய் ஒப்புக் கொண்ட விஷயம் நீர் அறிந்ததே. அவ் வெஞ்சமரில், உலகத்தார் எல்லோராலும் சுத்த வீரனாய் மதிக்கப்பட்ட சூரனும் நமது மன்னன், பார்த்திபநேசனைப் பரலோக மனுப்பி னார். ஜெயித்தவன் தோல்வி யடைந்தவன் உயிருடன் அவன் உடைத்தாயிருந்த தேசத்தையும் கைப்பற்ற வேண்டுமென்று அவர்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட, க்ஷத்திரிய தர்மத்திற்கும் ஒத்ததா யிருக்கும் பந்தய உடன்படிக்கையின்படி, பாஞ்சா லன் பாரெல்லாம் நமதரசன் பங்காயது. இதற் கெதிராக நமதரசர் தக்கதோர் பாகத்தைப் பந்தயம் வைத்திருந்தார், பார்த்திபநேசன் ஜெயித்திருந்தால் அவன் பங்குக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் அந்தப் பாகம், அவன் தோற்றதினால் அந்த உடன்படிக்கையின் கோட்பாட்டின்படி அவன் பங்கு நமது அரசன்பால் ஆனதுபோல. இப்பொழுதோ, பார்த்திபநேசன் புதல்வன் இளமையின் கொழுமையும் உற்சாகத்தின் சூடு முடையவனாய் பாஞ்சாலத் தெல்லையிலுள்ள கானக நண்ணி, அங்குள்ள நீதிக் கடங்கா முரட்டுவனவர் முதலானோரை ஒருங்கு சேர்த்து யுத்தத்திற்குச் சித்தப்படுத்திவருகின்று னும். இது நமதரசாட்சியார் அறிந்திருக்கிறபடி நம்மிட மிருந்து தன் தகப்பன் தோற்ற தேசங்களைப் பலாத்கார மாய்ப் புய வலியால் மீட்கவன்றி வேறொரு காரணம்பற்றி யன்று. இதுதான் நம்முடைய தேசத்தில் இப்பொழுது நடக் கும் ஆயத்தங்களுக்கும், நாமிப்பொழுது காவ லிருப்பதற்கும், நாடெங்கும் குழப்பமாய் விரைவில் யுத்தசன்னத மாவதற்

கும் முக்கியமான காரணமென நினைக்கின்றேன்.

பா. அதையன்றி வேறு காரணமில்லையென நான் நினைக்கிறேன். நாம் காவ லிருக்கு மிடம் கவச மணிந்து போர்க் கோலத் துடன் இவ் வருவம் இச் சமயம் வருவது தக்கதாகவே இருக் கின்றது: இந்த யுத்தத்திற் கெல்லாம் அக் காலத்தும் இக் காலத்தும் காரணமாய நம தரசரை ஒத்தே யிருக்கின்றது.

ஹ. இது எனக்கு மிகுந்த மனக் கவலையை உண்டுபண்ணுகின்றது. பூர்வம் ஒப்புயர் வற்ற இட்சவாகு வம்சத் துதித்த வள்ள லாகிய இராஜேந்திரன் திலீபன் மடியுங் காலத்திற்குச் சற் றுமுன், பூதப் பிரேத பிசாசங்க ளெல்லாம் பூமி யெங்கும் திரியத் தொடங்கினவாம்: ஆகாயத்தில் வால் நட்சத்திரங்க ளும் விண்மீன்களும் தோன்றி உதிர மழை பொழிந்து வரப் போகின்ற உற்பாதங்களை உணர்த்தியவாம், சமுத்திர மண்ட லத்தை அடக்கி யாளும் சீதக்கிரணமுடைச் சந்திரனும் கிரக ணத்தால் பிடிக்கப்பட்டு யுகாந்த காலத்தி லிருப்பதுபோல் தன்னொளி மழுங்கிக் கறுத்தனனும், இத்தகைய மகோற் பாதங்கள் இனி வரப்போகின்ற பெருங் கேட்டை உணர்த்து வதேபோல் — பின் வரும் கெடுதியை முன் உணர்த்துஞ் சகுனமாக— ஆகாயமும் பூமியும், நமது நாட்டிற்கும் நாட் டினருக்கும் அறிவித்திருக்கின்றன.

அருவம் மறுபடியும் தோற்றுகிறது.

பொறு! அதோ பார்! அதோ மறுபடி வருகின்றது!— எதி ரிற் செல்கிறேன், என்னை அறைந்தாலும் சரி!— அலகையே, நில்! உன்னால் வாய் திறந்து பேச முடியுமாயின் பேசு என் னுடன்: உன் துயரத்தை நீக்கி எனக்கு நன்மை பயக்கச் செய்யவேண்டிய நற்காரியம் ஏதாவது உண்டானால், சொல் என்னிடம்!— முன்பறிந்து விலக்க வல்ல, உன் நாட்டிற்குச் சம்பவிக்கப்போகின்ற கேட்டை ஏதேனும் அறிவையேல், கூறு என்னிடம்!— ஜனங்கள் கூறுகிறபடி, ஆயுட்காலத்தில் அநியாயமாய் அபகரித்துப் புதைத்து வைத்த ஏதேனும்

பொருளின்பொருட்டு இவ்விதம் இறந்தபின் அலகை யுருக் கொண்டு திரியவேண்டி வந்தால், அதைப்பற்றி உரை எனக்கு !— நின்று கூறிவிட்டுப் போ !— மாரசிலா, போக விடாதே அதை ! [கோழி கூவுகின்றது.]

மா. என் வாளால் அதை வீசுவதா ?

ஹ. வீசு, நில்லாவிட்டால் !

பா. இதோ !

ஹ. இதோ ! [அருவம் மறைகின்றது.]

மா. மறைந்துவிட்டது ! காம்பீரம் பொருந்திய அவ்வருவை நாம் கத்தியைக் கையிற்கொண்டு கண்டிக்கப்போவது தவறு ! வெட்ட வெளியை வெல்வது எங்ஙனம் அசாத்தியமோ, அவ்வாறே இதை வெல்ல நம்மா லாகாது ; நாம் வீணாய் வெட்டுவது வியர்த்தமான பிரயத்தனமே !

பா. சேவல் கூவுமுன் பேச வாய் திறந்தது.

ஹ. அதைக் கேட்டவுடன் நியாயஸ்தலத்திற்கு அழைக்கப்பட்ட குற்றவாளியைப்போல் திடுக்கிட்டது. தினகரன் வரவை எதிர் நோக்கித் தன் தெள்ளிய குரலெடுத்துக் கோழி கூவியவுடன், இரவில் ஆங்காங்கு சஞ்சரிக்கும் பூதப் பிரேத பிசாசங்களெல்லாம், அப்பு பிரித்வி தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்ச பூதங்களில் எங்கிருந்த போதிலும், தத்தம் இருப்பிடம் போய் உடனே சேரவேண்டுமெனக் கேட்டிருக்கின்றேன் : இவ்வுண்மையை இங்கு தோற்றிய உருவம் உண்மைப்படுத்தியது.

மா. ஆம், கோழி கூப்பிட்டவுடன் மறைந்தது. ஸ்ரீ கிருஷ்ணன் பிறப்பு கொண்டாடப்படும் காலம் வருடந்தோறும் வாய்க்குங்கால் பறவைகளெல்லாம் இரவு முழுதும் விடியு மளவும் பாடுகின்றனவென சிலர் கூறுகின்றனர் ; அச்சமயத்தில் பேய் பிசாசொன்றும் வெளியில் நாடாதாம், இரவெல்லாம் பய மற்றதாம், கிரஹங்கள் ஒரு கெடுதியும் செய்யாவாம், எத்தெய்வமும் மனிதரை நாடாதாம், எந்த மந்திர

வாதியின் உச்சாடனமும் செல்லாதாம். அத்தனைப் பரிசுத்தமும் பரங் கருணையும் கூடிய பருவமாம் அது.—

ஹா. ஆம் ஆம், அங்ஙனம் நானும் கேட்டதுண்டு, அதை ஒருவாறு நம்பவும் செய்கிறேன். அதோ பார், ஆதித்யன் உதயமாகுமுன் தன் சிவந்த கிரணங்களை முன்பனுப்பி கிழக்கிலுள்ள பர்வதங்களின் சிகரங்களில் தங்கியிருக்கும் பனியினைப் பயந்தோடச் செய்கிறான். காவல் இனி கலைவோம். நாம் இன்றிரவு கண்டதை நமது இளம் இராஜகுமாரருக்கு அறிவிப்போம்; என்மீ தாணைப்படி கூறுகின்றேன், நம்முடன் பேசாத இவ்வுருவம் அவருடன் பேசும். என்ன சொல்லுகிறீர்கள்? உமக்கிது சம்மதம்தானா? இது இராஜகுமாரனிடத்தில் நமது அன்பையும் அறிவிக்கும், கடமைக்கும் அமைந்ததாகும்.

மா. ஆம், அங்ஙனமே செய்வோமென நானும் வேண்டுகிறேன். இன்று காலை அவரை எங்கு சுலபமாய்ச் சந்திக்கலாமென நான் நன்கு யறிவேன், வாருங்கள். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

115991

# அமலாதித்யன்.

## இரண்டாவது காட்சி.

அரண்மனையில் கொலு மண்டபம்.

வாத்யகோஷம் ; காலதேவன், கௌரீமணி, அமலாதித்யன், பாலநேசன், லீலாதரன், வாலிதமண்டலன், கருணாலயன், மந்திரிகள், சேவகர்கள் புடைசூழ வருகின்றனர்.

கா. நமது பிரியமான சகோதரர் இறந்து காலம் சிறிதே கடந்த போதிலும், அதன்பொருட்டு மனத்தில் துயரத்தை வகித்தல் முறைமை யாயினும், நமது பிரஜைகளெல்லாம் சிந்திய மூக் கும் அழுத கண்ணுமாய்ச் சிந்திக்கவேண்டிய கால மிதுவாயி னும், மானிடப் பிரகிர்திக்கு மனத்துய ரடைதல் சகஜ மாயி னும், விவேகத்தைக்கொண்டு அதனை வென்று, நாம் இறந் தார்க்குத் துய ருறுதலுடன், இருந்தார் கடனையும் கருதலா னோம். அதன்பொருட்டே இதுவரையில் தங்கை முறையா யிருந்த கௌரீமணியைத் தாரமாக்கி, எந்நாளும் எதில ரஞ் சும் இந்நாட்டி னரசியாக்கினோம். ஆகவே மழுங்கிய மகிழ்ச் சியுடனும்,—அழுத கண்ணில் ஆநந்த பாஷ்பத்துடனும், ஈமச் சடங்கில் இன்பத்துடனும், மணச் சடங்கில் மனத்துய ருடனும், இன்ப துன்பத்தைச் சம எடையாய்க்கொண்டு,— மணம்முடித்து மனைவி கொண்டோம். இவ்விஷயத்திற்கு இசைந்த உங்கள் இஷ்டத்தைத் தட்டாது அதன்படியே நடந்து வந்தோம் இதன்பொருட்டு அனைவருக்கும் வந்த னம். பின் வருவது, நீர் அறிந்தபடி பார்த்திபநேசன் புதல் வன் நம்மை அபலனென அவமதித்தோ, நமது அருமைச் சகோதரன் மடிந்ததுடன் குர்ஜரத்தின் மகிமை மழுங்கி ஐக் கியம் ஒழிந்ததென வெண்ணியோ, இதுவே தனக் கனுகூல மாம் சமயமென இச்சை மேலிட்டவனாய், தன் தந்தை வெற்றி வீரனும் நந்தமயனுக்கு, சட்டத்தின் கட்டுப்பாட்டின்படி இழந் த நாடு நகரையெல்லாம் மீட்டும் கொடுத்துவிட வேண்டு மென்று பன்முறை கேட்டனுப்பியிருக்கின்றான். அவ்வளவு

அவன் பொருட்டு.—நாமிப்பொழுது உங்களை வரவழைத்துச் சந்தித்த விசேஷம் ஈதாகும்; பாஞ்சாலன் புதல்வனது விஞ்சிய சேனை முதலியன அவன் சிற்றப்பன் நாட்டில் சேர்ந்தெடுக்கப்பட்டதால், இனி தன் தமயன் குமாரனுக்கு ஒரு உதவியும் புரியாமல் அவனை அடக்கி ஆளவேண்டும் என்று கண்டிப்பாய்த் திருமுகம் இதோ வகுத்து வரைந்திருக்கின்றோம் அவன் சிற்றப்பனுக்கு. அவன் முதுமை மேலிட்டு பல வீனனாய்ப் படுக்கையுடனிருப்பதால் இச்சிறுவனது செய்கையை அறியான் போலும். ஆகவே கருணாலயா, வாலிதமண்டலா, உங்கள் இருவரையும் இத்திருபத்துடன் வயோதிகனை பாஞ்சாலனிடம் அனுப்புகிறோம். இத்திருபங்களில் விவரித்திருக்கின்ற விஷயமன்றி அம்மன்னனுடன் வேறு நீர் பேசி முடித்தற்கு உமக்கு உத்தரவில்லை. போய் வருவீர், விரைந்து சென்று உமது கடமையை முடிப்பீர்.

கரு-வா. மகாராஜாவின் சித்தம், எமது பாக்கியம், இங்ஙனமே எவ்விஷயத்திலும் எங்கள் கடமையை நிறைவேற்றுவோமாக!

கா. சந்தேகப்படவில்லை அதில் நாம். சந்தோஷமாய்ப் போய் வாருங்கள்.

[கருணாலயனும் வாலிதமண்டலனும் போகிறார்கள்.]

பிறகு—லீலாதரா, உன் சமாசாரம் என்ன? நீ ஏதோ நம்மைக் கேட்டனை, என்ன அது? எவனேனும் குர்ஜர மன்னனிடம் குறையினைக் கூறிட அவன் காது கொடாததுண்டோ? நாமாகக் கொடாது நீ கேட்கச் சுதந்தரமில்லாது, நீ எதனை வேண்டக்கூடும்? இச்சைக்கு அறிவு அடிமையாயிருப்பதினும், வாய்க்குக் கை உதவுவதினும், குர்ஜர மன்னன் நின் தந்தைக்குப் பதின்மடங்கு அதிகமாய் உதவுவானென உறுதியாய் நம்பு. லீலாதரா, என்ன வேண்டுமுனக்கு?

லீ. இராஜாதிராஜனே, கேகய மேகக் கேட்கின்றேன் விடை. அங்கிருந்து இங்கு நான் மனமுவந்து உற்றது, கடமைப்படி தமது

மகுடாபிஷேகத்தைக் கண்டு மகிழும் பொருட்டே. கண்டு அக்கடன் முடிந்தமையால் மீண்டும் அந்த நன்னாடேக என் மனம் நாடுகின்றமையால் மன்னித்தென்னை விடையளியும்.

கா. தந்தை தந்தனரோ விடை ? பாலநேசர் புகல்வதென்ன ?

பால. வெகுவா யவன் வேண்ட, கேட்டதற் கிசைந்தேன் வாட்ட மனத்துடன். நானும் வேண்டுகிறேன் உம்மை, விடையளியு மவனுக்கு.

கா. சமயத்தைக் கைவிடாதே, சந்தோஷமாய்ப் போய்வா. லீலாதரா, தெய்வம் அனுகூலிக்குமாக ! நீ கற்ற கலைகள் சவின் பெறக் கருத்தின் வண்ணங் காலங் கழிப்பையால் !

[லீலாதரன் போகிறான்.]

இது நிற்க—நமது ஆத்ம பந்துவும் அருமை மைந்தனுமான அமலாதித்யா,—

அம. [ஒரு புறமாய்] பந்துத்வம் என்னவோ அதிகந்தான், பட்சந்தான் குறைவு !—

கா. மேகத்தால் மறைப்புண்டதுபோல் உன் முகம் என் இன்னும் மழுங்கி யிருக்கின்றது ?

அம. அவ்விதம் அன்று அரசே, வெயிலி லன்றோ வேதனைப் படுகின்றேன்.

கௌ. கண்ணே, அமலாதித்யா, இக் கறுப்பு வேஷத்தைக் களைந்தெறி இனி. குர்ஜரத்தை உனது கண்களால் பரிவுடன் பார்ப்பையால். கவிந்த கண்ணுடன் மடிந்த மகிபரை மண்ணிற் றேடி என்ன பிரயோஜனம் ? மாண்டவர் மீண்டும் வருவரோ ? சாதல் சர்வ சாதாரண மென்பது நீ அறிந்ததே. பிரகிர்தியை நீத்துப் பரத்தை யடைய இருப்பதெல்லாம் இறக்க வேண்டு மன்றோ ?

அம. நிஜம்தான் அம்மா, நிரம்பவும் சாதாரணம்தான்.

கௌ. ஆயின் இதைமாத்திரம் ஏன் ஒரு பொருட்டாகப் பாவிக்கின்றாய் ?

அம. பாவிக்கின்றேன் ! அம்மா, இது பாவனை யன்று. பாவிப்பது நான் அறியேன் ! என் அம்மணி, கருமாதிகள்பொருட் டணி யும் இக்கறுப்புடையும், கம்மலுடன் வரும் இப்பெருமூச்சும், கண்ணது சொரியும் பெரு வெள்ளமும், காந்தி மழுங்கிய என் முக வாட்டமும், இத்தகைய குறிகளும் கோலங்களும் என் உள்ளத்தி லுள்ளதை உண்மையாய் உணர்த்துவன வல்ல ! இவைக ளெல்லாம் பாவனையாம். ஒருவன் இவைகளை யெல் லாம் பாவித்து நடிக்கலாம். வெளியிட ஏலாத தொன்று என் னுள்ளத்தி னுள்ளே இருக்கின்றது. இக்கோலங்க ளெல்லாம் அது தரிக்கும் மேல் வேஷமென வறிவீர் !

கா. அமலாதித்யா, உன் அருங் குணத்திற்கு அருகாக அழகாய் அமைந்திருக்கின்றது, உயிர் துறந்த உன் தந்தைக்குத் துயர்க் கடன் தீர்த்தல். ஆனால் நீ அறியாத தன்றே, உன் தந்தை தன் தந்தை யிழந்தார். அவர் தந்தை அவர் தந்தை யிழந்தார். இறந்தவர்க்காக இருந்தவர் ஈமச் சடங்கென எண்ணி, சில காலம் துயருறல், மைந்தன் முறைமைக் கேற்ற கடைமையே ; இது நிற்க, ஒரே பிடிவாதமாய் ஓயாது ஏக்க முறல் பாபமாம். ஆண் தன்மைக்கு அமைந்த தன்று, ஈசன் விதித்த விதி தவ றெனக் கருதிச் சாதிப்பதாம், மனோ பல மில்லாமையாம், மற் றும் பொறுமை யின்மையாம், கல்விப் பயிற்சி யிலா மௌட் டியமாம். பிறப்பன வெல்லாம் இறத்தல் வேண்டுமென அறி வோம். சாதலினும் சாதாரணம் ஏதும் நாம் இவ்வுலகில் கண்டிரோம். இங்ஙன மிருக்க வீணாய் வெறுத்து மனத்திடை வெந்துயர் உறுவதேன் ? சீ ! இது ஈசனுக் கினிப் பாகாது. இது இறந்தவர்க் கேற்ற தன்று, உலகம் உவப்ப தன்று, அறி விற்கு அணுவளவும் அடுத்ததன்று, தொன்றுதொட்டு தந்தை யிறக்கத் தனையன் துன்புறல் அனைவரும் அறிந்ததே ; உலகம் உண்டாகி முன் பிறந்தவன் முதல் இன் றிறந்தவன் வரை, விதித்த திதுவென மதி என்றும் கூறி வருகின்றது. ஆகவே பயன்படா இத்துயரத்தைப் பற்றற நீத்து நம்மையே நின் தந் தையாகக் கருதுவை, நமக் கடுத்து நீயே இவ்வரசுக் குரிய

வன் என்பதை உலகவர் அறிக நன்ருய். ஒப்பிலாப் பரிவுடை தந்தை தன் காதற் குமரனுக்கு எவ்வளவு மன உவப்புடன் கூறுவனே, அவ்வாறு கூறுகிருேம் உனக்கு. மறுத்தும் நீ பாடலிபுரம் சென்று கல்வி பயில விரும்பல் நமது கோரிக்கைக்கு முற்றிலும் விருத்தமாகும். ஆதலால் உன்னை நாம் வேண்டுகிருேம், இவ்விடமே இருக்க இச்சிப்பையாக, நமது கண்ணெதிரில், சந்தோஷமாய், சுகமாய், நமது ஆசைக்கருகனய், நமது மந்திராலோசனைத் தலைவரில் முதல்வனய், மந்திரியாய், மைந்தனய் இருப்பை!—

கௌ. அமலாதித்யா, உன் அன்னை வேண்டுகோளை வீணாக்காதே: நான் வேண்டுகிறேன் உன்னை; நமது மருங்கில் தங்கியிருப்பையாக; பாடலிபுரம் போகாதே.

அம. அம்மா, என்னாலாம்வரை உமது கட்டளையை நிறைவேற்றுவேன்.

கா. ஆம், இதுதான் காதற் குமரனுக் கடுத்த கனிவாம் உத்தரம். நம்போலவே இந்நாட்டில் வாழ்வையாக! கௌரீமணி, வா. நாம் பலவந்தியாது தானக அமலாதித்யன் இவ்விதம் கனிவுடன் ஒப்பியது, என் ஹிருதயத்தை மகிழ்வுறச் செய்கிறது. இப்பெரு மகிழ்ச்சிக்குப் பெருமையாய், ஆகாயம் அதிர்ந்து இடிபோல் முழங்கி பிரதிதொனி செய்யும்படி, நமது அரண்மனையில் முரசொலி முழங்க, மதுபானத்துடன் விழவு கொண்டாடுவோம்! வா போவோம்.

[வாத்யகோஷம்; அமலாதித்யன் தவிர மற்றெல்லோரும் போகிருர்கள்.]

அம. ஹா! ஐயோ! என்னை வருத்தி வாட்டும் தடித்துக் கொழுத்த இவ்வுடலம் தானய்க் கரைந் துருகிக் காற்றுடன் காற்ருய்க் கலக்காதோ? அல்லது ஆத்யந்தரஹிதன் தற்கொலை தவறன்றென வேதாந்த சாஸ்திரங்களில் விதித்திருக்கலாகாதா? —ஈசனே! ஈசனே! இவ்வுலகமும் அதன் வழிகளும் என்ன

அற்பமாய், ஆயாசமாய், அருசியாய், அப்பிரயோசனமாய்த் தோற்றுகின்றதெனக்கு! சி! சீ! களைபிடுங்காத வயல்கெட்டுக் காடாவதேபோல் புல்லறிவும் பாதகமுமே மேலிட்டுப் பாழாகின்றதே இப்பூவுலகம்! இக்கதிக்கும் வந்து சேருமா? இறந்து இரண்டுமாதம்! இல்லை! இன்னும் இரண்டுமாதமும் ஆகவில்லையே! உலகில் உயர்வொப்பில்லா மன்னன்! அவ்வுத்தம புருஷனைக் கண்ட கண்ணால் இவனைக் காணுதல் மதனனைக் கண்டு மந்தியைக் காணுற்ற தாகுமே! என் அன்னையிடம் என்ன காதல் வைத்திருந்தார்! வதனத்தின்மீது தென்றற் காற்று கடிந்து வீசினும் குன்றுவரே தன் மனம். ஆகாயவாணியே! பூமிதேவியே! மறக்க முடியவில்லையே என் மனத்தில்!—பசி தீர்க்கப் புசிப்பதே அப்பசியினை அதிகரித்தல் போலும், காணக் காணக் காத லதிகரித்துக் கணமேனும் கைவிட்டுப் பிரியாதிருப்பார்களே! அங்ஙன மிருந்தும்—ஒரு திங்களுக்குள்!— ஐயோ! இச்சிந்தை என்னை விடாதோ?— சஞ்சலமே! உன்னையே ஸ்திரீ என்பர் உலகினர்! ஒரு சிறு மாதம்!—கண்ணீர் ஆறாகப் பெருகத் தன் காதலனும் கணவன் பிரேதத்தின்பின் நடந்த நோயும் தீர நேரமில்லையே!— இதற்குள்—என் தந்தையின் தம்பியை—நான் பீமசேனனை ஒத்திருப்பதுபோல் என் தந்தையை ஒத்திருக்கும், என் சிற்றப்பனை! மணப்பதா!—ஈசனே! பகுத்தறியும் சக்தியற்ற பசு பட்சியும் தன் பேடைப் பிரிந்திருந்தால் பதறுமே பலநாள், கதறுமே இன்னும் சில காலம்! கபடமாய் அன்றுகுத்த கண்ணீர் வற்றுமுன் கடிமணம் புரிவதோ? மயானத்தினின்றும் மாறும் மணவறைக்கு மனம் கூசாது விரைவதோ? இதனில் நலமொன்றுளதோ? பல னேதும் பயந்திடுமோ? ஐயோ! நான் வாயைத் திறக்கலாகாது! உள்ளம் வெடித்தே உயிர் மாள வேண்டும்!—

ஹரிஹரன், மாரசீலன், பாணதூரன் வருகிறார்கள்.

ஹ. அரசே, சுபமுண்டாகுக!

அம. சந்தோஷம், வாருங்கள்—ஹரிஹரா!—அல்லது என்னை நான் மறந்தேனோ?

ஹ. இல்லை அரசே; ஹரிஹரனும் உம தூழியனே.

அம. அப்பா, தோழா, அப்பெயரை உன்னுடன் மாற்றிக்கொள்ளத் தடையில்லை. ஹரிஹரா, பாடலிபுரம் விட்டு இங்கு வந்ததென்?— மாரசீலா,—

மா. இளவரசே, நமஸ்காரம்.

அம. மிகவும் சந்தோஷம் வாராய்—[பாணதரனுக்கு] சுதினம், ஐயா, வாரும்—என்ன விசேஷம்பற்றி பாடலிபுரம் விட்டு வந்தது இங்கே?

ஹ. கல்வியிற் கவலையின்றி கரந்து வந்தேன் அரசே—

அம. உன் பகைவனைதப் பகர்ந்திடினும் அதைக் கேட்க விரும்பேன். உனக்கு விரோதமாய், நீ கூறுவதை நம்பும்படி என் செவிகளை நீ மோசஞ் செய்யலாகாது. கல்வியை வெறுத்துக் கரப்பவனல்ல நீ! சிலனபுரம் நாடிய விசேஷம் என்ன? மீண்டும் போவதன்முன் வேண்டியபடி குடிக்கக் கற்கலாமிங்கு.

ஹ. அரசே, உமது தந்தை கருமாதிகளைக் காண வந்தேன்.

அம. உடன் பயிலும் நேசனே, வேண்டுவேன் உன்னை. ஏளனம் செய்யாதே என்னை. விதவையான என் தாய் விவாகத்தைக் காணும்பொருட்டு என எண்ணுகிறேன்.

ஹ. ஆம் அரசே, அதி சீக்கிரத்திற்றுன் அது நேர்ந்தது.

அம. சிக்கனம் ஹரிஹரா, சிக்கனம்! பாலுக்குச் செய்த பணியாரம் ஆறியதும் மங்கலமாய் மண விருந்துக்குபயோக மாயது!—அத்தினம் நான் உயிர் வாழ்ந்ததை விட இறந்து மடிந்து என் ஜன்மத் துவேஷியைச் சுவர்க்கத்தில் காண இசைந்திருப்பேன்! என் தந்தை!— ஹரிஹரா! என் தந்தையை நான் காண்கிறேன்!—

ஹ. ஆ! எங்கு இளவரசே?

அம. என் மனதின் கண்! ஹொரீஹோரா.

ஹ. ஒரு முறை நான் பார்த்த துண்டு உத்தமரான மன்னன்.

அம. மன்ன னிருக்கட்டும், மனிதனைப் மதிப்போம். எவ்விதம் யோசிப்பினும் அத்தகை உத்தமனை யொத்தவரை இத்தரணியில் எத்தினம் காணப்போகின்றேன்!

ஹ. அரசே, நேற்றிரவு உமது தந்தையைக் கண்டேனென்று நினைக்கின்றேன்.

அம. கண்டனையா? யாரை?

ஹ. மகாராஜாவை, உம்முடைய பிதாவை!

அம. மகாராஜாவை! என் பிதாவை!

ஹ. உமது ஆச்சரியத்தைச் சற்றடக்கி, இவர்கள் சாட்சியாக நான் கண்டதைக் கூறுமளவும், சற்று செவி சாய்த்துக் கேட்க வேண்டும் இந்த விசேஷத்தை.

அம. ஈசன்மீ தாணை! சொல் சீக்கிரம், நான் கேட்கவேண்டும்.

ஹ. இரண்டுமுறை, மாரசிலர், பாணதரர், ஆகிய இவ்விருவரும் காவல் காத்திருக்கையில், நடுநிசியில், காடாந்தகாரத்தில், இதைக் கண்ணுற்றார்கள். உமது தந்தையைப் போன்ற ஓர் அருவம், தலைமுதல் கால்வரை கவச முதலியன வணிந்து, அவர்கள் முன் தோன்றி அவர்கள் அருகாமையில் கம்பீர நடையுடன் கடந்து சென்றதாம். பயமு மாச்சர்யமு மடைந்த இவர்கள் கண்டபடி, அவர் கையில் பிடித்திருந்த செங்கோலின் தூரத்தில் மும்முறை நடந்தனராம். பயத்தினால் நடு நடுங்கிச் சிலிர்த்துப்போன இவர்கள், வாய் திறக்க முடியாது அவருடன் ஒன்றும் பேசவில்லையாம். இவைகளை யெல்லாம் இவர்கள் மிகவும் இரகசியமாய் எனக்குக் கூற மூன்றாமிரவு நானிவர்களுடன் காவல் காத்தேன். அன்றைத் தினமும் அவர்கள் கூறியபடியே ஒவ்வொரு வார்த்தையையும் மெய்ப்பித்து, அதே சமயத்தில் அதே உருவுடன் அவ்

வருவம் தோன்றியது. அரசே, உமது தந்தையை நான் அறிவேன். அவ்வுருவம் உமது பிதாவை யொத்திருந்ததுபோல் என் இரு கைகளும் அத்தனை ஒத்திலே.

அம. எங்கே இதெல்லாம் நேரிட்டது ?

மா. அரசே, நாங்கள் காவலிருந்த கொத்தளத்தின்மீது.

அம. நீயும் அதனுடன் பேச வில்லையா ?

ஹ. அரசே, நான் பேசினேன். ஆனல் அதற்குப் பதிலொன்றும் அது கூறவில்லே. ஆயினும் ஒருமுறை தலை தூக்கி வாய் அசைத்துப் பேச முயன்றதுபோல் தோன்றிற்று. அச்சமயத்தில் விடியற்காலத்துக் கோழி உரத்த சப்தத்துடன் கூவ, அச்சப்தம் கேட்டதும் எங்கள் கண்முன் கரைந்து மறைந்து போயது விரைவினில்—

அம. என்ன ஆச்சரியமா யிருக்கிறது !

ஹ. அரசே, என்னுயிர்மீ தாணைப்படி இது உண்மையே,—உமக்கிது தெரிவிப்பது எமது கடனென வெண்ணினேம்.

அம. ஆம் ஆம், நிஜந்தான் ஐயா, ஆயினும் இது எனக்கு மனக் கவலையை யுண்டுபண்ணுகின்றது.— இன்றைய காவன் முறை உங்களுடையதோ ?

மா-பா. ஆம், அரசே.

அம. கவச மணிந்து இருந்ததாகவா கூறுகின்றீர்கள் ?

மா-பா. ஆம், அரசே. கவச மணிந்துதான்.

அம. பாதாதி கேசம்வரை ?

மா பா. அரசே, தலை முதல் கால்வரை.

அம. ஆனல், அவர் முகத்தைப் பார்க்கவில்லை நீங்கள் ?

ஹ. இல்லை பார்த்தோம் அரசே, தன்முக மூடியை மேலே அணிந்திருந்தார்.

அம. என்ன, கோபத்துடனு நோக்கினர் ?

ஹ. கோபத்தினும் துக்கமே அதிகமாய் விளங்கியது முகத்தினில்.

அம. முகம் வெளுத் திருந்ததோ அல்லது சிவந் திருந்ததோ ?

ஹ. இல்லை, மிகவும் வெளுத் திருந்தது;

அம. உங்களை உற்றுப் பார்த்தனரா ?

ஹ. ஆம், சற்றும் மாறாமல்.

அம. ஐயோ ! அங்கு நா னிருந்திருக்க லாகாதா !

ஹ. உமக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைத்திருக்கும்.

அம. இருக்கும் இருக்கும் ! அதிக நாழிகை தங்கியதோ ?

ஹ. ஒருவன் சாதாரணமாக நூறு எண்ணும் பரியந்தம்.

மா-பா. இல்லை இல்லை ! இன்னும் அதிக நேரம்.

ஹ. நான் பார்த்த பொழுதல்ல.

அம. கேசம் நரைத் திருந்ததா ?— இல்லை ?

ஹ. உயிருட னிருக்கும்பொழுது நான் பார்த்த வண்ணம் இருந்தது, கறுப்பும் வெண்மையும் கலந்ததாய்.

அம. நா னின்றிரவு காவ லிருக்கிறேன். ஒரு வேளை இன்றிரவும் உலாவலாம் அது மறுபடியும்.

ஹ. அங்ஙனமே செய்யும், நான் உத்தரவாதம்.

அம. என் தந்தை யுருவைக்கொண்டு அது தோற்றுமாயின், மௌனமா யிராவிடின் நரகத்தில் வீழ்த்துவே னென நமனே எதிர்த்துக் கூறினும், நான் அதனுடன் பேசுவேன். இது வரை இரகசியமாய்க் காப்பாற்றிய துண்மையாயின், இன்னு மப்படியே மௌனம் பாராட்டக் கேட்டுக்கொள்ளுகிறேன் உங்க ளெல்லோரையும் ; எது நடந்தாலு மின்றிரவு, மனத்தா லறிவதன்றி வாய்திறந்து கூறாதீர். நீங்கள் செய்யும் நல் லுதவியை நான் மறவேன் என்றும் ; ஆகவே விடைபெற்றுக் கொள்ளுங்கள். பதினோந்து நாழிகைக்கெல்லாம் கொத்தளத்தில் வந்து காண்கின்றே னும்மை.

எல்லோரும். தங்கள் கட்டளை எங்கள் கடமை.

அம. உங்கள் காதல்,—அன்பரே, போய் வாரீர்.

[அமலாதித்யன் தவிர மற்ற மூவரும் போகிறார்கள்.]

என் தந்தை யுருதரணியில் தோற்றுவதோ போர்க் கோலத்துடன்!—இதிலேதோ விருக்கின்றது! ஏதோ வஞ்சகம் நடந்திருக்கவேண்டும்! இரவு விரைந்து வந்திடலாகாதா? வருமளவும் மனமே பொறுத்திரு; பாபச் செயல்கள் பாதாளம் புதைக்கப்படினும் பரந்தெழும் மாந்தர் கண்முன் புலப்பட! [போகிறான்.]

காட்சி முடிகிறது.

## மூன்றாவது காட்சி.

பாலநேசன் வீட்டில் ஓர் அறை.

லீலாதரனும், அபலையும் வருகிறார்கள்.

லீ. நாவா யேற்றப்பட்டன என் சாமான்களெல்லாம். தங்கையே, நான் வருகிறேன். காற்று மிசைந்து கப்பலும் ஓடக்கூடிய கடிதினில் வருமாறு கடிதம் உறங்காது நீயும் வரைவையாக.

அப. அதற்குச் சந்தேகப்படுகின்றனையா ?

லீ. இந்த அமலாதித்யருடைய அன்பெனக் காட்டும் அற்பத்தை அதிகமாக மனத்திற் பாவிக்காதே. இதைக் காதலெனக் கருதாதே. அதை ஒரு மாதிரியாக மதிப்பாய், யவ்வனத்தின் விளையாட்டாம். காலத்தில் மலரும் கருநெய்தல் கடிதினில் வாடிக் கந்தம் குறைவதேபோல் கணத்தினில் மாறும் கருத்தென நினைப்பாய்; அவ்வளவே !

அப. அவ்வளவுதானா ?

லீ. அதைவிட அதிகமாய் எண்ணாதே. இளம் பிறைபோலும் இளம் பருவத்தில் உடல் மாத்திரம் ஓங்கி வளர்வதன்று; இவ்வாலயம் பெருகுங்கால் அதனுள் ளிருக்கும் ஆன்மாவும் அபிவிர்த்தி யடையு மன்றோ ? ஒருகால் உன்மீது இப்பொழுது உண்மையில் காதல்கொண்டிருப்பினு மிருக்கலாம். இப்பொழுது அவரது இச்சையின் நெறியில் மாசு மாறுபட்டங்கள் எவ்வளவேனும் இல்லா திருக்கலாம். ஆயினும் நீ அஞ்சவேண்டியதொன் றுண்டு. அவர் உன்னத ஸ்திதியைப் பன்னுங்கால் தன்னுடைய தன்று மன்னன் மனம். தன் குடிப் பிறப்பிற்குத் தான் அடிமைப்பட்டவ ரன்றோ ? மன்னனாய்ப் பிறந்தவன் மற்றவரைப்போல் மனஞ் சென்றவிடத்து மனைவியைத் தேட லாகாது. அரசன் எவ்விதம் மணக்கின்றானோ அதனைப் பொறுத்ததாம் அவனது இராஜ்ஜியத்தின் க்ஷேமமும் சுகமும். தான் தலைவனாம் தன் இராஜாங்கம் எங்ஙனம் கூறுகின்றதோ, அங்ஙனமே தன் தலைவியைக் கைப்பிடிக்க வேண்டியவ

ளுகிருன். ஆகவே அமலாதித்யர் உன்மீது அன்பு கொண்டிருப்பதாக அறைந்திடின் அவரது ஸ்திதியையும் குறித்த காரியத்தையும் கருதி, கூறிய வண்ணஞ் செய்ய அவரால் எவ்வளவு கூடுமோ, அதனளவே அவர் மொழியை நீ நம்புதல் உன் மதிக்கு அழகாம். குர்ஜரத்தாரின் சம்மதியின் பலமானது, அவரை எவ்வளவு தூரம் கொண்டு போகுமோ, அவ்வளவுதான் அவர் போகக்கூடும். அவரது பாடல்களுக்கு அதி நம்பிக்கையுடன் செவிகொடுப்பையாயினும், அல்லது உன் மனத்தை அவர் கவர்ந்து சென்றிடினும், கட்டுப்படா அவர் காதலின் வேண்டுகோளுக்கு உன் கற்பெனும் பேழையைத் திறந்திடினும், உன் மானத்திற்கு என்ன நஷ்ட முண்டாகுமென்று நீயே சீர்தூக்கிப் பார். அதற் கஞ்சுவாய் அபலா, அதற்கஞ்சுவாய்; என் அருமைச் சோதரியே, விருப்பமதின் வேகத்திற்கும் வெப்பத்திற்கு முட்படாதபடி, உன் காதலை வெகு தூரத்தில் அடக்கி வை. கனவிலும் பிறழாக் கற்புடைக் கன்னிகையும் சந்திரன் காணத் தன் சுந்தரத்தை வெளிப்படுத்தினளாயின் கற்பின் வரம்பினைக் கடந்தவளே யாவாள். அருந்ததியாம் அருங் கற்புடையவளும் அவதூறுக் காளாக்கப்படுகிருள். பன்முறை வசந்த காலத்தில், இளம் புஷ்பங்கள் நன்ருய் மலரு முன்னே கொடுங் கூற்று அவைகளைக் கெட் டலையச் செய்கிறது. இளம் பருவத்தின் உதய காலத் தரும் பனிநீரை, வற்றச் செய்து வாட்டிவரும் கொடுங் காற்றுகள் அதிக முண்டு. ஆகையால் ஜாக்கிரதையா யிரு. சிறந்த பாதுகாப்பு செறிந்த பயத்தினி லுண்டு. வேறொன் றருகி லில்லாவிடினும் வெவ்விய யவ்வனம் தனக்குத்தானாய் ஆளுகையை மீறும்.

அப. நீர் கூறிய புத்தி மதிகளின் சாராம்சத்தை எந்நாளும் மறவாது என் இதயத்தைக் காக்கும் காவலாகக் கொள்கிறேன். ஆனல் அண்ணு, கரடுமுரடாம் முத்தி மார்க்கத்தை மாணவனுக்குக் காண்பித்து, தான் தன் மனம்போனபடி மதித்து மதி மறந்து மிருதுவாம் மலர்பூத்த அச்சிற்றின்ப மார்க்கத்தால் அடையுங்

கதி அறியாது காமுகனுய்ச் செல்லும் குணமிலாக் குருவினைப் போல், எனக்கொரு வழி கூறி நீ ஒரு வழி செல்லாதே.

லீ. ஓ! அப்படியொன்றும் பயப்படாதே. வெகு நேரம் நின்று விட்டேன்,—இதோ பிதா வருகின்ருர்.

பாலநேசன் வருகிருன்.

இருமுறை ஆசி பெறுவது இரட்டிப்புப் புண்ணியமாம். இரண்டாம் முறை விடை பெற இத் தருணம் வாய்த்தது என் அதிர்ஷ்ட வசமே.

பால. இன்னும் இங்கா? லீலாதரா! புறப்படு, புறப்படு, பார்த்தவர் நகைப்பார்! காற்றுத் தாக்கிக் கறை முகத்துக் கப்பல் காத்திருக்கின்றது உனக்காக. இதோ என்னுசி உனக்குத் துணையாம். இதோ நான் கூறிடும் சில மதிகளை மனத்தில் மறவாது வரைந்திடுவாய். மன தெண்ணுவ தெல்லாம் வாய்திறந்து வெளியிடாதே. மனத்தில் முழுவதும் எண்ணுது எக்கருமமுந் துணியாதே. அன்யோன்யமா யிருக்கலாம், ஆனுல் அநாகரீகமாய் நடவாதே. நன்ருய்ப் பரீட்சித் தறியாது நட்புச் செய்யாதே; நட்டபின் நண்பனைவிட் டெந்நாளும் அகலாதே. ஆராய்ந் தறியாது நேர்ப்பட்டவனை யெல்லாம் நேசனெனக் கருதி உன் நாணயத்தைக் கெடுத்துக் கொள்ளாதே. சச்சரவிற் புகுவதில் ஜாக்கிரதையா யிரு; புகுந்தபின், பின்வாங்காதே.— எதிரி ஏங்கிட எதிர்ப்பாய். எல்லோர்மாட்டும் உன் செவியினைக் கொடு; சிலருக்கே வார்த்தையைக் கொடுப்பாய், எவர் கூறுங் குறையினையும் ஏற்றுக்கொள். ஆனுல் உன் தீர்மானத்தை வெளியிடாதே. கை யிருப்புக் கேற்ற கலையைத் தரி. உள்ளம் செல்லுமாறு உடுக்காதே. ஆடம்பரமா யில்லாது அந்தஸ்துக் கேற்றதா யிருக்கவேண்டும் உடை. ஏனெனில் உடையினுல் உடுப்பவனை அறியும் உலகம். அதுவும் நீ போகும் பிராஞ்சபுரத்தில் பெரிய மனிதன் என்ருல் தாராளமாய்ச் செலவழித்துத் தகுந்த ஆடை உடுப்பவனே! கடனும் வாங்காதே கடனும் கொடாதே. கடன் கொடுத்தையேல் கடன் போவதன்றி

உடன் செல்வான் உன் நேயனும். கடன் வாங்குவையேல் உன் கருத்தின் கூர்மை மழுங்கும். எதனிலும் மேலாய் இதை எண்ணுவாய்; உன்றனுக்கே நீ உண்மையா யிருப்பாய்! அங்ஙனம் இருப்பையாயின், இரவு பகலைப்பின் தொடர்வதேபோல், திண்ணமாய் உலகினில் ஒருவனுக்கும் நீ பொய்க்கமாட்டாய். என் ஆசிர்வாதத்தால் இவை உன் மனத்தில் உறைக்குமாக! போய்வருவாய்.

லீ. ஐயனே, விடைபெற்றுக் கொள்ளுகிறேன் மிகுந்த வணக்கத்துடன்.

பால. காலமாயது காத்திருப்பார் காவலாளிகள் போ.

லீ. அபலா, நான் வருகின்றேன். நான் கூறியது நன்றாய்க் கியாபக மிருக்கட்டும்.

அப. நீ கூறிய புத்திமதியை என் மனமெனும் பேழையில் வைத்துப் பூட்டி யிருக்கின்றேன். அதனை மறவா வண்ணம் இதன் திறவுகோலை உன்னிடமே ஒப்புவிக்கின்றேன்.

லீ. நான் போய்வருகிறேன். [போகிறான்.]

பால. என்ன கூறினான் அபலா, உன்னிடம் அவன்?

அப. ஒன்றுமில்லை, ஏதோ இளவரசர் அமலாதித்யரைப்பற்றி—

பால. ஆ! நன்றாய்க் கியாபகம் வந்தது! எனக்குச் சொன்னார்கள், சில நாளாக அவர் உன்னை அடிக்கடி அந்தரங்கமாய்ப் பார்த்து வருகிறாராம், நீயும் அட்டியில்லாது தாராளமாய் அவரைக் காண்கின்றனையாம். அப்படி யிருக்குமாயின்— அங்ஙனம் நான் கேள்விப்பட்டேன்.—அதுவும் ஜாக்கிரதையாக.—நான் உனக்குச் சொல்லவேண்டும். உன்னை நன்றாய் அறிகிலை இன்னும். என் பெண்ணுயதற்கும் உன் கௌரவத்திற்கும் ஏற்றது இஃதென அறிகிலை. உங்க ளிருவருக்குள் விசேஷம் என்ன? உரைத்திடுவாய் உண்மையை என்னிடம்.

அப. சில நாளாக அவர் என்மீது காதல் கொண்டிருப்பதாகக் காண்பித்து வருகிறார்.

பால. காதல்! சீ! கேட்டினை விளைக்குங் காரியங்களில் பகுத்தறியும் அறிவிலாப் பேதையைப்போல் பேசுகின்றாய் நீ! அவர் காதல் கொண்டிருக்கின்றார் என்று கூறுகின்றனையே அதை நம்புகின்றனையா நீ?

அப. என்ன எண்ணுவது நான், என்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

பால. சரி, நான் சொல்லுகிறேன் தெரிந்துகொள். பித்தளையைக் கண்டு பொன்னென மயங்கிடும் பேதையாம் சிறு குழந்தையென மதிப்பாய் உன்னை. மேன்மையாய் மதித்திடுவாய் உன்றனை. இல்லாவிடின் அந்தப் பழமொழிக் கேற்றபடி உன் பெயரைக் காப்பாற்றாவிட்டால், எனக்கு ஒரு பேரனைப் பெற்றுக் கொடுப்பாய், பத்திரம்.

அப. அண்ணா, அவர் கௌரவமாங் காதல் நெறியிலேயே என்னை வேண்டினார்.

பால. எல்லாம் நெறிதான் என்று நினைக்கலாம் நீ. போ, போ.

அப. சொன்னதுமாத்திர மன்று அண்ணா, அதனை நம்பும்படி ஏறக்குறைய எல்லாத் தெய்வங்களின்மீதும் ஆணையிட்டுச் சத்தியம் செய்திருக்கிறார்.

பால. ஆமாம், மீன் பிடிக்கத் தூண்டி லிட்டதுபோ லாம். மோகந் தலைக் கேறினால் மனிதன் வாய்க்கு வந்தவிதம் தாராளமாய்ச் சத்தியஞ் செய்வானென நான் அறிவேன். இப்பிரமாணங்களெல்லாம் மின்னல்போல் உஷ்ணத்தைவிட அதிக ஒளியைத் தருவனவாம்; தோன்றுமுன் மறைந்திடும்; காதலாம் அனலெனக் கருதாதே. இதுமுதல் கன்னிகையாம் உன்னை அவர் அடிக்கடி காணவிடாதே. அவர் பேசவேண்டின், உன்னைக் கட்டளையிடுவதைவிட, அதிகமாய் வேண்டும்படி, உன் கௌரவத்தை மேன்மையாய்க் காப்பாற்றிக்கொள். இதை உறுதியாய் நம்பு, இளம் பருவத்தவர் இளவரசர் அமலாதித்யர், அவர் இச்சை வழிச் செல்ல ஏற்கு மிவ்வுலகம்; உனக் கது ஏலாது. விவரித்துக் கூறுவானேன்? அபலா, அவர் வார்த்தை

யில் நம்பிக்கை வைத்திடாதே. மேலுக்குக் காட்டுவதே போல் உள்ளே யிராத வெளி வேஷமாம் ; எளிதினில் மோசஞ் செய்யும்பொருட்டு பரிசுத்தமான சத்தியங்களைப் போல் மேலுக்குக் காட்டும், கற்பினை அழித்திடக் கருதும், வேண்டுகோளாம். முடிவினில் கூறுவேன் · எல்லாவற்றிற்கும் — வெளிப்படையாய்ச் சொல்லுமிடத்து,—இது முதல் அமலாதித்யருடன் வார்த்தையாடுவதில் உன் காலத்தில் கணப்பொழுதையும் கழித்து இழிவு படுத்துவது எனக்கிஷ்டமில்லை. இதை கவனிப்பாய், நான் உனக்குக் கட்டளையிடுகிறேன், வா போவோம்.

அப. அண்ணா, கட்டளைப்படி நடக்கின்றேன்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## நான்காவது காட்சி.

கொத்தளம்.

**அமலாதித்யன், ஹரிஹரன், மாரசீலன் வருகிறார்கள்.**

அம. கடிப்பதுபோல் காற்று வீசுகின்றது ; மிகுந்த குளிராய் இருக்கின்றது.

ஹ. வெட்டுவதுபோல் வீசுகின்றது வேகமாய் இக்காற்று.

அம. என்ன நாழிகை இப்பொழுது ?

ஹ. பதினைந்து நாழிகைக்குச் சற்று குறையுமென்று நினைக்கின்றேன்.

மா. இல்லை அர்த்த ஜாம மணி அடித்துவிட்டது.

ஹ. அப்படியா ? நான் அதைக் கேட்கவில்லை. ஆனால் அவ் வருவம் வழக்கமாய்க் குலவும் காலம் நெருங்கிவிட்டது.

[உள்ளே வாத்ய கோஷமும் வெடி ஓசையும் கேட்கின்றன.]

அரசே ! அதென்ன சப்தம் ?

அம. மகாராஜா மதுபான கேளிக்கையுடன் கண் விழித்து இரவைக் கழித்து மகிழ்ச்சி கொண்டாடுகிறார். அவர் இவ்வாறு ரேனு நகரத்துச் சாராயத்தைக் குடித்திடுங்கால், அவரது வார்த்தையின்படி செய்து முடித்த ஜெயத்தை, பேரிகையும் சங்கமும் உலகத்திற்குத் தெரிவிக்கின்றன.

ஹ. இப்படி வழக்க முண்டா ?

அம. ஆம் இதுவும் ஒரு ஆசாரமாம். ஆயின் நான் இந் நாட்டில் பிறந்து அவ்வழக்கத்தில் வளர்ந்தவ னாயினும், எனக்குத் தெரிந்தவரை, அனுசரிப்பதனாலன்றி இவ் வாசாரம் அனுஷ்டியாமையால் பெருமை பெற்றுளது ! இந்தத் தலைகால் அறியாத் தடுமாற்றம், நான்கு திக்கிலுமுள்ள நானு தேசத்தாரும் நம்மைக் குற்றத்திற் குட்படுத்திக் குறை கூறச் செய்கின்றது. குடிவெறி கொண்டவர் எனக் கூறுகின்றா ரவர் நம்மை; பன்றியெனப் பெயரிட்டு பல குணங்களையும் பாழாக்குகின்றனர்.

நாம் உழன்று ஈடேறச்செய்யும் உன்னதமாம் முயற்சிகளினின்றும், நமக்குரித்தாம் நம்முள்ளிருக்கும் உத்தம குணத்தை, அறவே அழிக்கின்றது. இங்ஙனமே சில மாந்தர்களுக்குச் சங்கடம் சம்பவிக்கின்றது. பல்கால், சுபாவத்தில் உண்டான அசுத்தமாம் மருள் விர்த்தியடைந்து நிறத்தை மாறச் செய்து மதியின் மதில்களையும் அரண்களையும் மடித்துத் தள்ளுகின்றது ; குடிப் பிறப்பைக் கருதுவோம், இது ஒருவனது குற்றமல்லவே, எங்கு உற்பவிப்போம் என்பது ஒருவன் இச்சை வழியன்றே ; அல்லது, மேலுக்குச் சரியெனக் காட்டும் நடவடிக்கைகளின் ரூபத்தை விஸ்தரித்து வேறாகக் காட்டும் யாதா மொரு வழக்கத்தினால்,—சுபாவத்தில் வந்த மீப்போர்வையோ, அல்லது அதிர்ஷ்ட வசத்தின் மச்சமோ, யாதேனுமோர் குறையின் குறியைத் தம்மேற்கொண்டு நடக்கும் இம் மாந்தர்கள்—மற்ற குணங்கள் கடவுளது கருணையைப்போல் மாந்தர் வகிக்கக் கூடியபடி கறையின்றியும் களங்கமின்றியும் இருப்பினும், அந்த ஒரு குற்றத்தினால் உலகத்தோரால் தூற்றப்பட்டு அழிவை அடைகின்றனர் ; நாழிகை சாராயம் எல்லா நற்பொருள்களையும் கெடுத்து தனக்கே கெட்ட பெயரையும் கொண்டு வருகின்றது.

அருவம் தோற்றுகிறது.

ஹொ. அரசே ! அதோ பாரும் அது வருகின்றது !

அம. ஈசனே ! கருணைக் கடவுளே ! எம்மைக் காத்தருளும் ! நீ க்ஷேமம் விளைக்கும் பூதமாயினு மாகுக ! கெட்டழிந்த பிரேதப் பிசாச மாயினு மாகுக ! விண்ணின் றிழிந்தாலு மொன்றே, வெவ்விய நரகினின்றும் வந்தாலு மொன்றே ! துன்ப மிழைக்கத் தோன்றினாலும் சரி ! நன்மை பயக்க நாடினாலும் சரி ! கேவலம் இக்கோலத்தில் உன்னைக் கண்டபின் உன்னுடன் பேசியே தீரவேண்டும் நான். அமலாதரரே ! இராஜாதிராஜனே ! எந்தையே ! தூர்ஜரமன்னா, என அழைக்கின்றேன் ! எனக்கு விடை யளியும், விடை யளியும் ! அறியாமையால்

உள்ளம் வெடித்து அழிய விடாதீர்! பூமியில் புதைக்கப்பட்ட உமது உடல் அதைப் பிளந்துகொண்டு ஏன் வெளி வந்தது? ஈமச் சடங்குடன் இடுகாட்டில் சமாதி நிஷ்டையில், அமைதியுடன் வைக்கப்பட்ட உமது பிரேதம் பூதலம் விட்டு இவ்வாறு வெளிவந்து உழல்வானேன்? மடிந்த உமது உடல், மறுபடியும், முற்றிலும் கவச மணிந்து, நள்ளிருளில் கண்டோர் நடுங்கும்படி நடமாடுவானேன்? எங்கள் மனத்துக் கெட்டா மாய்கையால், பேதை மாந்தர்களாகிய நாங்கள் மருட்சியடைவானேன்? கூறும்! இது என்? எதன் பொருட்டு? என்ன செய்யவேண்டும் நாங்கள்?

[அருவம் அமலாதித்யனை அழைக்கின்றது.]

ஹ. உடன் நீர் போக அழைக்கின்றது உம்மை, உம்முடன் தனியாய் உரைத்திட ஏதோ விருப்புவதேபோல்!

மா. எவ்வளவு மரியாதையா யழைக்கின்ற தும்மை தனியாய் வேறிடம் தன்னுடன் ஏக! ஆயினும் போகாதீர் அதனுடன்.

ஹ. வேண்டாம், போக லாகாது.

அம. அது பேசாதிருக்கின்றதே; நான் போகத்தான் வேண்டும்.

ஹ. வேண்டாம் அரசே.

அம. ஏன், இதில் பயமென்ன? எள்ளளவும் என்னுயிரை எண்ணியவனன்று நான்; அதனைப்போலவே என்றும் அழியா என் ஆன்மாவை அது என் செயக்கூடும்? மறுபடியும் கைகாட்டி அழைக்கின்றதென்னை! நான் பின் தொடர்வேன் அதை!

ஹ. அரசே, ஒருவேளை உம்மை அகழியின் அருகில் அழைத்துச் சென்றால்? அல்லது சமுத்திரக் கரையோரம் செங்குத்தாய் நிற்கும் அம்மலைச் சிகரத்தருகில் அழைத்துச் சென்று, பிறகு இவ்வுருவை மாற்றி, கோரமான வேறொரு ரூபம் கொண்டு, உம்மை மயங்கிடச் செய்து உமது மதியை மாற்றினால்? அதை யோசித்துப்பாரும்: அவ்வுயர்ந்த உச்சியில் நின்று கடலின் அலைகள் அதிக தூரம் கீழே மோதுகின்ற சப்தத்

தைக் கேட்டலே எவனுடைய மனத்தையும் கலக்கி, காரணம் வேறின்றி, கடுஞ் செயல்களைக் கருதிடச் செய்கிறது.

அம. இன்னும் அழைக்கின்றதென்னை.—போவீர் ; வருகின்றேன் பின்பாக !

மா. அரசே, நீர் போகக்கூடாது.

அம. எடு உன் கையை !

ஹ. சொல்வதைக் கேளும் ; நீர் போகக்கூடாது.

அம. என் விதி யழைக்கின்றது, எனது ஒவ்வொரு அவயவத்திற்கும் வாயுவின் மைந்தன் வலியினும் பதின்மடங்கு பலத்தைக் கொடுக்கின்றது ! இன்னும் அழைகின்றது என்னை. எடுங்கள் கையை ! இல்லாவிடின் ஈசன் மீதாணைப்படி என்னைத் தடுப்பவனை இட்சணம் கொன்று அருவமாக்குவேன் ! விடுங்க ளென்னை !— போம் ; இதோ பின் தொடருகின்றேன் !

[அருவமும் அமலாதித்யனும் போகிறார்கள்.]

ஹ. ஐயோ ! பித்தம் அதிகரித்துப் பிரமை கொண்டிருக்கின்றார் !

மா. நாமும் போவோம்; இவ்விஷயத்தில் அவர் சொல்லுக் கடங்கி நடப்பது நியாயமன்று.

ஹ. வா போவோம். ஐயோ ! இது எங்ஙனம் முடியப்போகின்றதோ ?

மா. குர்ஜரத்தில் ஏதோ கெட்டுப்போ யிருக்கின்றது.

ஹ. சுவாமி யிருக்கின்றார் சரிப்படுத்த !

மா. அப்படி யல்ல, நாமும் போவோம்.

[இருவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## ஐந்தாவது காட்சி.

கொத்தளத்தில் ஒதுக்கமான மற்றொரு புறம்.

அருவமும், அமலாதித்யனும் வருகிறார்கள்.

அம. இன்னும் எங்கே அழைத்துச் செல்கிறாய்? கூறு; இதைக் கடந்து வாரேன்.

அரு. கவனித்துக் கேள்.

அம. அப்படியே ஆகட்டும்.

அரு. எமவாதனைப்பட எரிவாய் நரகிற்கு நான் ஏகவேண்டிய காலம் வந்துவிட்டது.

அம. அந்தோ! பேதை அருவமே!

அரு. பரிதாபப்படுவது இருக்கட்டும், கவனித்துக் கேட்பையாக நான் வெளியிடப்போகிறதை!

அம. சொல்லும்; நான் கேட்கக் கடவேன்.

அரு. அங்ஙனமே பழி தீர்க்கக்கடவாய், கேட்டபின்!

அம. என்ன?

அம. நான் உன் தந்தையின் அருவம். இரவிற் சிறிதுபொழுது இங்கு நடமாடி, பகற்பொழு தெல்லாம் படுவாய் நரகில் நான் பாரினிற் செய்த பாபங்களெல்லாம் போய்ப் பரிசுத்தமா மளவும், வேதனைப்பட சிட்சிக்கப்பட் டிருக்கிறேன். நான் சிறைப்பட்டிருக்கும் பரலோக ரகசியங்களைப் பாரினி லிருக்கு முனக்குப் பகர லாகாது. இல்லாவிடின் அவற்றுள் சிறிது பகர்ந்திட்டாலும் நீ மன மருண்டு, மதி கலங்கி, முள்ளம் பன்றியின் முட்களைப்போல் மயிர்க் குச்செறிந்து மயிர்க்கால் தோறும் வியர்த்து, உடல் முழுதும் குளிர்ந்து தம்பித்துப்போய், உன் இரு கண்களும் பிரமையினால் பிதுங் கிடச் செய்வேன். உடலுட னிருக்கும் உனது செவிக்கு உரைத்திட லாகாது நான் பரமாம் இவ்விரகசியம். கேள் கேள்! நான் கூறுவதைக்கேள்!—உன் தந்தைமீது காதல் எப்பொழுதாவது உடையவனாயின்—

அம. ஐயோ, ஜகதீசனே !

அரு. பழி வாங்குவாய் ! அவரை மோச வழியில் அதர்மமாய்க் கொன்ற கொலையை !

அம. கொலையா ?

அரு. வெறுங் கொலையாயினும் கொடியதேயாம், இதுவோ மனத்துக்கெட்டா மாபாதகமாம் மோசக் கொலையாம் !

அம. விரைவிற் கூறு மதனை எனக்கு, காதலர் கருத்தைப்போல் கடிந்து மனோ வேகமாய் விரைந்தோடி ஒரு க்ஷணப் பொழுதிற் பழிவாங்குகின்றேன் நான் !

அரு. சரி ! நீ தக்கவனே, அறிந்தேன் ! இதைக் கேட்டும் மனத்தில் வெகுண்டெழா திருப்பையாயின் உன்னினும் ஜடமான ஜன்மம் இம் மண்ணுலகி லில்லையென மதித்திருப்பேன். இதோ அமலாதித்யா, கேள் ; நந்தவனத்தில் படுத்துறங்கும்பொழுது ஓர் நாகம் தீண்டி நான் இறந்ததாக வல்லவோ வெளியில் வார்த்தை வழங்கப்படுகிறது ; இந்தப் பொய்யைச் செவி கொண்டே குர்ஜரதேசத்தவ ரெல்லாம் மோசம் போயினர் நான் மடிந்த மாதிரியைப்பற்றி ; உத்தம குமரா ! உன் தந்தையைக் கொன்ற அரவம் அவர் முடியினைத் தரித்திருக்கின்றதிப்பொழுதென அறிவாய் !

அம. ஹா ! அப்பொழுதே நினைத்தேன், நினைத்தேன் ! என் சிறிய தந்தை !—

அரு. ஆம், அம் முறை கெட்ட விபசாரக் கழுதை ! மேலுக்கு மிகவும் கற்புடையவள்போல் மினுக்கிய என்னரசியை மோச வார்த்தையாடி, பாதகமாம் பரிசுகளைக் கொடுத்து மதியை மயக்கித் தன் மோக வலைக்கு ளகப்படச் செய்தான் ! ஹா ! அமலாதித்யா, என்ன கதிக்கு இழிந்தாள் ! கடிமணம் புரிந்த காலை செய்த சத்தியத்தினின்றும் கணமும் தவறாது மேன்மையாம் காதல் கொண்டிருந்த என்னைவிட்டு, எனக்குமுன் அற்பத் துரும்பை யொத்த அப்பாபியின்மீது ஆசைப்பட்ட

ணளே ! கற்புடைய ஸ்திரீயின் மனம் தேவர்கள் வந்திடினும் எப்படிக் கலக்கப்படாதோ, அவ்வண்ணமே விபசாரிவேனில் நாதனுக்கே வாழ்க்கைப்பட்டு, பரமாம் பஞ்சணையிலும், பாழுக்கிடங் கொடுப்பாள் ! பொறு, விடிவதுபோலும் வாசனை வருகிறது !—விரைவில் கூறி முடிக்கின்றேன் நான். நந்தவனத்தில் நான், என் வழக்கப்படி மத்தியான காலத்தில் கவலையின்றி நித்திரை செய்யும்பொழுது, உன் சிற்றப்பன் ஒருவரு மறியாதபடி வந்து, வெவ்விய விஷயத்தை ஒரு கிண்ணத்திற் கொணர்ந்து என் செவியின் புரைக்குள் வார்க்க, அப்பாழும் விஷமானது பாதரசத்தைப்போல் என் உடல் முழுதும் பரவி என் தேகத்திலிருந்த சுத்த இரத்தத்தையெல்லாம் க்ஷணப்பொழுதில் புரையிட்ட பாலைப்போல் முறித்துக் கெடுத்து, என்னழகிய மேனியெல்லாம் குஷ்டம்போன்ற தேமல் படையொன்றைப் பரவச்செய்து அழித்தது ! இவ்விதம் என் தம்பியின் கரத்தால், உறங்கும்பொழுது, என் ஆவியையும் என் அரசையும், என் அரசியையும், அங்கொடியில் இழந்தேன். நானிழைத்த பாபங்களெல்லாம் பரிஹரித்துப் போகும் வழிக்கு, புண்ணிய கருமங்கள் செய்து முடிக்கு முன்னம், பரலோக மனுப்பப்பட்டேன் பாவியால். அமலாதித்யா! பாதகம் ! பாதகம் ! அகோர பாதகம் ! உன்னிடம் மானிடப் பிரகிர்தி அணுவளவேனு மிருக்குமாயின், இதனைப் பொறுத்திராதே ! சிறப்புற்ற குர்ஜரதேயத்து இராஜ சயனத்தில் உன் சிற்றப்பனும் விபசாரன் வீற்றிருக்க விடாதே !— நீ எவ்விதத்தில் இவ்வேலையை முடிக்க முயன்றபோதிலும் உன் மனத்தை மழுங்கவிடாதே ; அன்றியும் உன் அன்னைக்குக் கேடு சூழக் கருதாதே ! ஈச னிருக்கின்றார் அவளைத் தண்டிக்க, அன்றியும் அவளது குற்றமாம் முட்களே அவளது நெஞ்சத்திற் குத்தி வருத்தும். நான் போய் வருகின்றேன் விரைவில் ! மின்மினியின் காந்தி குறைவதினல் அருணோதய காலம் ஆய்விட்டதெனத் தெரிகின்றது. வருகின்றேன் ! வருகின்றேன் ! வருகின்றேன் ! மறவாதே என்னை ! [மறைகின்றது.]

அம. ஆகாயவாணியே! பூமிதேவியே! இன்னும் என்ன? பாழ் நரகத்தையும் சேர்த்துக் கூறுவதா?— சீ! ஹிருதயமே பொறு! பொறு! உடலமே! க்ஷணப்பொழுதில் தளர்வினை எய்தாது உறமாய்த் தாங்குவா யென்னை!— உன்னை மறப்பதாவது! ஐயோ, பேதை அருவமே! அலங்கோலமாய்க் கலக்கப்பட்ட என் மனத்தில் ஞாபக சக்தி யென்பது சிறிதேனுமிருக்கு மளவும் மறப்பேனோ?— மறப்பதாவ துன்னை! —ஆம், இட்சண முதல் என் மனமென்னும் பலகையினின்றும், இது வரையில் நான் புத்தகங்களினின்றும் கற்ற புத்திமதிகளையும், எல்லா உருவங்களையும், இளமையில் நான் கண்டதும் கேட்டதுமான எல்லா அற்ப விஷயங்களையும், அடியுடன் துடைத்துவிடுகின்றேன். என் மனமென்னும் புத்தகத்தில் மற்றொன் றெறியுடனும் கலக்கப்படுத் தாழ் வடையாது உன் கட்டளை யொன்றே வரையப்பட்டு நிற்கும். இது சத்யம்! ஈசன்மீ தாணைப்படி!—கேடுகெட்ட பாதகி!—பாதகா! பாதகா! புன்சிரிப்புடை கொடிய பாதகா! என் புத்தகத்தி லிதை எழுதிவைத்தல் நலம். புன்னகை முகத்தினிற் பொன்று திருப்பினும் மனத்தினி லவனே மாபாதகனா யிருக்கலாகும்! எப்படியும் டென்மார்க்கிலாவது அப்படி யிருக்கக்கூடும் என்பதற்கு ஐயமில்லை. [எழுதிக் கொண்டே] சிற்றப்பா! இதோ இருக்கின்றாய் நீ! நான் மறவா மொழியென்? "வருகிறேன், வருகிறேன்! மறவாதே என்னை." நான் சத்யம் செய் தாயது!

மா-ஹ. [உள்ளேயிருந்து] அரசே! அரசே!

மா. [உள்ளேயிருந்து] அமலாதித்யரே!

ஹ. [உள்ளேயிருந்து] ஜகதீசன் இரட்சிப்பாராக அவரை!

அம. அங்ஙனமே ஆகுக!

ஹ. [உள்ளேயிருந்து] ஐயா! அரசே! அரசே!

அம. ஐயோ! ஆம் ஆம்! பையா! வா! பட்சியே! வா!

ஹரிஹரனும் மாரசீலனும் வருகிறார்கள்.

மா. எப்படி யிருக்கின்றது, அரசே ?

ஹ. என்ன சமாசாரம், அரசே ?

அம. ஹா ! ஆச்சரியம் !

ஹ. என்ன அரசே, சொல்லுமதை.

அம. மாட்டேன் ; சொன்னால் நீர் வெளியிடுவீர்.

ஹ. அரசே, ஒருகாலும் வெளியிடேன், ஆணைப்படி.

மா. நானும் வெளியிடேன், அரசே.

அம. உங்களுக் கென்ன தோற்றுகிறது ? மனிதன் மனத்தால் எண்ணி யிருக்கக்கூடுமோ இவ்வண்ணம் ? ஆயினும் நான் கூறுவதை நீர் இரகசியமாய் வைத்திருப்பீரா ?

ஹ-மா ஆம், ஆணைப்படி, அரசே.

அம. குர்ஜரதேசத்தில் வசிக்கும் ஒவ்வொரு பாதகனும் ஆணவம் பிடித்த கொடியவனே !

ஹ. இதை எமக்குக் கூறப் பூதமொன்று வரவேண்டுமோ புவிமீது ?

அம. ஆம், சரி ; நீ கூறுவது சரிதான் ; ஆகவே, நாம் வேறு கதை யொன்றும் பேசாது, ஒருவரை யொருவர் வணங்கிப் பிரிவோ மினி. நீங்கள், உமது வேலையின்படியும் விருப்பத்தின்படியும் செல்லுங்கள் ; உலகில் ஒவ்வொருவனுக்கும் வேலை யென்றும் விருப்பம் என்றும் வகைப்படி இருக்கின்ற தல்லவா ? ஏழ் மையுடைய நான்—உம்—போய் ஈசனை வழி படுகின்றேன்.

ஹ. இதென்ன அரசே, இவைகளெல்லாம் பயனற்ற பிரமை யுடை மொழிகள்போலும்.

அம. என் மொழிகள் உமமை வருத்துவது எனக்கு மனக் குறையா யிருக்கின்றது ; ஆம், உண்மையில்.

ஹ. இதி லென்ன வருத்தம் அரசே ?

அம. இல்லை, ஹரிஹரா ! இருக்கின்றது ! முருகன் ஆணை, நிஜமாய் இருக்கின்றது ! மிரம்ப வருத்தம்.— இங்கு தோற்றிய இவ் வருவைப்பற்றி, அது மெய்யே கூறுகின்றது ; அதில் சந்தேக

மில்லை. அவ்வளவு கூறட்டும் நான் உமக்கு: எம்மிருவருக்குள் நடந்த விஷயத்தை யறிய விரும்பும் உமது ஆசையை எவ்விதமாயினும் அடக்கிக்கொள்ளுங்கள். ஆகவே, என் நற்றோழர்களே! நீங்கள் என் நண்பர்கள், கற்றறிந்தவர்கள், வீரர்கள், ஆகவே எனக்கொரு எளிய வர மளிக்கவேண்டும்,

ஹ. என்ன அது? அரசே, அப்படியே ஆகட்டும்.

அம. இன்றிரவு கண்டதை என்றும் வெளியிடாதீர்.

ஹ-மா. எம் மரசே, என்றும் வெளியிடுவ தில்லை.

அம. அப்படியன்று, சத்தியஞ் செய்யுங்கள்.

ஹ. உண்மையாக நான் வெளியிடுவதில்லை.

மா. நானும் வெளியிடுவ தில்லை, சத்திய மாக.

அம. என்னுடைய வாளின்மீது சத்தியஞ் செய்யுங்கள்.

மா. நாங்கள் இப்பொழுதுதான் சத்தியஞ் செய்தோமே.

அம. அப்படி யன்று, என்னுடைய வாளின்மீது.

அரு. [கீழிருந்து] சத்தியம் செய்யுங்கள்!

அம. ஆ! ஹா! பயலே! அப்படியா சொல்கிறாய்! அங்கா இருக்கின்றாய் நாணயக்காரா?— வாருங்கள்— நிலவறையிலிருக்கும் இவன் குரல் கேட்கின்றதா உமக்கு?— சத்தியம் செய்ய ஒப்புக் கொள்ளுங்கள்.

ஹ. எப்படி சத்தியஞ் செய்யவேண்டுமோ சொல்லும், அரசே.

அம. கண்டதை இன்று, கூறுவதில்லை என்றும், என, என் உடைவாளின் மீது சத்தியம் செய்யுங்கள்.

அரு. [கீழிருந்து] சத்தியம் செய்யுங்கள்!

அம. அப்படியா சமாசாரம்? இங்கும் வந்தனையா? ஆனல் இவ்விடம் விட்டுப் பெயர்வோம். இப்படி வாருங்கள் நண்பர்களே, உங்கள் கரத்தை என் கத்தியின்மீது வைத்து, கேட்டதையென்றும் கூறுவதில்லையென்று சத்தியம் செய்யுங்கள்.

அரு. [கீழிருந்து] சத்தியஞ் செய்யுங்கள்!

அம. நன்றாய்ச் சொல்லினை, கிழப் பெருச்சாளியே ! பூமியின் கீழ் அவ்வளவு துரிதமாய்த் துளைக்க முடிகின்றதோ உன்னால் ? தேர்ந்த ஆள்தான். இன்னும் சற்று. அப்புறம் போவோம் வாருங்கள், தோழர்களே.

ஹ. என்ன இரவு பகல் ! இது புதுமையாம் விந்தையே !

அம. புதிதாய் வருவதைப் புதிதா யறிந்து நல் வரவு அழைப்பா யாக ! இகலோகத்திலும் பரலோகத்திலும் உனது வேதாந்த சாஸ்திரங்களிற் கனவிலும் காணப்படாத விஷயங்கள் அநந் தங் கோடி யிருக்கின்றன, ஹரீஹரா !— அதிருக்கட்டும் வாருங்கள்—, இங்கே முன்போல்— ஒரு பொழுதும், ஈசன் கருணையின் மீ தாணைப்படி, விபரீதமாயும் ஆச்சரியகரமாயும் நான் எவ்விதமாய் நடந்துகொண்ட போதிலும்— ஒரு வேளை நான் இனிமேல் ஒருவாறாக நடக்கவேண்டுமென்று தீர்மா னித்தாலும் தீர்மானிப்பேன்.— அச்சமயங்களில் என்னைப் பார்த்து, இவ்வாறு கையைக் கட்டிக்கொண்டு, அல்லது தலையை மெதுவாய் அசைத்து, அல்லது "சரிதான் சரி தான் தெரியும் எங்களுக்கு" அல்லது "மனம் வைத்தால் முடியும் எங்களால்"— அல்லது "நாங்கள் வாயை மாத்திரம் திறப்போமாயின்"— அல்லது "இருக்கும், அப்படியிருந் தால்" இவ்வாறான சந்தேகத்திற் கிடமான வார்த்தையைக் கூறி, என் விஷயத்தைப்பற்றி நீர் ஏதோ அறிந்தவர்போலக் காட்டிக்கொள்ள லாகாது. அப்படிச் செய்வதில்லையென்று, உமது ஆபத்துக் காலத்தில் உதவும்படி எந்த ஈசனைப் பிரார்த் திப்பீர்களோ அவ ராணைப்படி சத்தியஞ் செய்யுங்கள்.

அரு. [கீழிருந்து] சத்தியம் செய்யுங்கள் !

ஹ. பொறு பொறு ! நிம்மதி யற்ற அருவே !

[அவர்கள் சத்தியஞ் செய்கிறார் கள்.]

ஆகவே, தோழர்களே ! நான் உம்மீது அன்பு பாராட்டு வதுபோல் நீரும் என்மீது அன்பா யிருப்பீரென நம்பு கிறேன் ; எளிய அமலாதித்யன் தன்னால் உமக்கென்ன

உபகாரம் செய்யக்கூடுமோ நேசம் பாராட்ட முடியுமோ, அதனைத் தடையின்றிச் செய்வானென உறுதியாய் நம்பும். நாம் ஒன்றாய்ப் போவோம், ஜாக்கிரதை! வாயை மாத்திரம் திறவாதீர்! உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்; காலம் கெட்டிருக்கின்றது. அதைச் சரிப்படுத்த வேண்டி என் தலையில் எழுதி யிருக்க வேண்டுமா பாழாகிய என் ஊழ் வினை! இல்லை வாருங்கள், எல்லோரும் போவாம் ஒன்றாய்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# இரண்டாவது அங்கம்.

## முதல் காட்சி.

பாலநேசன் வீட்டில் ஓர் அறை.

பாலநேசனும், ராயநாதனும் வருகிறார்கள்.

பால. அவனிடம் இந்தப் பணத்தையும் இந்தப் பத்திரங்களையும் கொடு, ராயநாதா.

ராய. அப்படியே செய்கின்றேன், ஐயனே.

பால. அப்பா, ராயநாதா, நீ யவனைக் காணுமுன், அவனது நடவடிக்கையைப்பற்றி விசாரிப்பையாயின், அது ஆச்சரியமான புத்தி சாதுர்ய மாம்.

ராய. ஐயனே, நான் அப்படியே செய்திட எண்ணினேன்.

பால. சரி, நன்றாய்ச் சொல்லினை; மிகவும் நன்றாய்ச் சொல்லினை, அப்பா, இதோ பார்; நீ எனக்காக முதலில், பாடலிபுரத்தில் எத்தனைக் குர்ஜர தேசத்தார்க ளிருக்கிறார்கள், அவர்கள் யார் யார், அவர்களுடைய ஸ்திதி யென்ன, எங்கே வசிக்கிறார்கள், அவர்களுடைய சிநேகிதர்கள் யார், என்ன செலவழிக்கிறார்கள், இதை யெல்லாம் விசாரிக்கவேண்டும். இம்மாதிரி கேள்விகளின் சூழ்ச்சியினாலும் தோரணையினாலும், என் மகனைப்பற்றி அவர்கள் அறிந்திருப்பதை நீ தெரிந்துகொண்டு, நேராக அருகிற் சென்று எவ்வளவு அறியக்கூடுமோ அதைவிட சுற்று வழியால் இன்னும் நெருங்கிச் சென் றுணரலாம். அவனைப்பற்றி ஏதோ கொஞ்சம் தூரமாய் அறிந்திருப்பது போல் காட்டவேண்டும் நீ, “அவனுடைய தகப்பனாரும், சிநேகிதர்களும் எனக்குத் தெரியும், அவனையும் கொஞ்சம் அறிவேன்”, என்பது போல, கவனிக்கின்றனையா இதை, ராயநாதா?

ராய. ஆம், நன்றாய்க் கவனிக்கிறேன், ஐயனே.

பால. 'அவனையும் கொஞ்சம் அறிவேன், ஆனால்,' இப்படிச் சொல்லலாம் நீ, 'அவ்வளவு நன்றாய்த் தெரியாது, ஆயினும் நான் எண்ணுகின்றேன். அந்த ஆசாமியா யிருந்தால், அவன் பெரிய போக்கிரி, அவன் இம்மாதிரி அம்மாதிரி' யென்று உன் மனத்திற்குத் தோற்றிய குற்றங்களை யெல்லாம் அவன்மீது ஏற்றிக் கூறலாம். ஆனால் ஒன்று, அவனுக்கு அவமானத்தை யுண்டுபண்ணத் தக்க எதையும் கூறலாகாது. அதை ஜாக்கிரதையாய்க் கியாபகத்தில் வை; சுயேச்சையாய்த் திரியும் யவ்வனத்திற்குச் சகஜமென எல்லோரும் சாதாரணமாய் அறிந்திருக்கும் குறைகளையும் குற்றங்களையும் எடுத்துக் கூறலாம் நீ.

ராய. சூதாடுதல், என்பது போல்.

பால. ஆம், அல்லது மதுபானம் செய்தல், கோல் விளையாடல், சபதஞ் செய்தல், சண்டை போடுதல், அதுவரைக்கும் போகலாம் நீ.

ராய. ஐயனே, அது அவருக்கு அவமானத்தை யுண்டுபண்ணுமே.

பால. இல்லை, உண்டுபண்ணாது; குறையை நீ எடுத்துக் கூறுவதில் பக்குவப்படுத்திவிடலாம். ஸ்திரீ விஷயத்திலும் தவறி நடக்கிறானென்று அந்தக் குற்றத்தையும் அவன்மீது சாற்றலாகாது நீ; அதன்று என்னுடைய அர்த்தம்: சுயேச்சையாய்த் திரிவதினா லுண்டாம் கெடுதிகள் போலவும், அடங்காத் தன்மையுடைய மனத்தின் அத்து மீறி நடக்கும் சேஷ்டைகள் போலவும், வணக்கப்படாத யவ்வனத்தின் கொழுப்பெனவும் தோற்றும்படி அவ்வளவு சாதுர்யமாய், நீ அவனது குற்றங்களை மெல்ல எடுத்து ஓதவேண்டும்.

ராய. ஆயினும், ஐயனே,—

பால. என்ன காரணம்பற்றி நீ இவ்விதம் செய்யவேண்டும்?

ராய. ஆம், ஐயனே, அதை அறிய விரும்புகிறேன்.

பால. நல்லது, அப்பா, என் தாற்பரியம் இது; இந்த யுக்தியினால்

காரியம் எப்படியும் சித்தி யாகுமென்று நினைக்கிறேன் ; உப யோகத்தில் ஏதோ கொஞ்சம் அழுக்குற்ற ஒன்றைப்போல், என் குமாரன்மீது இச்சிறு குற்றங்களைச் சாற்றுவதினால், இதைக் கவனிப்பாய் நீ— உன்னோடு வார்த்தையாடுகின்ற ஆள், யாரை ஆழ்ந்துபார்க்கின்றாயோ அவன், நீ பேசும் வாலி பனை, முன்னே குறிக்கப்பட்ட குற்றங்கள் செய்யும்பொழுது எப்பொழுதாவது கண்டிருப்பானாயின், இந்த விதமாய் உன் னுடன் கலந்துகொள்வானென்று உறுதியாய் நம்பு ; 'வாஸ் தவம் ஐயா', அல்லது 'நண்பனே', அல்லது 'கனவானே,' அந்தச் சந்தர்ப்பத்திற்கும் அல்லது மனிதனுக்கும், தேசத் திற்கும் தக்கபடி சேர்த்துக்கொண்டு.—

ராய. மிகவும் நல்லது, ஐயனே.

பால. அதற் கப்புறம், அவன் இதைச் செய்கிறான்—அவன் செய் கிறான்—நான் என்ன சொல்ல வந்தேன்? எங்கப்பனே ! நான் ஏதோ சொல்ல இருந்தேன்—நான் எங்கே விட்டேன் ?

ராய. முடிவில் 'கலந்து கொள்ளுகிறான்', அல்லது 'நண்பன்', அல் லது 'கனவான்', அப்படி—

பால. ஆம், வாஸ்தவம் 'முடிவில் கலந்து கொள்ளுகிறான்' என்கிற இடத்தில்; அவன் இப்படி கலந்து கொள்கிறான் உன்னுடன்: 'அந்தக் கனவானை எனக்குத் தெரியும், நேற்றைத்தினம் அல்லது அன்றைத்தினம் பார்த்தேன், அல்லது அப்பொ ழுது, அல்லது அச்சமயத்தில், அல்லது இன்னாரோடு, இன்னாரோடு, நீ சொல்லுகிற பிரகாரம் சூதாடினான் ; அல் லது மது கேளிக்கையில் கண்டு பிடித்தேன், அவன் பந்து விளையாடுகையில் சண்டை போடும்பொழுது பார்த்தேன் ; அல்லது ஒரு வேளை அந்த விலைமாதின் வீட்டில், அல்லது தேவடியாளின் வீட்டிற்குள், அல்லது தட்டுவாணியின் வீட் டிற்குள், நுழையும் பொழுது பார்த்தேன்'—அப்படி வரும். இப்பொழுது தெரிகிறதா உனக்கு? நீ தூண்டிலி விட்ட பொய்யானது இந்த உண்மையான மீனைப் பிடிக்கும் ; தெள்

ளறிவும் தீர்க்காலோசனையு முடைய நாம் இவ்வாறு சுற்று மார்க்கங்களாலும், கோணிய பாதைகளாலும், குறுக்கு வழிகளாலுங் கண்டறிகிறோம் சரியான பாதைகளை ; அதுபோலவே நான் முன்பு கூறிய பிரசங்கத்தினாலும் புத்திமதியினாலும், என் பிள்ளையைக் கண்டறிவாய் நீ. என் எண்ணத்தை அறிந்தனை அல்லவா நீ ?

ராய. ஆம், ஐயனே, அறிந்தேன்.

பால. ஜகதீசன் உனக்குத் துணையா யிருப்பாராக ! சுகமாய்ப் போய்வா.

ராய. அப்படியே, ஐயனே.

பால. உன் உள்ளத்தைக் கொண்டு அவன் மனம் போகிற வழியை ஆராய்வாய்.

ராய. ஆகட்டும், ஐயனே.

பால. பிறகு அவன் பாடுகிற பாட்டு பாடட்டும்.

ராய. சரி, ஐயனே.

பால. போய் வா. [ராயநாதன் போகிறான்.]

அபலை வருகிறாள்.

என்ன அபலா ? என்ன விசேஷம் ?

அப. அந்தோ ! அண்ணா ! நான் மிகவும் பயமடைந்தேன் !

பால. ஈசனாணை !— எதைக்கண்டு ?

அப. அண்ணா, நான் என் அறையில் உட்கார்ந்து வீணை வாசித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று இளவரசர் அமலாதித்யர் தலைமுடி ஒரு புறம் அவிழ்ந்து தொங்க, தானணிந்த உடை தாறுமாறாய், அணி முடியின்றி அலங்கோலமாய், முகம் வெளுத்துக் காட்ட, முழங்கால் தள்ளாட, அங்கு நடக்கும் கோரங்களைக் கூறிட அந்தக னுலகினின்றும் வந்தவர் போலப் பார்த்தவரெல்லாம் பரிதாபப்படும்படியான பார்வையுடன், என்முன் தோன்றினார்.

பால. உன்மீதுள்ள காதல் வெறியினலோ ?

அப. அண்ணு, எனக்குத் தெரியாது ; ஆயினும் அப்படித்தா னிருக்க வேண்டுமென்று அஞ்சுகின்றேன்.

பால. அவர் சொன்ன தென்ன ?

அப. ஒரு கையால் என் கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, தன் கரத்தி னளவுதூரம் பின்னுக்கு வாங்கி, மற் ெருரு கையைத் தன் நெற்றியின்மீது இப்படி வைத்தவ ராய், என் முகத்தை வர்ணிப்பதுபோல் உற்றுப் பார்த்த வண்ண மிருந்தார். நெடுநாழி இவ்வண்ணமே அசைவற் றிருந்தார். பிறகு நான் என் கரத்தைச் சற்று அசைக்க, மூன்று முறை தன் தலையை இப்படி மேலும் கீழுமாய் அசைத்து, தன் உடலெல்லாம் குலுங்க, ஆவியே பிரிவது போல் பரிதாபமாகப் பெருமூச் செறிந்தார். பிறகு என் கரத் தை விட்டுவிட்டுத் தன் தோளின்மீது தலை சாய்த்தவராய், கண் ணிழந்தவர்போல், போகும் வழியைப் பாராமலே, வாயி லைக் கடந்து சென்ருர் கடைசிவரை கண்ணெளி என்மீது சாய்த்த வண்ணமே.

பால. நீ வா என்னுடன், நான் மகாராஜாவைக் கண்டு பேசுகின் றேன். கரை மீறின காதலாம் இது ; காலம் வருமுன் கடுகிச் செய்வதே அதன் கொடுங் குணமாம் ; இவ்வுலகில் மாணிடப் பிரகிர்தியைப் பிடிக்கும் மற்றெல்லாத் துர்க்குணத்தையும் போல், கண்டதெல்லாம் செய்ய உந்தும் மனத்தை. எனக்கு வருத்தமா யிருக்கின்றது. என்ன, நீ கொஞ்சம் நாட்களுக் குள் ஏதாவது அவரைக் கோபித்து மொழிந்தனையா ?

அப. இல்லை, அண்ணு.—ஆனல் நீங்கள் கட்டளை யிட்டபடி, அவர் எனக் கனுப்பிய நிருபங்களை யெல்லாம் திருப்பிவிட்டேன். அவரும் என்னை அணுக லாகாதென மறுத்துவிட்டேன்.

பால. அதுதான் பயித்தியம் பிடிக்கச் செய்தது ! சீ ! அமலாதித் யனை நன்ருய்க் கவனியாது விட்டேன். ஏதோ உனது

மதியை மயக்கி மோசஞ் செய்ய எண்ணினதாக நினைத்தேன். சீ ! புத்தி யற்ற சந்தேகங் கொண்டேன். யவ்வனத்தில் யோசனையின்றி எக்காரியமும் செய்தல் எப்படி சகஜமோ, அவ்வாறே முன்பின் பாராமல் சந்தேகங் கொள்ளல் முது மைக்குச் சகஜமா யிருக்கின்றது. வா, நாம் மகாராஜாவிடம் போவோம். இதை அவருக்குத் தெரிவிக்கவேண்டும் ; அறிந் தால் கொள்ளும் வெறுப்பைவிட, அறியாதபடி மூடிவைப் பதா லுண்டாம் துக்கம் அதிகமாம். வா போவோம்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

*அரண்மனையில் ஓர் அறை.*

காலதேவன், கோமணி, ராஜகாந்தன், கிரிதரன்,

*சேவகர்கள் வருகிறார்கள்.*

கா. *வாராய் இனிய ராஜகாந்தா! வாராய் கிரிதரா! அநேக நாட்களாய் உம்மைப் பார்க்க மிகவும் ஆவல்கொண் டிருந்தோம், அன்றியும் உம்மா லாகவேண்டிய தொன்றுளது பற்றி உம்மை விரைவில் வரவழைத்தோம். அமலாதித்யன் மாறுபாட்டைப் பற்றி சிறிது நீங்கள் கேள்விப்பட் டிருக்கலாம். அதை மாறுபா டென்றே அழைக்கின்றேன், ஏனெனில் வெளி யுருவும் மாறியிருக்கின்றது, உட் குணமும் மாறியிருக்கின்றது. இரண்டும் முன்பிருந்ததுபோ லில்லை. இவ்வித மவன் தன்னை யறியாது மாறும்படி, தகப்பனி றந்தது தவிர, தரணியில் வேறெக் காரண முளதெனக் கனவிலும் அறிகிலேன் நான். உங்க ளிருவரையும் வேண்டிக் கொள்ளுகின்றேன். சிறு வயது முதல் அவனுடன் சிநேகமாய்ப் பழகி வளர்ந்தமையாலும், அவனைப்போல் யவ்வன முடையவர்களாய் அவனது குணாதிசயங்களை யெல்லாம் அறிந்தவர்க ளாகையாலும், சின்னா ளிங்கு, நம தரண்மனையில் தங்கி யிருப்பீராக; இருந்து, அவனுடன் பழகி, அவன் மனத்தை விநோதத்தின்மீது திரும்பச்செய்து, நாம் அறியாம லிருக்கும், அறிந்தால் அதைப் போக்கவல்ல சிகிச்சை யேதேனும் தேடக்கூடிய, அவன் மனத்தை வாட்டுகின்ற துய ரேதேனு முளதேல், அதை நீங்கள் சமயோசிதமா யறிந்து, எமக் குரைப்பீராக.*

கோ. *அப்பா, உங்களைப்பற்றி அவன் அடிக்கடி வார்த்தையாடி யிருக்கின்றான். உம்மைவிட அவ னதிகமாய் அன்பு வைத்த இருவர் இவ்வுலகி லில்லையென்றே நம்புகின்றேன். உமது நற்குணத்தையும் உமக்கு எம்மிட மிருக்கும் பிரீதியையும், காட்ட விருப்ப முடையவராய்ச் சில காலம் எங்களுடன் இங் கிருந்து, நாங்கள் சொல்லுகிறபடி நடந்து, எங்கள் கோரிக்*

கையைப் பூர்த்தி செய்து, பயன்படச் செய்வீராயின், உங்கள் வரவை *டிகாராஜா மறவாது தக்க பிரதி செய்வார்.

ரா. இராஜாதிராஜனே, இராஜமகிஷீ, நீங்க ளிருவரும் உமது ஊழியராகிய எங்களை, உமது விருப்பத்தைச் செய்து முடிக்க வேண்டுவதைவிட, கட்டளை யிடலாமன்றோ!

கி. கட்டளைப்படி நிறைவேற்றுகிறோம். காத்துக்கொண் டிருக்கின்றோம், காலா விட்ட வேலையைக் கருத்துடன் பணிந்து செய்ய!

கா. மிகவும் சந்தோஷம், ராஜகாந்தா, இனிய கிரிதரா.

கௌ. மிகவும் சந்தோஷம், கிரிதரா, இனிய ராஜகாந்தா, உடனே புறப்பட்டுப் போய் மாறுபட் டிருக்கும் எம் மைந்தனைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.—சேவகர்களே, உங்களில் சிலர் இவர்களை அமலாதித்ய னிருக்குமிடம் அழைத்துச் செல்லுங்கள்.

கி. நமது வரவும் வழிபாடுகளும் அவருக்குச் சுகத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்குக!

கௌ. அப்படியே ஆகுக!

[சில சேவகர்களுடன் ராஜகாந்தனும் கிரிதரனும் போகிறார்கள்.]

பாலநேசன் வருகிறான்.

பால. பாஞ்சாலம் போயிருந்த ராயபாரிகள், எம்மிறையே, சந்தோஷத்துடன் திரும்பி வந்திருக்கிறார்கள்.

கா. நமக்கு நீர் எப்பொழுதும் நற் செய்தியையே கொண்டு வருகிறீர்.

பால. நான் கொணர்கின்றேனா, நாதனே? என் நல்லரசே, உண்மையாய் நம்பும், என் ஈசனுக்கும் என் அரசனுக்கும் எனது ஆன்மாவை அர்ப்பணம் செய்ததுபோல எனது கடமையையும் அர்ப்பணம் செய்கிறேன். நான் எண்ணுவ தென்னவென்றால்—இது தவறா யிருக்குமாயின் என் புத்தியானது இராஜரீகத்தின் அடிச்சுவடை முன்போல் அத்தனைக் கவன

மாய்ப் பின் தொடராத தாகும்—அமலாதித்யர் பயித்தியத் தின் ஆதி காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டேன் என்பதே.

கா. ஆ! ஆனால் அதைக் கூறும். அதைக் கேட்க ஆவலா யிருக் கிறேன்.

பால. ராயபாரிகள் உள்ளே வர, முதலில் உத்தர வளியும். அந்தப் பெரும் விருந்திற்குக் கடைசியில் புசிக்கும் பஞ்சாமிர்த மாகும் நான் பகர்வது.

கா. ஆனால் நீரே அவர்களுக்கு ஆசி கூறி, அழைத்து வாரும்.

[பாலநேசன் போகிறான்.]

என் இனிய அரசியே, உனது குமாரனுடைய புத்தி மாருட் டத்தின் ஆதி காரணத்தைத் தான் அறிந்ததாக எனக்குக் கூறுகிறான்.

கௌ. அவன் தந்தை மரித்ததும், நாம் அதி விரைவில் மணந்தது மே, அதற்கு முக்கிய காரண மன்றி, வேறொன் றில்லையென எண்ணுகிறேன் நான்.

கா. சரி, அவனை ஆய்ந்து பார்ப்போம்.

பாலநேசன், வாலிதமண்டலன் சுநுணலயன் இவர்களை அழைத்துக்கொண்டு மறுபடியும் வருகிறான்.

வாருங்கள் எனது நண்பர்களே; வாலிதமண்டலா, நமது சகோதரனாய அரசனிடமிருந்து என்ன செய்தி, உரைத்திடு.

வா. தாம் அனுப்பிய ஆசிகளையும் கோரிக்கைகளையும், தமக்கே திருப்பி விடுத்தனர் விமரிசையாய். நாங்கள் முதலில் பார்த்த தும், தனது தமையன் மகனது நூதன சைனியங்களை அடக்கும்படி ஆட்களை அனுப்பினார். அவர்கள் பாலகே சர்மீது படையெடுத்தவராய் முதலில் அவருக்குக் காணப் பட்டபோதிலும், பிறகு உற்று நோக்குங்கால், இங்கு சமஸ் தானத்தின்மீது சன்னத்தமானவர்களாய், உண்மையை அறிந் தீர். அதன்மேல் துக்கக்கிராந்தராய்—தனது பிணியும், மூப்

பும், வீரிய மின்மையும், மோசவழியில் இவ்வாறு கையா ளப்பட்டதாய்க் கருதினவராய்—பார்த்திபநேசனைப் பந் தித்து வரும்படி படைஞரை அனுப்பினர். சுருக்கிச் சொல்ல, அப் பார்த்திபநேசன் அதற் குடன்பட்டவனாய், பாஞ்சால அரசனது குற்றஞ்சாற்றுதலுக்குட்பட்டான்; முடிவில் தனது சிற்றப்ப னெதிரில், இங்கு மகாராஜாவின்மீது இனி படை யெடுப்ப தில்லையென்று, சத்தியம் செய்தான்; அதன்மீது வயோதிகனான பாஞ்சால அரசன் ஆநந்த பூரிப் படைந்தவ ராய் வருட மொன்றிற்கு மூவாயிரம் பொன் கொடுத்து, பால கேசர்மீது முன்பவன் சேகரித்த சைனியத்தை உபயோகிக் கும்படி உத்தரவும் அளித்தார். [ஒரு நிருபத்தைக் கொடுத்து] இதில் கண்டிருக்கிறபடி அச் சைனியங்க ளெல்லாம், ஒரு குறையுமின்றி க்ஷேமமாய் உமது தேசத்தின் வழியாய் இவ் வேலையை முடிக்கும் வண்ணம் போகத் தாம் கருணையுடன் உத்தர வளிக்க வேண்டுமென்று விண்ணப்பமும் செய்திருக் கிறார், இதில் விவரித்திருக்கும் வண்ணம்.

கா. இது நமக்கு மிகவும் சம்மதமா யிருக்கிறது; நமக்கு இன் னும் அதிக அவகாச மிருக்கும்பொழுது அதைப் படித்துப் பார்த்து, உத்தரம் வரைந்து, பிறகு இவ் விஷயத்தைப்பற்றி யோசிப்போம். அதனிடையில், நன்கு பூர்ணம் செய்த உமது முயற்சிக்காக உமக்கு வந்தன மளிக்கின்றோம். போய் இளைப்பாறுங்கள். இன்றிரவு நாம் ஒன்றாய் விருந் துண் போம். நீங்கள் வந்து சேர்ந்தது மிகவும் சந்தோஷம்.

[வாலிதமண்டலனும், கருணலய னும் போகிறார்கள்.]

பால. இந்த வேலை முடிந்தது சரியாய். பிறகு, இராஜராஜனே, இரா ஜமகிஷி, ஒரு விண்ணப்பம். ராஜரீகம் என்பது இன்னது, இராஜர்களுக் குரிய கடைமை யென்பது இன்னது, பகல் பக லாவானேன், இரவு இரவாக ஆவானேன், வேளை வேளையா யிருப்பானேன், என்று இவைகளை யெல்லாம்பற்றி விரித் துரைத்தல், இரவு, பகல், வேளை எல்லாவற்றையும் விருதா

வாக்குவாதம். ஆகவே சுருக்கிச் சொல்லுதலே சூட்சும புத்திக் கழகு, விவரித் துரைத்தல் வெளியலங்காரம், என்றபடி நான் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். தங்கள் குமாரனுக்குப் பயித்தியம் பிடித்திருக்கின்றது, பயித்திய மென்றே கூறுகின்றேன் நான் அதை ; ஏனெனில் உண்மையில் பயித்தியமென்றால் என்ன, பித்த மதிகரித்தலே !—அதிருக்கட்டும்.

கௌ. விஷய மதிக மாகவும், வர்ணனை கொஞ்சமாகவும் இருக்கட்டும்.

பால. அம்மணி, வர்ணனையை உபயோகிப்ப தில்லையென்று சத்தியம் செய்கிறேன். அவருக்குப் பயித்தியம் பிடித்திருக்கின்றது வாஸ்தவமே : வாஸ்தவமாய் அது துக்கமான விஷயமே ; துக்கமா யிருக்கின்றது என்பது வாஸ்தவம் ; அது வாஸ்தவமா யிருக்கின்றது என்பது துக்கமான விஷயம்: வீண் வார்த்தை ! ஆகவே அது வேண்டா மினி, வர்ணனையை நான் உபயோகியேன். ஆகவே, அவருக்குப் பயித்தியம் பிடித்திருக்கின்றது என்று ஒப்புக்கொள்வோம். இப்பொழுது நாம் இந்த முடிவிற்குக் காரணம் கண்டுபிடிக்க வேண்டும் ; அதாவது இந்தக் குறைவிற்குக் காரணம். ஏனெனில், இந்த முடிவு குறைவா யிருப்பதற்கு ஒரு காரணம் வேண்டுமே ! இப்படி இருக்கின்றது முடிவு, முடிவா யிருக்கின்ற திப்படி. ஆகவே யோசியும் ; பெண்ணொருத்தி எனக்கிருக்கின்றாள். என்னிட மிருக்குமளவும் என் பெண்தான். அவள், தன் கடமையின்படியும் என் கட்டளைப்படியும், இதைக் கவனியுங்கள், இதை என்னிடம் கொடுத்திருக்கிறாள். இதைக் கேளுங்க ளினி, கேட்டு ஊகியுங்கள்— [படிக்கிறான்.] "அந்தரத்தும் ஒப்புயர் வில்லா என் ஆருயிர்க் காதற் கிளியாகிய அபலைக்கு,"— இதென்ன வார்த்தை ! காதற்கிளி ! அசங்கியமான பேச்சு ! ஆயினும் கேட்கவேண்டும். பிறகு, [படிக்கிறான்.]

அவளது "தங்கக் கலச நிகர் தனத்திடை" அப்படி அப்படி, போகின்றது.

கௌ. அமலாதித்யனா அவளுக்கு அப்படி எழுதி விடுத்தான் ?

பால. என் நல்லம்மணி, சற்று பொறுங்கள், உள்ளபடி உரைக்கின்றேன் நான். [படிக்கிறான்.]

" தினகரன் றானும் தெற்குதித் தாலும்
திக்குக ளெல்லாம் மாறிய வேனும்
கனமதா மெய்யும் பொய்யா னாலும்
காதல தென்றும் குன்றுவதோ நான்.

" என் கண்ணே ! அபலா ! கவி பாடல் கடினமா யிருக்கின்றதெனக்கு. என் துயரத்தை அளவிட எனக்குச் சக்தியில்லை. ஆயினும் உன்மேல் நான் காதல் கொண்டிருப்பது உண்மையென, உத்தமியான அபலா, உறுதியாய் நம்பு, இங்ஙனம்.

உத்தமியே, இவ்வுடல் தனக் குள்ளவும்
உன்னுடைய ஊழியனான
அமலாதித்யன். "

இதை என் பெண் கடமைப்படி என்னிடம் காண்பித்தாள். அன்றியும் ஆங்காங்கு அந்தந்தச் சமயங்களில் அவர் வாயினின்றும் வந்த வேண்டுகோள்களையும் என் செவிபடக் கூறியிருக்கின்றாள்.

கா. அவன் காதலை அபலை எத்திறம் அங்கீகரித்தனள் ?

பால. என்னை என்னவென்று நினைக்கின்றீர்கள் ?

கா. மிகுந்த மரியாதையுள்ள மனிதன் என்றும், நன்றி மறவாத ஊழியனென்றும் நம்புகிறோம்.

பால. அதை இதோ நான் ரூபித்துக் காட்ட விரும்புகின்றேன். இந்த ஆத்திரப்படும் அடங்காக் காதலை நான் கண்டறிந்தவுடன்—இதை என் பெண் எனக்குக் கூறு முன்னமே, நான் கண்டறிந்தேன் ; அதை உமக்குக் கூற வேண்டும்—நான் வாய் மூடிக் கண் பொத்தி மௌனமாய் அறிவில்லா ஜடத்தைப் போல் பராமுகஞ் செய்திருப்பேனாயின், அல்லது இக்காதலைக் கண்ணுற் கண்டும் கவனியா திருப்பேனாயின், நீங்களும்

எமது தேவியாகிய உம தரசியும் என்ன நினைத்திருப்பீர்கள் என்னைப்பற்றி ? இவ்விஷயம் புலப்பட்டவுடன், புறப்பட்டேன் வேலைக்கு! உடனே என் இளம் பெண்ணிடம் சென்று, 'அமலாதித்யர் அரசகுமாரர், உன் அந்தஸ்திற்கு மேலானவர் ; இது உதவாது:' என்று கண்டிப்பாய்க் கூறி, அவர் பாராதபடி உள்ளே யிருக்க வேண்டுமென்றும், அவ ரனுப்பும் தூதுகளையும் பராமுகஞ் செய்ய வேண்டு மென்றும், அவரிடமிருந்து எதையும் பெறலாகாதென்றும் புத்திமதிகள் கூறினேன். இவ்விதம் நான் சொல்ல அந்தப் புத்திமதிகளை அங்கீகரித்தாள் ; அவரோ இவ்வாறு வெறுக்கப் படவே—கதையைச் சுருக்கிச் சொல்லுமிடத்து—துக்கப் பட்டார், உணவை விட்டார், கண் கொட்டார், பல மட்டார், புத்தி மட்டாய் ; இவ்வாறு படிப்படியா யிழிந்து, மதி கெட்டார், இதுதான் அவர் பித்தம் பிடித்துப் பிதற்றுவதற்குக் காரணம், நாம் வருந்துவதற்கும் காரணம்.

கா. இப்படித்தா னிருக்குமென்று நினைக்கின்றனையா ?

கௌ. இருந்தாலு மிருக்கலாம் ஒரு வேளை.

பால. நான் 'இப்படித்தான்' என்று உறுதியாய்க் கூறின பிறகு அப்படி ஆகாமற் போன காலமும் ஒன்றுண்டோ, அதை நான் அறியவேண்டும் ?

கா. எனக்குத் தெரிந்தவரையி லில்லை.

பால. [தன் தோளையும் தலையையும் குறிப்பிட்டு] இது நான் கூறிய வண்ணமில்லாவிடின், இதினின்றும் இதை எடுத்து விடுங்கள். உள்ளுக் குள்ளாய் ஒளித்திருந்தபோதிலும் உண்மையை அறிந்து விடுவேன் காலம் மாத்திரம் வாய்த்தால்.

கா. இத னுண்மையை நாம் இன்னும் நன்று யறிவ தெப்படி ?

பால. இவ்விடத்தில் அவர் எந்நேரமும் உலாவுகிற வழக்கம் தெரியுமே உமக்கு ?

கௌ. ஆம், அப்படித்தான் செய்கிறான்.

பால. அந்தச் சமயம் பார்த்து என் பெண் அவரைச் சந்திக்கச் செய்கிறேன். நான்: காத்திருந்து திரைக்குள் கவனிப்போம் நாமிருவரும் அவர்கள் சந்திப்பை. அவள்மீது காதல் கொண்டவராய் அதனால் அறிவு கலங்கினவராய்க் காட்டாவிட்டால், நான் இராஜாங்கத்தில் மந்திரி வேலையை விட்டு, கழனியில் மாடு ஓட்டும் தொழிலை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

கா. இதைப் பார்ப்போம் நாம்.

கௌ. அதோ பாரும்! ஐயோ! பார்த்தவர் பரிதாபப்படும்படியான முகத்துடன் ஏதோ படித்த வண்ணம் வருகிறான் பேதை.

பால. போங்கள்! நீங்க ளிருவரும் போங்கள், நான் வேண்டிக் கொள்கிறேன், நான் போய்ப் பேசுகிறேன் அவருடன் உடனே—எனக் குத்தரவளியும்.

[காலதேவனும், கௌரீமணியும் பரிவாரத்துடன் போகிறார்கள்.]

அமலாதித்யன் படித்த வண்ணம் வருகிறான்.

இளவரசருக்குத் தேகம் எப்படி யிருக்கின்றது?

அம. சுகந்தான். சுவாமியி னருள்.

பால. அரசே, என்னை அறிவீரா?

அம. அறிவேன் நன்றாய்; மீன் பிடிப்பவ னன்றா நீர்?

பால. அல்ல, அரசே.

அம. ஆனால் அவ்வளவு யோக்கியனா யிருப்பீரெனக் கோருகிறேன்.

பால. யோக்கிய னாகவா, அரசே?

அம. ஆம், ஐயா; யோக்கியனா யிருப்பதென்றால் உலக வழக்கின் படி பதினாயிரத்தி லொருவனா யிருக்க வேண்டும்.

பால. அது மிகவும் மெய்தான், இளவரசே.

அம. ஆதித்ய னொளியினால் ஆவி போன நா யுடலத்திலும் அற்பப் புழுக்க ளுண்டானால், அந்தத் தேவதையே அற்பப் பிணத்தை முத்தமிட்டால்,—உமக்கொரு பெண் இருக்கின்றாளா?

பால. இருக்கின்றாள், அரசே.

அம. வெயில் படும்படி வெளியே போகவிடாதீர் அவளை : கருது தல் நல்லதுதான் : ஆயினும் தோழனே, உமது பெண் கரு தரித்தால் கஷ்டமாய் முடியும் ; ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும் அதை.

பால. [ஒரு புறமாக] இதற்கென்ன சொல்லுகிறது ? எந்நேரமும் என் பெண்ணே கவலை : ஆயினும் முதலில் என்னைக் கண்டுபிடிக்க வில்லை ; என்னை மீன் பிடிப்பவனென் றல்லவோ கூறினார் : பயித்தியம் முத்திவிட்டது, முத்திவிட்டது. எனது யவ் வனத்திலும் காதலின்பொருட்டு அதிக கஷ்ட மனுபவித் தேன் நானும் இதைப்போல் சற்றேறக்குறைய மறுபடியும் பேசிப் பார்க்கிறேன் அவருடன்.— அரசே, என்ன படிக்கின் றீர் ?

அம. பதங்கள், பதங்கள், பதங்கள்.

பால. என்ன சமாசாரம், அரசே ?

அம. யாருக்குள் ?

பால. இல்லை, அரசே, என்ன சமாசாரம் படிக்கின்றீர் என்று கேட் டேன்.

அம. வீண் தூஷணை ஐயா ! துஷ்டக் கவி பரிஹாசம் செய்கி றான் பாரும். கிழவர்களுக்கெல்லாம் தாடி நரைத்திருக்கின்ற தாம், முகம் திரைத்திருக்கின்றதாம், கண் பிசின் மரத்தைப் போல் பீளை யுடைத்தா யிருக்கின்றதாம், மார்பின் பலம் குறைவாயும் மதிசூன்யம் மாத்திரம் அதிகமாயு மிருக்கின்ற தாம் ; இவைகளை யெல்லாம் நான் உறுதியாய் நம்பியபோதி லும், இப்படி எழுதுதல் தர்ம மல்ல வென்று எண்ணுகி றேன் ; ஏனெனில் நீரும் நண்டைப்போல் பின் செல்லக் கூடுமாயின் என் வயதுக்கே வருவீர் !

பால. [ஒரு புறமாக] வெறியா யிருந்தபோதிலும் வழி யொன் றிருக் கின்றது இதில்.—அரசே, காற்றில்லா விடம் வருகின்றீரா ?

அம. என் சமாதிக்கா ?

பால. ஆம், காற்றில்லா விடந்தானது! [ஒரு புறமாக] அவர் அறைந்திடும் பிரதி யுத்தரங்களில் எவ்வளவு அர்த்தம் அடங்கியிருக்கின்றது சில வேளை! இவ்வர்த்த சங்கேதமானது பயித்தியத்தில் பன்முறை படுகின்றது, அறிவிற்கும் புத்திக்கும் அத்தனை அழகாய் அமைவது கடினம். நான் இவரை விட்டுப் போய் திடீரென்று அவர் என் பெண்ணைச் சந்திக்கும்படி செய்கின்றேன்.—என் அரசே, வணக்கத்துடன் விடை பெற்றுக் கொள்ளுகிறேன் உம்மிடமிருந்து.

அம. பெற முடியாதென்னிடமிருந்து நீர் வேறெதையும் இதனிலும் சந்தோஷமாய்: என்னுயிர் தவிர—என்னுயிர் தவிர—என்னுயிர் தவிர!

பால. நான் வருகிறேன் அரசே.

அம. கிழத் தொனுப்புகள்!

ராஜகாந்தனும், கிரிதரனும் வருகிறார்கள்.

பால. நீங்கள் அமலாதித்யரைப் பார்க்கப் போகிறீர்கள்; அதோ இருக்கின்றார் அவர்.

ரா. உமக்கு வந்தனம், ஐயா. [பாலநேசன் போகிறான்.]

கி. இளவரசே!—

ரா. எம்மிறையே!—

அம. என் சிறந்த நண்பர்காள்! எப்படி யிருக்கின்றாய் கிரிதரா? ஆ! ராஜகாந்தா! எனப்பா, எப்படி இருக்கின்றீர்கள் இருவரும்?

ரா. உலகத்தவர் எல்லோரையும்போல் ஏதோ இருந்துகொண்டிருக்கிறோம்.

கி. மிதமிஞ்சின சந்தோஷ ஸ்திதியி லில்லையென்று சந்தோஷிக்கிறோம், லட்சுமி கடைக்கண்ணூற் பார்க்கும் ஸ்திதியிலு மில்லை.

அம. காலா லுதைக்கும் ஸ்திதியிலு மில்லை?

ரா. இரண்டும் இல்லை, அரசே.

அம. ஆனால் இடையி லிருக்கின்றீர்போலும், அவளது கடாட்சத்தின் மத்தியில், அதிருக்கட்டும்,—சமாசாரம் என்ன?

ரா. வேறொன்று மில்லை, உலகம் நல் வழிக்குத் திரும்பி விட்டது.

அம. ஆனால் பிரளயம் அணுகிவிட்டதுதான். ஆயினும் நீர் உரைத்திடும் சங்கதி உண்மையன்று. இன்னும் விவரமாய்க் கேட்டறிகிறேன். உம்மை தோழர்களே, எந்தக் கிரஹசார பலத்தால் இந்தச் சிறைச்சாலைக்கு வரும்படி உங்களுக்கு நேர்ந்தது?

கி. இளவரசே, சிறைச்சாலையா?

அம. குர்ஜரம் ஒரு சிறைச்சாலையே!

ரா. ஆனால் உலகமே ஒன்றுதான்.

அம. அது பெருஞ் சிறைச்சாலையாம்; அதில் அநேகம் இருட்டறைகள், சிற் றறைகள், கெவிகள் முதலிய விருக்கின்றன, குர்ஜரம் என்பது அவற்று ளெல்லாம் கேடுகெட்டது.

ரா. நாங்கள் அப்படி எண்ணவில்லை, அரசே.

அம. ஆனால் உங்களுக் கப்படி யிராது. நல்லது என்பதும் அல்லது என்பதும் நம் மனத்தா லன்றி மற்றொன்று மில்லை; எனக்கிது சிறைச்சாலையே.

ரா. உமது ஆசைப் பெருக்கம் உமக்கு அப்படித் தோற்றச் செய்கிறது, உமது பெரிய மனத்திற்கு அது சிறுத்துக் காட்டுகின்றது.

அம. ஈசனே! ஈசனே! என் மனம் பாத்திரம் கெட்ட கனவுகளால் பிடிக்கப்படாது நிம்மதியா யிருக்கு மாயின், மா வித்துக்குள் ளிருந்தும் மண்டலாதிபனென மகிழ்ந் திருப்பேனே.

கி. நிம்மதி யில்லா திருப்பதே பேராசையாம். ஏனெனில், பேராசைக்காரர்கள் தேடும் பொருள் எல்லாம் கனவின் சாயலேயாம்.

அம. அக்கனவுகளே கணத்தில் மாறும் சாயையாம்.

ரா. உண்மையே, ஆகவே நான் பேராசையை சாயையின் சாயையாக, அத்தனை இலேசும் அற்பமுமான விஷயமாக மதிக்கிறேன்.

அம. அங்ஙனமாயின் நமது பிச்சைக்காரர்களை உடல்களாகவும், பெரும் மன்னர்களையும் பேர்பெற்ற வீரர்களையும் அவர்களது சாயையாகவும், கொள்ளல் வேண்டும். அரண்மனைக்குப் போவோமா நாம்? என் ஆவிமீ தாணை, என் ஆராய்ந் தறியுஞ் சக்தி அதிக பலஹீனப்பட் டிருக்கிறது.

ரா-கி. காத்திருக்கின்றோம் உங்கள் உத்தரவிற்கு.

அம. அப்படி வேண்டாம். எனது காவலாளிகளுடன் உம்மையும் கணக்கிட எனக்கு விருப்ப மில்லை. உண்மையை உம்மிடம் கூறுமிடத்து, என்னைக் கடுங்காவலில் வைத்திருக்கின்றனர். ஆயினும் நமது பழய நேய மார்க்கத்தில் கூறுங்கள், ஏது நீங்கள் சிலனபுரம் நாடியது?

ரா. உம்மைக் காணும்பொருட்டு, அரசே; வேறொரு காரண மில்லை.

அம. எல்லா மிழந்தவ னாயினும் நல் வார்த்தையிலும் நல்கூர்ந்தவ னேனன்! ஆயினும் உமக்கு வந்தனம் செய்கிறேன், உண்மையில், பிரியநேயரே, என் நல்ல வந்தனம் உமக்கு நாணயமற்ற தாகும். நீங்கள் வரவழைக்கப்பட்டீர்க ளல்லவா? நீங்களாக வந்ததா, சுயேச்சையாக?—வாருங்கள். உண்மையைக் கூறுங்கள் என்னிடம். வாரும், அது உதவாது, கூறும்!

கி. நாங்கள் என்ன சொல்லட்டும், அரசே?

அம. எது வேண்டினும், விஷயம் வெளியாகவேண்டும் அவ்வளவே! நீங்கள் வரவழைக்கப்பட்டீர்கள். மறைக்க முயன்றும் மெய்ப்பிக்கின்ற தனை உமது முகம், உமது உள்ளத்தில் கள்ளத்தன மில்லை அதை முற்றிலும் மூடிட; நமது நல்லரசரும் அரசியும் உம்மை வரவழைத்தார்கள், தெரியு மெனக்கு.

ரா. எதன் பொருட்டு அரசே?

அம. ஆ! அதை நீங்கள் எனக்குக் கூறவேண்டும். ஆயினும் நமது தொன்றுதொட்டு வந்த தோழமையின் பொருட்டும், இளமையின் ஒருமையின் பொருட்டும், அந்நாளி லிருந்து ஆதரிக்கப்பட்ட அன்பின் ஆணையின் பொருட்டும், என்னிலும் வல்

லா னொருவன் உமக்கு எடுத்துக் கூறவல்ல எதன் பொருட்டும், உம்மீது ஆணைப்படி உண்மையைக் கூறும் நேராய், நீங்கள் வரவழைக்கப்பட்டீர்களா இல்லையா ?

ரா. [ஒருபுறமாக கிரிதரனுக்கு] நீ என்ன சொல்லுகிறாய் ?

அம. [ஒரு புறமாக] இது உதவாது, உம்மீது ஒரு கண்ணாகத்தானிருக்கின்றேன்.—என்மீது பிரிய மிருக்குமாயின் தூரத்தில் நில்லாதீர்கள்.

கி. அரசே, உண்மையே, நாங்கள் வரவழைக்கப்பட்டோம்.

அம. ஏனென்று கூறுகின்றேன் நான், நீங்கள் வெளியிடா வண்ணம் நானே முன்பு கூறிவிடுகின்றேன், மகாராஜாவும் மகாராணியும் உம்மிடம் கூறிய ரகசியமும் சிறிதுங் கெடாது. சில காலமாக—அது என்ன காரணம் பொருட்டோ அறியேன் நான்—மன மகிழ்ச்சி மட்டானவனாய், வேடிக்கை விநோதமெல்லாம் வெறுத்திருக்கின்றேன் ; மழுங்கிய என் மனத்திற்கு எல்லாம் மாறுபட்டுத் தோன்றுகின்றது, இவ்வழகிய பூமண்டலம், இப்பூமி, கட்டாந்தரையாம் மூலையைப் போலவே காண்கிறது. இதனைக் கவர்ந்திருக்கும் ஒப்புயர் வற்ற இவ்வாகாயம், இவ் வாயு மண்டலம், கவின் பெறக் கவிந்து நிற்கு மிக் ககனம், பொன்போற் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் பொருந்திய வையத்திற்கோர் கூரைபோன்ற இவ்வானம், நோயும் நாற்றமும் நிரம்பிய ஆவிப் பெருக்கம்போலும் புலப்படுகின்றது என் கண்ணில். என்ன விசித்திரமான சிருஷ்டி இந்த மனிதன் ! புத்தியில் என்ன பெருமை பெற்றவன் ! கரை காணாத் திறமை யுடையவன் ! உருவத்திலும் சலனத்திலும் என்ன அருமையும் அழகு முடையவன் ! செய்கையில் தேவதையே போன்றவன் ! அறிவினில் சர்வக்ஞனாகிய சர்வேஸ்வரனுக்கும் எவ்வளவு ஒப்பாகின்றான் ! உலகத்திற்கோர் திலகம் ! ஜீவராசிகளுக்குச் சிகரம் போன்றவன் ! ஆயினும் எனக்கு மண்ணாமிம் மனிதன் என்னும் ? மனிதனைக் கண்டு மகிழ வில்லை என் மனம் : மாதரைக் கண்டும் மகிழ்வ

தன்று, உங்கள் புன்னகையினால் நீங்கள் அவ்வாறு எண்ணுவதாகத் தோன்றியபோதிலும்.

ரா. அரசே, அப்படிப்பட்ட விஷயம் என் எண்ணத்தில் ஏதுமில்லை.

அம. பிறகு ஏன், நான் "மனிதனைக் கண்டு மகிழ்வில்லை என் மனம்" என்று கூறியபொழுது நகைத்தீர்கள்?

ரா. மனிதனே உமக்குத் திருப்திகரமா யில்லாவிட்டால், வேஷதாரிகள் உம்மிடம் என்ன மரியாதை பெறப்போகிறார்களென்று எண்ணினோம்: வழியில் அவர்களைச் சந்தித்தோம், தங்களைக் கண்டு வழிபாடு செய்ய இங்கு வருகிறார்கள் அவர்கள்.

அம. அரசன் வேடம் பூணுபவனுக்கு அதிக நல்வரவு கூறுவேன், பகுதிப் பணத்தைப் பெறுவார் அப்பார்த்திபன் என்னிடமிருந்து; கடும் போரஞ்சா வீரன் தன் கத்தியையும் கேடயத்தையும் உபயோகித்துக் காட்டுவான்; காதலனது கவலையும் கண்ணீரும் வீணாகப் போகாது; பரிஹாசக்காரன் தன் பாடத்தைத் தடங்கலின்றி முடிப்பான்; விதூஷகன் அனைவரையும் வயிறு குலுங்கும்படி நகைத்திடச் செய்வான்; ஸ்திரீ வேஷம் தரிப்பவன் தன் மனத்தை வெளிப்படையாய்ச் சொல்லட்டும், இல்லாவிடின் அதன்பொருட்டு அகவல் நிற்கவேண்டி வரும் —என்ன வேஷதாரிகள் இவர்கள்?

ரா. தாங்கள் அதிகமாய் மெச்சிச் சந்தோஷமடைந்த பட்டணத்து கீர்த்திபெற்ற வேஷதாரிகளே.

அம. அவர்கள் வெளிப்பிரயாணம் போம்படி எங்ஙனம் நேர்ந்தது? கௌரவத்திலும் வரும்படியிலும் இரண்டிலும் அவ்விடமே மேம்பட்டிருந்தனரே!—

ரா. புதிதாய் வந்த ஏற்பாட்டினால் அவர்கள் அவ்வூரைவிட்டு வெளியே ஏகவேண்டி வந்ததென, எண்ணுகிறேன்.

அம. நான் அவ்வூரிலிருந்தபொழுது மதிக்கப்பட்டதுபோல் அவ்

வளவு மதிக்கப்படுகின்றனரா ? அவர்களைப் பார்க்கவேண்டி ஜனங்கள் ஆவலுடன் போகின்றனரா ?

ரா. இல்லை, அப்படி யில்லை.

அம. அது எப்படி நேர்ந்தது ? துருப்பிடித்துப் போயினரா என்ன ?

ரா. இல்லை, அவர்கள் என்னவோ முன்புபோல்தான் முயற்சியுடையவர்களா யிருக்கின்றனர் ; ஆயினும் அரசே, இப்பொழுது சிறு பிள்ளைகளின் சபை யொன்று ஏற்பட்டிருக்கின்றது ; சிறிய மொட்டைகள் ; கீச்சுக் குரலினால் கூச்சலிட்டுப் பேசுகின்றனர், அதன்பொருட்டு அவர்கள் பெறும் கரகோஷம் கொஞ்சம் அல்ல ; இவர்கள்தான் இப்பொழுது மோப்பம் ; மேடையின்மீதேறி இவர்கள் கூக்குர லிடுவதினால், கூர்மையான வாட்களை யேந்தும் பழய வேஷதாரிகளும், மரக்கத்தியைக் கையிற் பிடிக்கும் இப்பிள்ளைகளுக் கஞ்சி, அங்கே தலையெடுக்கின்ற தில்லை.

அம. என்ன, சிறு பிள்ளைகளா அவர்கள் ? அவர்களை யார் காப்பாற்றுகின்றது ? அவர்கள் குரல் மாறிய பிறகும் இக்கூத்தாடுந் தொழிலைப் புரிவார்களா ? நல்ல வயதாய பிறகும் நாடகமாடுந் தொழிலையே மேற்கொண் டிருப்பார்களாயின்—வரும்படி அதிகம் வராவிட்டால், வெகுவாய் அவ்விதமே செய்வார்களென நம்புகிறேன்— தாங்கள் இனி யடையப்போகின்ற ஸ்திதியைக் குறித்து, தங்களைக் கொண்டே இழித்துப் பேசும்படி செய்கின்றனரென அவர்களைப் பழியார்களா ?

ரா. உண்மையில், இரண்டு பக்கத்திலும் சச்சரவிற் குறை வில்லை, தேசத்தார்களும் அவர்களைச் சண்டை போடும்படி தூண்டிவிடுவதில் பின்வாங்குவ தில்லை. கொஞ்ச காலம் நாடககர்த்தாவும், வேஷதாரியும் இவ்விஷயத்தைக் குறித்து நடுத்தெருவில் சச்சரவிட்டா லொழிய, நாடகத்தைக் கவனிப்பார் ஒருவரு மில்லா திருந்தது.

அம. இப்படியும் இருக்குமா ?

ரா. ஓ! இவ்விவர்த்தத்தில், தலை மண்டைகள் வேண்டியமட்டும் உருண்டன.

அம. சாதாரணமாக சிறுபிள்ளைகளே ஜெயிக்கின்றனரா?

ரா. ஆம், அப்படித்தான் அரசே; பீமசேனன் தடுத்தாலும் பிரயோஜனமில்லை.

அம. அது அவ்வளவு ஆச்சரியமன்று. ஏனெனில், எனது சிற்றப்பன் குர்ஜரத்தின் மன்னனாய பிறகு, முன்பு என் தந்தை உயிரோடிருந்தகால் அவரை நங்கு காட்டி நகைத்த ஜனங்கள், இப்பொழுது அவரது சிறிய படமொன்றிற்கு இருபது, நாற்பது, ஐம்பது, நூறு பொன் விலை கொடுத்து வாங்குகின்றனர். ஈசன்மீ தாணைப்படி, சுபாவத்திற்கு மேலான சூட்சுமம் இதில் ஏதோ இருக்கின்றது, கலைஞானம் அதைக் கண்டுபிடிக்கக் கூடுமாயின்!

[உள்ளே தாரை சப்தம் கேட்கின்றது.]

கி. அதோ வேஷதாரிகள்.

அம. தோழர்களே, நல்வரவு அழைக்கின்றேன் உம்மைச் சீலனபுரம். வாருங்கள், உமது கைகளைத் தாருங்கள்; நல்வரவின் மேல்வேஷம் இம்மரியாதை யெல்லாம். இவ்வேடமெல்லாம் நான் பூணவேண்டும், இல்லாவிடின் வேஷதாரிகளுக்கு நான் கடைமைப்படி வெளிப்படையாய் நல்வரவு கூறும்பொழுது, உம்மை விட அவர்களுக்கு அதிக மரியாதை செய்வதுபோல் தோன்றும்; வாருங்கள்—ஆனால் சிற்றப்பனாகிய தந்தையும் சிற்றன்னையாகிய மாதாவும் மோசம்போ யிருக்கின்றார்கள்.

கி. எதில், எமதரசே?

அம. வட மேற்கில் மாத்திரம் வெறி பிடித்திருக்கின்றது எனக்கு; தென்றல் வருங்கால் தெரிவேன் கழுகுக்கும் கைவாளுக்குமுள்ள பேதம்.

மறுபடியும் பாலநேசன் வருகிறான்.

பால. நேசர்களே! உமக்கு நல்வரவு.

அம. கேள் கிரிதரா, நீயும் ராஜகாந்தா, ஒவ்வொரு காதருகில்

ஒருவன் ; அதோ பெரிய குழந்தை யொன்று வருகின்றதே கண்டீரா ? அது இன்னும் சப்பாணிப் பருவத்தில்தா னிருக்கின்றது.

ரா. கிழவனால் மறுபடியும் சப்பாணி யாகவேண்டியதுதான் குழவிக ளாகிறார்கள் கிழவர்கள் இரண்டாம் முறை என்று கூறுகிறார்களே.

அம. நான் ஜோசியம் சொல்லுகிறேன் பாருங்கள், வேஷதாரிகளைப் பற்றிப் பேசவருகின்றார் அவர்.—நீ கூறுவது சரியே: திங்கட் கிழமை காலைதான் ; அப்பொழுதுதான், சந்தேகமில்லை.

பால. அரசே, உமக்கு ஒரு சமாசாரம் சொல்ல வந்தேன்.

அம. ஐயா, உமக்கு ஒரு சமாசாரம் சொல்ல வந்தேன். காளிதாசன் காலத்திலே வேஷதாரிகள்,—

பால. வேஷதாரிகள் இங்கு வந்திருக்கின்றார்கள், அரசே.

அம. புஸ் ! புஸ் !—

பால. சத்தியமாய், அரசே,—

அம. ஒவ்வொரு வேஷதாரியும் தன் கழுதைமீ தேறி வந்தான்,—

பால. உலகத்தில் நாடகத்தில் இவர்கள் ஒப்புயர் வற்றவர்கள், சோக ரசத்திலாவது, ஹாஸ்ய ரசத்திலாவது, வீர ரசத்திலாவது, சோக வீர ரசத்திலாவது, வீர ஹாஸ்ய ரசத்திலாவது, சோக ஹாஸ்ய வீர ரசத்திலாவது, எது வேண்டினும் ஆடுவார்கள். காட்சி பார்க்கத் தக்கது, கானம் கேட்கத் தக்கது. ஒரு காளிதாசன் என்ன, பவபூதி என்ன, கஷ்டமல்ல அவர்களுக்கு. எழுதியவாறே பேசுவதற்காவது வாயில் இஷ்டப்படி இசைப்பதற்காவது இவர்கள் இணை யில்லாதவர்கள்,

அம. ஆ குற்றால மன்னா ! நீ, பெற்றதே பாக்கியம் !

பால. என்ன பாக்கியம் பெற்றான், அரசே ?

அம. ஏன் ?

"கன்னி யொருத்தியே காதலர் வேறிலை
தன்னுயி ரெனவே, தரணியிற் காத்தான்."

பால. [ஒரு புறமாய்] எந்நேரமும் என் பெண்தான்.

அம. ஏன் குற்றால மன்னா, கூறிய துண்மைதானே ?

பால. குற்றால மன்னனென வென்னைக் கூறுவதானால், தன்னுயி ரெனவே தரணியிற் காக்கும் பெண்ணொருத்தி யிருக்கின் றாள் எனக்கு.

அம. அப்படி யிருக்கவேண்டிய அவசிய மில்லை.

பால. பிறகு எது அவசியம் அரசே ?

அம. ஏன் !—

"அயனார் விதித்த பயனே யாக"

அதற் கப்புறம் உமக்குத் தெரியுமே, ஐயா—

"வருவது வந்தது, கருதிய வண்ணம்."

அதற் கப்புறம் அந்த அகவலை எடுத்துப் பார்த்தால் தெரியும், அதோ பாரும் எனது சுருக்கம் வருகின்றது.

நான்கு ஐந்து வேஷதாரிகள் வருகிறார்கள்.

வாருங்கள், ஐயா ! வாருங்கள் எல்லோரும்; மிகவும் சந்தோ ஷம், க்ஷேமந்தானே ? வாருங்கள் நேசர்களே ! ஓகோ ! என் பழய நேசனே, முன்பு பார்த்தற்கு இப்பொழுது முகத்தில் உனக்கு ஒன்று அதிகமா யிருக்கின்றதே, குர்ஜரத்தில் செ லுத்தவேண்டிய நீட்சை ஏதாவதுண்டோ ? ஆஹா ! வாரும், அம்மா, வாரும். முன்னைவிட தாங்கள் இரண்டங்குலம் உயர வளர்ந்திருக்கின்றாற்போ லிருக்கின்றதே. குரல் எப்படி யிருக் கின்றது ? முன்புபோ லிருக்கின்றதா, ஏதாவது உடைந்து விட்டதா ? வாருங்கள் எல்லோரும். உடனே ஆரம்பிப்போம். ஏதாவது ஒன்று சொல்லும், பிராணேசபுரத்து பைரி விடுப வர்களைப்போல் கண்டதின்மீ தெல்லாம் பாய்வோம். உட னே ஏதேனும் கேட்போம்; எதோ பார்ப்போம் உங்கள் திறத் தை, ஆரம்பியுங்கள், நல்ல ரச மடங்கிய அகவல் ஒன்று.

மு. வே. எம்மிறையே, எதைக் கேட்க விரும்புகின்றீர் ?

அம. என்னிடம் ஒரு முறை ஒப்புவிக்கக் கேட்டிருக்கின்றேன் ஒரு அகவல், ஆனால் அது ஆடப்படவில்லை; ஒருவேளை, ஒரே

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY:
TIRUVANMIYUR, MADRAS-41:

முறை, ஆடி யிருக்கலாம் ; அந்நாடகம் பலருக்கு ருசிக்க வில்லை. ஆனால் நா னறிந்தபடியும் என்னிலும் சான்றோர் கூறியபடியும், சிறந்தவோர் நாடகம்; அங்கங்களெல்லாம் அழகாய் வகுக்கப்பட்டிருந்த புத்தி சாதுர்யமாய் எழுதப்பட்டது. எனக்குக் கியாபக மிருக்கின்றது, ஒருவன், வசனத்தில் உப்பில்லை ருசிக்க, நாடக கர்த்தா தான் ரசிகன் என்று காண்பித்திட இன்னும் அலங்கார வர்ணனை அதிகமாய் எழுதியிருக்கவேண்டும், உள்ளபடி உண்மையாய் வர்ணித்திருக்கின்றது, இனிமையாயும் ஒழுங்காயும் அதிக அழகாயிருந்த போதிலும் ரசமாயில்லை என்று கூறினன். அந்நாடகத்தில் ஒரு பாகம் எனக்கு மிகவும் விருப்பமா யிருந்தது. சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குக் கூறுவது, பதினைந்தாம் நாள் யுத்தத்தைப்பற்றி, துரோணர் இறந்தவுடன் அஸ்வத்தாமன் செய்கையைப்பற்றி, அது உனது கியாபகத்தி லிருந்தால் சொல். இங்கிருந்து ஆரம்பம் செய்—உம்—கியாபகப்படுத்திப் பார்க்கின்றேன்.

அடலே றனைய அஸ்வத் தாமன்
விட்டவை பிதாவுயிர் விளைந்த தெனுமொழி,—

அப்படியல்ல, அஸ்வத்தாமன் என்றுதான் ஆரம்பிக்கின்றது:—

அடலே றனைய அஸ்வத் தாமன்
கடலேழு மொன்றாய்க் கறங்குவ போலும்
அழுதன னரற்றினன் புழுதியிற் புரண்டனன்
மண்ணிடை வேந்தர்கள் வாய்விட் டழுதனர்
விண்ணிடைத் தேவர்கள் வெதும்பியே சோர்ந்தனர்
இங்ஙன மாகப் பொங்கு மனத்தினைத்
தேற்றின னெழுந்தான் கூற்றெனக் கொதித்தான்
வானவர் வாழ்வும் வையமு மின்றே
கானமாக் காண்பேன் கணமதி னின்றே
ஈரேழ் புவனமும் இதோமுடித் தேனெனக்
காரேழு மொன்றாக் கலந்திழி வதுபோல்
அச்சுற எவருங் கைச்சிலை யேந்தி

ஏதிலா னெந்தையைச் சூதினிற் கொன்ற.
திருட்டுத் தாய்மன் சிரமுடற் பிரித்தே
உருட்டியெறிவேன் இருட்டுமுன் என்றே
கந்தனே யென்ன வந்தனன் போர்க்களம்.

அதற் கப்புறஞ் சொல்.

பால. அரசிளங் குமரா, நன்றாய் ஒப்புவித்தீர், திருத்தமாய் அர்த்தம் வெளிப்பட.

மூ. வே. இங்ஙனம் தாமன் பொங்கு மனத்தனாய்ப்
போர்முக நாடிக் கார்முகம் வளைத்தான்
ஏற்றின னாணை சீற்றமீக் கொண்டான்
அம்பரத் தும்பர் தம்பித் திருந்தனர்
ஈண்டூ தறிந்த பாண்டவர் கலங்கிப்
பரந்தா மன்பாற் பயந்தன ரடைந்து
ஐயவீ தென்னோ அறைகுதி யென்ன
செய்வகை தெரிவான் செப்புவன் தாமன்
தாதை யிறக்கவும் வேதை மிகுந்திடக்
கோதிலா னுமையெலாங் கொல்லவே நாடினன்
சாக்கிரதை நீவிர் சாக்கிரதை யென்ன
காக்க வுயிர்போற் கண்ண னிருந்திட
ஏக்க நமக்கே னென்ன வெண்ணியே
களக்கமி னெஞ்சினர் களத்திடைச் சேர்ந்திடக்
கண்டனன் தாமன் கண்களிற் பொறியெழ
எண்டிசை பொடிபட அண்டமும் அதிர்தர
அரியே றெனவே ஆர்ப்பரித் தனன்பின்
சிரித்தனன் இன்னது தெரிந்தவ னிருந்த
சாகர மென்னச் சத்தித்த சேனை
யோகத் திருப்பபோல் யூகத் தசைவற
நின்றது வீரர் குன்றின ராவி
நெற்றிக் கண்ணாற் பற்றலர் புரந்தீப்
பற்றி யழித்தருள் தற்பர னிவனே

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

பாரழி காலம் நேர்ந்ததோ வின்று
எவரிவ னைத்தடுத் தெதிர்த்திட வல்லார்
சிவன்செய லிதுவோ செப்புவ தென்னென
சிந்தித் தசைவற் றந்தரத் தும்பர்
நின்றனர் வீரங் குன்ற வீரன்
கண்டரித் தாமன் காலாக்னி யென்ன
மண்டிய சீற்ற மாற னரவக்
கொடியோன் றன்னைக் கடிதடைந் தையகேள்
பாண்டவ ரைவரும் பாரினி லின்று
மாண்டிடாப் பழிசெய் மதிகெடுந் தூய்மனும்
நால்வகைச் சேனையும் கால்வழி யுடனே
ஆலகா லந்தனைப் போலவே யாமிக்
கோலமா ருக்கிரக் கொடியநா ராயணம்
என்னுயர் வாளியா லொன்னல ராவியை
யேற்றுவேன் வானிடை யேற்கரு மென்றுயர்
மாற்றுவே னென்னச் சாற்றினன் மாற்றம்.

பால. இது மிகவும் பெரிதா யிருக்கின்றது.

அம. ஆனால் உமது தாடியுடன் அம்பட்டனிடம் அனுப்புவோம், அதை.—நீ சொல் அப்புறம். அவர் விரும்புவது ஒரு டப்பான், அல்லது டம்பாச்சாரி கதை, இல்லாவிட்டால் அவருக்குத் தூக்கம் வரும். சொல் அப்புறம், அஸ்வத்தாமன் வரு மிடத்திற்கு வா.

மு. வே. பரிவுள தந்தையி னருமுயிர் பிரியவும்
விரிதரு தன்றுயர் தரணியிற் றுளான்.

அம. 'தரணியிற் றுளான்'!

பால. நன்று நன்று ! 'தரணியிற் றுளான்' என்று கூறியது மிக நன்று.

மு. வே. கோதிலாத் தாமன் ஓதிய கேட்டு
வணங்கா முடியோன் றணிந்தனன் றன்றுயர்
கணங்கொள் கௌரவர் கல் என வொலித்தார்

இன்னது நிற்க முன்ன ரெழுந்திடுங்
கொல் லரித்தாமன் பல்லினைக் கடித்து
வெல்லத் துடித்து வில்லை யெடுத்து
மெல்ல வளைத்து விளங்குநாண் பூட்டி
சொல்லரு முக்கிரத் தூயநா ராயண
அத்திரந் தன்னைக் கைத்தலம் பிடித்து
நினைவினிற் பூசை கனிவிற் புரிந்துதன்
குரவனைக் கொன்ற கரவ னிறக்கவும்
பஞ்சவ ரைவரும் பஞ்செனப் பறக்கவும்
ஆங்கவர் படையுயிர் நீங்கி யழியவும்
துன்னி விடுத்தனன் என்னென வியம்புவேன்
தந்தைமாட் டன்னவன் மைந்தன்செ யுத்தம்
விண்ணிடைத் தேவர் வியர்த்தனர் நின்றார்
மண்ணிடை மாந்தர் மடிந்தன ரெண்ணிலர்
இவ்வணம் போரினைச் செவ்வனே செய்து
மகனாய்ப் பிறந்த தகபய னாக
பழியினைத் தீர்த்தா னழிவிலாப் புகழோன்.

பால. அதோ பார்! வேந்தன் மைந்தன் வெளுத்தனன் முகம், கண் களில் ததும்புகின்றது நீர். போதும், நிறுத்து.

அம. நன்றா யிருக்கின்றது. மற்றதைக் கேட்பேன் சற்றே பொறுத்து,—ஐயா, பாலநேசரே.—நல்ல வெகுமதி யளியும், வேஷதாரிகளுக் கெல்லாம். கேட்கிறதா, நல்ல மரியாதை செய்யும். ஏனெனில் அவர்கள், காலத்தின் சாரமும் சுருக்க மாம் சரித்திரமும் ஆனவர்கள். நீர் இறந்தபின் கெட்ட பெ யர் வந்தாலும் பெரிதல்ல, இருக்கும்பொழுது இவர்களால் தூற்றப்படாமல் பார்த்துக் கொள்ளும்.

பால. அரசே, அவர்கள் யோக்கியதைக்குத் தக்கபடி மரியாதை செய்கின்றேன் நான்.

அம. புத்திசாலிதான் நிரம்ப! நன்றாக மரியாதை செய்யும். உல கத்தில் ஒவ்வொருவனும் தன் யோக்கியதைக்குத் தக்கபடி

அடைவதென்றால், செருப்படி தப்புவோர் யாவர்? உம்முடைய அந்தஸ்திற்குத் தக்கபடி அவர்களுக்கு மரியாதை செய்யும். அவர்கள் யோக்கியதை எவ்வளவு குறையா யிருக்கின்றதோ அவ்வளவு மேம்பட்டு விளங்கும் உமது தயாளத்வம். அவர்களை அழைத்துப்போம் அரண்மனைக்குள்.

பால. வாருங்கள், ஐயா!

அம. போங்கள், அவருடன், நாளைத்தினம் ஒரு நாடகம் கேட்போம்.

[பாலநேசன், முதல் வேஷதாரி தவிர, மற்றவர்களுடன் போகிறான்.]

அப்பா, தோழா, இங்கே வா. உங்களுக்குக் கானசேகரன் கொலை ஆடத் தெரியுமா?

மு-வே. தெரியும், அரசே,

அம. நாளைத்தினம் இரவு அந்நாடகம் வைத்துக்கொள்வோம். ஒரு சந்தர்ப்பத்தில் நான்கு ஐந்து விருத்தங்களை நான் எழுதிக் கொடுத்தால் அதை, நடுவில் பாடம் செய்து ஒப்புவிக்க முடியுமா? முடியாதா?

மு-வே. முடியும் அரசே.

அம. நல்லது, அதோ அவருடன் போ. அவரை ஏளனம் செய்யாதே, ஜாக்கிரதை! [முதல் வேஷதாரி போகிறான்.]
நண்பர்களே, இரவு வரையிலும் உங்களை நான் விட்டுப் பிரிந்திருக்கவேண்டும். நகரத்திற்கு நல்ல சமயத்தில் வந்தீர்கள்.

ரா. ஆம், அரசே.

அம. ஆமாம், போய் வாருங்கள்.

[ராஜகாந்தனும், கிரிதரனும் போகிறார்கள்.]

இப்பொழுதோ நான் தனியா யிருக்கிறேன். சீ என்ன பாதகன் நான், என்ன பண்ணை யடிமை நான்! இது ஆச்சர்யம் அல்லவா? இந்த வேஷதாரி, பொய்யாய் நடிப்பதில், கனவெனத்தக்க துக்கத்தில், அதனறிகுறியாக முகமெல்லாம்

வெளுத்திட்வும், கண்களில் நீர் ததும்பவும், மனம் நிலை தடு மாறவும், எண்ணத்திற் கேற்றபடி அவயவங்க ளெல்லாம் எடுத்துக் காட்டவும், தன் ஆன்மாவை யுந்தச் சக்தியுடை யவனா யிருக்கின்றான்! எல்லாம் ஒரு காரணமு மின்றி! துரோணரின் பொருட்டா? துரோணர் இவனுக் கென்? அல்லது இவன் துரோணருக் கென்? அவர் பொருட் டிவன் அழுவதற்கு? துக்கப்பட எனக் கிருக்கும் காரணமும் நியாயமும் அவனுக் கிருக்குமாயின் அவன் என் செய்வான்? நாடக சாலை முழுவதும் முழுகிப் போகும்படி கண்ணீர் விட் டழுவான்; கேட்பவர் செவிக ளெல்லாம் பிளந்துபோம்படி கடுர வார்த்தைகளால் கதறுவான்; குற்றவாளிகள் பித்தம் பிடிக்கவும், ஏனையோர் நடுநடுங்கிப் போகவும், மூடர்கள் மதி மயங்கவும், கண்ணும் செவியுமாகிய புலன்களையே பிரமித்துப் போகவும் செய்வா னன்றோ!—இங்ஙன மிருந்தும் நான்,— ஒரு மொத்து கட்டைத் தடியனைப்போல், எனக்கிருக்கும் கார ணத்தை மேற் கொள்ளாதவனாய், வாய் திறந்து பேசவும் முடி யாதவனா யிருக்கிறேன்! ஆம், தன் பொருளையும் தன் னுருயி ரையும் ஓர் பாதகனுக்குப் பறிகொடுத்த ஓர் அரசன் பொருட் டும், என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை! நான் பயங்காளி யா? என்னைப் பாதகனென வழைத்து, என் மண்டையைக் குறுக்காகப் பிளந்து, என் தாடியைப்பற்றி யிழுத்து, என் முகத்தில் காரியுமிழ்ந்து, என் காதைப்பிடித்துக் கிள்ளி, என் நாபி வரையில் நான் கூறியது அசத்திய மெனப் புகட்டி, இப் படி யெல்லாம் செய்கிறானா எவனாவது? ஹா! ஈசன்மீ தாணைப் படி நான் அவைகளை யெல்லாம் பொறுக்க வேண்டியதே! புற வத்தைப்போல தைரியமற்ற பயங்காளியே நான். என்னை ஹிம்சிப்பவரை வருத்தமுறச் செய்ய என்னிடம் ஆணவ மில்லை. இல்லாவிடின் இதற்கு முன்பே, கோடி கழுகு களைக் கொழுக்கச் செய்திருக்க வேண்டுமன்றோ இம்முறிய னது பிணத்தினால்? பாதகன்! பரத்தையைப் போன்ற மஹா பாதகன்! பச்சாத்தாப மில்லாத் துரோகி! காமாதுரக்காதகன்!

பரிவிலாப் பழி யஞ்சாப் பாபி! பழி தீர்க்க வேண்டும் நான் இவன்மீது!—இதென்ன? என்ன மூடக் கழுதையா யிருக்கின்றேன்! இது மிகவும் சௌரியந்தான்! கொல்லப்பட்ட அருந் தந்தையின் மைந்தனாகிய நான், விண்ணினும் மண்ணினும் பழிவாங்க உந்தப்பட, என் கோபத்தை, கேவலம் பரத்தையைப்போல், வீண் வார்த்தைகளால் அவிழ்த்து வெளியிட வேண்டும்! வேசி மடையர்களைப்போல், வைய ஆரம்பிக்கவேண்டும்! சீ! காரி யுமிழவேண்டும் இதனை!—ஆரம்பி!—மனமே! குற்றஞ் செய்த மனிதர்கள், நாடகசாலையிலுட்கார்ந் திருக்கும்பொழுது, அங்கே உள்ளபடி நடிக்கப்படும் காட்சியைக் கண்டு, உள்ளத்தில் தைக்கப்பட்டவர்களாய், தாங்கள் செய்த குற்றங்களை உடனே வெளி யிட்டிருப்பதாக நான் கேள்விப்பட் டிருக்கின்றேன். ஏனெனில் கொலையானது, வாய்திறந்து பேசச் சக்தி யற்றதாயினும், எப்படியாவது ஆச்சரியகரமாய் வெளியாகிவிடும். இந்த வேஷதாரிகளை, எனது சிற்றப்பனுக் கெதிரில், என் தந்தையின் கொலையைப் போன்ற ஏதாவ தொன்றை ஆடும்படி செய்கின்றேன். அவனது முகத்தைக் கவனித்துப் பார்க்கின்றேன்; ஏதாவது உறைக்கின்றதா பார்க்கின்றேன். கொஞ்சமாவது கோணுவனாயின் நான் செய்ய வேண்டியது எனக்குத் தெரியும். நான் பார்த்த அருவமானது பிசாசமா யிருக்கலாம். பிசாசானது நல்ல உருவத்தை எடுத்துக் கொள்ளச் சக்தி வாய்ந்ததே. ஆம் — என்னுடைய பலஹீனத்தினும் சோகத்தினும் என்னை நிந்தித்து நாசமாக்கப் பார்க்கலாம். இப்படிப்பட்டவர்களிடம் அதன்பலம் அதிகமாய்ச் செல்லும். இதைவிட தக்க நியாயங்கள் எனக் கிருக்கவேண்டும். நான் அரசனுடைய ஆன்மாவைப் பிடிக்க நாடகமே சரியான பொறி!

[போகிறான்.]

**காட்சி முடிகிறது.**

# மூன்றாவது அங்கம்.

## முதல் காட்சி.

*அரண்மனையிலோர் அறை.*

காலதேவன், கௌரீமணி, பாலநேசன், அபலை, ராஜகாந்தன், கிரிதரன் வருகிறார்கள்.

கா. *தன் நாட்களை யெல்லாம் சுகமாய்க் கழிக்காது, விபரீதத்திற் கிடமான அபாயகரமான பயித்தியத்தை ஏன் மேற்கொண் டிருக்கின்றான் என்று எந்தப் போக்கிலாவது, பேச்சைக் கொடுத்து அவனிடமிருந்து கண்டறிய முடியவில்லையா உங்களால் ?*

ரா. *தன் மனம் சஞ்சலப்பட் டிருக்கிறதாகத் தனக்கே தெரிகிற தென்று ஒப்புக்கொள்ளுகிறார் ; இன்ன காரணம் பற்றி என்பதை மாத்திரம் சொல்லுகின்றா ரில்லை எவ்விதத்திலும்.*

கி. *நாங்கள் அவரை ஆழ்ந் தறிவதற்கும் இடங்கொடுக்கின்றா ரில்லை. அவரது உண்மையான நிலையைப்பற்றி நாங்கள் அவரை ஏதாவது பேசும்படி கொண்டுவருந் தருணத்தில், பயித்தியம் பிடித்தவர்போல் பாசாங்கு செய்து மாற்றிவிடுகிறார் வார்த்தையை.*

கௌ. *உங்களை மரியாதையாக வரவழைத்தனரா ?*

ரா. *மிகுந்த மரியாதை பாராட்டினார்.*

கி. *ஆனால் முயன்றார்போலும் தன் மனத்தை அவ்வா றிருத்த.*

ரா. *கேள்வி அதிகமாய்க் கேட்பதில்லை,—கேட்பதற்குப் பதில் மாத்திரம் ஏராளமா யுரைப்பார்.*

கௌ. *ஏதாவது விநோதத்தின்மீது மனம் போகிறதா என்று பார்த்தீரா ?*

ரா. அம்மணி, அகஸ்மாத்தாய் நாங்கள் வருகிற வழியில் சில வேஷதாரிகளைச் சந்தித்தோம். அவர்களைப்பற்றி அவரிடம் சொன்னோம். இதைக் கேட்க ஒருவிதமான சந்தோஷமுற்ற வர்போல் எங்களுக்குத் தோன்றியது. அவர்கள் இப்பொழுது அரண்மனைக்கு வந்திருக்கிறார்கள். இதற்குள் தன்முன்பாக இன்றிரவு நாடக மாடும்படி உத்தரவு செய்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

பால. அது மிகவும் உண்மையே. தாங்களிருவரும், விஜயஞ்செய்து நாடகத்தைக் கண்டு கேட்டு களிக்கும்படி வேண்ட என்னைக் கேட்டுக்கொண்டார்.

கா. மனப் பூர்வமாய் அப்படியே செய்வோம். அவன் மனம் இவ் வாறு திரும்பியது எனக்கு மிகவும் திருப்திகரமா யிருக் கின்றது. ராஜகாந்தா, கிரிதரா, இவ்விநோதங்களின்மீது அவன் எண்ணஞ் செல்லும்படி நீங்கள் இன்னுங் கொஞ்சம் தூண்டவேண்டும்.

ரா. அப்படியே, செய்கிறோம் அரசே.

[ராஜகாந்தனும் கிரிதரனும் போகிறார்கள்.]

கா. கண்ணே, கௌரீமணி, நீயும் எங்களைவிட்டு சற்று அப்புறம் போயிரு. நாங்கள் இரகசியமாய் அமலாதித்யனை வரும்படி செய்திருக்கிறோம், ஏதோ அகஸ்மாத்தாய்க் கண்டதுபோல் இங்கே அவன் அபலையைச் சந்திக்குமாறு. அவளது தந்தை யும் நானும் ஒளிந்திருந்து நடக்கின்றதை யெல்லாம், அவன் பாராவண்ணம் பார்த் தறிகிறோம்,—இதில் தவறொன் றில்லை,— அவன் இப்பொழுது வருந்துவது, தன் காதலின் துயரமா அல்லவா, என்கிற விஷயத்தை அவனிடமிருந்தே இவர்களிரு வரும் சந்திக்கும்பொழுது, அவனது நடத்தையைக்கொண்டு உண்மையா யறிந்து தீர்மானிக்கின்றோம்.

கௌ. உமது உத்தரவின்படி செய்கின்றேன்.—அபலா, உனது சிறந்த ரூபலாவண்யமே அமலாதித்யனுடைய சித்தத்திற்குப்

பித்தம் விளைத்ததற்கு சந்தோஷகரமான காரணமா யிருக்கு மாக! உனது நற்குணமே அவனை முன்புபோல், நல்வழியிற் கொண்டுவந்து நீங்க ளிருவரும் சுகமாய் வாழும்படிச் செய்யு மாக!

அப. அம்மா, அங்ஙனமே ஆகுமாக! [கௌரீமணி போகிறாள்.]

பால. அபலா, இங்கே உலாவிக்கொண் டிரு.—மகாராஜா, தங்கள் சித்தப்படி நாம் ஒளிந்து கொள்வோம்.—[அபலைக்கு] இந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண் டிரு. அவ்வாறு வாசிப்பது போ லிருந்தால் நீ இங்கே தனியா யிருப்பதற்குத் தக்கதோர் போக்காகும். பக்தி சிரத்தையோ டிருப்பதுபோல் பாசாங்கு செய்து சர்வக்ஞருடைய கண்களிலேயே மண்ணைப்போட முயல்வது தவறாயினும் உலகத்தில் மனிதர்களுக்குச் சாதா ரணமே.

கா. [தனக்குள் ஒருபுறமாக] ஐயோ! உண்மையே! உண்மையே! என் குற்றத்தை எனக் கெவ்வாறு சரிலென உறுத்திக் காட்டு கின்றது அம்மாற்றம்! மை தீட்டிய கணிகையின் கண்களுக் கும் அவள் புரியும் அசங்கியமான ஆசாரத்திற்கும் எவ்வளவு பேத முண்டோ அத்தனைப் பேத மிருக்கின்றது, என் கபட வார்த்தைகளுக்கும் நான் புரியும் காதகத் தொழிலுக்கும்! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்!

பால. அதோ அவர் வருகிற சப்தம் கேட்கிறது. நாம் மறைந்திருப் போம் மகாராஜா. [மறைந்து கொள்ளுகிறார்கள்.]

அமலாதித்யன் வருகிறான்.

அம. இருப்பதோ, இறப்பதோ, ஈதாம் கேள்வி:—தௌஷ்டியமான துரதிர்ஷ்டம் நம்மீ தெய்யும் கவண்களையும் கணைகளையும் தூய மனத்துடன் பொறுப்பதோ, அல்லது கடலின் திரைக ளென வந்திடும் கஷ்டங்களுடன் மன்றாடி முடிப்பதோ? இறப்பது?—உறங்குவது?—அவ்வளவே! அப்படி உறங்கு வதினால் மனத் துயரங்களையும், உடலுடன் பிறந்த எண்ணு

தற்கரிய இயற்கையி லுண்டாம் துன்பங்களையும், எல்லாம்விட்டொழிகின்றோ மென்கிற இம்முடிவு எல்லோரும் ஆவலோடு விரும்பத் தக்கதே! உயிர் துறப்பது — உறங்குவது — உறங்குவது! ஒரு வேளை கனவு காண்பதோ? ஹா! அதோ இருக்கின்றது கஷ்டம். நாம், இவ்வுடலாகிய பாசத்தை நீக்கியவுடன், உயிர் துறத்த லென்னும் உறக்கத்தில், என்னென்ன கனவு காண்போமோ என்பதே நம்மை நிதானிக்கச் செய்கிறது. இந்த ஒரு காரணம்பற்றியே, நமக்கு நேரும் எல்லாக் கெடுதிகளோடும் நாம் நெடுநாள் உயிர் பொறுக்கின்றோம்: எவ னொருவன் கால கதியா லுண்டாம் கஷ்ட நிஷ்டூரங்களையும், அடக்கி ஆள்பவரின் அக்கிரமத்தையும், மதம் பிடித்தவர்களா லுண்டாம் மான பங்கத்தையும், வெறுக்கப் பட்ட காதலின் வெந்துயர்களையும், நியாயஸ்தலங்களில் நேரிடும் காலக் கழிவையும், அதிகாரிகளின் கர்வத்தையும், யோக்கியதை ஏது மில்லாரிட மிருந்து யோக்கியர்கள் பொறுமையுடன் அனுபவிக்கும் அவமானங்களையும், பொறுத்திருப்பன் இப்புவியில்?— இந்த அலேச்ச லெல்லா மின்றி தனக்குத் தானகத் தன் ஆயுளை முடித்து அமைதி அடைய, வெறும் ஊசியும் போதுமானதா யிருக்க? இவ்வுலகவாழ் வென்னும் சுமையைத் தாங்கி வியர்த்துக் களைத்து முறுமுறுத்துத் தன் வாழ்நாட்களை எவன் கழிப்பான்? இறந்தபின் என்னும் என்னும் பயமே, ஒருவரு மறியாத, மாண்டவர் எல்லையை மீண்டும் கடவாத் தேயத்தின் எண்ணமே, நமது மனத்தைக் கலக்கி, நாம் அறியாத துன்பங்களில் வீழ்வதைவிட, நாம் அனுபவிக்கும் துன்பங்களையே பொறுத்திடச் செய்கிறது. நம்முடைய நெஞ்சமே இவ்வாறு நம்மையெல்லாம் நடுங்குறச் செய்கிறது. இதனாலேயே நமது சங்கற்பங்க ளெல்லாம் தம் மொளி மழுங்கி, நோயுற்றவாறு யோசனைக்கு இன்றியமையா வெளுப்புறுகின்றன. நமது முக்கியமாம் மேன்மை யுடைய பெரு முயற்சிக ளெல்லாம் இவ்வாறே கலக்கப்பட்டு, கரை தடுமாறி, செய்கை யழிந்து, காரியமென்னும் பெயரையு மிழக்

கின்றன.—பொறு சற்றே!—அழகிய அபலை!—அணங்கே, நீ தியானம்'செய்யுங்கால் எனது பாபங்களை யெல்லாம் மன்னிக்கும்படி பிரார்த்திப்பாய்!

அப. என் அரசே, நெடுநாளாயின; தாங்கள் எப்படி யிருக்கின்றீர்கள்?

அம. விசாரித்ததற்காக உனக்கு வந்தனம் செய்கிறேன். சுகமாயிருக்கின்றேன், சுகமாய்!—சுகமாய்!—

அப. அரசே, தங்களுடைய கியாபகத்தின்பொருட்டு தாங்கள் எனக்குக் கொடுத்த இப்பொருள்களை யெல்லாம் தங்களிடம் மீட்டும் கொடுத்துவிடும்படி நெடுநாள் கோரியிருந்தேன். இதோ அவைகளைத் தயவு செய்து பெற்றுக் கொள்ளும்.

அம. வேண்டாம், மாட்டேன் நான்.—உனக்கொன்றும் கொடுக்கவில்லை நான்.

அப. உத்தம அரசே, உமக்கு நன்றாய்த் தெரியும் நீர் கொடுத்தது. இவைகளைக் கொடுக்குங்கால் என்ன இனிய மொழிகளுடன் கொடுத்தீர், இவைகளை நான் ஆயிரம்மடங்கு அதிகமாய் மதிக்கும்படி! அந்த வாசனை போனபின் இவைகள் எனக்கு எதற்கு? நீரே வாங்கிக்கொள்ளும். உத்தமர்களுக்கு கொடுத்தவர் மனம் கோணினால் கொடுத்த பொருள்கள் விலை கூறமுடியாதனவாயினும் வெறுக்கத்தக்கனவாம். அரசே, பெற்றுக் கொள்ளும் இவைகளை, இதோ.

அம. ஆ! ஆ! நீ கற்புடையவளா?

அப. அரசே!

அம. நீ அழகுடையவளா?

அப. அரசே, நீர் கூறுவதொன்றும் எனக்கு அர்த்தமாக வில்லை.

அம. உன்னிடம் கற்பும் அழகும் இருப்பதானால் உன்னுடைய கற்பானது அழகினிடம் அணுகவிட லாகாது.

அப. அரசே, கற்புடனன்றி அழகிற்கு நலமாம் வியாபாரம் வேறுண்டோ?

அம. ஆம் ; உண்மையில்; அழகானது கற்பை அரை க்ஷணத்தில் அழித்து அதன் உரு மாறச் செய்யும்,' கற்பிற்கோ அழகை மாற்றித் தன்னைப்போலாக்க வல்லமை இல்லை. இது வரையில் இது எனக்கு விருத்த வாசகமா யிருந்தது, இக் கலிகாலம் இப்பொழுது இதனை நிரூபிக்கின்றது.— உன்மீது காதல்கொண்டிருந்தேன் ஒருகால்.

அப. ஆம், அரசே, என்னை அங்ஙனம் நம்பும்படி செய்தீர்.

அம. நீ என்னை நம்பியிருக்க லாகாது. நற்குணமானது நமது மானிட ஜன்மத்தில் எவ்வளவுதான் ஊறியபோதிலும் நமக்கு அழகி லிருக்கும் அபிருசியை அடியுடன் அழிக்கமாட்டாது.- உன்மீது காதல் கொண்டே னில்லை நான்.

அப. அப்படியாயின் அதிக மோசம்போனேன்.

அம. போய்விடு கன்யாமடத்திற்கு! பாவிகளை ஏன் பெருகச் செய்ய வேண்டும் நீ! என்னைச் சீல முடையவன் என்று தான் சாதாரணமாகச் சொல்லுவார்கள். ஆயினும் என் குற் றங்களை யெல்லாம் நானே எடுத்துக் கூறப்புகின் என் தாயார் என்னைப் பெறாதிருந்தால் நலமெனத் தோற்றும். நான் மிகுந்த கர்வமுடையவன், பழிவாங்குபவன், பேராசைக் காரன், எனக்காளா யிருக்கும் என்னிடத்துள்ள துர்க்குணங் களை யெல்லாம்பற்றி நான் யோசிக்கவும் என் மனத்திற் றிற மில்லை, எடுத்துரைக்கவும் சொற்களில்லை, அவைகளை அப் யசிக்கவும் அவகாச மில்லை. என்னைப்போன்ற பாபிகள் இம் மண்ணிற்கும் விண்ணிற்கும் இடையில் புழுவைப்போல் ஏன் நெளியவேண்டும்? நாங்கள் எல்லோரும் கேடு கெட்டவர் ளே ; எங்களுள் ஒருவரையும் நம்பாதே. போ, வழி பார்த்து ஒரு கன்யா மடத்திற்கு!—எங்கே உன் தந்தை ?

அப. வீட்டி லிருக்கின்றார், அரசே.

அம. வீட்டிலேயே கதவைச் சாத்திவை அவரை, வீட்டிலேயே அந்தப் பயித்தியம் இருக்கட்டும், வெளியிலும் வந்து வெறி யர்டவேண்டாம். நான் வருகிறேன்.

அப. ஈசனே ! ஜகதீசனே ! அவரைக் காப்பாற்றுவீராக !

அம. நீ கடிமணம் புரிவதானால் இந்த கல்லெடுப்பைத் தான் உனக்கு ஸ்திரீதனமாகக் கொடுப்பேன்: அருந்ததியைப்போல் அத்தனை அருங் கற்புடையவளா யிருந்தபோதிலும், அவதூறுக்கு எப்படியும் ஆளாக்கப்படுவாய். போய்ச் சேர் ஒரு கன்யா மடத்திற்கு, நான்வருகிறேன். அல்லது எப்படியும் மணம் புரியவேண்டுமென் றிருந்தால் ஒரு மடையனை மணம்புரி. சிறிதேனும் மதியுடையவர்க ளறிவார்கள் நன்றாய் அவர்களை நீங்கள் செய்யும் கோலத்தை ! போ உடனே கன்யா மடத்திற்கு. போ உடனே ! நான் வருகின்றேன்.

அப. ஈசனே ! ஜகதீசனே ! இவர் மதியை மீளச் செய்வீராக !

அம. நீங்கள் செய்து கொள்ளும் அலங்கோலங்களையெல்லாம் பற்றி நான் கேட்டிருக்கிறேன்; ஈசன் உமக்கொரு முகத்தைக் கொடுக்க, வேறொன்றாய் ஆக்குகிறீர்க ளதை நீங்களே ! குலுக்குகின்றது, குலாவுகின்றது, கொஞ்சுகின்றது, குறள் பெயரிட்டழைக்கின்றது, பிடிவாதம் செய்துவிட்டுப் பேதைமையென்கிறது ; அப்பா ! போது மெனக் கிது ! எனக்குப் பித்தம் பிடிக்கச் செய்துவிட்டது. வேண்டாம் விவாக மென்பதே வேண்டா மினிமேல். இப்பொழுது விவாகஞ் செய்துகொண்டிருப்பவர்களுக்குள், ஒருத்தி தவிர, மற்றவர்க ளெல்லாம் வாழட்டும். மற்றவர்க ளெல்லாம் கன்னிகைகளாகவே காலம் கழிக்கட்டும். போ கன்யாமடத்திற்கு ! [போகிறான்.]

அப. ஐயோ ! எப்படிப்பட்ட உத்தமமான இவரது மனம் இப்படிப் பாழாய்விட்டதே ! போர்வீரனுடைய பராக்கிரமமும், கற்றுணர்ந்தவ னறிவும், அரண்மனைவாசியின் அருஞ்சொற் றிறமையும், எல்லாம் மாண்டதே ! இவ்வழகிய அரசின் பெருமையும் மகிமையும் உருக்கொண்ட தொத்த உத்தமர், கவினுக்குக் கண்ணாடி போன்றவர், வனப்பே வடிவு கொண்டது போன்றவர், ஆராய்ந் தறிபவர்க் கோர் அருமையாம் நிதர்சனமானவர், ஐயோ ! இக்கடைப்பட்ட கதிக்கு வர

வேண்டுமோ? அவரது காதலின் கனிரசத்தைப் பருகிய காரிகையர்க்குள் கடைப்பட்டவளாகிய காத்கி நான், பூவுலகில் புகழுதற்கரிய அவரது புத்தி தடுமாறி அவர் வாக்கினின்றும், இனிய நாதமுடைய வீணையாயினும் சுருதி கலைந்தால் அபசுரம் பேசுவதுபோல், காதுக்கு வெறுப்பான கடூரமான மொழிகளைக் கேட்கும்படி நேரிட்டதே. வடிவிலும் உருவத்திலும் ஒப்பிலா இவரது யவ்வனம் பயித்தியத்தினால் இங்ஙனம் பாழாகிப் போனதை நான் பார்க்கவேண்டி வந்ததே! ஐயோ! என்ன தௌர்பாக்கியசாலி நான்! முன்பிருந்த ஸ்திதியைக் கண்ட கண்களால் இக்கோலத்தையும் கண்டு உயிர் தரிப்பதோ நான்!

காலதேவனும், பாலநேசனும் மறுபடியும் வருகிறார்கள்.

கா. காதல்? அவன் சிந்தை அவ்வழிச் செல்வதாகத் தோற்றப்படவில்லை. ஆயினும் அவன் பேசிய வார்த்தைகளில், சிறிது மாறுபாடிருந்த போதிலும் அதைப் பயித்தியம் என்று கூற லாகாது. அவன் மனத்தில் ஏதோ குறை குடிகொண்டிருக்கின்றது; அதைப்பற்றி எந்நேரம் சிந்திப்பதால் இவ்வாறு ஒருவாறாய் இருக்கின்றான். அவ்விஷயம் வெளியாகுங் காலத்தில் ஏதாவது விபரீதம் சம்பவிக்குமென்றே எனக்குச் சந்தேகமா யிருக்கின்றது. அதைத் தடுக்கும்பொருட்டு இவ்விதம் நான் விரைவில் தீர்மானம் செய்திருக்கின்றேன். நமக்குப் பாக்கியா யிருக்கின்ற கப்பத்தை வாங்கிவரும்பொருட்டு அவன் உடனே சிங்களத்திற்குப் புறப்படட்டும். ஏதோ இவன் மனத்தில் குடிகொண் டிருப்பதைப்பற்றி இவன் எந்நேரமும் யோசித்துக் கொண்டே யிருப்பதனால் இவன் இவ்வாறு சுபாவம் மாறி இருக்கச் செய்கிறது; திரைகடலின் மீது சென்று நானா தேசங்களையும் அவைகளிலுள்ள அநந்தமான வஸ்துக்களையும் காண்பானாயின் அது அவன் மனத்தை விட்டு நீங்கினாலும் நீங்கலாம். நீ என்ன நினைக்கின்றாய் இதைப்பற்றி?

பால. அது ஒரு நல்ல யோசனைதான். ஆயினும் அவரது துயரத திற்கு ஆரம்பமும் ஆதிகாரணமுமாயிருப்பது கைகூடாக் காதலே என்று கட்டாயமாய் நம்புகின்றேன்.—என்ன அப லா? அரசகுமாரர் அமலாதித்யர் கூறியதை எங்களிடம் சொல்ல வேண்டியதில்லை. எல்லாவற்றையும் நாங்களே கேட் டோம்.— மகாராஜா, தங்க ளிச்சைப்படியே செய்யலாம்; ஆயினும் தங்களுக்குச் சம்மதமானால் நாடகமான வுடன் அவருடைய தாயாராகிய மகாராணியே, தனியாக வர வழைத்தவரை, அவரது துயரத்தின் காரணத்தைக் கேட்டறி யட்டும். மகாராணியவர்கள் நேராகவே நன்றாய்க்கேட்கட்டும். உங்கள் உத்தரவின்மீது நான் அவ்விடத்தில் மறைந்திருந்து அவர்களுக்குள் நடக்கும் சம்பாஷணை யெல்லாம் செவி கொ டுத்துக் கேட்கிறேன். அவர்களாலும் அவர் மனத்தை யறிவ தசாத்தியமானால் பிறகு சிங்களத்திற் கனுப்பும், அல்லது தங்கள் சித்தத்தின்படி எவ்விடத்திலாவது காவலில் இருத் தும்.

கா. அப்படிச் செய்தலே தகுதி! உத்தமர்களுக்கு உன்மத்தம் பிடித்தால் உடனே பரிஹாரம் தேடாவிடின் விபரீதம் உண் டாம். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

*அரண்மனையிலோர் அறை.*

அமலாதித்யனும், மூன்று வேஷதாரிகளும் வருகிறார்கள்.

அம. *நான் வகுத்த வண்ணம் உமது வசனங்களை நாவினில் நயம் பட வழங்கும்படி உம்மை வேண்டுகிறேன். உங்களுள் அநேகர் உரைப்பதுபோல் அவ்வசனங்களை வாய்விட்டுக் கத்துவீராயின் அதைவிட பட்டணங்களில் பறை சாற்றும் வெட்டியானைக்கொண்டு நான் வரைந்ததைப் பகர்ந்திடச் செய்ய நான் விரும்புவேன். காற்றை வெட்டுவதேபோல் உமது கையினால் அதிகமாய் அபிநயிக்காதீர், அபிநயம் அனைத்தும் அமைந்ததா யிருக்கவேண்டும். இடிபோல் முழங்கி, சண்டமாருதமென வரும் உமது ரௌத்திரம் முதலிய ஆவேசங்களிலும், ஓர்வித அடக்கத்தை வகித்தவராய், அத்து மீறாது ஒழுங்கினை உடையவரா யிருத்தல் வேண்டும். ஆ! புஜகீர்த்தி யொன்றைப் புனைந்த கொட்டாப்புளியைப் போன்ற வேஷதாரி யொருவன் ஆவேசம் கொண்டவனாய், அட்டகாசம் செய்து, பெரும்பாலும் அர்த்த மில்லா அபிநயங்களையும் ஆரவாரக் கூச்சல்களையுமே அதிகமாய் விரும்பும் அற்ப ஜனங்களின் காதுகள் பிளந்து போம்படி கத்துவதைக் காணுங்கால், என் மனமெல்லாம் புண்படுகின்றது. இராட்சதர்களைத் தோற்கடிக்கச் செய்யும் அப்படிப்பட்ட ஒருவனை தடிப்பத்தால் அடித்துத் துரத்த விரும்புவேன் நான். அது இரண்யகசிபை எளிய குரலுடையவனாக்குவதாகும். உம்மை வேண்டுகிறேன், அதை விட்டொழியும்.*

மூ-நா. *அப்படியே ஆகட்டும், அரசே.*

அம. *ஒன்றும் செய்யாது தடிபோலும் நிற்கவேண்டாம். உமது பகுத் தறியும் அறிவே உங்களுக்கு உபாத்தியாயரா யிருக்கட்டும். வார்த்தைக்குத் தக்கபடி அபிநயம் இருக்கவேண்டும், அபிநயத்திற்கு அமைந்தபடி வார்த்தை வழங்கவேண்டும். இதில் நீர் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது, சுபாவத்*

தின் அத்து மீறிப்போகாமையே ; ஏனெனில் அவ்வாறு அத்து மீறிப் போவது நாடக மாடுவதின் தாற்பரியத்திற்கே முற்றிலும் விருத்தமாகும். முற்காலத்தில் நாடக மாடுவதின் முக்கியமான முடிபெல்லாம் உலகத்தில் உள்ளபடி நடப்பதைக் கண்ணாடியில் எடுத்துக் காட்டுவதேபோல் காட்டுவதாகவே யிருந்தது, தற்காலத்திலும் அப்படித்தானிருக்கின்றது. நற்குணத்திற்கு அதன் உருவம் இப்படிப் பட்டதென்றும், வெறுப்பிற்கு அதன் பிம்பம் இத்தகையதென்றும், அந்தந்தக் காலத்து ரூபங்களையும் நடத்தைகளையும் அப்படி அப்படியே எடுத்துக் காட்டுவதே அதன் கருத்தாகும். இதைச் செய்வதில், அத்து மீறினாலும் அளவிற்குக் குறைந்தாலும், பாமர ஜனங்களுள் பலரினை நகைத்திடச் செய்தபோதிலும், புத்திசாலிகளுடைய சித்தத்தை வருத்த மடையச் செய்யும். அறிவுடையோன் ஒருவன் அது தகாது எனும் ஒரு மொழியே, அறிவிலா ஆயிரம் பெயர் கொண்டாடுவதைவிட, மேலானதென உம்மால் கொள்ளப்படவேண்டும். அந்தோ ! சில நாடகத்தை ஆடும் வேஷதாரிகளை நான் பார்த்திருக்கிறேன்.— அவர்களை ஏனையவர் புகழவும் கேட்டிருக்கிறேன், அதுவும் அதிகமாய் ; அதிக தூஷணமாய்க் கூறவிடத்து, அவர்களிடம் நம்மவரது குரலுமில்லை, நடையுமில்லை ; நம்மவரைப்போலுமில்லை, நாகரீக மற்ற மிலேச்சர்களைப்போலு மில்லை, மனிதர்களைப் போலுமே யில்லை ; இப்படிப்பட்டவர்கள் கூச்சலிட்டுக் கூத்தாடுவதைக் காணுங்கால் பிரம்மதேவன் வேண்டுமென்று மனுஷ்ய ஜன்மத்திற்குத் திருஷ்டிப் பரிகாரமாய் அதற்கு மாறுபாடாய் இவர்களை சிருஷ்டித் திருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிறேன். மனுஷ்ய சுபாவத்தைப்போல் நடிப்பதில் அத்தனை ஆபாசம் செய்தார்கள்.

மூ-நா. ஏறக்குறைய அவற்றையெல்லாம் எங்களுள் திருத்திவிட்டோமென என்னுகிறேன்.

அம. முற்றிலும் திருத்திவிடும் அதை ; உங்களுக்குள் விதூஷகன்

வேஷம் தரிப்பவர்கள், அவர்கள் எவ்வளவு பேசவேண்டு மென எழுதியிருக்கிறதோ அதற்குமேல் ஒன்றும் பேசவேண்டாம். அவர்களுள் சிலரைப் பார்த்திருக்கிறேன், அவர்கள் பாமர ஜனங்களுள் சிலர் நகைத்திடும் வண்ணம், ஒரு காரணமுமின்றி தாங்களே நகைக்க ஆரம்பிப்பார்கள், இதனால் நாடகத்தின் முக்கியமான பாகம் ஏதாவதொன்று தடைபட்டு நிற்கும் அதற்குள் ; இது பெரும் மூடத்தனமாம், அப்படிச் செய்யும் அந்த விதூஷகனுடைய, தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்னும் அற்பத்தனமான பேராசையை அது காட்டுகிறது. போவீர், சீக்கிரம் சித்த மாவீர்—

[வேஷதாரிகள் போகிறார்கள்.]

பாலநேசன், ராஜகாந்தன், கிரிதரன் வருகிறார்கள்.

என்ன, ஐயா, கேட்கப் போகின்றாரா மகாராஜா இந்தக் கதையை ?

பால. ஆம், மகாராணியுங்கூட, அதுவும் உடனே.

அம. ஆனால் ஆட்டக்காரர்களை அவசரப்படுத்தும்.

[பாலநேசன் போகிறான்.]

நீங்களும் போய் துரிதப் படுத்துகின்றீர்களா இவர்களைச் சற்று ?

ரா-கி. அப்படியே ஆகட்டும் அரசே. [போகிறார்கள்.]

அம. யார் அங்கே ? ஹரிஹரா ?

ஹரிஹரன் வருகிறான்.

ஹ. இதோ இளவரசே, காத்துக்கொண் டிருக்கின்றேன்.

அம. அப்பா, ஹரிஹரா, நான் இதுவரையில் சம்பாஷித் தறிந்தவர்களுக்குள் உன்னைவிட உத்தமனைக் கண்டே னில்லை.

ஹ. ஐயோ, என் இளவரசே,—

அம. அப்படியல்ல. நான் உன்னை முகஸ்துதி செய்கிறேன் என்று எண்ணாதே. உணவும் உடையும் உதவ இருக்கும் வரும்படி

யெல்லாம் சந்தோஷ முள்ள மனம் ஒன்றே உடைத்தாயிருக்கின்ற, உன்னிட மிருந்து நான் அடையலாம் எனக் கோரும் பலன் என்னாவது ? ஏழைகளுக்கு முகமன் இயம்புவதேன்? அர்த்தமில்லா ஆடம்பரத்திடஞ் சென்றுதே னொழுகும் நாவுடையவர் நய வஞ்சகம் பேசட்டும்; முகஸ்துதி பேசி முன்னுக்கு வரக்கூடிய இடங்களில் முழந்தா ளிட்டுப் பணியட்டும். நான் சொல்வது கேட்கிறதா ? விரும்பியதை வரிக்கச் சுதந்தர முண்டானதுமுதல், மனிதர்களைப் பகுத்தறியுஞ் சக்தி யுண்டானபின், என் னாருயிரானது உன்னையே தனக்குச் சொந்தமாக நாடியது. ஏனெனில் நீ எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தும் ஒன்றையும் அனுபவியாதவன்போலிருக்கிறாய். இன்ப துன்ப மிரண்டையும் சமமாகப் பொறுத்துச் சந்தோஷிக்கின்றாய். அதிர்ஷ்டமானது தன் இச்சைப்படி ஆட்டுவிக்க இடங் கொடுக்காமல், ஆசைப் பெருக்கமும் அறிவும் ஒருங்கே ஐக்கிய மாகிய மனிதர்களே சுகிகள்; மனம் போனவழி மதியைச் செலுத்தாத மனிதனை எனக்குக் காட்டு, அவனை என் ஹிருதயத்தில், என் ஹிருதயத்தின் ஹிருதயத்தில், வைத்துப் பூசிக்கின்றேன் உன்னைப் பூசிப்பது போல். இப்பொழுது நான் சொல்ல வந்த விஷயத்திற்கு இதெல்லாம் அதிகம். இன்றைத்தினம் மகாராஜாவின் முன்பாக ஒரு நாடகம் நடக்கப் போகின்றது. அதில் ஒரு பாகம் என் தந்தை மரித்த விஷயத்தைப்பற்றி உன்னிடம் நான் உரைத்திருக்கின்றேனே, சற்றேறக் குறைய அதைப்போலவே யிருக்கும். நான் உன்னை வேண்டிக்கொள்வது, அந்தப் பாகம் நடக்கும்பொழுது உன் அந்தராத்மாவைக் கொண்டு என் சிறிய தந்தையை நீ கவனிக்கவேண்டும் என்றே. அவர் மனத்தில் மறைத்து வைத்திருக்கும் அவரது குற்றமானது எந்த விதத்திலாவது அவர் வாய் வழியாக வெளியாகா விட்டால், நாம் பார்த்த பேய் பேசிய தவ்வளவும் பொய் யென்று ஒப்புக்கொண்டு, என் கெட்டுப்போயிருக்கும் புத்தியையும் கொல்லனது உலைக்கடத்திற்கு அனுப்பலாம். அவரை நன்



MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIB...
...YUR, MADRAS-41.

ருய் கவனித்துப் பார். நானும் ஆணி யறைந்ததுபோல் அவரது முகத்தைவிட்டு என் கண்களை எடுக்காது பார்த்துவருகிறேன். பிறகு, அவர் முகக் குறிப்பினுல் நா மறிந்ததைப் பற்றி கலந்து பேசுவோம்.

ஹ. ஆகட்டும் அரசே, நாடகம் நடக்கும்பொழுது அவர் முகத்தி லிருப்பதை நான் கண்டுபிடியாது கைசோர விடுவே னுயின் காணுமற் போனதற்கு நான் உத்தரவாதம் செய்கிறேன்.

அம. அதோ நாடகத்திற்கு எல்லோரும் வருகிருர்கள். நான் ஒருவாரு யிருக்க வேண்டும். ஓர் இடம் பார்த்துக் கொள் உனக்கு—

சங்கீதம். காலதேவன், கௌரீமணி, பாலநேசன், அபலே, ராஜகாந்தன், கிரிதரன், மந்திரிகள், வருகின்றனர்.

சேவகர்கள் பந்தம் பிடித்துக்கொண்டு வருகின்றனர்.

கா. நம திளவரசன் அமலாதித்யன் எப்படி யிருக்கின்ருன் ?

அம. மிகவும் நன்ருய் இருக்கின்ருன், மூச்சு விட்டுக்கொண்டு. வாய்வு பட்சணம் வயிறு வீக்கம்.—வான் கோழியைப்போல்.

கா. இந்தப் பதிலுக்கும் எனக்கும் சம்பந்த மில்லை அமலாதித்யா, இந்த வார்த்தைகள் என்னுடையவை அல்லவே ?

அம. அல்ல, என்னுடையவு மல்ல இப்பொழுது.—[பாலநேசனுக்கு] ஐயா, தாங்கள் ஒரு முறை கலா சங்கத்தில் நாடக மாடியதாகவா சொல்லுகிறீர் ?

பால. ஆம் அரசே, அங்ஙனமே செய்தேன்; நான் ஆடியது நன்ருய் இருந்தது என்று எல்லோரும் சொன்னூர்கள்.

அம. என்ன நடித்தீர் நீர் ?

பால. நான் ஹிரண்யனுக நடித்தேன். மகாவிஷ்ணு நரசிம்மாவதாரம் எடுத்து என்னைக் கொன்ருர்.

அம. அடடா ! இப்படிப்பட்ட ஹிரண்யாசுரனைக் கொல்வதற்கு அவர் அத்தனைக் கஷ்டப்பட்டது தவறு.—நாடக பாத்திரங்களெல்லாம் சித்தமா யிருக்கின்ருர்களா ?

ரா. ஆம், அரசே; தங்களுடைய உத்தரவுக்காக காத்திருக்கிருர்கள்.

கேள. கண்ணே, அமலாதித்யா, இப்படி வா. என் பக்கத்தி லுட்கார்.

அம. இல்லை அம்மணி, என்னை மன்னிக்கவேண்டும். என்னை வலிக்கும் காந்தம் இதோ இருக்கின்றது.

பால. [அரசனிடம்] உம் உம்! கவனித்தீரா அதை?

அப. அரசே, என்ன மிகவும் உற்சாகத்தோ டிருக்கின்றீர்?

அம. யார்? நாஞ?

அப. ஆம், அரசே.

அம. ஈசனே! ஈசனே! நான் ஒரு அகஸ்யக்காரன்தானே! நரமனிதன் நகைத்த வண்ண மிராது வேறென்ன செய்யக்கூடும்? அதோ பார், என் தந்தை இறந்து இரண்டு நாழிகையாகவில்லை, என் தாயார் என்ன சந்தோஷமா யிருக்கின்ருர்கள்.—

அப. இல்லை அரசே, இரண் டிரண்டு நான்கு மாதங்க ளாயினவே.

அம. அவ்வளவு நா ளாய்விட்டதா? ஆஞல் இந்த அலங்கோலமென்னத்திற்கு, நான் நல்ல ஆடை யாபரணங்களை அணியவேண்டியதுதான்! ஈசனே! இரண்டு மாதங்களுக்கு முன் இறந்தவரை இன்னும் மறவா திருப்பதா? இப்படியாஞல் மகாத்மா யாராவது மரித்தால் அவர் ஞாபகம் மண்மீது ஆறுமாதம் வரைக்கும் நிலைத் திருக்குமென்று எண்ணலாம். ஆஞல் அவர் கோயில்கள் கட்டவேண்டும், இல்லாவிட்டால் மரித்த மண் குதிரையை மறந்திடுவதேபோல் அவரையும் மறந்துபோவார்கள் ஜனங்கள்!

[சங்கீதம். அபிநயம். ஒரு அரசனும் அரசியும் மிகுந்த காதலோடு வருகிருர்கள். ஒருவரை ஒருவர் கட்டி அணைக்கின்றனர். அவள், பாதத்தில் பணிந்து, தான் மிகவும் ஆசையோ டிருப்பதாகத் தெரிவிக்கின்ருள். அவன் அவளை வாரி எடுத்து தன் தலையை அவள் கழுத்தின்மீது

சாய்க்கின்றான். பிறகு புஷ்ப சயனத்தின்மீது படுத்துக் கொள்ளுகிறான். அவள், அவன் உறங்குவதைக் கண்டு விட்டுப் பிரிகிறாள். உடனே ஒருவன் வந்து, அரசனது மகுடத்தை வாங்கி, அதற்கு முத்தமிட்டு அரசன் காதில் ஓர் விஷத்தைச் சொரிந்துவிட்டு, வெளியே போகிறான். அரசி வந்து, அரசன் இறந்து கிடப்பதைக் கண்டு, தேம்பித் தேம்பி அழுவதுபோல் அபிநயிக்கின்றாள். விஷதாரி இரண்டு மூன்று ஊமைகளுடன் வந்து அவளுடன் துக்கப்படுவதுபோல் காட்டுகிறான். சவத்தை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். விஷதாரி அரசிக்கு வெகுமதிகள் கொடுத்து தன்னை மணக்கும்படி வேண்டுகிறான். முதலில் விருப்ப மில்லாதவள்போற் காட்டி, முடிவில் அவன் காதலியாக ஒப்புக் கொள்ளுகிறாள்.] [போகிறார்கள்.]

அப. அரசே, இதற்கு அர்த்த மென்ன ?

அம. இதுவா ? இது கண்கட்டி வித்தை யென்று பெயர்; கபடம் என்று அர்த்தம்.

அப. ஒரு வேளை நடக்கப்போகின்ற நாடகத்தின் கதையின் குறிப்பா யிருக்கலாம்.

சூத்திரதாரன் வருகிறான்.

அம. இதோ இவனால் நாம் அறிவோம், வேஷதாரிகள் இரகசியமா யிருக்க முடியாது, அவர்கள் எல்லா வற்றையும் சொல்லி விடுவார்கள்.

சூ. எம்பொருட்டும் எமது நாடகத்தின் பொருட்டும்,
இங்கே தயவு செய்ய உம்மை வணங்கி,
கவனமாய்க் கேட்க, வேண்டிக் கொள்ளுகிறோம்.

[போகிறான்.]

அம. இதென்ன நாந்தியா ? நல்லதங்காள் பாட்டா ?

அப. சுருக்கமா யிருக்கிறது அரசே.

அம. காரிகையின் காதலைப் போல்.

இரண்டு வேஷதாரிகள் அரசனும் அரசியுமாக வேடம்பூண்டு வருகிறார்கள்.

வே-அ. பிரிய சகி! நம் மிருவருக்கும் விவாகம் என்கிற யாதொரு கல்யாணமாகி, சௌரமான வர்ஷக் கணக்கில் சுத்தமாய் முப்பதும் சாந்திரமான மாசக் கணக்கில் சகஜமாய் பன்னிரு முப்பதும் ஆய்விட்டது என்பதை நீ அறிந்திருக்கிறா யல்லவா? இப்பொழுது நீ என்ன தெரிவிக்கின்றாய்?

வே-அரசி. பிராணநாத்! அன்னவர்களான சூர்ய சந்திரர்கள் மறுபடியும் அத்தனை முறை இப்பூப் பிரதட்சணம் செய்தபோதிலும் நம்முடைய ஆசையானது கேவலம் குறையப் போகின்றதில்லை. ஆயினும் பிராணநாத்! அடியாள் என்ன சொல்லப் போகின்றேன். முன்புபோ லில்லாமல் வர வர உமது முகமானது வாடி யிருக்கின்றது. அதைப் பார்க்க அடியாள் எனக்கு மிகவும் பயமா யிருக்கின்றது. ஆயினும் பிராணநாத்! ஒரு விஷயம். எனக்குப் பயமா யிருக்கின்றதே என்று தாம் கிலேசம் கொள்ள லாகாது. யாது காரணம் பற்றி யெனில் ஸ்திரீகளுக்கு கவலை யென்னப்பட்டதும் காதல் என்னப்பட்டதும் அதிகமா யிருந்தபோதிலும் யாதொரு சமமா யிருக்கின்றது. அடியாள் தம்மீது கொண்டிருக்கும் யாதொரு காதலின் அளவு தமக்குத் தெரிந்தே யிருக்கின்றதல்லவா? அந்த யாதொரு காதல் எவ்வள விருக்கின்றதோ அவ்வளவே யாதொரு பயமு மிருக்கின்றது, யாதொரு காதல் அதிகமா யிருக்கு மிடத்தில்கிஞ்சித் சந்தேகத்திற் கிடம் கொடுத்தாலும் அதானது யாதொரு பயத்தைத் தருகின்றது. இவ்வாறு அற்ப விஷயங்களே அதிக பீதியை விளைப்பதானால் அவ்விடத்தில் அடங்காக் காதல் அபரிமிதமா யிருக்கின்றதென்று அன்னவர் கூறியபடி உறுதியாய் நாமும் கூறக் கூடும்.

வே-அ. அஸ்து! ஆயினும் என்ன செய்வேன் பிரியசகி! உன்னை விட்டு நான் பிரியவேண்டும். அதுவும் சீக்கிரத்தில்; எனது

நாடி, நரம்பு, நிணம், தோல், கொழுப்பு, தசை, என்னப்பட்ட இவையானதுக ளெல்லாம் தம் தம் நிலை தளர்ந்துபோயிருக்கின்றன. ஆகவே எனக்குப் பிற்காலம் இவ்வுலகமாகிய பூமியின் கண் நீ, நீடூழிகாலம் சுகமாய் வாழ்வாயாக! என்னைப்போன்ற காதல் குன்றாக் கணவ னொருவனையும் பெற்று—

வே-அரசி. சிவ! சிவ! போதும் நிறுத்தும் அதை பிராணநாத! என்ன வார்த்தை தெரிவித்தீர்கள்? அடியாள் கனவிலும் அப்படிப்பட்ட காதகமாகிய பாதகத்தை மனசார ஸ்மரிக்க மாட்டேன் என்பது நிச்சயம். மறுமுறை நான் யாதொரு கணவனை வரிப்பேனாயின் மண்மீது நான் நாசமாய்ப் போகட்டும், மற்றொரு கணவனை வரிப்பவள் யாதொரு முதல் கணவனைக் கொன்றவளே என்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேக மில்லை.

அம. [ஒரு புறமாக] ஐயோ பாவம்! ஐயோ பாவம்!

வே-அரசி. யாதொரு முதல் கணவன் மடிந்தபின் மற்றொரு கணவனை யாதொரு காரிகை கோருவா ளாயின் அது காதலினால் அன்று, வேறு யாதொரு அற்பக் காரணத்தா லிருக்கவேண்டும். ஏவஞ்ச, மற்றொரு கணவனைப் பஞ்சணையில் நான் முத்தமிடுவே னாயின் மடிந்த யாதொரு கணவனை மறுபடியும் கொல்பவ ளாவேன்.

வே-அ. அஸ்து! அப்படியே இருக்கட்டும், ஆயினும் நீ கூறுகிறபடியே இப்பொழுது நினைக்கின்றாயென்று நானும் நம்புகிறேன், அட்டியில்லை. ஆயினும் ஒரு வார்த்தை, நாம் செய்யும் தீர்மானங்களிலிருந்தும் நாம் எத்தனை முறை தவறிப்போகிறோமென்று நீ யோசிக்க வேண்டியது. திடசித்தமானது கியாபக சக்திக் கடிமை; மூர்க்கத்தினின்றும் பிறந்ததாயினும் வன்மையிற் குறைந்ததாம். காயானது மரத்தினில் நிற்கும், பழுத்தவுடன் தானாய்க் கீழே விழும், அதுபோல இதுவும். நமக்கு நாமே கொடுக்கவேண்டிய கடனை நாம் மறந்திடவேண்டியது அதி அவசியமே. கோபாவேசத்தில் நாம்

செய்யவேண்டுமென நாம் கோருகிற ஓர் விஷயம், அக் கோபம் ஆறியவுடன், அக் கோரிக்கையும் இழக்கின்றது; யாதொரு சந்தோஷமோ துக்கமோ, அதன் கொடுமையினாலேயே அது சம்ஹரிக்கப்படுகின்றது. சந்தோஷம் அதிகமாயிருக்குமிடத்து, துக்கமும் அதிகமாய்ப் பாராட்டப்படுகின்றது. அற்ப விஷயங்களி லெல்லாம், துக்கம் சந்தோஷ மடைகிறது, சந்தோஷம் துக்க மடைகிறது. இவ் வுலகமானது என்றும் நிலையானதன்று. ஆகவே, நமது ஆசையும் நமது அதிர்ஷ்டத்துடன் மாறுவது ஆச்சரியகர மன்று. ஏனெனில், ஆசையானது அதிர்ஷ்டத்தைப் பின் தொடருகின்றதோ, அல்லது அதிர்ஷ்டமானது ஆசையைப் பின் தொடருகின்றதோ, என்னும் கேள்வி, கேவலம் மனிதரால் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. சம்பத்துடையான் ஒருவன் அதனை இழப்பானாயின் அவனது சகல நண்பர்களும் அவனை விட்டுப் பறந்தோடுகின்றனர் என்பதை நீ காண்பாய். வறிஞன் ஒருவன் செல்வமுடையவனாயின், அவனது விரோதிகளும் அவனுக்கு நண்பர்க ளாகின்றனர் விரைவினில், ஆகவே இவ்வாறு ஆசையானது அதிர்ஷ்டத்தைப் பொறுத்த தாகின்றது. குறையொன்று மில்லாருக்குச் சிநேகிதர்கள் குறை வில்லை, கேடுற்ற கால் கிளைஞரை நாடுபவன், உடனே அவர்களைத் துவேஷிகளாக மாற்றுகிறான். ஆகவே ஒழுங்காய் நான் ஆரம்பித்த இடத்தில் முடிக்கு மிடத்து, அன்னவர் கூறி யிருக்கிற படி நாம் எண்ணுவ தோர் விதம், ஈசன் எழுதிய தோர் விதமாய் முடிகின்றது. ஆகவே தாற்பர்யம் யாது ? நமது எண்ணங்களால் பய னில்லை; முதலில் யோசிப்பது நம்முடைய தொழில், முடிவில் முடிப்பது அந்த ஈசன் தொழில். ஆகவே தற்காலம் இப்பொழுது நீ இரண்டாம் கணவனை கடிமணம் புரியமாட்டோமென்று கருதுகிறாய். முதல் கணவனுடன் அந்த எண்ணம் முழுவதும் மாண்டுபோகும் என்பதற்கு யாதொரு சந்தேகமு மில்லை.

வே-அரசி. அடியாள் ஒருமுறை கைம்பெண்ணானபின் மறுபடியும் யாதொரு மணப்பெண்ணாவேனாயின், அடியாள் உண்ணும் உணவே உதவவேண்டாமெனக்கு. அன்னவர்களான இச் சூரிய சந்திரர்கள் எனக்கொளிதரவேண்டாம். என் கண்களுக்கு நித்திரை என்பதே இல்லாமற் போகட்டும். என் கோரிக்கைக ளெல்லாம் பாழாகட்டும். என் எண்ணங்களெல்லாம் கெடட்டும். சிறையிலிடப்பட்ட யாதொரு துறவியைப்போல் நான் துன்ப மனுபவிக்கட்டும். அடியாள் எதை விரும்பியபோதிலும், இன்பத்தை யெல்லாம் பாழாக்குந் துன்பமே அதனிடம் குடிகொண்டு அதைக் குன்றச் செய்யட்டும். பிராணநாத! இவ் வுலகத்திலும் மறு உலகத்திலும் அடியாள் மாளாதசஞ்சலத்திற்கு மீளாது ஆளாக்கப்படட்டும்!

அம. இனி அந்த சத்தியம் தவறுவா ளாயின்?

வே-அ. மஹாத் சந்தோஷம், சபாஷ்! நன்றாய்ச் சத்தியம் செய்திருக்கிறாய்! கண்மணி! இங்கே நான் சற்று தனித்திருக்கின்றேன். எனக்கு என்னமோ ஒருவாறு யிருக்கின்றது. சற்றே நித்திரை செய்து நீடித்திருக்கும் இப் பொழுதைப் போக்க இச்சைப்படுகின்றேன். [படுத் துறங்குகின்றான்.]

வே-அரசி. சுகமாய் நித்திரை செய்வீராக! எக்காலமும் துரதிர்ஷ்டமானது நம்மிருவரையும் பிரிக்கா திருக்குமாக! [போகிறாள்.]

அம. அம்மா, எப்படி இருக்கின்றது உமக்கு இந்த நாடகம்?

கௌ. அவள் அதிகமாய்ப் பாசாங்கு செய்கிறாள் என்று தோற்றுகின்றதெனக்கு.

அம. ஏ! எப்படியும் அவள் வார்த்தை தவறமாட்டாள்.

கா. கதை முழுவதும் கேட்டிருக்கின்றனையா? இதில் ஒன்றும் தவறான விஷயமில்லையே?

அம. இல்லை இல்லை, விளையாடுகிறார்கள், அவர்கள் விளையாட்டாக விஷமிடுகிறார்கள். அதில் தவறென்பதே யில்லை தரணியின் மீது.

கா. இந்த நாடகத்தின் பெய ரென்ன ?

அம. எலி பிடிக்கும் பொறி. ஏன் என்பீர்களோ ? ஒரு அலங்காரம் பற்றி. வீஞ நகரத்தில் நடந்த ஒரு கொடுங் கொலையைப் பற்றிய கதை. அந்த அரசன் பெயர் கானசேகரன். அவனது மனைவி பாபவதி. எல்லாம் விவரமாய்ப் பார்ப்பீர் விரைவில்.—மிகுந்த அநியாயமான விஷயம், அதனால் என்ன ? மகாராஜாவையும் எங்களை யெல்லாம் போன்ற மாசற்ற மன முடையவர்களுக்கு ஆவதென்ன அதனால் ? குற்ற முள்ள நெஞ்சே குறு குறு என்னும், குணசாலிகளாகிய நமக் கென்ன கெடுதி !

லோகநேசன் வருகிறான்.

இவன் லோகநேசன் என்பவன், அந்த அரசன் தமையன் புதல்வன்.

அப. அரசே, தாம் சூத்திரதாரனைவிட மேலாக இருக்கின்றீரே !

அம. பொம்மைக் கூத்தாடுவதைக் காண்பேனாயின் உனக்கும் உன் காதலுக்கும் உள்ள அர்த்தத்தை உரைப்பேன்.

அப. ஒரு விஷயத்தில் மேம்பட்டது மற்றொரு விஷயத்தில் கீழ்ப் பட்ட!

அம. அப்படித்தான் உங்கள் கணவரையும் நீங்கள் மதிக்கவேண் டும். ஆரம்பி, கொலைக் கஞ்சாக் கொடும்பாபி, முகத்தைச் சுளிப்பது அப்புறம் இருக்கட்டும், ஆரம்பி—வா—பிணத் தைப் பிடுங்கித் தின்ன பேய்க ளெல்லாம் கொக்கரிக்கின்றன.

லோ. ஈர மில்லா நெஞ்சம், ஏற்றதான கைகள், தகுந்த ஔஷதம், காலம் கைகூடியது, கவனிக்க வேறு பிராணி யில்லை ! தக்க சமயம் ! எல்லாம் ஒருங்கே வாய்த்தது ! கிரஹண காலத் தில் கரும் பாம்புகள் கக்கிய கால விஷத்தை யெல்லாம் கலந்து மூன்று முறை புடம் போட்டு, மூன்று முறை காய்ச்சி, அதன் சாரத்தைத் தேர்ந் தெடுத்த ஆலகால விஷமே ! ஆரு யிரை அரை க்ஷணத்தில் கவர வல்ல அருமையாம் உன் வேலை

யை அதி விரைவிற் செய்து முடிப்பாய் !

[விஷத்தைத் தூங்குபவன் காதில் விடுகின்ருன்.]

அம. நந்தவனத்தில் விஷமிடுகிருன், அவனுடைய இராஜ்ஜியத்தைப் அபகரிக்கும்பொருட்டு. அவன் பெயர் கானசேகரன். இந்தக் கதை தற்காலத்தில் வழங்கி வருகின்றது. நல்ல சமஸ்கிருத பாஷையில் எழுதி யிருக்கின்றது. இந்தக் கொலைபாதகன் பிறகு கானசேகரன் மனைவியின் காதலை எப்படிப் பெறுகிருன் என்பதை இனிமேல் பார்ப்பீர்.

அப. மகாராஜா எழுந்திருக்கிருர் !

அம. என்ன ? ஏதாவது தீ என்று பயந்தா ?

கௌ. என்ன பிராணநாதா ! உடம்பென்ன ?

பால. ஆட்டத்தை நிறுத்துங்கள் !

கா. கொஞ்சம் வெளிச்சம் கொண்டுவாருங்கள்—போங்கள் !

எல்லோரும். வெளிச்சம் ! வெளிச்சம் ! வெளிச்சம் !

[அமலாதித்யன் ஹரிஹரன் தவிர மற்றவர்களெல்லோரும் போகிருர்கள்.]

அம. தப்பித்த மான் தலைவிரித் தாடட்டும்,
புண்பட்டமான் புலம்பட்டும்,
உறங்குவார் உறங்குங்கால் காப்பார் காத்தல் வேண்டும் ;
உலக வழக்கமே இதாகும் உத்தமனே.

அப்பனே ! என்னுடைய பாக்கிய மெல்லாம் பறந்தோடிப் பாழாய்ப்போனாலும், இந்தப் பாட்டும், கையிலொரு கங்கணமும், காதில் இரு குழையும், வேஷதாரிகளுக்குள் என்னையும் ஒரு பங்குக்காரனாகச் சேர்த்துக்கொள்ளச் செய்யாதோ ?

ஹ. பாதி பங்கு கிடைக்கும்,

அம. முழுப் பங்கு பெறுவேன் நான்.

ஆருயிர் நண்பனே அறிவாயே நீதானும்
பேருலகந்தனில், பீடுற்ற இவ்விராஜ்யத்தின்
அருமையாம் அரசன்மாள அவன் பின்னுவின்று
கழுதையாம்—இவனைக் காலம் வாய்ந்ததந்தோ !

ஹ. எருமையாம் என்று எதுகையுடன் கூறி முடித்திருக்கலாமே?

அம. நேசா ! ஹரிஹரா ! பேய் கூறிய வார்த்தை மெய்யென்று ஆயிரம் பொன் பந்தயம் கட்டுவேன் ; கவனித்தனையா நீ ?

ஹ. நன்றாய்க் கவனித்தேன் அரசே.

அம. விஷமிடுவதைப்பற்றி பேச்செடுத்தவுடன்.—

ஹ. நான் மிகவும் குறிப்பாய்க் கவனித்தேன் அவரை.

அம. ஹா ! ஹா ! ஏதோ கொஞ்சம் சங்கீதம் ! வரட்டும் வாத்தியம் !

விருப்பமிதில் வேந்தற்கு இல்லா விட்டால்
வெறுப்பதற்குக் காரணமொன் றுண்டா மன்றோ !—

ஏதோ, கொஞ்சம் சங்கீதம் !

ராஜகாந்தனும், கிரிதரனும் மறுபடியும் வருகிறார்கள்.

கி. என் அரசே, ஒரு வார்த்தை கொஞ்சம் தயவு செய்யவேண்டும் என்னிடம்.

அம. ஐயா, ஒரு பாரத முழுவதும்.

கி. மகாராஜா அவர்கள்—

அம. ஆம், என்ன, மகாராஜா அவர்களுக்கு ?

கி. இங்கிருந்து சென்றவுடன் மிகவும குணம் மாறி யிருக்கின்றார்.

அம. குடி வெறியினலா ?

கி. இல்லை அரசே, கொஞ்சம் பித்தத்தினல் என்று சொல்ல வேண்டும்.

அம. நீ இந்த விஷயத்தை வயித்தியனிடம் போய்த் தெரிவித திருந்தால் உன் புததியின் கூர்மை இன்னும் அதிகமாய் வெளியா

கும். ஏனெனில் நா னவருக்கு விரோசனம் கொடுப்பதானல் அவருக்குப் பித்தம் ஒரு வேளை இன்னும் அதிகரிக்கும்.

கி. இளவரசே, உமது வார்த்தைகளில் ஏதாவது ஒழுங்கிருக் கட்டும், நான் சொல்வதை விட்டு வேறென்னவோ விஷயத் திற்கு இவ்வாறு ஓடாதீர்.

அம. நான் ஒன்றும் பேசவில்லை, சொல்.

கி. மகாராணி யவர்கள்—தங்கள் தாயார்—மிகுந்த பெரும் மன வருத்தத்துடன், என்னைத் தங்களிடம் அனுப்பினர்கள்.

அம. சுகமாய் வரலாம்.

கி. இல்லை அரசே, இந்த மரியாதை தகுந்தபடி யானதன்று. நான் கேட்பதற்குத் தக்க பதில் உரைப்பதானல் தங்கள் தா யாரின் கட்டளையை நிறைவேற்றுகின்றேன். இல்லாவிடின் நீர் மன்னிப்பதும் நான் திரும்பிப்போவதுமே நான் வந்த வேலையின் முடிவாகும்.

அம. ஐயா, என்னல் முடியாது.

கி. என்ன முடியாது அரசே ?

அம. உனக்குத் தக்க பதில் சொல்ல ; என் புத்தி சற்று கெட்டுப் போ யிருக்கின்றது. ஆனல் என்னல் என்ன பதில் உரைக்க முடியுமோ அதை நீ பெறலாம்.—அதாவது நீ சொல்லுகிற பிரகாரம் என் தாயார் பெறலாம்—ஆகவே மற்றதை யெல் லாம் விட்டு சங்கதிக்குப் போவோம். என் தாயார் என்ன சொல்லுகிறர்கள் ?

ரா. இவ்வாறு சொல்லுகிறர்கள். தங்களுடைய நடவடிக்கை யானது அவர்களுக்கு அதிக ஆச்சரியத்தையும் விந்தையை யும் உண்டுபண்ணி யிருக்கின்றது.

அம. ஆஹா ! என்ன ஆச்சரியமான பிள்ளை ! இப்படித் தன் தாயா ரையே பிரமித்துப் போகச் செய்பவன் ! ஆனல் அன்னையின் அந்த ஆச்சரியத்தைப் பின் தொடர்ந்துவரும் விஷயமொன்று மில்லையா ? தெரிவியும்.

ரா. தாங்கள் நித்திரைக்குப் போகுமுன் உம்மை அந்தப்புரத்திற் கண்டு பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

அம. அப்படியே செய்வோம், இன்னும் பதின்மடங்கு நமது தாயாரா யிருந்த போதிலும். நம்மிடம் இன்னும் ஏதாவது வியாபாரம் உண்டோ ?

ரா. அரசே, ஒரு காலத்தில் என்மீது பிரியமா யிருந்தீர்.

அம. இப்பொழுதும் அப்படியே இருக்கின்றேன், இக் கன்னம் வைக்கும் கரத்தின்மீ தாணைப்படி.

ரா. இளவரசே, தாங்கள் குணம் மாறி யிருப்பதற்குக் காரணமென்ன ? உமது துயரத்தை உமது நண்பனிடம் தெரிவிக்காவிட்டால் அத் துயரத்தினின்றும் தப்பித்துக் கொள்ளும் படியான மார்க்கங்களை யெல்லாம் அடைத்துவிடுகின்றீர் நிச்சயமாக.

அம. என்னுடைய தற்கால ஸ்திதி எனக்குத் திருப்திகரமா யில்லை.

ரா. அது வெனப்படி ? குர்ஜரத்தை அவருக்குப்பின் ஆள்வதற்கு மகாராஜாவின் வாக்கே உமக் கிருக்கின்றதே ?

அம. ஆமாம், இருந்தாலும், " அண்ணனிருக்கிற வரையில்—" அந்தப் பழமொழி கொஞ்சம் கியாபக மறதியா யிருக்கின்றது.

*மறுபடியும் வேஷதாரிகள் சில குழல்களோடு வருகிறார்கள்.*

ஓ ! இதோ குழல்கள்.—எதோ ஒன்றை நான் பார்க்கட்டும்,— வாருங்கள் ஒரு பக்கமாய்—ஏன் நீங்க ளிருவரும் என்னைப் பின்தொடர்ந்து திரிகிறீர்கள், என்னை ஏதாவது வலையில் சிக்கச் செய்யவேண்டுமென்பதேபோல் ?

கி. இளவரசே, என் கடைமை அதிக வெளிப்படையாக விருந்தால், என்னுடைய அன்பானது நன்னடக்கையை மிகவும் அறியாம லிருக்கின்றது.

அம. அது எனக்கு நன்றாய் அர்த்தமாக வில்லை. இந்தக் குழலைக் கொஞ்சம் வாசிக்கின்றாயா ?

கி. அரசே, என்னால் முடியாது.

அம. நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கி. என் வார்த்தையை நம்பும், என்னால் முடியாது.

அம. நான் வேண்டிக் கொள்ளுகிறேன் உன்னை.

கி. அரசே, அதில் ஒரு சுரமும் எனக்குத் தெரியாது.

அம. நிரம்ப சுலபம், பொய் பேசுவதைப் போல்! இந்தத் துவாரங்களை உனது விரல்களால் மூடிக்கொள், இதை உனது சுவாசத்தினால் ஊது, உடனே உத்தமமான சங்கீத நாதத்தை உண்டு பண்ணுமிது. இதோ பார், இவைகள்தான் சுரஸ் தானங்கள்.

கி. ஐயோ! இந்தச் சுரங்களை யெல்லாம் லயப்படுத்தி சங்கீத முண்டுபண்ண எனக்குச் சக்தி யில்லையே! அந்த ஞானம் எனக் கில்லை.

அம. ஏன்! இதோ பார்! என்னை என்ன ஹீனமான வஸ்து வாக்கி விடுகின்றாய்! என்னை வாசித் தறிய விரும்புகிறாய். என் குணத்தை யெல்லாம் அறிந்தவன்போல் காண்கிறாய். என் ஹிருதயத்திலுள்ள இரகசியத்தைத் தோண்டி எடுக்க விரும்புகின்றாய். என்னால் என்ன முடியுமென்பதை யெல்லாம் ஆதியோடந்தமாக அறிய இச்சைப்படுகிறாய். இந்தச் சிறிய குழலில், நல்ல சங்கீதம், உத்தமமான ஒலி யிருக்கின்றது. ஆயினும் அதை வாசித் தறிய உனக்குச் சக்தி யில்லை. ஏனப்பா, குழலை வாசிப்பதைவிட என்னை வாசிப்பது சுலபம் என்று நினைக்கின்றாய்போலும்! என்னை எந்த வாத்திய மென்றாவது பெயரிட்டழை, என்னை நீ கஷ்டப் படுத்தலாமே யொழிய உன்னால் வாசித் தறிய லாகாது.

பாலநேசன் வருகிறான்.

ஐயா! தங்களுக்கு நூறாயுள்!

பால. அரசே, மகாராணி அவர்கள் தங்களுடன் பேச விரும்புகிறார்கள் உடனே.

அம. அதோ இருக்கின்றதே மேகம், சற்றேறக் குறைய ஒரு ஒட்டகத்தைப்போல், தெரிகிறதா உமக்கு?

பால. அப்பன் ஆணை ! அச்சம் ஒட்டகந்தான்.

அம. கொஞ்சம் ஆமை ஜாடையா யிருக்கின்றதெனை நினைக்கின்றேன்.

பால. முதுகு ஆமையைப்போ லிருக்கிறது.

அம. அல்லது திமிங்கலம் போலவோ ?

பால. ஏறக் குறைய திமிங்கலந்தான் !

அம. ஆனல் உடனே என் தாயாரைப் போய்ப் பார்க்கின்றேன். [ஒருபுறமாக] என்னை அசல் பயித்தியக்கார னுக்குகிருர்கள்.— நான் உடனே வந்துவிட்டேன்.

பால. அப்படியே தெரிவிக்கின்றேன். [போகிருன்.]

அம. 'உடனே' என்று சொல்வது எளிதாம்.—தோழர்களே, உத்தரவு பெற்றுக் கொள்ளுங்கள்.

[அமலாதித்யன் தவிர, மற்றெல்லோரும் போகிருர்கள்.]

பிசாசுகளுக் குரிய பாதி இராத்திரி யிப்பொழுது, பேய்களெல்லாம் சுடுகாட்டில் வாய் திறந்து வாவுகிற சமயம்! நரக பாபங்களெல்லாம் நானிலத்தைப் பீடிக்கும் வேளை ! இப்பொழுது சுடச்சுட பச்சை இரத்தத்தையும் குடிப்பேன் நான். பகற் காலம் பார்த்துக் குலை நடுங்கும்படியான குரூர கிர்த்தியம் செய்வேன். பொறு ! தாயாரிடம் போகவேண்டும் நான்.— மனமே !— உன் சுபாவ மிழக்காதே. பரசுராமனைப்போல் பரிதாபமற்ற குணம் இந்த ஹிருதயத்திற் புகவேண்டாம். நான் குரூரனு யிருந்தபோதிலும் மானிடப் பிரகிர்திக்கு மாருன காரியம் செய்யாம லிருப்பேனுக ! கத்தியைப்போல் வெட்டிப் பேசுகிறேன், ஆனல் அதை உபயோகிக்கமாட்டேன். என் மனமும் வாக்கும் இதில் மாத்திரம் மாறுபட் டிருக்கட்டும். என் வார்த்தைகளால் எவ்வளவுதான் என் தாயாரை வதக்கியபோதிலும் அவரது உயிரைப் போக்கமாத்திரம் என் உள்ளம் உடன்படாது ! [போகிருன்.]

காட்சி முடிகிறது.

## மூன்றுவது காட்சி.

*அரண்மனையிலோர் அறை.*

காலதேவன், ராஜகாந்தன், கிரிதரன் வருகிறார்கள்.

கா. அவன் ஸ்திதி எனக்குத் திர்ப்திகரமா யில்லை. அவன் பயித்தியத்தை அதிகரிக்க விடுவது நமக்கு க்ஷேமகர மானதன்று. ஆகவே நீங்கள் ஆயத்தப்படுத்துங்கள். நான் உங்களுடைய திருமுகத்தை உடனே அனுப்புகின்றேன். அவனும் உங்களுடன் சிங்களத்துக்குப் போவான். அவனது பயித்தியத்தினின்றும் மணிக்கு மணிக் குண்டாகின்ற பயங்கரமான இடையூறுகளை நமது இராஜரீகத்துக்கு அருகாமையில் வளர விடுவது அபாயகரமாம்.

கி. நாங்கள் ஆயத்தப்படுகின்றோம். தம்மைக்கொண்டு உயிர் பெற்று உஜ்ஜீவிக்கின்ற உலகத்தவர்களை யெல்லாம் பாதுகாக்கவேண்டுமென்கிற பயமானது தெய்வத்திற்கு உவப்பானதும் உத்கிருஷ்டமானது மாகும்.

ரா. ஒவ்வொரு உயிரும் உலகினில் ஒரு கஷ்டமும் தன்னை வந்தணுகாதபடி அறிவே கவசமாக அதன் பலத்தைக் கொண்டு காப்பாற்றிக்கொள்வது கடைமையாகும். அப்படி யிருக்க மன்னுயிரின் க்ஷேமமெல்லாம் தன்னுயிரைப் பொறுத்ததா யிருக்கின்ற அரசன் அவனுயிரைக் காப்பது அதிக அவசியமாகும். அரசன் அழிவதென்றால் அவன் மாத்திரம் அழிவதன்று; சுழலானது சுற்றிலு முள்ளதை இழுத்துக்கொள்வதேபோல் அவனருகிலுள்ள அனைவரும் அழிகின்றனர். பிரம்மாண்டமான தன் இலைகளுடன் பல்கோடி சிறு வஸ்துக்கள் விட்டு பிரியாதபடி கட்டப்பட் டிருக்கும், உன்னதமான மலையின் உச்சியில் நாட்டப்பட்ட, மகத்தான சக்கரம் ஒன்றைப் போலாம்; அது விழுந் தழியுங்கால், அதனுடன் கட்டப்பட் டிருக்கின்ற ஒவ்வொரு அற்பப்பொருளும் அதனுடன் அழிகின்ற தன்றோ? அரசன் பெருமூச் செறிந்தால் அகில மெல்லாம் பெருமூச் செறிகின்றது.

கா. இந்தப் பிரயாணத்திற்கு உடனே சன்னதமாகும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எதேச்சையாய் அடங்காது திரியும் இந்த அபாயத்தை அடக்கி, காலில் விலங்கிட்டுக் காவலி லிருத்தவேண்டும் நாம்.

ரா·கி. உடனே நாங்கள் துரிதப்படுகின்றோம்.

[இருவரும் போகிறார்கள்.]

பாலநேசன் வருகிறான்.

பால. மகாராஜா, இளவரசர் அவரது அன்னையின் அந்தரங்க அறைக்குப் போகின்றார். நான் திரைக்குப் பின்னால், அங்கே நடக்கின்றதைக் கேட்டறிய, ஒளிந்திருக்கின்றேன். மகாராணியவர்கள் எப்படியும் நன்றாய்க் கேட்பார்கள் என்று நான் உறுதியாய்க் கூறுவேன். அன்றியும் தாங்கள் சொன்னபடி, மிகுந்த புத்தி சாதுர்யமாய்ச் சொன்னபடி, எப்படியிருந்தாலும் தாயாருக்குப் பிள்ளை என்கின்ற பட்சபாதம் போகாதாகையால் அவர் கூறுவதை மூன்றாவது மனிதன் ஒளிந்திருந்து கேட்டறிதலே தகுதியாகும். எம திறையே, நான் விடைபெற்றுக் கொள்ளுகின்றேன், தாங்கள் சயனத்திற்குப் போகுமுன் நான் வந்து தங்களைக் கண்டு நான் கேட்டதைத் தெரிவிக்கின்றேன்.

கா. சந்தோஷம், போய் வாரும் ஐயா. [பாலநேசன் போகிறான்.] ஐயோ! என் குற்றமானது பெரும் பாதகமாம். விண்ணுலகம்வரை கொளுத்தும் கொடுமையாம். உடன் பிறந்த உத்தமனைக் கொன்ற கொடும் காதகத்திலும் காதகமாமே. ஈசனைக் குறித்துப் பிரார்த்தனை செய்ய என்னா லாகவில்லை, என் மனமானது என்னை எவ்வளவு வலிவுடன் உந்தியபோதிலும்! நான் செய்த பஞ்சமா பாதகத்தின் பலமானது என் மனோ திடத்தைப் பறந்தோடிப் போகச் செய்கிறதே. இரண்டு கருமங்களை ஏக காலத்தில் செய்து முடிக்கவேண்டு மென்னும் கருத்தையுடையவன்போல், இங்கு ஆரம்பிப்பது என்பதை யறியாது, ஏங்கி ஒன்றும் செய்யாம லிருக்கின்றேன். இந்தப் பாழாய்ப்

போன கையில் மடிந்த சகோதர அரசன் இரத்தம்படிந்திருந்தாலென்ன? பரமேஸ்வரன் கருணை யென்னும் மழை பொழிந்தால் இது கரைந்து பனிக்கட்டியைப்போல் பரிசுத்தமாகாதா? காதகத்தை நேராக எதிர்த்துக் கரையச் செய்வதற் கன்றி கருணை என்பது எதற்காக விருக்கின்றது ? நாம் பாழில் வீழ்வதன்முன் நம்மைத் தடுப்பதும், வீழ்ந்தபின் கரையேற்றுவதும் இவ்விரண்டுமின்றி நமது பிரார்த்தனைகளெல்லாம் என்ன பலனைத் தருவனவாம் ? நாமினியாவது நற்கதி யடையு மார்க்கத்தை நாடவேண்டும். நெடுங்கால மாயது நான் அபராதம் இழைத்து. ஐயோ ! ஆயினும் அப்பெரும் பழியைப் போக்க நான் என்னென்று பிரார்த்தனை செய்வேன் ? உடன் பிறந்த உத்தமனைக் கொன்ற பாதகத்தை மன்னியும் என்பதா ? ஐயோ ! இது உதவாதே! நான் எதற்காக இக்கொடுங் கொலை புரிந்தேனோ, என் மகுடம், என் பேராசை, என் மனைவி, இவைகளை யெல்லாம் நான் அனுபவித்துக்கொண் டிருக்கின்றேனே ! தா னிழைத்த பாதகத்தின் பலனை விடாது ஒருவன் மன்னிப்புப் பெற முடியுமோ? அதர்ம வாறுகளுக் கிடமான இந்த வனியாய உலகின்கண் குற்றவாளியின் கைப்பொருளானது தர்மத்தையே ஒரு புறமாகத் தட்டி விடக்கூடும் ; பாபத்தினாற் சம்பாதிக்கப்பட்ட பொருளே நியாயத்தை விலைக்கு வாங்கி விடுவதை நாம் பன்முறை பார்த்திருக்கின்றோம் ; மேலுலகத்தி லவ்வா றன்றே! அவ்விடம் மாறுபாடு ஒன்றும் உதவாது, ஒவ்வொரு வழக்கும் உண்மையில் விசாரிக்கப்படும், நமது பாப கிர்த்தியங்களைப்பற்றி நாமே நமக்கு விரோதமான சாட்சிகளாய் அணுவும் ஒளியாது உண்மையை உரைக்க வேண்டிவரும். அப்பொழுது என்னும் ? என்ன மிகுதியாம் ? இப்பொழுதே நான் செய்த பிழையை ஒப்புக்கொண்டு பிரார்த்தனையினால் என்ன பல னுண்டாகிறதெனப் பார்க்க வேண்டும். அதனால் எதுதான் ஆகாது ? ஆயினும் ஒருவன் அவ்வாறு பிரார்த்திப்பதே அசாத்தியமானால் என்ன பல னடையக்கூடும் ? ஐயோ ! என்ன தௌர்ப்பாக்கிய

மான ஸ்திதி! அந்தகார இருளடைந்திருக்கின்றதே என் ஹிருதயம்! பாபமாகிய சேற்றி லமிழ்ந்த என் ஆன்மா அதை விட்டு நீங்க முயன்று இன்னும் அதிகமாய் அமிழ்கின்றதே! ஈசனே! எனக் குதவி செய்வீராக! நான் முயல்கின்றேன். வணங்காத என் முடியை உமது பாதத்தில் வணங்குகின்றேன். இரும்புபோன்ற என் இருதயத்தை இளங்குழவியின் நரம்பினைப்போல் இளகச் செய்கிறேன். எல்லாம் சுபமாய் முடியினும் முடியலாம்!

[ஒரு புறமாய்ப் போய் முழந்தாளிட்டுப் பணிகின்றான்.]

அமலாதித்யன் வருகிறான்.

அம. அஞ்சலியஸ்தனா யிருக்கின்றான், அப்படியே கொன்று விடலாம் அரை க்ஷணத்தில்! அப்படியே கொல்கின்றேன்—சுவர்க்கத்துக் கனுப்புகின்றேன்; என் பழியைத் தீர்த்தவனாவேனோ இதனால்? இது நன்றாய் ஆராயவேண்டிய விஷயம். ஒரு பாதகன் என் தந்தையைக் கொல்கிறான். அதற்காக அவரது ஏக புத்திரனாகிய நான் இப்பாபிஷ்டியைச் சுவர்க்கம் அனுப்புகின்றேன்! ஐயோ! இது கூலி கொடுத்து உபகாரம் செய்வதாம்; பழி வாங்குவ தாகாதே. இவன் என் தந்தையை, இரத்த புஷ்டியுடனும் அவர் செய்த பாபங்க ளெல்லாம் பரவி நிற்கையில், அநியாயமாய்க் கொன்றான். அதற்குப் பிராயச்சித்தம் அந்த ஈசன் ஒருவனுக்குத்தான் தெரியும். நமது மனதின் ஆராய்ச்சிக் கெட்டியவரையில் அது பெரும் பாதகமாம். அப்படி யிருக்க, இப் பாபியை, பரமனை நோக்கித் தியானம் செய்து, தன் பாபங்களை யெல்லாம் கழித்துப் பரலோகம் செல்லச் சித்தமாகும் சமயத்தில் கொல்வேனாயின், நான் தக்கபடி பழி வாங்கினவனாவேனோ? சீ! இது தவறு. கட்கமே! பொறு! இந்தத் துராத்மாவைத் தக்கபடி வதைக்கவேண்டிய சமயம் தேடு. குடிவெறியில் மயங்கி உறங்கும்பொழுதோ, கோபாவேசத்தில் இருக்கும் சமயத்திலோ, கள்ளப் புணர்ச்சியில் கட்டி யணைத்திருக்கும்

வேளையோ, சூதாடும்பொழுதோ, தெய்வத்தைத் தூஷிக்கும் சமயமோ, புண்ணியமென்பது சிறிதேனுமில்லா வெந்தொழில் எதையாவது புரியும் தருணமோ, விண்ணவர் இவனை உதைத்துக் கீழே தள்ளவும், இவனது ஆன்மா இவன் போகவேண்டிய கொடு நரகத்தைப்போல் கடும் பாபம் நிரம்பியதா யிருக்குஞ் சமயம் பார்த்துக் கொல்!—என் தாயார் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் தாமதஞ் செய்வதெல்லாம் உன் கஷ்ட காலத்தை அதிகப்படுத்தும் பொருட்டே!

[போகின்றான்.]

கா. [எழுந்திருந்து வெளிவந்து] என் வார்த்தைகள் மாத்திரம் மேலே பறக்கின்றன, எனதெண்ணங்க ளெல்லாம் கீழே கிடக்கின்றன. முழு மனத்துடன் சொல்லா வார்த்தைகள் வானுலகஞ் செல்லா!

[போகிறான்.]

காட்சி முடிகிறது.

## நான்காவது காட்சி.

இடம்—மகாராணியின் அந்தரங்க அறை.

கௌரீமணியும், பாலநேசனும் வருகிறார்கள்.

பால. அவர் உடனே வருவார். நன்றாய்க் கேட்டுப் பாருங்கள் அவரை. அவரது சேஷ்டைகள் பொறுக்க முடியாதபடி பெருத்துப் போயினதாகக் கூறும். தயவோடு தாங்கள் நடுவில் தடையாய் நின்று, அவர் அதிக கஷ்டத்திற்கு ஆளாகாதபடி காத்ததாயும் கூறு மவரிடம். நா னிங்கேயே ஒளிந்திருக்கின்றேன். மரியாதை பாராது நன்றாய்க் கேட்கும்படி வேண்டிக்கொள்ளுகின்றேன்.

அம. [உள்ளிருந்து] அம்மா, அம்மா, அம்மா!

கௌ. என் வார்த்தையை நம்பும், நீர் ஒன்றும் பயப்படவேண்டாம்: ஒளிந்துகொள்ளும், அவன் வருகிற சப்தம் கேட்கிறது.

[பாலநேசன் திரைக்குப் பின் ஒளிந்து கொள்ளுகின்றான்.]

அமலாதித்யன் வருகிறான்.

அம. என்ன அம்மணி, என்ன விசேஷம்?

கௌ. அமலாதித்யா, உன் தந்தைக்கு நீ மிகவும் கோபத்தை விளைத்திருக்கின்றாய்.

அம. அம்மணி, என் தந்தைக்கு நீர் மிகவும் கோபத்தை விளைத்திருக்கின்றீர்கள்.

கௌ. வா, வா, இதென்ன அர்த்தமில்லா வார்த்தை உரைக்கின்றாய்.

அம. போம், போம், இதென்ன கெட்ட கேள்வி கேட்கின்றீர்கள்.

கௌ. என்ன, என்ன இது அமலாதித்யா?

அம. என்ன விசேஷம் இப்பொழுது?

கௌ. என்னை இன்னாரென்று மறந்தனையோ?

அம. இல்லை, வேலாயுதத்தின் மீதாணை, அப்படி யில்லை! தாங்கள் தான் பட்டமகிஷி, உமது கணவனுடைய சகோதரன் மனைவி;

அன்றியும்— அந்தோ அங்ஙன மில்லா திருக்க லாகாதா?— தாங்கள் என் தாயார்!

கௌ. ஆஹா! அப்படியானால் உன்னிடம் பேசவேண்டியவர்களை உன்னிடம் அனுப்புகின்றேன்.

அம. வாரும், வாரும், இப்படி உட்காரும், இதை விட்டுப் பெயரா தீர்; உமது மனத்திற்கு உள்ளுக் குள்ளா யிருப்பதை யெல்லாம் கண்ணாடியில் பார்ப்பதுபோல் உமது கண்ணெதிரில் நான் காட்டுமளவும் நீர் இவ்விடம் விட்டுப் போகலாகாது.

கௌ. என்ன செய்யப் போகின்றாய் நீ? என்னைக் கொல்ல மாட்டாயே? ஐயோ! யார் அங்கே, யார் அங்கே?

பால. [பின்னிருந்து] ஐயோ! என்ன! என்ன!

அம. [கத்தியை உருவி] என்ன அது? எலியா? தீர்ந்தது வேலை, தீர்ந்தது! [திரைக்குள் குத்துகின்றான்.]

பால. [பின்னிருந்து] ஐஐயோ! நான் கொல்லப்பட்டேன்.

[கீழேவிழுந்து சாகின்றான்.]

கௌ. ஐயோ! என்ன காரியம் செய்தனை நீ?

அம. இல்லை, எனக்கொன்றும் தெரியாதே. மகாராஜாவா அது?

கௌ. ஹா! என்ன கடூரமான கொடுங் கொலை இது!

அம. கொடுங் கொலை! என் அம்மணி! ஒரு அரசனைக் கொன்று அவன் தம்பியை மணஞ் செய்துகொள்வது எவ்வளவு கொடியதோ ஏறக் குறைய அவ்வளவு கொடியதுதான்!

கௌ. ஒரு அரசனைக் கொன்று!

அம. ஆம், அம்மா, அதுதான் நான் கூறிய வார்த்தை

[திரையைத் தூக்கிப் பார்த்து பாலநேசனைக் கண்டு]

அழையாத காரியத்தி லெல்லாம் ஆத்திரத்துடன் நுழையும் முழு முண்டமே, மடிந்தனையா? உன்னை உன்னிலு முயர்ந் தோன் என எண்ணினேன். சரி! உன் அதிர்ஷ்டத்தை

அனுபவி. இப்பொழுதாவது தெரிகின்றதா, நமக் கடுக்காத காரியத்தில் பிரவேசித்தல் அபாயகரமானதென்று ?— கையைப் பிசைந்தது போதும் நிறுத்தும்! உட்காருமிப்படி, உமது மனத்தைக் கசக்கிப் பிழிகின்றேன். நியாயம் என்பது நுழைய இடங் கொடுக்குமாயின், அறிவென்பது அணுகாதபடி ஓ ரரண்போல் கொடிய வழக்கத்தால் உமது மனம் கடினமா யிராவிட்டால், எப்படியும் அவ்வாறு இளகச் செய்வேன்.

கேள. நான் என்ன செய்தேன், என்னெதிரில் நீ இவ்வாறு மரியாதையின்றி என்னைத் தூஷித்துக் கூச்சலிட உனக்குத் தைரியமுண்டாகும்படி ?

அம. இப்படிப்பட்ட செய்கை! கற்பையே வெட்கத்தால் தலைவணங்கிக் கருத் தழியச் செய்து, நற்குணத்தையே பொய் வேடமென வழைத்து, காதலின் கவினைக் கெடுத்து கணிகையர் உறவாக்கி, கடிமணத்திற் செய்த கட்டுறுதி யெல்லாம் சூதாடுபவர்கள் வாக்கிற்படும் அசத்தியத்திற்கு இணையாக்கும்படியான பாதகத்திலும் பாதகமான காரியம் செய்தீர் ! விவாகம் என்பதின் உயிர் நிலையை வேருடன் பறித்தெறிந்து, நமது மதத்தின் மந்திரங்களை யெல்லாம் மடையர்கள் குளறலாகச் செய்யும் காதகத்திலும் காதகத்தைச் செய்தீர் ! அதைக் கண்டு ஆகாயவாணியும் அவமானப்படுகின்றதே ! அம்மட்டோ ? அகிலத்தையும் பொறுக்கும்படியான இப் பூமிதேவியும் இச்செய்கையை நினைத்து யுகாந்த காலத்தில் வாடி வதங்குவதேபோல் வதங்கிய முகத்தை யுடையவளாயிருக்கின்றனளே !

கேள. ஐயோ! பீடிகையே இவ்வாறு பயங்கரமாய் இடிபோல் முழங்குகின்ற அப்படிப்பட்ட பாதகம் நான் என்ன செய்தேன் ?

அம. இதோ பாரும்! இந்தப் படத்தையும், இதையும், அச்சில் வார்த்ததுபோல் அப்படியே எழுதப்பட்ட இரண்டு சகோதரர்களின் உருவங்கள், பாரும், இந்த முகத்தில் என்ன கலை தங்கி

யிருக்கின்றது! ஸ்ரீ கிருஷ்ணனுடைய கேசம்! ஸ்ரீராமனே என்று சொல்லும்படியான காம்பீர்யம்! அதிசூரனான அர்ஜுனனுடைய கண்கள், பய முறுத்துதற்கும் கட்டளை யிடுவதற்கும்! ஆகாயத்தை அளாவிய கந்தமாதனத்தின்மீது கந்த சுவாமி வீற்றிருந்த கோலம்! தேவதைக ளெல்லாம் சேர்ந்து தங்கள் அழகினை யெல்லாம் ஒருங்கு திரட்டி உலகத்திற்கோர் உத்தமமான மனுஷ்ய உருவைக் கொடுத்தது போன்றவர்! இவர் உமது கணவனாக—இருந்தவர்! இதோ பாரும் இந்தப் புறம் என்ன இருக்கின்றதென்று, இதோ உமது கணவனாக இருக்கின்றவன்! அமிர்தத்துடன் ஆலகால விஷம் உதித்தது போல அவருடன் பிறந்த பாதகன்! உமக்குக் கண்களில்லையா? இந்த மகம்மேருவில் சுகித் திருப்பதைவிட்டு இந்த மாடு மேய்க்கும் கழனியில் வீழ்ந் துழல்வீரா? ஐயோ! உமக்குக் கண்களிருக்கின்றனவா? இதைக் காதலெனக் கூற முடியாதே நீர்? இந்த வயதில் இரத்தத்தின் கொழுமை யெல்லாம் அடங்கி மனமானது அறிவிற்கு வழிபட்டு நடக்கவேண்டிய காலமாயிற்றே! எந்தப் பாழான அறிவு உம்மை இதைவிட்டு இதைப் பற்றும்படி போதித் திருக்கும்? உமக்கு அறிவென்பது இல்லாமற் போகவில்லையே! அவ்வாறு இல்லாமற் போமாயின் ஆசை யெங்ஙனம் பிறந்திருக்கக் கூடும்? ஆயினும் அந்த அறிவானது ஒளிமழுங்கி யிருக்கவேண்டும்! என்னதான் பித்தம் பிடித்தாலும் இப்படிப்பட்ட பிழைக்கு இடங்கொடுக்குமா? கேவலம் மோகத்திற்கு அறிவானது எவ்வளவுதான் அடிமைப்பட்டபோதிலும் இப்படிப்பட்ட தாரதம்ய மிருக்குமிடத்தும் பகுத் தறியுஞ் சக்தி யில்லாமற் போகுமா? எந்தப் பேய் இவ்வாறு உமது கண்களை மூடி உம்மை மோசம் செய்தது? உமது கண்கள் உணர்ச்சி யின்றிப் போயினவா? உமது உணர்ச்சி இது அறியாமற் போயிற்று? உமது காதுகளும் அடைந்து போயினவா? உமது பஞ்சேந்திரியங்களும் பாழாகிப் போயினவா? இல்லாவிடின் உண்மையில் எந்த அறிவாவது சிறிதேனும் இருந்தபோதிலும் இவ்வாறு அநியாய

மாய் மோசம் போகமாட்டீரே ? வெட்கக்கேடு ! எங்கே உமது நாணம் ? பாழ் நரகமே ! முதிர் வய தடைந்த மாதர்களே இவ்வாறு அத்து மீறி நடந்தால் நல்ல யவ்வனத்தின் முன் பாக கற்பானது அதன் தீட்சணத்திலேயே அனலில் விட்ட மெழுகைப்போல் உருகி அழியு மன்றோ ? அறிவே இச்சைக்கு உட்பட்டு முதுமையே இவ்வாறு தகிப்பதானால், ஒன்றுக்கு மடங்காத யவ்வனம் உந்தும் காலத்தில் அதை நாம் குற்ற மெனவே கூற லாகாதே !

கௌ. ஹா ! அமலாதித்யா ! இனி ஒன்றும் பேசாதே ! எனது ஹிருதயத்திற்குள் ளிருக்கும் இரகசியங்களை யெல்லாம் பார்க்கும்படி செய்கிறாயே ! அங்கு நான் காணும் கரு மையான மாசுகளின் வர்ணத்தை மாற்ற என்னால் முடிய வில்லையே !....ஐயோ ! இனி ஒரு வார்த்தையும் கூறவேண்டாம் என்னிடம். இந்த வார்த்தைக ளெல்லாம் என் செவியில் நாராசம்போல் புகுகின்றனவே ! இன்னும் வேண்டாம் ! கண்ணே, அமலாதித்யா !

அம. கொடும் பாபி ! கொலைக் கஞ்சாப் பாதகன் ! உமது கணவனா யிருந்த உத்தமனுடைய ஆயிரத்தி லொரு பங்கு ஆகாத அடிமை ! மகாராஜாவைப்போல் வேடம் பூண்டு நடிக்கும் வேஷதாரி ! இந்த மகாராஜ்ஜியத்தின் விலையிலா மகுடத்தை மாடத்திலிருந்து திருடிப் புனைந்த மோசக்காரன், முழுப் புரட்டன் !-

கௌ. போதும் ! போதும் !

அம. வைக்கோலினாலும் வாழை நாரினாலும் ஆக்கிய புல்லாடவன்,–

அருவம் தோற்றுகின்றது.

ஈசனே ! ஜகதீசனே ! அடியேனைப் பாதுகாத்து இரட்சிப்பீராக !— என்ன வேண்டும் தங்களுக்கு ?

கௌ. ஐயோ ! பயித்தியம் பிடித்துவிட்டதே இவனுக்கு !

அம. உமது பயங்கரமான கட்டளையை விரைவில் முடிவுக்குக்

கொண்டு வராது கோபத்திற் கிடங்கொடுத்து காலத்தை விருதாவில் கழிக்கின்ற உமது மைந்தனைக் கடிந்துகொள்வதற்காக அல்லவா தாம் வந்திருக்கின்றீர்.? சொல்லும் சொல்லும் !

அரு. மறவாதே ; நான் மறுபடியும் வந்தது மழுங்கிப்போன உன் தீர்மானத்தை உன் மனத்தில் வற்புறுத்தும்பொருட்டே. அதோ பார், உனது அன்னை மனம் தடுமாறி மௌனமாய் இருக்கிறாள்; மன்றாடும் அவளுக்கும் அவள் ஆன்மாவுக்கும் இடையில் மத்யஸ்தமாய் நிற்பாய். குன்றிய தேகத்திலேயே மனோ சஞ்சலம் அதிகமாய்ச் செய்யும் கொடுமை. அமலாதித்யா, அவளுடன் பேசுவாய்.

அம. அம்மணி, எப்படி யிருக்கின்றது உங்களுக்கு ?

கௌ. ஐயோ ! உனக் கெப்படி யிருக்கின்றது ? வெட்ட வெளிச்சத்தை ஏறெடுத்துப் பார்த்து, வெறும் ஆகாயத்துடன் சம்பாஷிக்கின்றனையே ? உன துயிரே உன் கண் வழியாய் வெளியில் வருவதுபோல் வெருண்டு பார்க்கின்றனையே ? நித்திரை செய்யும் ரணவீரர்களுக்கு படையொலியைக் கேட்டுப் பயந்தெழுங்கால் உண்டாவதுபோல், உனது ரோமமெல்லாம் உயிருள்ளன போன்று சிலிர்த்து நிற்கின்றனவே! அப்பா, என் கண்மணி, உனது ஆக்கிரஷத்தின் கொடுமையையும் தாபத்தையும், பொறுமையினால் சற்றே தணியச் செய் !— எதனை நீ பார்க்கின்றாய் ?

அம. அவரை ! அவரை ! அதோ பாரும் ! என்ன வெளுத்துக் காட்டுகின்றது அவர் முகம் ! அவரது அருவமும் அவர் படும் துயரமும் ஒருங்கு சேர்ந்து கற்களுக்குப் போதிக்குமாயினும் அவைகளும் பழி வாங்கும் சக்தியைப் பெறுமே.— பாராதீர் என்னை அவ்விதம் ; பரிதாபமான உமது பார்வையால் எனது திடச் சித்த மெல்லாம் மாறிப்போம்; பிறகு நான் செய்ய வேண்டிய கருமமானது, உண்மையான ஒளி மழுங்கிப்போம்; இரத்தத்தைச் சிந்துவதை விட்டு நான் கண்ணீர் சிந்தும்படி நேரிடும்.

கேள. ஐயோ ! இதை யாரிடம் கூறுகின்றாய் ?

அம. அதோ அங்கே உமக்கு ஒன்றும் தோற்ற வில்லையா ?

கேள. ஐயோ ! ஒன்று மில்லையே ; ஆயினும் அங்கிருக்கும் வஸ்துக்களெல்லாம் தெரிகின்றது எனக்கு.

அம. உமக்கு ஒன்றும் கேட்க வில்லையா ?

கேள. நமது இருவருடைய குரலன்றி வேறொன்றும் கேட்க வில்லையே !

அம. ஏன் !—அதோ அங்கே பாரும் ! பாரும், எப்படி மெல்ல மறைந்து போகின்றது ! எனது தந்தை, உயிருடன் இருந்த உடையுடன் ! பாரும், அதோ போகிறார், இப்பொழுது, வாயிலுக்கு வெளியே !

[அருவம் மறைகிறது.]

கேள. ஐயோ ! இது உன் புத்தி மாறாட்டத்தினா லுண்டாம் தோற்றம் ; பயித்தியமானது இவ்வாறு உருவ மில்லாத அருவங்களை யெல்லாம் உண்டுபண்ண வல்லமை வாய்ந்ததே.

அம. பயித்தியம் ! எனது நாடியைப் பாரும், உமது நாடியைப் போல் ஆரோக்கியத்துடன் ஒரே நிதானமாய்த்தான் ஓடிக் கொண் டிருக்கின்றது. நான் பேசியது பயித்திய மன்று ! பரிசோதித்துப் பாரும் வேண்டுமென்றால் ; ஒரு வார்த்தை தவறாது நடந்த விஷயத்தை மறுபடியும் அப்படியே ஒப்புவிக்கின்றேன்; பயித்தியம் பிடித் திருந்தால் அதை விட்டு வாய்க்கு வந்தபடி பிதற்றுவே னன்றோ ? அம்மா, ஈசன் கருணையின்மீது, உமது பாபத் தொழிலா லன்றி எனது பயித்தியத்தினால் நான் இவ்வாறு பேசுகின்றேன் என்று உமது ஆன்மாவை முகஸ்துதியால் மோசஞ் செய்யாதீர் ! உள்ளுக்குள்ளே தின்றுகொண்டு மேலுக்குத் தெரியாதபடி அழுகிக்கொண்டு போக, உள் ளிருக்கும் புண்ணை மேலுக்குமாத்திரம் மூடியதாகும். ஜெகதீசனுடைய பாதத்தில் வீழ்ந்து மன்னிப்புக் கேளும். செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்யும். இனிமேல் வருவதற் கிடங் கொடுக்காதீர் ! புண்ணை மேலுக்

குப் பொதிந்து இன்னும் புழுக்கச் செய்யாதீர் !—ஈசனே ! ஈசனே ! இவ்விஷயத்தில் என்னை மன்னிப்பீராக ! இக் கடைகெட்ட கலிகாலத்தில் நற்குணமே தீமையிடம் சென்று, அதற்கு நல முண்டாக்கும்பொருட்டு, தாழ்ந்து வணங்கி நல்ல வார்த்தை பேசி, அதன் தயவைக் கேட்கும்படியிருக்கின்றது.

கௌ. அப்பா, அமலாதித்யா, என் ஹிருதயத்தை இரண்டாகப் பிளந்துவிட்டனையே !

அம. ஆனால் அதன் கெட்ட பாகத்தைத் திட்டெனவே யெறிந்துவிட்டு, நற்பாகத்துடன் நாணயமாய் வாழும். நான் வருகின்றேன். என் சிற்றப்பன் படுக்கையைக் கிட்டாதீர், கருத்தினியில்லாவிடினும் கற்புடையவள்போல் காட்டும் மேலுக்காவது ! எல்லா அறிவினையும் அழித்திடும் பழக்கம் என்னும் பூதமானது, பிசாசின் துர்க்குண மெல்லாம் உடையதாயினும் இந்த ஒரு நற்குணம் மாத்திரம் உடையதா யிருக்கின்றது. நற் குண நற் செய்கைகளைப்போல் மேலுக்குக் காட்டும் தொழில்கள், அதற்குத் தக்கபடி மேல் வேடமும் எளிதில் பூணச் செய்கிறது.—இன்றிரவு போகா திரும் ; அதுவே மறு நாள் போகா திருப்பதற்கு மார்க்கத்தைச் சுலப மாக்கும், அதற் கப்புறம் அதனிலும் சுலப மாகும். வழக்கமானது மனுஷ்ய சுபாவத்தின் முத்திரையையே மாற்றி, பைசாச குணத்தை அடக்கி ஆளும், அல்லது அக்குண மிருக்குமிடத்து அதைப் பலாத்காரமாய் அப்புறப்படுத்தினும் படுத்தும். நான் வருகின்றேன். அம்மணி, நீர் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்று விரும்பும் காலத்தில் நான் உம்மிடம் ஆசீர்வசனம் விரும்பிக் கேட்பேன். இந்த மந்திரியைப்பற்றி [பாலசேனனைக் குறிப்பிட்டு] மன வருத்த மாகத்தா னிருக்கின்றது எனக்கு. இவரை நான் தண்டிக்க வேண்டுமென்றும், இவரால் நான் தண்டிக்கபட வேண்டு மென்றும் இங்ஙனம் ஈசன் திருவுள்ளங் கொண்டார். ஆகவே சிட்சை செய்பவனும் நானே, சிகிச்சை செய்ய வேண்டியவனும் நானே ஆக

வேண்டும். இவரை எங்கேயாவது கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கின்றேன்; இவரைக் கொன்ற பழிக்குத் தக்கபடி நான் சமாதானம் சொல்லுகின்றேன். ஆகவே நான் வருகின்றேன் அம்மணி. நான் குரூரனா யிருக்க வேண்டும், பட்சம் பாராட்டும் பொருட்டு. இங்ஙனம் கெடுதி ஆரம்பிக்கின்றது. இன்னும் கெடுதி பின்னே இருக்கின்றது. என் அம்மணி, இன்னும் ஒரு வார்த்தை.

கேள. நான் என்ன செய்யவேண்டும் ?

அம. இப்பொழுது செய்யும்படி கேட்கின்றேனே அதை மாத்திரம் எப்பொழுதும் செய்யாதீர் ! இந்த மதம் பிடித்த மன்னன் சயனக் கிருகத்திற்கு, உமது மதியை மயக்கி, மறுபடியும் அழைத்துப் போகவிடும் ; தனது கிள்ளையென வழைத்து உமது கன்னத்தைக் கிள்ளவிடும் ; தனது ஊத்தை நாறும் வாயால் இரண்டு முத்தம் கொடுத்து அல்லது தன் காதகக் கரத்தால் கழுத்தில் நெருடி, நான் பயித்தியக்காரனைப்போல் பாசாங்கு செய்கிறேனே யொழிய, வாஸ்தவத்தில் பயித்தியம் பிடித்தவ னல்ல வென்பதை யெணமா யறியட்டும் உம்மிட மிருந்து. தாங்கள் இதை யெல்லாம் அவர் அறியும்படி சொல்வது மிகவும் நலமாம். இப்படிப்பட்ட இரகசியமான விஷயங்களை, புத்தி விசாலமும் பொறுமையும் பேரழகும் வாய்ந்த எந்த இராணி யொருத்தி ஒரு மந்தியிடமாவது, மண்டூகத் திடமாவது, கண்டூனை யிடமாவது மறைத்து வைப்பாள் ? யார் அப்படிச் செய்வார்கள் ? வேண்டாம், மானமும் மரியாதையும் கிடக்கட்டும் ; கூரையின்பேரில் கூண்டை எடுத்துக்கொண்டுபோய் வைத்துப் பட்சிகளைத் திறந்து பறக்கவிட்டு, தானும் பறக்க வெண்ணித் தலையை நுழைத்து, கழுத்தை முறித்துக்கொண்ட கருங்குரங்கினைப்போல், நீரும் சங்கதியை வெளியிட்டுச் சாகும்.

கேள. வார்த்தைகள் சுவாசத்தா லாகி, சுவாசமே உயிர் நிலையாவதானாலும், நீ சொன்னதை உச்சரிக்க எனக் குயி ரில்லையென்று உறுதியாய் நம்பு.

அம. நான் சிங்களம் போகவேண்டும், தெரியுமா அது உமக்கு ?

கௌ. ஐயோ ! அதை மறந்தேன். அப்படித்தான் தீர்மானமா யிருக்கின்றது.

அம. உத்தரங்க ளெல்லாம் முத்திரையிடப்பட் டிருக்கின்றன. பல் பிடுங்கப்படாத படு சர்ப்பங்களை எப்படி நம்புகின்றேனோ அப்படி நான் நம்புகின்ற, எனது பள்ளிக்கூடத்து சிநேகிதர்கள் இருவர் இருக்கின்றாரே அவர்கள் வசந்தான் ஒப்புவிக்கப்பட் டிருக்கின்றது அந்த ஆக்ஞை. அவர்கள் எனக்கு முன்னே நடந்து, வழியைச் சுத்தம் செய்து, கொடுந் தொழிலுக்குக் கொண்டுபோக வேண்டும். அதன் வேலை ஆகட்டும்; பொறி வைத்தவனே பொறியில் வீழச் செய்வதுதான் வேடிக்கை ! அவர்கள் எனக்குக் குழி தோண்டுங்கால் அதனினும் ஆழமாய் அவர்களுக்குப் பின்னால் தோண்டி அதில் அவர்களை அடக்கம் செய்யாவிட்டால் என் பாடு கஷ்டந்தான். மோசத்துடன் மோசம் நேராய் எதிர்க்கும்பொழுதுதான் மிகுந்த சுவாரஸ்யம் !— இந்த ஆள் என்னைப் பிரயாணத்திற்கு ஆயத்தப்படுத்துவார். இந்த சவத்தைப் பக்கத் தறைக்கு வலித்துக்கொண்டு போகிறேன். அம்மா, நான் வருகிறேன். உயிருடன் இருந்தபொழுது உளறிக்கொண் டிருந்த இந்த உன்மத்த மந்திரி, இப்பொழுது என்ன அசைவற்று நிர்மலமாய், தீர்க்காலோசனையி லிருப்பதுபோல் மௌனம் சாதிக்கின்றார்.— வாரும் ஐயா, போவோம் உமது முடிவிற்கு.— நான் வருகின்றேன் அம்மணி.

[கௌரீமணி ஒரு புறமாய்ப் போகிறாள், அமலாதித்யன், பாலநேசன் உடலை உள்ளே இழுத்துக் கொண்டு மற்றொரு புறமாய்ப் போகிறான்.]

காட்சி முடிகிறது.

# நான்காவது அங்கம்.

## முதல் காட்சி.

*அரண்மனையிலோர் அறை.*

**காலதேவன், கௌரீமணி, ராஜகாந்தன், கிரிதரன் வருகின்றனர்.**

கா. இந்த விம்முதல்களில் ஏதோ விசேஷமிருக்கின்றது; இந்தப் பெருமூச்சுகளின் அர்த்தத்தை அறிந் துரைக்கவேண்டும் நீங்கள், அதை நாம் அறியவேண்டியது நமக்கு அவசியம். எங் கிருக்கிறான் உனது மகன்?

கௌ. நாங்க ளிவ்விடம் சற்றே தனித் திருக்க விரும்புகிறோம்.

[ராஜகாந்தனும் கிரிதரனும் போகிறார்கள்.]

ஆ! பிராணநாதா, என்னவெல்லாம் கண்டேன் இன்றிரவு.

கா. என்ன கௌரீமணி? எப்படி யிருக்கிறான் அமலாதித்யன்?

கௌ. கடலும் காற்றும் யார் பலசாலியென்று எதிர்த்துப் போராடுவதேபோல், புத்தி மாறுட்டங்கொண் டிருக்கிறான். நீதியற்ற தடுமாற்றத்தில், திரைக்குப்பின் ஏதோ அசைவதின் சப்தத்தைக் கேட்டு, கத்தியை வெளியில் உருவினவனாய், 'எலி! எலி!' எனக் கூவி, மனத்தில் அம் மருட்சியைக் கொண்டவனாய், கொன்றான் மறைந் திருந்த கபட மற்ற வயோதிகனை!

கா. என்ன கொடுங் கொலை! நாம் அங் கிருந்திருப்போ மாயின் நமக்கும் அக் கதிதான்! அவனை எதேச்சையாய்த் திரியவிடுவது அதிக பயத்திற் கிடமாம் அனைவருக்கும், உனக்கும், நமக்கும், நம்முள் ஒவ்வொருவருக்கும். அந்தோ! இக் கொடுங் கொலையைப்பற்றி கேட்பவர்களுக்கு நாம் என்ன பதில் கூறுவது? இப்பழி நம்மீது சாற்றப்படும்; நமது முன்

யோசனை இந்தப் பித்தம் பிடித்த பிள்ளையை, அத்துக்குள் அடக்கி, சஞ்சார மில்லாத இடத்தில் கட்டுப்படுத்தி யிருக்க வேண்டும். ஆயினும் நாமோ, நமது அன்பின் பெருக்கில், எது மிக்க உசிதமானது என்பதை அறியாது வாளா விருந் தோம்; அசங்கியமான வியாதியையுடைய ஒருவன் எப்படி அதை வெளியிடாது உள்ளே மூடி, அது தன் உயிரையே உண் டழிக்கும்படி விடுவானோ, அங்ஙனம் விட்டோ மிவனை. எங்கே போயிருக்கின்றான் அவன்?

கௌ. தான் கொன்ற சபத்தை எங்கோ ஒளித்திடக் கொண் டேகி யிருக்கிறான். தாழ்ந்த லோகங்கள் மத்தியில் காந்தியுடைய தொன்று தனியாய்ப் பிரகாசிப்பதேபோல், அவனது மதி மயக்கமானது அவர் விஷயத்தில் எடுத்துக் காட்டுகிறது; கண்ணீர் சொரிகின்றான் செய்த கர்மத்தின் பொருட்டு.

கா. ஆ! கௌரீமணி, வந்துவிடு. ஆதித்தன் அஸ்தமன கிரியை அடையுமுன் அனுப்பிவிட வேண்டும் அலை கடன்மீ தவனை. நாம் நமதரசுரிமையாலும் அருமையாம் யுக்தியினாலும், இக் கொடுந் தொழிலை மறைத்துப் போக்குக் கூறவேண்டும்.— யார் அங்கே, கிரிதரா?

ராஜகாந்தனும், கிரிதரனும் வருகிறார்கள்.

நேயர்களே, நீங்க ளிருவரும் உம்முடன் இன்னும் கொஞ்சம் உதவி புரிபவரைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அமலா தித்யன், பித்த வெறியில் பாலநேசனைக் கொன்று, தன் தாயா ரின் அறையி லிருந்து அவ னுடலை இழுத்துக்கொண்டுபோ யிருக்கிறான். நீங்கள் சென்று அவனைக் கண்டுபிடித்து, அவனுடன் நேராய் எடுத்துப் பேசி, சமாதிக்கு அந்தச் சவத் தைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். நான் உங்களை வேண்டுகிறேன், இதில் துரிதப்படவேண்டும் நீங்கள்.

[ராஜகாந்தனும் கிரிதரனும் போ கிறார்கள்.]

வா, கௌரீமணி, நாம் நமது ஆப்த நண்பர்களை யெல்லாம்

வரவழைத்து, அகாலமாய் நடந் தேறியதையும், நாம் அவ் விஷயத்தில் '. நடக்கப்போகின்ற மார்க்கத்தையும் அவர் களுக்குத் தெரிவிப்போம்.— பீரங்கியிலிருந்து புறப்படும் கொடு விஷத்தைக் கொண் டேகும் குண்டானது, எப்படி தன் குறியினைப் போய்த் தாக்குகின்றதோ, அப்படியே நே. ராகச் சென்று, நமது பெயரை அழிக்காமல், காயம்படாக் காற்றினை அவர்களது இரகசிய வார்த்தையானது உலகத்தை ஊடுருவிச் சென்று அடிக்கட்டும். ஆ! வந்துவிடு! என் மனத்தி லெல்லாம் குழப்பமும் கலக்கமுமா யிருக்கிறது.

[போகிறார்கள்]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

அரண்மனையிலோர் அறை.

**அமலாதித்யன் வருகிறான்.**

அம. பத்திரமாய் அடக்கம் செய்துவிட்டேன்.

ரா-கி. [உள்ளிருந்து] அரசே! இளவரசே!

அம. பொறு. என்ன சப்தம்? யார் அமலாதித்யனை அழைப்பது? ஓ! இதோ வருகிறார்கள்.—

ராஜகாந்தனும், கிரிதரனும் வருகிறார்கள்.

ரா. இளவரசே, அந்தப் பிரேதத்தை என்ன செய்தீர்?

அம. மண்ணுடன் சேர்த்துவிட்டேன் அதை, அவ்விரண்டிற்கும் நெருங்கின பாத்தியம்!

ரா. அது எங்கேயிருக்கின்றதென்று சொல்லும் எங்களுக்கு, நாங்கள் அதை அவ்விடமிருந்து இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

அம. நம்பாதே நீ அதை.

ரா. எதை நம்புவது?

அம. உன் இரகசியத்தைக் காப்பாற்ற முடியும் என்றால், ஆனால் என் இரகசியத்தைக் காக்க முடியாது என்பதை! அதல்லாமல் ஒரு தக்கை நம்மைக் கேட்பதா? மகாராஜாவின் மைந்தனால் என்ன பதில் உரைக்கவேண்டுமதற்கு?

ரா. அரசே, என்னைத் தக்கையாகவா எண்ணுகிறீர்?

அம. ஆம், ஐயா! மகாராஜாவின் முகத்தை எதிர்பார்த்து அவரது ஐஸ்வர்யம் ஆக்கினை எல்லாவற்றையும் அபகரிக்கும் தக்கைதான். ஆனால் அப்படிப்பட்டவர்களால்தான் அதிக பிரயோஜனம் முடிவில் அரசருக்கு! தாடையில் மந்தி அடக்கி வைப்பதுபோல் அவர்களை ஒருபுறம் சேகரித்து வைக்கிறார், முதலில் சேகரம் செய்தது கடைசியில் விழுங்கப்படுவதற்கு! நீங்கள் அபகரித்தது அவருக்கு வேண்டிய காலம் வாய்க்குங்

கால் சற்றேறக்கசக்க வேண்டியதுதான், உடனே தக்கையே பழய ஸ்திதிக்கு வந்துவிடுவாய் நீ !

ரா. அரசே, நீர் கூறுவது எனக்கு அர்த்த மாக வில்லை.

அம. சந்தோஷம், கடுத்த வார்த்தை படுத் துறங்கும் பாமரன் செவியில்.

ரா. அரசே, தாங்கள் பிரேதம் எங்கே இருக்கின்றது என்பதை எங்களுக்குத் தெரிவித்து, எங்களுடன் மகாராஜாவிடம் போகவேண்டும்.

அம. உடல் மகாராஜாவிட மிருக்கின்றது, ஆனால் மகாராஜா உடலிடம் இல்லை. மகாராஜா ஒரு வஸ்து—

கி. என்ன அரசே ? வஸ்துவா ?

அம. ஒன்று மில்லாததா லாயது ! என்னை அழைத்துப் போங்கள் அவரிடம். முதலில் நரியை மறை, பிறகு எல்லாம் !

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றும் காட்சி.

### அரண்மனையி லின்னொரு அறை.

காலதேவன் பரிவாரங்கள் புடைசூழ வருகிறான்.

கா. அமலாதித்யனை அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பியிருக்கின்றேன், பிரேதத்தையும் கண்டுபிடிக்கும்படி உத்தர வளித்திருக்கின்றேன். இப்படிப்பட்டவன் எதேச்சையாய்த் திரிவது என்ன அபாயகரமான விஷயம்! ஆயினும் நாம் அவனை அதிக கடூரமான நிபந்தனைக்கு ஆளாக்கல் ஆகாது. ஆழ்ந்த அறிவைக்கொண்டு ஆராயாது பார்வையால் பரிசோதிக்கும் சபல சித்த முடைய ஜனங்க ளெல்லாம் அவன்மீது அதிக பிரேமை வைத்திருக்கின்றனர். அவ்வா றிருக்கும் நிலையில் குற்றவாளியின் தண்டனை கொண்டு பாராட்டப் படுகின்றதே யொழிய, குற்றமானது எப்பொழுதும் உற் றுணரப்படுவதில்லை. எல்லாவற்றையும் சரியாய்ச் சமப்படுத்துவதற்கு, இப்பொழுது திடீரென்று அவனை அனுப்பிவிடுதல், தீர்க்காலோசனையால் செய்ததுபோல் தோற்றப்படவேண்டும். வியாதி யதிகமாய் முற்றிவிட்டால் அதற்குத் தக்கபடி சிகிச்சை யாவது தேடவேண்டும், இல்லாவிடின் தீராதெனக் கைவிடவாவது வேண்டும்.—

ராஜகாந்தன் வருகிறான்.

என்ன விசேஷம்? என்ன நேர்ந்தது?

ரா. மகாராஜா, அந்தப் பிரேதத்தை எங்கே அடக்கம் செய்து வைத்திருக்கின்றார் என்பதை அவரிடமிருந்து எங்களால் அறிய முடிய வில்லை.

கா. அவன் எங்கே இருக்கிறான்?

ரா. வெளியே யிருக்கின்றார்; மகாராஜா, தங்கள் சித்தத்தை யறியும்படி காவலில் வைத்திருக்கிறோம்.

கா. நமது சந்நிதானத்தில் அழைத்து வாருங்கள் அவனை.

ரா. ஏ! கிரிதரா! இளவரசை உள்ளே அழைத்து வா,

அமலாதித்யனும், கிரிதரனும் வருகிறார்கள்.

கா. அப்பா, அமலாதித்யா, பாலநேசன் எங்கே ?

அம. போஜனத்தி லிருக்கிறார்.

கா. போஜனத்தி லிருக்கிறாரா ? எங்கே ?

அம. அவர் புசிக்கு மிடத்தி லல்ல ; அவர் புசிக்கப்படும் இடத்தில். சில புத்திசாலியான புழுக்கள் ஒரு சங்கமாய்க் கூடி அவரை விசாரித்துக்கொண் டிருக்கின்றன. உங்கள் கிருமியார் ஒருவர்தான் போஜன விஷயத்தில் சக்கிரவர்த்தி ! நம்மைக் கொழுக்கச் செய்யும்பொருட்டு நாம் மற்றெல்லா ஜந்துக்களையும் கொழுக்கவைக்கின்றோம். நாம் கொழுப்பது இந்தக் கிருமிகள் பொருட்டு ! கொழுத்த கோமகனும் வற்றலாய் உலர்ந்த வறிஞனும் வெவ்வேறு விதமான பரிமாறுதல்தான். ஒரே போஜனத்தில் உட்கொள்ளும் இரண்டு விதமான பட்சணம் ; முடிவு இதுதான்.

கா. அந்தோ ! அந்தோ !

அம. ஒரு மகாராஜாவின் உடலில் தின்று கொழுத்த ஒரு புழுவைக்கொண்டு ஒருவன் தூண்டி விடலாம் ; அந்தப் புழுவைத் தின்ற மீனை அவன் தின்று விடலாம்.

கா. இப்படிப் பேசுவதினால் உன் எண்ணம் என்ன ?

அம. வேறொன்று மில்லை, ஒரு மகாராஜா இம்மாதிரியாக ஒரு பிச்சைக்காரன் வயிற்றின் வழியாய் ஊர்கோலம் போகலாமென்று உமக்குக் காண்பிக்கவே.

கா. பாலநேசன் எங்கே ?

அம. தெய்வலோகத்தில் ; யாரையாவது அனுப்பிப் பார்க்கச் சொல்லுங்கள் அங்கே ; உம்முடைய தூதன் அங்கே அவரைக் காணவிட்டால் தாங்கள் நேராக மற்றோரிடத்திற்குப் போய்த் தேடிப் பார்க்கலாம். ஆயினும் இந்த மாதத்திற்குள்ளாக நீர் அவரைக் கண்டுபிடியாவிட்டால் மேல் மாடிக்குப் போகிற படிக்கட்டின் கீழ் அவர் வாசனை உமக்கு வரும்.

கா. [சில சேவகர்களுக்கு] அங்கே போய்த் தேடிப்பாருங்கள் உடனே.

அம. அவர் ஓடிப்போகமாட்டார், நீங்கள் போமளவும் காத்திருப்பார். [சில சேவகர்கள் போகிறார்கள்.]

கா. அமலாதித்யா, நீ செய்த காரியமானது நம்மை அதிக துக்கத்தில் மூழ்த்திய போதிலும், உன் பிராணனை முக்கியமாய்க் காப்பாற்றும்பொருட்டு இந்த அதிகாரப் பத்திரத்தைக் கொடுக்கின்றோம், இதனால் நீ வாயு வேகம் மனோவேகமாய் இந் நாட்டைவிட்டுச் செல்லவேண்டும். ஆகவே உடனே சித்தப்படு, உனது கப்பலும் ஆயத்தமா யிருக்கின்றது. காற்றும் அனுகூலமா யிருக்கின்றது ; உன்னுடன் செல்லவேண்டிய நண்பரும் காத் திருக்கின்றனர், சிங்களம் போக எல்லாம் சித்தமா யிருக்கின்றது.

அம. சிங்களத்திற்கா ?

கா. ஆம், அமலாதித்யா.

அம. நல்லது.

கா. எமது எண்ணத்தை அறிவாயாயின் அப்படித்தா னிருக்கும்.

அம. அதைத் தெரிந்த ஒரு தேவதை என் கண்ணுக்குத் தெரிகின்றது. சரி வாரும்.— சிங்களத்திற்கு !— என் பிரிய முள்ள அன்னையே, போய்வருகின்றேன்.

கா. உன் பிரிய முள்ள தந்தை அமலாதித்யா.

அம. என் தாயார் ; தகப்பனும் தாயும் புருஷனும் பெண்சாதியும், புருஷனும் பெண்சாதியும் ஒரே உடல் ; ஆகவே என் தாயார்.— வாரும் சிங்களத்திற்கு !

[போகிறான்.]

கா. உடனே பின் தொடர்ந்து செல்லுங்கள் ; துரிதத்தில் பிரயாணப்படும்படி சொல்லிப் பாருங்கள் ; அதைத் தாமதிக்காதீர் ; இன்றிரவே அவன் இந் நாட்டைவிட்டுச் செல்லவேண்டு மென்பது என் கருத்து. புறப்படுங்கள் ! இதைச் சார்ந்த விஷ

யங்களெல்லாம் தீர்மானிக்கப்பட்டு ஏற்பாடா யிருக்கின்றன; உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், துரிதப்படுங்கள்.

[ராஜகாந்தனும் கிரிதரனும் போகிறார்கள்.]

சிங்களமே! குர்ஜரத்தின் வாளாயுதத்தினால் உனக்குண்டான வடு இன்னும் ஆறாது பச்சைப் புண்ணாய்ச் சிவந்திருக்கின்றது.—ஆகவே எனது புஜபல பராக்கிரமம் உனக்கு அறிவைப் புகட்டி, நேரிலில்லாக் காலத்தும் பயத்தை யுண்டு பண்ணி, எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்கிறது; இச் சமயத்தில் நீ எனது பிரியத்தை ஒரு பொருட்டாகப் பாவிப்பதானால் நமது திருமுகத்தைப் பராமுகமாய் அசட்டை பண்ணமாட்டாய்! நிருபங்களின் மூலமாய் அமலாதித்யனை அரை க்ஷணத்தில் கொல்லவேண்டுமென்று தெரிவித்திருக்கின்றேன் முற்றிலும்; சிங்களமே! அதன்படி செய்வையால்! அவனது ஆரவாரத்தால் நான் அடங்கா ஜுரம் பிடித்தவன்போ லிருக்கின்றேன். நீதான் சுவஸ்தப்படுத்த வேண்டும் என்னை. அது முடிந்தது என்று நான் அறியுமளவும் எனக்கு என்ன நேர்ந்தபோதிலும், என்னுடைய சந்தோஷமானது ஆரம்பியாது.

[போகிறான்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் காட்சி.

குர்ஜரத்திலோர் சமநிலம்.

பார்த்திபநேசனும், ஒரு ராணுவத்தலைவனும் வருகிறார்கள்.

படைவீரர்கள் ரங்கத்தைக் கடந்து செல்கின்றனர்.

பா. ராணுவத் தலைவனே, நான் அனுப்பியதாக குர்ஜர மன்னனிடம் போய்ப் பாரும். பார்த்திபநேசன் தனது சைனியங்கள் அவரது இராஜாங்கத்தின் வழி கடந்து செல்ல, முன்பு வாக்களித்தபடி இப்பொழுது உத்தரவைக் கேட்பதாகச் சொல்லும் அவரிடம். வந்து சேரவேண்டிய இடம் உமக்குத் தெரியுமே.— மகாராஜா அவர்கள் நம்மிடம் ஏதாவது நேரில் கூற வேண்டின், அவரது கண்முன் நமது கடமையைத் தெரிவிப்போம்; அதையும் அவர் அறியும்படி செய்யும்.

ராணு. அப்படியே செய்கிறேன் அரசே.

பா. போம் மெல்ல.

[பார்த்திபநேசனும் படைவீரரும் போகிறார்கள்.]

அமலாதித்யன், ராஜகாந்தன், கிரிதரன் முதலானோர் வருகின்றனர்.

அம. ஐயா, யாருடைய சைனியங்கள் இவை?

ராணு. பாஞ்சாலன் படைகள் இவை.

அம. ஐயா, உம்மைக் கேட்டுக் கொள்ளுகிறேன், எதை நோக்கிப் போகின்றன இவைகள், கூறுவீரா?

ராணு. பாலை நாட்டின் ஓர் பகுதியை நோக்கி.

அம. இந்தச் சைனியத்திற் கதிபதி யார்?

ராணு. இளம் பாஞ்சாலன் பார்த்திபநேசன்.

அம. பாலை நாட்டைக் குறித்தே போகிறதா இது, அல்லது ஏதாவது எல்லைப் பிரதேசத்திற்குப் போகிறதா?

ராணு. ஐயா, ஒன்றும் பூசி மெழுகாமல் உண்மையை உள்ளபடி உரைக்குமிடத்து, பெயர் ஒன்று தவிர பலன் ஒன்றுமில்லாத

அவ்வளவு துண்டு பூமியொன்றை அடைவதற்கே போகிறோம். அந்தப் பூமிக்கு ஐந்து பொன்கூட நான் கொடுக்க மாட்டேன் குடிவாரத்தின் பொருட்டு; அப்படியே விற்றபோதிலும் பாலீ நாட்டாருக்காவது, பாஞ்சால வாசிகளுக்காவது அதற்குமேல் ஒன்றும் தாராது அது.

அம. அங்ஙனமாயின் பாலீ நாட்டார் அதைப் பாதுகாக்க முயலார்கள்.

ராணு. அன்று, முன்னமே அவ்விடம் சைனியங்களைச் சேகரித்து வைத்திருக்கின்றனர்.

அம. இந்தக் கவைக்கு உதவாக் காரியத்தை முடிவுக்குக் கொண்டு வர, இரண்டாயிரம் மனிதர்களும் இருபதினாயிரம் பொன்னும் போதாததாக இருக்கின்றது! சமாதானத்தில் சுகமாய் வாழ்ந்து, சம்பத்து அதிகமாவதினால் உண்டாம் கெடுதி இதுதான், உள்ளுக்குள்ளே உடைந்து வெளிக்கு மனிதன் மரணமடைவதற்குக் காரணத்தைக் காட்டாமலிருக்கும் கட்டியைப்போலாகும்.— ஐயா, உமக்கு மிகவும் வந்தனம் செய்கிறேன்.

ராணு. சுவாமி உம்மை இரட்சிப்பாராக. [போகிறான்.]

ரா. அரசே, நாம் புறப்பட்டுப் போவோமா?

அம. இதோ உடனே வந்துவிட்டேன்; நீங்கள் கொஞ்சம் முன்னால் போங்கள்.

[ராஜகாந்தனும் கிரிதரனும் போகிறார்கள்.]

ஒவ்வொரு சந்தர்ப்பமும் எப்படி என் குறையினை எடுத்துக் கூறி மழுங்கிய என்னைப் பழி வாங்கும் வண்ணம் தூண்டுகின்றது! ஒருவன் காலத்தைக் கழித்திடும் முக்கியமான வகையெல்லாம் உண்பதும் உறங்குவதுமாயின், அம் மனிதன் என்னும்? ஓர் மிருகமே, வேறன்று நிச்சயமாய். பின் சென்றவற்றையும் முன் வருபவற்றையும் ஆராய்ந்தறியத் தக்க அத்தனைப் பெரிய அறிவுடன் நம்மைப் படைத்த ஈசன் அம

ரர்களுக் கிசைந்த அந்தப் புத்தியையும் சக்தியையும் உபயோகப்படுத்தாமல் துருப் பிடித் தழிய ஈந்தாரில்லை. இப்பொழுது மிருகங்களுக் குரிய மௌட்டீக மறதியோ, அல்லது, ஒவ்வொரு கருமத்தையும் மிகவும் ஆய்ந் தோய்ந்து ஆராய்ந்து செய்யவேண்டும் என்னும் பயமோ—ஒரு ஆலோசனையானது வகுக்கப்பட்டால் நான்கில் ஒரு பங்குதான் நன் மதி யாகுமதில், மற்ற மூன்று பாகங்களும், மூடத்தனமே யாம்—"இதை நான் செய்து முடித்தல் வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே நான் ஏன் உயிர் வாழ்கின்றேன் என்பதை அறிகிலேன்; நான் அதைச் செய்து முடிப்பதற்கு, காரணமுமுண்டு, மனமு முண்டு, பலமு முண்டு, கருவிகளு முண்டு என்னிடம். இரு நிலத்தைப்போல ஏராளமான உதாரணங்கள் என்னை உந்துகின்றன. இதோ தேவர்க் குரிய பேரவாவினுல் பூரிக்கப்பட்டு, இனி வரும் கண்ணுக்குப் புலப்படாக் கருமத்தை எண்ணுது ஏளனம் செய்யும், இந்த மெல்லிய அரசிளங்குமரனுல், போருக்குச் செலுத்தப்பட்ட வீரம் பொருந்திய இப் பெரும் சைனியத்தைப் பார். நிச்சயமில்லா அநித்யமாம் இவ்வுடலை, அதிர்ஷ்டத்திற்கும் மானத்திற்கும் அபாயத்திற்கும் கேவலம் ஒரு கலவடையின்பொருட்டு ஆளாக்குகிறுர்களே ? பெருங் காரண மொன் றின்றி பிரயத்தினத்திற் காரம்பியா திருப்ப தன்று பெருங் குணம், மானத்திற்கோர் ஹானி வருங்கால், ஒரு வைக்கோலிலும் ஒரு பெரும் வழக்கினைக் கண்டுபிடிப்பதே யாம். என் புத்தியும் இரத்தமும் கொதிப்படையச் செய்யும்படி, என் தந்தை கொல்லப்பட்டு என் தாயார் கெடுக்கப்பட் டிருக்க, எல்லாவற்றையும் உறங்கவிடும், என் ஸ்திதியை என்னென் றிகழ்வேன் ? இதோ நான் நாண மடையும்படி, இருபதி ஞயிரம் மனிதர், புகழ் என்னும் கேவலம் ஓர் மருட்சியின்பொருட்டு, மடியச் சித்தமாய்ச் சயனத்திற்குப் போவதுபோல் அக் காட்டிற்குப் போகிறதை, என் கண்ணுரப் பார்க்கிறேன். இரு கட்சிகளும் எதிர்த்து நின்று போர் புரியவும் விஸ்தீரண மற்ற, மடிந்தவர்

களை மறைத்து அடக்கம் செய்யவும் இடமில்லா, ஒரு அற்ப நிலத்தின்பொருட்டு யுத்தம் செய்யப் போகிறார்கள்.— ஆ! இதுமுதல் என் எண்ண மெல்லாம் இரத்தம் சொரிவதா யிருக்கவேண்டும், அன்றேல் அது அணுவளவும் பயன் படாதாம். [போகிறான்.]

காட்சி முடிகிறது.

## ஐந்தாவது காட்சி.

*சிலனபுரம், அரண்மனையி லோர் அறை.*

கோரீயணியும், ஹரிஹரனும், வருகிறார்கள்.

கௌ. நான் பேசமாட்டேன் அவளுடன்.

ஹ. அவள் பிடிவாதம் செய்கின்றாள், பயித்தியம் பிடித்திருக்கின்றதுபோலும். அவளுடைய ஸ்திதியைப் பார்ப்பீராயின் கட்டாயமாய்ப் பரிதாபப்படுவீர்கள்.

கௌ. அவள் என்ன வேண்டுமென்கிறாள் ?

ஹ. அவள் தகப்பனுரைப்பற்றி அதிகமாய்ப் பேசுகின்றாள்; உலகத்தில் மோச மிருப்பதாய்க் கேள்விப்படுகிறதாகக் கூறுகிறாள்; கையைப் பிசைகிறாள் ; மார்பின்மீது அடித்துக் கொள்கிறாள் ; வைக்கோலைக் கண்டு பொறாமைப்படுவதேபோல் வைது தள்ளுகிறாள்; அர்த்தம் அறை குறையா யிருக்கும் விஷயங்களைப்பற்றி சந்தேகப் படுவதுபோல் பேசுகிறாள் ; அவள் வார்த்தையில் ஒன்று மில்லாவிட்டாலும், அவள் ஒழுங்கின்றிப் பேசுவது கேட்பவர்கள் அவள் வார்த்தைகளை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து அர்த்தம் செய்யும்படி உந்துகின்றது; அவர்கள் அதைக் கவனித்து, தங்கள் எண்ணத்திற்குத் தக்கபடி அதைக் கோர்த்துக் கொள்ளுகிறார்கள். அவள் கண் கொட்டி தலை யசைத்துச் செய்யும் சைகைகள் தெரிவிக்கின்றபடி, நிச்சயமாய் அறியாவிட்டாலும், இதில் ஏதோ துக்கமான அர்த்த மிருக்கிறது என்று அனைவரையும் சந்தேகங் கொள்ளச் செய்கிறது. அவளுடன் நேராகப் பேசிப் பார்ப்பதே நலமாம் ; தீமையே விளைக்கும் குண முடையார் மனத்தில் அவள் வார்த்தைகள் விழு மாயின் அபாயகரமான ஆலோசனைகளை உண்டாக்கினு முண்டாக்கும்.

கௌ. ஆனால் உள்ளே வரட்டு மவள். [ஹரிஹரன் போகிறான்.]
பிணியுற்ற என் மனத்திற்கு, பாபத்தின் உண்மையான சுபாவப்படி, ஒவ்வொரு அற்ப விஷயமும் இனி வரப்போகின்ற

பெருந் தீமைக்குப் பீடிகையைப்போல் தோற்றுகின்றது! குற்றமுள்ள நெஞ்சில் சந்தேகம் நிரம்பவும் குடிகொண்டிருக்கின்றமையால் எங்கே வெளியாகின்றதோ என்று எந்நேரமும் பயப்படுவதினாலேயே குற்றம் தன்னைத் தானே வெளியாக்கிக் கொள்ளுகின்றது.

ஹரிஹரன், அபலையுடன் வருகிறான்.

அப. குர்ஜர நாட்டு அழகிய அரசி எங்கே?

கௌ. என்ன விசேஷம் அபலா?

அப. [பாடுகிறாள்.] காதல் நீ உண்மையில் என்மீது கொண்டது
கண்டறிவ தெங்ஙனம்?
பாதத்தில் ரட்சையால் பக்கத்தில் கட்டையால்
பகுத்தறிய லாகுமே!

கௌ. ஐயோ! கண்ணே! அபலா, இப்பாட்டின் பொருளென்ன?

அப. என்ன சொல்லுகிறீர்? அப்படி யல்ல, வேண்டிக்கொள்ளுகிறேன் கவனியும்.

[பாடுகிறாள்.] மாண்டே போனாரே மன்னனவர் அம்மணி
மடிந்தே போனாரே மண்மீதில்
காண்பாய் நீ தலையருகில் கட்டாந் தரையுமே
காலருகில் கல்லொன்று கண்படுமே!

ஆஹா! ஆஹா!

கௌ. அதல்ல, அபலா.—

அப. கேட்டுக் கொள்ளுகிறேன், கொஞ்சம் கவனியும்—

[பாடுகிறாள்.] வெண்ணிலாவைப்போல் இருந்ததே
வெள்ளைச் சல்லா அவர் தனக்கு—

காலதேவன் வருகிறான்.

கௌ. ஐயோ! இதோ பாரும் பிராணநாதா!

அப. [பாடுகிறாள்.] அழகிய புஷ்பமதால் அலங்கரித்தார் அவர்தன்னை,
அழுகையுடன் சென்றனவே அவைகளிடுகாட்டிற்கே,
மழைபோலப் பொழிந்தனரே மந்தாரம் வானவரும்,

கா. அழகிய அபலா, என்னமா யிருக்கின்றது னக்கு?

அப. நன்றாய், ஈசன் உமக்கு வெகுமானம் செய்வாராக! அப்பம் சுடுகின்றவள் பெண்ணும் ஆந்தை என்கிறார்களே! ஐயோ சுவாமி! நா மிருக்கும் ஸ்திதி நமக்குத் தெரியும், நாம் ஆகப் போகின்ற ஸ்திதி ஆருக்குத் தெரியும்?— சுவாமிக்கு நிவேதனம் செய்து புசியுங்கள் ஆகையால்.

கா. தன் தகப்பனாரைப்பற்றியே நினைவு.

அப. உம்மை வேண்டிக்கொள்ளுகின்றேன், இதைப்பற்றி இனி வார்த்தை வேண்டாம். அதற்கு அர்த்த மென்ன வென்று அவர்கள் கேட்கும்பொழுது இதைச் சொல்லுங்கள் நீங்கள். [பாடுகிறாள்.] வசந்தன் பூசை வரும் நாளேயே

வைகறையில் நானுமே
வாசலருகில் வருவேன் நானுன்
வாசந்திகையாகவேதான்.
கலைதரித்தான் எழுந்திருந்து
கதவை நன்றாய்த் திறந்திட்டான்
கன்னியவள் உட்சென்றாள்
கன்னிகையாய் வாராளே!

கா. அழகிய அபலா!— அவள் எத்தனை நாளாக இப்படி இருக்கின்றாள்?

அப. எல்லாம் சுபமாய் முடியுமெனக் கோருகிறேன். நாம் பொறுமையுடன் இருக்கவேண்டும். ஈர பூமியில் அவரைப் புதைத்ததை எண்ணினால் எனக்கு அழுகை வராம லிருக்குமா? என் தமயனுக்குத் தெரிவிக்க வேண்டு மதை.— ஆகவே நீங்கள் எனக்குக் கூறும் புத்திமதிக்காக உங்களுக்கு வந்தனம் செய்கின்றேன். எங்கே என் வண்டி? வருகிறேன் அம்மா! வருகிறேன் அம்மா! நான் போய் வருகிறேன் அம்மணி! நான் வருகிறேன், வருகிறேன்! [போகிறாள்.]

கா. விடாது கூடே போங்கள். அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி உம்மை வேண்டுகிறேன்.

[ஹரிஹரன் போகிறான்.]

முடிவிலாத் துயரத்தால் மூண்டது இப் பித்தம்; அவள் தந்தையின் மரணமே இதற்கெல்லாம் ஆதி காரணம்.— ஹா! கௌரீமணி! கௌரீமணி! இதைப் பார்! துயரம் சம்பவித்தால் ஒற்றர்கள்போல் ஒவ்வொன்றாய் வருவதில்லை; அணியணியாகத்தான் வரும். முதலில் அவள் தந்தை கொல்லப்பட்டார்; பிறகு உனது மகன் போனான்—அவனது கொடுஞ் செய்கையே அவனை நாட்டைவிட்டு நியாயப்படி துரத்தும்படி செய்தது,- ஜனங்கள் எல்லாம் குழம்பி யிருக்கின்றார்கள்; உத்தமனான பாலநேசன் மரணத்தைப்பற்றி தகாத கெட்ட எண்ணங்களெல்லாம் கொண்டு, இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள்; அறிவின்மையால் நாமும் அவனை அவசரமாய் ஒருவரும் அறியாதபடி அடக்கம் செய்துவிட்டோம்; எந்த அறிவு இல்லாவிடில் நாம் அனைவரும் சித்திரங்களுக்குச் சமானமாகிறோமோ அல்லது மிருகங்களென மதிக்கப்படுகிறோமோ, அப்படிப்பட்ட ஒள்ளிய அறிவினின்றும், பேதையாகிய அபலை பிரிக்கப்பட்டாள். முடிவில் இவைகள் எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம், இவளது சகோதரன் இரகசியமாய் பிரானேசபுரத்திலிருந்து வந்திருக்கிறான். அவன், ஆச்சரியத்தை யுட்கொண்டவனாய் அந்தர்த்தானமானதுபோல் மறைந்திருக்கின்றான். அவன் தந்தை மடிந்ததைப் பற்றி அவன் காதில் இரகசியமாய்த் துர்ப்போதனை செய்யும் கோட்சொல்லிகளுக்குக் குறைவில்லை. அதற்குக் காரணம் கூறவேண்டி ஜனங்கள், உண்மையொன்று மறியாமையால், என்மீதே பழி சாற்றி, எல்லோர் காதிலும் ஓத அஞ்சமாட்டார்கள். ஹா! கௌரீமணி! கௌரீமணி! இது ஆயிர முக அஸ்திரத்தைப்போல் என் ஆருயிரை அநேக விடங்களில் அனாவசியமாய் அழிக்கின்றதே! [உள்ளே சப்தம்.]

கௌ. ஐயோ! என்ன சப்தம் இது?

கா. எங்கே என் மகாராஷ்டிரப் போர்வீரர்கள்? வாயிலைக் காக்கட்டும் அவர்கள்!

ஒரு மந்திரி வருகிறான்.

என்ன சமாசாரம் ?

ம. மகாராஜா ! தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்; சமுத்திர மானது கரைபுரண்டு சம பூமியை அழிப்பதேபோல் நமது சேவகர்களை யெல்லாம் பறக்கடித்து, சில கலகச் சைனியங் களுடன் இளம் லீலாதரன் பிரவேசித் திருக்கின்றான். மூட ஜனங்கள் அவனைத் தமது தலைவனென அழைக்கின்றனர். இப்பொழுதுதான் உலகம் ஆரம்பிப்பது போல், புராதனம் என்பதை மறந்து, வழக்கமென்பதை யறியாதவராய், அவர் கள் "நாங்கள் கோருகிறோம், லீலாதரன் எங்கள் அரசனாக வேண்டும்" என்று கூவுகிறார்கள் ; "லீலாதரனே எங்கள் அரசனாக வேண்டும், லீலாதரனே அரசன்" என்று கை கொட்டி, மேக மண்டலம் அதிர்ந்திட ஆரவாரிக்கின்றனர்.

கௌ. அதோ அந்த நன்றியற்ற குர்ஜர நாய்களின் கூச்சல் ! தவ றான மார்க்கத்தில் என்ன சந்தோஷத்துடன் குலைக்கின் றன !

கா. கதவுகள் உடைக்கப்பட்டன. [உள்ளே சப்தம்.]

லீலாதரன், உருவிய கத்தியுடன், சைனியங்கள் பின் தொடர வருகிறான்.

லீ. எங்கே இந்த மகாராஜா ?— ஐயா ! நீங்கள் எல்லாம் சற்று வெளியே நில்லுங்கள்.

சை. மாட்டோம் ! நாங்களும் உள்ளே வருகிறோம் !

லீ. நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், எனக்கு மாத்தி ரம் உத்தரவு கொடுங்கள்.

சை. அப்படியே ஆகட்டும் ! அப்படியே ஆகட்டும் !

[சைனியங்கள் கதவுக்கு வெளியே போகின்றன.]

லீ. சந்தோஷம், கதவைக் காருங்கள்.— மாபாதகனான மன்ன னே ! என் தந்தையை எனக்கு ஒப்புவியும் !

கௌ. மெல்ல அப்பா, லீலாதரா.

கா. என்ன காரணம்பற்றி லீலாதரா, உன் கலகமானது இத்தனைப் பெரியதுபோல் தோற்றுகிறது?—கௌரீமணி, போக விடு அவனை! நம்மைப்பற்றி நீ பயப்படவேண்டாம். துரோகம் தலை நீட்டிப் பார்ப்பதொழிய விரும்பியது வேறொன்றையும் முடிக்க முடியாதபடி அரசனைச் சுற்றி அப்படிப்பட்ட தெய்வீகம் காக்கின்றது.— லீலாதரா, நீ இவ்வாறு கொண்டிருக்கும் கோபத்திற்குக் காரணத்தை என்னிடம் கூறுவாய். விடு அவனை கௌரீமணி.— பேசு அடா! அப்பா!

லீ. எங்கே என் தந்தை?

கா. மடிந்துபோனார்.

கௌ. மகாராஜாவா லல்லவே.

கா. அவன் மனம் பூரண மாகுமளவும் கேட்கட்டும்.

லீ. எப்படி மடிந்தார் அவர்? என்னிடம் கதை யெல்லாம் உதவாது, நான் நரகம் போவதானாலும் சரி! சத்தியம் செய்திருக்கின்றேன், கோரமான சபதம் செய்திருக்கின்றேன்! தயையும் பச்சாத்தாபமும் பாதாள லோகத்திற்குப் பறக்கவிட்டேன்! பஞ்சமா பாதகத்திற்கும் துணிந்திருக்கின்றேன்! இதைவிட்டு நான் பெயரப்போகிற தில்லை, இகலோக பரலோக சாம்பிராஜ்ஜியம் எனக்கு வேண்டிய தில்லை; வருவது வரட்டும்; என் தந்தை மாண்டதற்கு எப்படியாவது நான் பூரணமாய்ப் பழி வாங்க வேண்டும்!

கா. உன்னைத் தடை செய்வது யார்?

லீ. என் மனம் ஒன்றே! அன்றி இம் மண்ணுலகம் எல்லாம் ஒன்றாயக் கூடினும முடியாது. எனக கிருக்கும துணை சிறிதாயினும் ஜாக்கிரதையாய் உபயோகித்து அதைக்கொண்டு அனைத்தையும் முடிவுபெறச் செய்வேன்.

கா. அப்பா, லீலாதரா, உன் தகப்பனார் உயிர் துறந்த விதத்தை உண்மையாய் அறியவேண்டி உனக்கு விருப்ப மிருந்தால் மித்

திரர்களையும் அமித்திரர்களையும் எல்லோரையும் ஒன்ருய் அழிக்கவேண்டுமென்று உன் பழி வாங்கும் நீதியில் வரைந்திருக்கின்றதோ ?

லீ. என் தந்தையின் பகைஞரை யன்றி மற்றெவரையும் நான் தீண்ட மாட்டேன்.

கா. ஆனல் அப் பகைவரை அறிய விரும்புகின்ருயா ?

லீ. அவரது ஆப்த நண்பர்களை நான் இங்ஙனம் ஆலிங்கனம் செய்துகொண்டு, புறவிற்காகத் தன்னுயிரைக் கொடுத்துக் காத்த சிபியைப்போல் என்னுயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன்.

கா. ஆ ! இப்பொழுதுதான் நல்ல பிள்ளையைப்போலும் உத்தம குண முடையவனைப்போலவும் பேசுகின்ருய். உன் தந்தை மடிந்ததற்கு நான் உத்தரவாதம் அல்லவென்பதும், அதன் பொருட்டு நான் மிகவும் துயரப்படுகிறேன் என்பதும், சூரியனது ஒளியைப்போல் உனது கண்ணுக்குப் புலப்படும்படி, நான் நிரூபித்து காட்டுகிறேன்.

சை. [உள்ளிருந்து] வரட்டும் உள்ளே ! வரட்டும் உள்ளே !

லீ. என்ன ? என்ன சப்தம் அது ?

அபலை மறுபடியும் வருகிருள்.

அந்தோ ! வெப்பத்தினல் என் மூளை வறண்டு போகாதா ? கண்ணீரானது உப்பினும் எழுமடங்கு கரித்து என் கண்களைக் கருக்கிப் பொட்டையாய்ப் போகச்செய்யாதா ? ஜகதீசன்மீ தாணைப்படி உனக்குப் இந்தப் பயித்தியத்தை விளைத்தவன்மீது ஒரு பங்குக்குப் பதின் மடங்கு பழி வாங்காது விடுவதில்லை ! வசந்த வஞ்சியே ! ஆருயிர் அணங்கே ! பிரிய சோதரி ! அபலா ! அபலா !— ஈசனே ! ஈசனே ! இப்படியும் ஆகுமா ? தளர் வெய்திய வயோதிக ருயிரைப்போல் இவ்விளந் தையலின் மதியும் அத்தனை எளிதில் பாழாகுமா ? ஜீவனியில் மிகவும் அரிய பொருளாம் ஆசை ! ஆசை வைத்த

பொருள் அழியுங்கால் அதனுடன் கொண்டுபோகின்றது அறிவிற் கொஞ்சம்.—

அப. [பாடுகிருள்.] ‘ பாடை கட்டினரே, பாவிகளவருக்கு !

நாஞ, நன்ஞஞ, நானன்ன, நன்ஞஞ

கண்ணீரால் நனைந்ததுவே, காஷ்டமதவருக்கு.’

பஞ்ச வர்ணக் கிளியே ! போய் வருகிருயா ?

லீ. உன் அறிவு சரியா யிருந்து, என்னைப் பழிவாங்க உந்துவதாயினும் இவ்வாறு என்னைத் தூண்டாதே !

அப. [பாடுகிருள்.]

டிண்டிண்டிம் பாடவேணும்

டிண்டிண்டிம் என்றழைத்து.

தவளைக்குச் சரியான தாளம் !— எசமான் பெண்ணை இழுத்துக்கொண்டுபோனவன் எவ்வளவு கெட்ட வேலைக்காரனுயிருக்கவேண்டும் ?

லீ. அர்த்த மிருக்கும் வார்த்தைகளைவிட இவ் வர்த்த மில்லா வார்த்தைகள் அதிகமாய்க் குறிக்கின்றன.

அப. இதோ ராஜமல்லி, இது ஞாபகத்திற்காக !— ஆகவே காதலா மறவாதீர்,— இதோ பாதிரி பட்சத்திற்காக.

லீ. பயித்தியத்திலும் புத்திமதி !—எண்ணமும் ஞாபகமும் ஒத்திருக்கின்றது.

அப. இதோ உமக்குப் புன்னையுங் குவளையும். உங்களுக்கு இதோ தும்பை யிருக்கின்றது. எனக்குங் கொஞ்சம் இருக்கின்றது. இவைகளைச் சூரியனுக்கு உரித்தான புஷ்பங்கள் என்று கூறலாம், ஞாயிற்றுக் கிழமைகளில்—ஆனல், உங்களுடையதை நீங்கள் கொஞ்சம் வித்தியாசத்தோடு அணியவேண்டும். இதோ ஒரு சூரியகாந்தி. உமக்குக் கொஞ்சம் நீலோற்பலம் கொடுப்பேன்; ஆனல் அவைகள் எல்லாம் உலர்ந்து போயின என் தந்தை மடிந்தபொழுது.—அவர் சுகமாய்த்தான் மடிந்ததாகச் சொல்லுகிருர்கள்.—

[பாடுகிறாள்.] "அழகிய ராமன், என்னிதய சோமன்."

லீ. ஏக்கம், துக்கம், கோபம், எல்லாவிதப் பாழையும், ஓர்வித அருமையும் அழகுமாய் மாற்றிவிடுகின்றனள் !

அப. [பாடுகிறாள்.] திரும்பி வாராரோ அவர் ?
திரும்பி வாராரோ ?
வாரார் அவர் போனாரே !
மடிந்தே நீயும் போவாயே !
திரும்பி அவர் வாராரே !
நரைத்ததே தலையும் பால்போல்,
வெளுத்ததே சல்லாவுமே
போனார் போனாரே
வீணாய் அழுவானேன் ?
ஈசனார் காத்திடுவாரே !

சுவாமி இருக்கிறார்.— நம்மெல்லோரையும் காப்பாற்ற.— நான் ஈசனைப் பிரார்த்திக்கின்றேன். ஈசன் உமக்குத் துணை செய்வாராக ! [போகிறாள்.]

லீ. ஈசனே ! ஜகதீசனே ! இதைக் கண்ணால் பார்க்கின்றீரா ?

கா. லீலாதரா, உனது துயரத்தை நானும் பாகித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் எனது சுதந்தரத்தை மறுத்தவனாவாய். சற்றே விலகிப்போய், உனது புத்திமான்களான நண்பர்களில் எவரையாவது ஏற்பாடு செய்; அவர்கள் நம்மிருவரையும் கேட்டு நியாயம் கூறட்டும். நேராகவாவது சுற்று வழியிலாவது நாம் இதில் சம்பந்தப்பட்டதாக அவர்கள் தீர்மானித்தால் நாம், நமது இராஜ்ஜியம் மகுடம், உயிர், எமது என்று கூறும்படியான எல்லாவற்றையும் உனக்குத் திர்ப்தியாகக் கொடுக்கிறோம். இல்லாவிடின் நாம் சொல்லுகிறபடி பொறுமையுடன் நமக் கடங்கி யிருப்பாயாயின், உன்னுடன் நாமும் உழன்று உன் மனத்தைத் திர்ப்தி செய்கிறோம் வேண்டிய விதத்தில்.

லீ. அப்படியே ஆகட்டும். அவர் மடிந்த விதம், ஒருவருமறியாதபடி அவரை அடக்கம் செய்தது, கர்மக்கிரியைகள் ஒன்றும் செய்யாதது, அவரைப் புதைத்த இடத்தில் சமாதி முதலியன ஒன்றும் கட்டாதது, துக்கமும் பாராட்டாதது, ஆகாயவாணி பூமிதேவி யறிய அழுகை யொன்று மில்லாதது, இதற்கெல்லாம் தக்க காரணம் நான் அறியவேண்டும்.

கா. அப்படியே கேள், கேட்டறிந்து, குற்றமுள்ள விடத்தில், பெருங் கோடாலியால் வெட்டு. வா என்னுடன் சொல்லுகிறேன், [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## ஆறுவது காட்சி.

*அரண்மனையில் இன்னொரு அறை.*

*ஹரிஹரனும் ஒரு வேலைக்காரனும் வருகிறார்கள்.*

ஹ. யார் அவர்கள் என்னுடன் பேச விரும்புவோர் ?

சே. ஐயா, அவர்கள் மாலுமிகள், உமக்கு ஏதோ நிருபம் கொண்டுவந் திருப்பதாகக் கூறுகின்றனர்.

ஹ. வரட்டும் அவர்கள் உள்ளே.— [வேலைக்காரன் போகிறான்.] அரசகுமாரனும் அமலாதித்யரிட மிருந் தன்றி, இவ்வுலகின் கண் வே றெந்தப் பக்க மிருந்து எனக்கு நிருபம் வரக்கூடு மென உணர்கிலேன்.

*மாலுமிகள் வருகின்றனர்.*

மு-மா. ஜகதீசன் உம்மை இரட்சிப்பாராக.

ஹ. உன்னையும் இரட்சிப்பாராக.

மு-மா. அப்படியே ஆகும் அவர் திருவுளம் வைத்தால். ஐயா, இதோ உமக் கொரு கடிதம் இருக்கின்றது; சிங்களத்திற் கனுப்பப் பட்ட ராயபாரியிட மிருந்து வருகின்றது இது.—நான் அறிவிக்கப்பட்ட வண்ணம், உமது பெயர் ஹரிஹரராயின்.

ஹ. [வாசிக்கிறான்.] “ஹரிஹரா, நீ இதைப் படித்துப் பார்த்த பிறகு, இந்த ஆசாமிகள் அரசனைப் பார்க்கும்படி செய்; அவருக்கு அனுப்பிய நிருபங்கள் அவர்களிடம் இருக்கின்றன. திரைகடல் கடக்கத் தின மிரண்டு கழியுமுன், கடற் கொள்ளைக்கப்பல் ஒன்று எங்களைத் துரத்தியது. எங்கள் கப்பல் அதிகவேகமாய்ச் செல்லாததைக்கண்டு, நாங்கள் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அவர்களை எதிர்த்தோம். இரண்டு கப்பல்களும் மோதியபொழுது நான் அவர்களுடைய கப்பலில் தாவிப் பாய்ந்தேன். அந்த க்ஷணம் அவர்கள் நமது கப்பலை விட்டுப் பிரிய, நான் தனியாக, அவர்கள் சிறையானேன். திருடர்க ளாயினும் அவர்கள் கருணை யுடையவர்க

ளாகவே என்னைக் கௌரவப்படுத்தினார்கள், ஆனால் அவர்கள் செய்தது இன்னதென அவர்களுக்குத் தெரியும்; அவர்களுக்கு நான் பிரதி உபகாரம் செய்யவேண்டியவனா யிருக்கிறேன். நான் அனுப்பிய நிருபங்களை அரசர் அடையட்டும். யமனிடமிருந்து என்ன வேகமாய் ஓடுவையோ அத்தனை வேகமாய் என்னிடம் ஓடி வந்து சேர். நான் உனது செவியில் கூறவேண்டிய வார்த்தைகள் சில உள, அவைகளைக் கேட்க, உன் வா யடைத்துப் போம். அங்ஙன மிருந்தும் அவ் விஷயத்தைத் தாங்கி நிற்கச் சக்தி யற்றனவாய் அத்தனை இலேசானவை. இந்த நல்ல ஆசாமிகள் உன்னை நா னிருக்குமிடம் அழைத்துக்கொண்டு வந்து சேர்ப்பார்கள். ராஜகாந்தனும் கிரிதரனும் சிங்களத்திற்குப் போய்க்கொண் டிருக்கின்றனர். அவர்களைப்பற்றி உன்னிடம் அதிகமாய்க் கூற வேண்டி யிருக்கிறது. நீ சுகமாய் இருப்பாயெனக் கோருகிறேன். இங்ஙனம், உன் உள்ள மறிந்தபடி உனக்குச் சொந்தமான அமலாதித்யன்."

வாருங்கள். உங்களுடைய இந்தக் கடிதங்களைச் சேர்ப்பிக்க நான் வழியினைக் காட்டுகிறேன். யாரிட மிருந்து அவைகளைக் கொண்டுவந்தீர்களோ அவ ரிருக்குமிடம் என்னைக் கொண்டு போகவேண்டி அதைத் துரிதமாய்ச் செய்து முடிக்கிறேன். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## ஏழாம் காட்சி.

அரண்மனையிலோர் அறை.

காலதேவனும், லீலாதரனும் வருகிறார்கள்.

கா. உத்தமனான உன் பிதாவைக் கொன்றவனே என் உயிரிற்கும் உலை வைக்கப் பார்த்தான் என்பதை, நீ காதாரக் கேட்டறிந்த பிறகு இனியாவது உன் மனத்தில் என்னைக் குற்ற மற்றவனெனக் கருதினவனாய், உன் ஹிருதயத்தில் என்னை உன் நண்பனென உறுதியாய் மதித்திடல் வேண்டும்.

லீ. அப்படித்தான் விளங்குகிறது நன்றாய்—உமது க்ஷேமத்தைக் கருதுங்காலும், உமது அறிவைக் கொண்டு யோசிக்குமிடத்தும், மற்றெல்லா விஷயத்தாலும், உமக்கு மிக்க கோபம் விளைத்த, சுபாவத்திலேயே பெருங் குற்றமாயிருக்கப் பெற்ற, இந்தத் துர் நடத்தைகளை ஏன் விசாரணைக்குக் கொண்டுவராது விட்டீர் ?

கா. ஓ ! இரண்டு முக்கியமான காரணங்களைப்பற்றி; அக் காரணங்கள் ஒருவேளை உனக்கு அலட்சியமாய்த் தோற்றலாம், ஆயினும் என்வரையிலும் அவைகள் அதிக பல முடையனவே. இராணியாகிய அவன் தாயார், அவனது கண் பார்வையாலேயே ஆருயிர் தரிக்கின்றாள். நானோ—அது என் நற்குணமோ தீக்குணமோ ஏதாயினுமாகுக— நட்சத்திரமானது தன் மண்டலத்தை விட்டு எங்ஙனம் வெளியில் சரியாதோ அங்ஙனமே, என் உயிரிற்கும் வாழ்க்கைக்கும் இன்றியமையாத அவளை விட்டுப் பிரிந்து உயிர் தரியேன். இதைப் பயிரங்கமாய் நான் விசாரணைக்குக் கொண்டு வராததற்கு மற்றொரு காரணம், பாமர ஜனங்கள் அவனிடம் வைத்திருக்கும் பெரும் பட்சமே. அவர்களோ, அவனது பெருங் குற்றங்களையெல்லாம் தங்கள் பேரன்பினில் மூழ்கச் செய்தவராய், மரத்தைக் கல்லாக்கும் ஊற்றினைப்போல் அவனது விலங்குகளையே சிலம்புகளாகக் கருதுவார்கள். ஆகவே எனது பாணங்கள் அவர்கள் பட்சமென்னும் பெருங் காற்றைத் தாங்கப்

பலமில்லாததாய், நான் எய்த குறியிடம் செல்லாது எறிந்த வில்லிடமே வந்து சேரும்.

லீ. ஆகவே உத்தமரான என் தந்தையைத் தாரைவார்த்தேன்; அவளது அருமை, புகழானது பின் திரும்பிப் போமாயின், குன்றின்மீ தேறி எந்தக் காலத்திலும் ஈடு இல்லையென் எதிர்த்துப் பேசத் தக்க, குறையொன்றுமில்லாக் கோமள முடைய என் தங்கை தன் மதி யிழந்து கடும் கதியடைந் தாள்— ஆயினும் நான் பழிவாங்கும் சமயம் வரும்.

கா. இதன்பொருட்டு கண் விழித்து உன் நித்திரையைக் கெடுத்துக் கொள்ளாதே. அபாயமானது நம்மைக் கிட்டி, தாடியைப் பற்றி, ஆட்டியபோதிலும் அதை விளையாட்டெனவிட்டுவிடும் படியான, அத்தனை சாரமும் ரோஷமுமில்லா ஜன்மமென, நம்மை நீ மதித்திடலாகாது. உனக்கு விரைவில் இன்னும் உரைத்திடுவேன். உன் தந்தைமீது பட்சம் வைத்திருந் தேன், என் உயிரின்மீதும் உண்டு எனக்கு இச்சை; ஆகவே, நான் கோருவது, நீ அவ்வாறு எண்ணும்படி கற்பிக்க—

ஒரு தூதன் வருகிறான்.

என்ன, இப்பொழுது! என்ன சமாசாரம்?

தூ. அரசே, அமலாதித்யரிடமிருந்து நிருபங்கள்; இது மகா ராஜா அவர்களுக்கு, இது மகாராணிக்கு.

கா. அமலாதித்யனிடமிருந்தா! யார் இவைகளைக் கொண்டு வந்தது?

தூ. அரசே, மாலுமிகள் யாரோ கொண்டு வந்ததாகக் கூறுகின்ற றனர். நான் அவர்களைப் பார்க்கவில்லை. கலாதிரன் என்னி டம் கொடுத்தான், அவைகளைக் கொண்டுவந்தவனிடமிருந்து அவன் பெற்றான்.

கா. லீலாதரா, அவைகளை படிக்கக் கேட்பாய்.— நீ உத்தரவு பெற்றுக்கொள். [தூதன் போகிறான்.]

[வாசிக்கிறான்.]" தாஷ்டீகமான ஆஸ்தானத்திற்கு—தாம் அறிய

வேண்டும் நான் நிர்வாணமாய் தமது தேசத்தில் ஒதுக்கப் பட்டதை. நாளைத்தினம் உமது உத்தமமான கண்களைப் பார்த்திட உத்தரவு வேண்டுவேன். அச்சமயம், அவ்விஷயத்தில் முதலில் உமது மன்னிப்பைக் கேட்டவனாய், அகஸ்மாத்தாயும் அதிக ஆச்சரியமாயும் நான் திரும்பி வந்ததின் காரணத்தை ஆதியோடந்தமாக அறிவிப்பேன்.

அமலாதித்யன்."

இதற்கென்ன அர்த்தமாயிருக்கும்? மற்றவர்களெல்லாம் திரும்பி வந்துவிட்டார்களா? அல்லது அப்படியொன்றுமில்லாது, இது எதாவது எளனமா?

லீ. இந்தக் கையெழுத்தை அறிவீரா?

கா. இது அமலாதித்யன் லிகிதமே, 'நிர்வாணமாய்'—அன்றியும் இங்கே பின்னால் வரைந்ததில் "தனியாக" எனவும் கூறுகின்றான், எனக்கேதாவது யோசனை கூறுவையா?

லீ. அதில்தான் மூழ்கிக் கிடக்கிறேன் அரசே. ஆயினும் அவன் வரட்டும், என்னிருதயத்திலிருந்த துயரத்தையெல்லாம் போக்கி, அவன் முகமெதிரில் "இப்படித்தான் நீ செய்தாய்" என்று எடுத்துக் கூற சமயம் வாய்த்ததே என்று எனக்கு சந்தோஷ உற்சாகத்தைத் தருகிறது.

கா. அப்படியிருக்குமாயின், லீலாதரா—அது எப்படி அங்ஙனமிருக்கக் கூடும்? வேறு விதமெப்படி?—நான் சொல்லுகிறபடி கேட்பையா நீ?

லீ. ஆம் அரசே, சமாதானமாகும்படி மாத்திரம் தாம் எனக்குக் கட்டளையிடாதிருப்பதானால்.

கா. உனது மனத்தின் நிம்மதியின் பொருட்டே. அவன் தன் பிரயாணத்தை நிறுத்திவிட்டு, இனி அதை மறுபடியும் மேற்கொள்வதில்லையெனத் தீர்மானித்து, திரும்பி வந்ததாயின் நான் முடிவாய் யோசித்திருக்கும் வண்ணம், அவன் ஒரு சாஹசத்தைச் செய்யும்படி தூண்டிவிடுகிறேன்; அதில் அவன் எப்படியும் வேறு மார்க்கமின்றி மாளும்படி நேரிடும்;

அவன் மரணத்தைப் பற்றித் தவறானதென ஒருவரும் மூச்சும் விடமாட்டார்கள், அவனது தாயும், நடந்ததின்மீது குற்றம் கூறாது, ஏதோ அகஸ்மாத்தானது என்று அறைந்திடுவாள்.

லீ. அரசே, உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றேன். அதுவும் நான் அந்தப் பழி வாங்கும் கருவா யிருக்கும்படி சூழ்ச்சி யேதேனும் செய்திடுவீ ராயின் மிகவும் நலம்.

கா. சரியாய்த்தான் வாய்த்தது. அமலாதித்யன் கேள்வியில், நீ பிரயாணம் போனபிறகு, உன்னிடம் அதிகமாய்ப் பிரகாசிக்கிறதாக ஜனங்கள் கூறுகிற ஒரு குணத்தைப்பற்றி, பேச்சு அதிகமாய் நடந்தது; அவ்வொரு குணமானது மற்றெல்லாக் குணங்களின் தொகையைவிட அவனை உன்மீது அதிக பொறாமை கொள்ளும்படி செய்தது; அந்த ஒரு குணமோ என் யோசனையில் அயலான் எதிர்க்கத் தக்கபடி எடுத்துக் கூறத் தக்கதன்று.

லீ. அப்படிப்பட்ட குணம் என்ன அது அரசே ?

கா. அழகுறு இளமையின் அணிகலன்களுக்குள் மிக அற்பமான தொன்றாம், ஆயினும் அது அவசியமானதே. எப்படி வயோதிகர் தங்கள் முதுமைக் கேற்றபடி பொறுமையாம் நடையுடை பாவனைகளை யுடையவரா யிருத்தல் தக்கதா யிருக்கின்றதோ, அப்படியே இளைஞர், இளமையில், தம் தேக ஆரோக்கியத்திற்கு தக்கபடி, எதையும் அலட்சியம் செய்யும் கவலை யில்லாக் குண முதலியன உடையவரா யிருத்தல், ஒத்ததேயாம். இரண்டு மாதங்களுக்குமுன் நாரீமணி நகரத்திலிருந்து ஓர் பிரபு இங்கு வந்திருந்தார்,—அந்தப் பிரதேசத்து ஜனங்களை நான் பார்த்திருக்கிறேன், எதிர்த்தும் போராடியிருக்கிறேன்; அவர்கள் குதிரைப் பழக்கத்தில் மிகவும் தேர்ந்தவர்கள்; ஆயினும் இந்த இளங்குமாரனோ அதில் மந்திர வித்தை யறிந்தவன்போல் அதிக தேர்ச்சி யுடையவனா யிருந்தான். உட்கார்ந்த இடத்தில் உற்பத்தி யானவன்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

போல், பல முடை அப் பரிமாவின் பாதி குணத்தைத் தான் வகித்தவனேபோல, அதனை அத்தனை ஆச்சரியத்தைத் தரத்தக்க விந்தைகளை யெல்லாம் செய்வித்தான். அவனது அற்புதமான ஆடல்களை வர்ணிக்கத் தக்க வார்த்தைக ளில்லாதபடி, எனது எண்ணங்களுக்கு மேற்பட்டனவாயிருந்தன அவனது செயல்கள்.

லீ. நாரீமணி நகர வாசியா அவன் ?

கா. நாரீமணி நகரத்தானே.

லீ. ஆனால் என் உயிர்மீதாணைப்படி அவன் லீலாரமணனாயிருக்க வேண்டும்.

கா. ஆம், அவனேதான்.

லீ. அவனை நான் நன்றா யறிவேன். அவன் அத்தேசத்தார்களுக் கெல்லாம் ஒரு நடு நாயகம்போன்ற இரத்தினமே.

கா அவன் உன்னைப்பற்றி சிறப்பித்துக் கூறி, உடலைக் காத்தல் என்னும் உத்தமமான வித்தையில், உன்னைவிடச் சமர்த்தன் ஒருவனுமில்லை எனப் புகழ்ந்து, முக்கியமாக வாள் யுத்தத்தில், உனக்குச் சமானமான ஒருவனுடன் நீ அந்த யுத்தம் புரியுங்கால் உன்னைக் காண்டல் கண்கொண்ட காட்சியாயிருக்குமென எடுத்துரைத்தான். தனது நாட்டுச் சூரர்களெல்லாம், நீ எதிர்ப்பையாகில் கண்ணெதிரில் நின்று தம்மைக் காத்துக் கொள்ளவும் வகையற்றவர்களெனப் பிரதிக்ஞை செய்தான். அப்பா, உன்னைப்பற்றிய இவ் விஷயத்தைக் கேட்டவனாய் அமலாதித்யன், தன் பொறாமை யென்னும் விஷத்தால் தகிப்பதேபோல், எப்படியாவது உடனே நீ வந்து அவனுடன் வாள் யுத்தம் புரிய வேண்டுமென விரும்பி வேண்டுவது தவிர வேறொன்றும் செய்திலன். இப்பொழுது இதைக் கொண்டு—

லீ. இதைக்கொண்டு என் செய்வது, என் அரசே ?

கா. லீலாதரா, நீ உன் தந்தையின்மீது அன்பு வைத்தவனா, அல்

லது சித்தரித்த துக்கத்தைப்போல், முகத்தில் தோற்றுவதன்றி ஹிருதயத்தில் ஒன்று மில்லாதவனு ?

லீ. ஏன் கேட்கின்றீர் நீர் இதை ?

கா. உன் தந்தையின்மீது அன்பில்லாதவன் என்றுன்னை எண்ணியபடி யன்று. ஆயினும் காலத்தினுல் காதல் உற்பத்தியானபோதிலும், காலம் கழியக் கழிய காதலின் திறமும், உறமும் குன்றிக்கொண்டே வருவதை நான் நேரில் கண்டிருக்கின்றேன்.— காதல் என்னும் தீபத்தை விரைவில் எரிந்து அணைந்துபோகச் செய்ய அதனிடமே ஓர் நாளாகிய வத்தி உண்டு. சமமான நன்மை யுடையதாய் எதுவும் எப்பொழுது மிராது. நன்மை அதிகரிக்கப்பட்டால், அந்த அதிகத்தினுலேயே அது மரண மடைகிறது. நாம் எதைச் செய்ய விரும்புகிறோமோ அதை, விரும்பும்பொழுதே செய்துமுடித்தல் வேண்டும் ; ஏனெனில் இந்த விருப்பமானது, உலகில் மனிதர்களுடைய நாவும் கைகளும் அகஸ்மாத்தாய் நேரிடும் காரணங்களும் எத்தனை உளவோ, அத்தனை முறை தடைப்பட்டு மாறுவதற் கிடமுண்டு. " செய்ய வேண்டும் " என்பது பெருஞ் செலவாளியின் பெரு மூச்சினைப்போல், நன்மை பயப்பதுபோல காட்டித் துன்ப மிழைக்கும். அதிருக்கட்டும். புண்ணின் இரணத் தருகிற் புகுவோம். அமலாதித்யன் திரும்பி வருகின்றான்; வாய்ச் சொற்களான்மட்டு மன்றி வலிய உன் கரத்தின் செய்கைகளால் உனது தந்தையின் மைந்தன் என்பதைக் காட்டும்பொருட்டு நீ என்ன செய்யத் துணிவாய் ?

லீ. கோயிலி லாயினும் அவனைக் கொல்கின்றேன் !

கா. அவன் செய்த கொலைக்கு எந்த இடமும் அடைக்கல மாகக் கூடாது. பழி வாங்குதற்கு எல்லை இருக்கொணுது. ஆயினும் லீலாதரா, இது செய்கின்றாயா ? உனது வீட்டிலேயே மறைவாய்த் தங்கி யிரு. அமலாதித்யன் வந்தவுடன் நீ திரும்பி வந்த செய்தி அவன் அறிவான். கேகய நாட்டான் உன்

னைப் புகழ்ந்ததைவிட பதின்மடங்கு அதிகமாக உனது பெருமையை அதிகமாய் வர்ணித்து அவனெதிரில் கூறும்படியாக ஆட்களை ஏவுவோம். சுருக்கத்தில், உங்க ளிருவருக்கும் சண்டை மூட்டுவித்து, உங்களுக்காகப் பந்தயம் போடுகின்றோம். அவன் சூது வாது அறியாதவன், கபட மற்றவன், ஆகவே அந்த அஜாக்கிரதையில் கத்திகளைப் பரிசோதித்துப் பார்க்கமாட்டான். ஆகவே சுலபமாய், அல்லது கொஞ்சம் மாறுபாட்டினால், மழுக்கப்படாத கத்தி யொன்றைப் பொறுக்கி எடுத்து அவன் ஏமாறும் சமயம் பார்த்து உன் தந்தையைக் கொன்ற பழியைத் தீர்க்கலாம் நீ அவன்மீது.

லி. அப்படியே செய்கிறேன். அதற்காக என் கத்தியில் கடுவிஷத்தைப் பூசி வைக்கின்றேன். விஷத் தைலம் ஒன்று வயித்தியனொருவனிடமிருந்து வாங்கி யிருக்கின்றேன். அதில் ஒரு முறை தோய்த்த கத்தியினால், சற்றே கீறியபோதிலும், க்ஷணத்தில் மரணமுண்டாக்கும் சக்தி வாய்ந்தது; இரத்தம் கண்ட இடத்தில் இவ்வுலகத்திலுள்ள விஷ கண்டகமான கிடைத்தற்கரிய சஞ்சீவி ஔஷதிகளையெல்லாம் கொண்டுவந்து அரைத்துக் கட்டினாலும், மரணத்தினின்றும் காப்பாற்ற முடியாது; எனது கத்தியின் முனையை இவ்விஷத்தில் தோய்த்து வைக்கின்றேன், அவனை நான் கொஞ்சம் கீறினபோதிலும் அவன் மடிவது திண்ணமாகும்படி.

கா. இன்னும் இதைப்பற்றி நாம் யோசிப்போம். நம்முடைய எண்ணத்திற்கு ஏற்றபடி கைகூடும் வண்ணம் கால சந்தர்ப்பங்களையும் துணைக் கருவிகளையும் சீர்தூக்கிப் பார்ப்போம். காரியமும் கைகூடாமல் நமது குறைபாடுடைய செய்கையால் நமது உட்கருத்தும் வெளியாவதைவிட இதில் நாம் கா லிட்டுக்கொள்ளாததே நலம். ஆகவே ஒரு வேளை இந்தப் பிரயத்தனமானது பூர்த்தி யாகுமுன் உடைபடுமே யாகில், இதற்கு உப பலமாக, பின்னுடன் சித்தமாக வேறு இரண்டாவது பிரயத்தனம் ஒன்றிருக்கவேண்டும். பொறு,— யோசித்துப் பார்க்கின்றேன்—உங்களுடைய சாமர்த்தியத்தைப்பற்றி

நாங்கள் ஒரு சபதம் செய்கின்றோம்.—ஆம்! அகப்பட்டது. உங்கள் வரிசையில் நீங்கள் களைப்படைந்த சமயத்தில்-அதன் பொருட்டு சற்றே விரைவாக வரிசை வாங்கவேண்டும்— அவன் தாக சாந்தி கேட்பானாயின் அவனுக்காக ஒரு பானகம் சித்தம் செய்து வைக்கின்றேன் சமயத்திற்கு. அதைக் கொஞ்சம் அருந்தியபோதிலும், ஒருவேளை விஷம் பொருந்திய உன் வாளின் காயத்தினின்றும் அகஸ்மாத்தாய்த் தப்பிய போதிலும் எப்படியும் நமது எண்ணம் நிறைவேறிவிடும். ஆயினும் பொறு!— என்ன சப்தம்?

கௌரீமணி வருகிறாள்.

என்ன விசேஷம் கௌரீமணி?

கௌ. ஒன்றின்மேல் ஒன்றாய் மிதித்துக்கொண்டு வருகின்றனவே துயரங்கள், அத்தனை விரைவில் தொடர்கின்றன. ஹா! லீலாதரா! உனது தங்கை நீரில் மூழ்கி மடிந்தாள்.

லீ. நீரில் மூழ்கியா? ஐயோ! எவ்விடத்தில்?

கௌ. அங்கோரிடத்தில் ஆற்றங்கரை யோரமாக ஓர் ஆலமரம் துளிர்கள் நிரம்பிய கிளைகளெல்லாம் தெள்ளிய தண்ணீரில் பிரதி பிம்பிக்கும்படி குறுக்கே தழைத் திருக்கின்றது. அவ்விடம் ஆம்பல், அரவிந்தம், அசோகு, அரும்பு புன்னை என்று சொல்லப்பட்ட அநேக விதமான புஷ்ப மாலைகளை அலங்கோலமாய் அணிந்துகொண்டு வந்து அவள் வளைந் திருந்த மரக்கிளைகளின்மீது தான் மகுடம்போ லணிந் திருந்த மாலையொன்றை மாட்டும்படி தொத்தி ஏற, பளு பொறுக்க முடியாது கிளை முறிய, அப் புஷ்ப மாலைகளுடன் அவளும் அப்படியே அரற்றும் அவ் வாற்றில் வீழ்ந்தனள். உடனே அவளது ஆடை நீரில் பரவ, அப்படியே அவளை ஆற்று நீரில் அமிழியாமல் தாங்கி நின்றது சற்று நேரம். அச் சமயத்தில் நீரிலேயே பிறந்து வளர்ந்த சுபாவ முடையவள்போலும், அன்றி தன் நிலையின் துயரத்தைத் தெரிந்து கொள்ளாதவள்போலும், பழய பாட்டுகளில் அங்கு மிங்குமாக பாடிக்கொண்டிருந்தனள். அப்படி எத்தனை நேரம் இருக்க முடியும்?

சீக்கிரம் ஆடை யெல்லாம் தண்ணீர் கோர்த்துக் கொள்ளவே அவள் பாடிக்கொண் டிருக்கும் பொழுதே அப்படியே தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டது பேதையை !

லீ. ஐயோ ! அவள் முழுகிப்போய் விட்டனளா ஆனல் ?

கௌ. முழுகிப் போய்விட்டாள் ! முழுகிப் போய்விட்டாள் !

லீ. ஐயோ ! பேதையே ! அபலா ! தண்ணீரை அதிகமாய்ப் பெற்றிருக்கின்றாய், ஆகவே என் கண்ணீர் உனக்கு வேண்டியதில்லை. ஆயினும் இது நமது மனுஷ்ய சுபாவம் ! மானமானது என்னதான் சொன்னபோதிலும் சுபாவத்தாலுண்டான வழக்கம் நம்மைவிட் டகலாது. இவைகள் போனவுடன் பெண்களின் பேதமை வெளிப்படும்.—மகாராஜா, எனக்கு விடை யளியும் ! நான் வாய் திறந்து பேசுவேனாயின் கோபத்தாற் சுட் டெரிப்பேன், இந்தத் துக்கமானது அதனை நனைக்கின்றது. [போகிருன்.]

கா. நாம் பின் தொடர்வோம் கௌரீமணி. அவனது கோபத்தை அடக்கும்படி நான் எவ்வளவு கஷ்டப்படவேண்டிவந்தது ! இப்பொழுது இது அதை மறுபடியும் மூட்டிவிடுமென்று அஞ்சுகின்றேன். ஆகவே, நாம் பின் தொடர்வோம் வா.

[போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்.

## முதல் காட்சி.

ஓர் ஸ்மசானம்.

இரண்டு வெட்டியான்கள் மண் வெட்டி முதலிய எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

வே 1. ஏண்டா மவனே, மோசத்துக்குப் போவணும் இண்ணு தன் உசிரே தானே கொண்ணுக்கின, அவளுக்கு சமாதி ஒண்ணு இன்னடா ?

வே 2. அப்டித் தாண்டா இண்ண, நான்தான் செல்ரனே ! குயியெ வெட்ரா சரியா; நாசாதிபதிங் கல்லாம் நாயம் ஒக்காந்து பேசணுங்க, சமாதிதா இண்ணு தீமானம் பண்ணுங்களே !

வே 1. டேயப்பா ! அதெப்டிரா அது ? தன் உசிரே காப்பாத்திக் கிறத்துக்கோசரம் தன்னெ கொண்ணுக்னளா என்ன ?

வே 2. ஏண்டா, அப்டித்தா தீமானம் பண்ணுங்களே !

வே 1. அதென்னமோ அவமானம்தான், இன்னொண்ணு மில்லே. இதொ பாரு ஒரு நாயம்; நான கவனம் வெச்சி தண்ணியிலே மூப்கிப்போன, அது ஒரு 'கிரியே' ஆச்சா ? அந்தா கிரியேலே மூணு பாவம் இக்குது, எடம், பொருளு, ஏவலு, ஆனத்துனாலே அவ ஒணு மிண்ணு முய்கிப் புடடா !

வே 2. டேயப்பா ! அதெப்டிரா கேக்கரே ? அண்ணே, செல்லு பாக்கலாம்.

வே 1. செல்ரேண்டா மவனே கேளு, இந்த லெக்குலே இக்குது தண்ணி, ஆச்சா ; இந்த லெக்கிலே இக்கரான் மனுசென், ஆச்சா ; இந்த மனுசென் போயி தண்ணியிலே உய்ந்தா, இஸ்டம் இர்க்குதோ இல்லியோ அப்பொ அவன போரான், தெரிஞ்சிச்சா ? இந்தா தண்ணி அவங்கிட்ட வந்து முய்த்தி வுட்டுதா, அவன முய்கிப் போவலே. ஆனத்துனாலே தன்னு

சுரே தாறு போக்கிக்காததொட்டு தம் பேர்லெ குத்த மில்லே!

வே 2. ஏண்டா அண்ணே, இதாறு நாயம்?

வே 1. ஆமாண்டா ஆமாம்; இத்தான் நாசாதிபதிங்க நாயம்!

வே. 2. டே அண்ணே, நான் ஒரு உளுமெ செல்லட்டுமா? இவ மாத்தரம் ஆண்டெங்க வங்கிசத்திலே பொறந் திருக்காப் போறு சமாதி கிமாதி அல்லாம் இல்லாதே பிரியெ கட்டி இஸ்தூட் டிர்ப்பாங்க.

வே 1. ஆ! மவுனே! அது சென்னியே அது சரியான பேச்சி! அதாம் கலி உகம் இண்ரது! ஆண்டெங்கொ ஒணு மிண்ணு தூக்கு போட்டுக்கலாம், மூய்கிப் போவலாம்; அவங்களே போலே மனுசரு நாம்போ செய்சோ மிண்ணு தப்பு! விட்டு கடாசிடா! மம்மட்டி எடுத்துக்கினு நம்போ வேலெயெ · பாப் போம்.—வெட்டியார வேலெக்கி மிஞ்சின வேலெ எதுவு மில்லெ இந்த ஒலகத்துலே—

வே 2. ஏண்டா அண்ணே அப்டி?

வே 1. நம்போதாண்டா அல்லாரையும் மோசத்துக்கு அனுப்பிக்க ரோம்!

வே 2. டேயப்பா!

வே 1. டேயப்பா! என்றுடா? நம்போ குயி தோண்டி பொதெக் காப்போறு மோசத்துக்குப் பூடுவாங்களோ?—அது போறுப் போவுது, இன்றெண்ணு கேக்ரேன் செல்லு பாக்கலாம். ஒனக்குத் தெரியாப் போறு தெரியாது இண்ணு செல்லிடு.

வே 2. செல்லு ஆவட்டும்.

வே 1. ஒரு கல்லு தச்சென், ஒரு கொல்லென், ஒரு தச்சென், இவங் கோ எல்லாரெ காட்டியும் ரொம்ப பெலமான கட்டடம் கட்ர வன் எவண்டா?

வே 2. தூக்குமரம் பண்ரவே! அவன் கட்ர கட்டடம் ஆயிரம் பேரு கொண்ணுலும் அப்டியே ஒடியாதே இக்குதே.

வே 1. ரொம்ப புத்திசாலிதான், பரவாயில்லே, தூக்குமரம் என்னமோ நல்லத்தான். எப்படி நல்லது ? தப்பு செய்ரவங்களுக்கு நல்லது செய்யிது. நீ இன்னமோ இப்பொ கோவுலுக்காறு தூக்குமரம் பெலமானது இண்ணு சொன்னத்துலே தப்பு பண்ணே, அத்தொட்டு ஒனக்கு நல்லது செய்யும் தூக்கு மரம் ! செல்லுடா செல்லு இன்னொருதரம்.

வே 2. ஒரு கல்லு தச்சென், ஒரு கொல்லென், ஒரு தச்சென், இவங்கெல்லாரே காட்டியும் ரொம்ப பெலமான கட்டடம் கட்ரவன் எவன் ?

வே 1. ஆ ! அத்தெ செல்லி விடுவி.

வே 2. ஆ ! இப்போ செல்ரே !

வே 1. செல்லு பாக்கலாம்.

வே 2. டேயப்பா ! செல்ல முடியாது என்னாலே !—

அமலாதித்யனும், ஹரிஹரனும் தூரத்தில் வருகிறார்கள்.

வே 1. சொம்மா உம் மண்டெயெ ஒடச்சிக்காதே ! ஓடாத கழுதெயெ ஒதெச்சா ஓடப்போவுதா ? இந்த மாதிரி யாராறு இன்னொருதரம் உன்னே கேட்டா, 'வெட்டியான்' இண்ணு பதில் செல்லு. வெட்டியான் வெட்ர குயி ஒகாந்த காலம் வரைக்கும் அயியாது. போடா எம்மவனே, ஏகங் கிட்ட போயி ஒரு பல்லா கள்ளு வாங்கிக்கினு வா எனக்கு !

[இரண்டாவது வெட்டியான் போகிறான்.]

வே 1. [குழி வெட்டிக்கொண்டு பாடுகிறான்.]

காளைப் பருவத்தில், காதல் வழிச் சென்றக்கால்
காதல் வழிச்சென்றக்கால், கன்னலென் றெண்ணினேன்
கன்னல் என் றெண்ணினேன், கவலையே தின்றியே
கவலையே தின்றியே, காரணமறியேனே !

அம. செய்கிற தொழிலுக்காகச் சிறிதேனும் துக்கப்படுகிறதில்லையா இவன் ? சமாதி வெட்டுகிறதில் சங்கீதம் பாடுகிறானே !

ஹ. பலநாட் பழக்கமானது இதைச் சகஜமான தொழிலாக்கிவிட்டது இவனுக்கு.

அம. ஆம், அப்படித்தான்; வேலையில்லா வெறுங் கைக்கே விருப்பு வெறுப்பு அதிகம் உண்டு.

வே 1. [பாடுகிறான்.]

காலனவன் தானும், கள்ளத் தனமதாய்
கள்ளத் தனமதாய், காலைப் பற்றினனே
காலைப்பற்றி யென்னை, களிமண்ணா யாக்கினனே,
களிமண்ணா யாக்கினனே, கட்டழகன் எனை மறந்தே.

[ஒரு மண்டை ஓட்டை வெளியில் எறிகிறான்.]

அம. அந்தத் தலை என்பில் தசையா லாகிய நா வொன்றிருந்து நன்றாய்ப் பாடி யிருக்குமே பருவ காலத்தில்? இப்பொழுது அதை யென்ன ஏழைமையாய்ப் பாரில் மோதுகின்றான் இந்தப் படுக்காளி, ஜராசந்தன் என்பை பீமசேனன் பாரில் மோதியதுபோல்! இது துராலோசனை செய்த ஒரு துஷ்ட மந்திரியினுடைய மண்டையா யிருக்கலாம். இப்பொழுதோ துச்சமாய்ப் பாவிக்கின்றான் இந்தச் சண்டாளனும். ஈசனையே மோசஞ் செய்யக் கருதியவன் என்பா யிருக்க லாகாதா இது?

ஹ. இருக்கலாம் இளவரசே.

அம. அல்லது ஓர் பிரபுவி னுடையதா யிருக்கலாம். "தங்களுடைய தயவு மகாராஜா! தங்கள் சித்தம், என் பாக்கியம் மகாராஜா" என்று உயிருடன் இருந்தகாலை உளறியிருக்கலாம் பன்முறை! அல்லது தான் பெறவேண்டி, தனது நேசனுடைய குதிரையைப் புகழ்ந்து பேசிய தயாள குணமுடைய தனவா னுடையதா யிருக்கலாம் அல்லவா?

ஹ. ஆம், அரசே.

அம. அப்பொழுது அப்படி இருந் திருக்கலாம்! இப்பொழுது புழுக்களுக்கு வாசஸ்தலமாய் முகவாய்க் கட்டை போய்,

மயானத்து வெட்டியானது, மண் வெட்டியால் மதிப் பின்றி மோதப்படுகின்றது! இச் சகத்தின் அநித்தியத்தைப் பார்! இதைப் பிரத்யட்சமாகக் காணும்படியான அதிர்ஷ்டம் கிடைத்ததே நமக்கு! ஐயோ! இவ்வாறு குரங் காட்டத்தில் எறியப் படுவதற்கோ, குவலயத்தில் இந்த எலும்புக ளெல் லாம் கஷ்டப்பட்டு வளர்க்கப்பட்டன! இதை நினைத்தாலே என் என்புகளெல்லாம் நைகின்றன!

வெ 1. [பாடுகிறான்.]

கோடாலி மண்வெட்டி, கோடிச்சீலை யொன்றுமே,
கோடிச்சீலை யொன்றுமே, கூறிடினில் போதுமே,
கூறிடினில் போதுமே, குழியொன்று தானுமே,
குழியொன்று தானுமே, கூத்தனார் விருந்தினர்க்கே.

[இன்னொரு மண்டை யோட்டை வெளியில் எறிகிறான்.]

அம. அதோ இன்னொன்று! அது ஏன் ஒரு நியாய வாதியினுடையதா யிருக்க லாகாது? இவனது வாதங்களும், எதிர் வாதங்களும், பூர்வ பட்சங்களும், ஆட்சேபனைகளும், கோட்பாடுகளும், நியாய சட்டங்களும் எங்கே போயின இப்பொழுது? மயானக்காவலாளி மக்கிப்போன மண் வெட்டியால் தன் மண்டையில் அடித்தும் குற்றஞ் சாற்றாது குன்றி யிருப்பதேன்? உம்!—இவன் காலத்தில் இவன் ஓர் பெரிய பத்திர லிகிதனா யிருக்கலாம். அத்தனைப் பத்திரங்களும் இவனைப் பத்திரமாய்க் காக்க வகை யற்றுப் போயினவே. இவன் ஜீவ காலத்தில் அநேகம் நிலங்களை வாங்கி யிருக்கலாம். இப்பொழுது இவனுக்குக் கிட்டிய தெல்லாம் மண்டையோடு நிறைய மண் புழுதியேயோ? இவனது சொத்துகளின் மூல பத்திரங்களும் இக்குழியில் அடங்காவே! அவைகளின் சொந்தக்காரனுக்கு இதற்குமேல் கிட்டாமற் போயிற்றா?

ஹ. அதற்குமேல் ஒரு அணுவும் கிட்டாது ஐயனே.

அம. தானசாசனங்கள் பித்தளையில் செதுக்கப்படுகின்றன வல்லவா?

ஹ. ஆம், செம்பிலும் உண்டு.

அம. அதில் நம்பிக்கை வைப்பவர்கள் பித்தர்களும் வம்பர்களுந் தான். நா னிவனுடன் பேசிப் பார்க்கின்றேன்.—யாருடைய படுகுழியடா இது ?

வே 1. என்னீது ஐயா. [பாடுகிறான்.]

கூறிடினில் போதுமே, குழியொன்று தானுமே
குழியொன்று தானுமே, கூத்தனர் விருந்தினர்க்கே.

அம. உன்னுடைய தாகத்தா னிருக்கவேண்டுமென்று நினைக்கின் றேன்; அதில்தா னிருக்கின்றாய் நீ !

வே 1. எசமான் அதுக்கு வெளிப்பரமா யிருக்கைங்கோ ; அத் தொட்டு அது எசமானது அல்லா. என் வரைக்கும் நான் அதுலே இல்லாப்போனாலும் என்னீதுதான்.

அம. அதில் இருந்துகொண்டு என்னுடையதுதான் என்பதனால் அதில்தா னிருக்கவேண்டும் நீ !— எந்த மனிதனுக்காக இதை வெட்டுகின்றாய் நீ ?

வே 1. ஒரு மனுசனுக்கும் அல்லா ஆண்டே.

அம. ஆனால் எந்த மனுஷிக்காக ?

வே 1. எந்த மனுசிக்கும் இல்லே ஆண்டே.

அம. பிறகு யாரைப் புதைக்கப் போகின்றார்கள் இதில் ?

வே 1. மனுசியா இர்ந்த ஒண்ணே பொதெக்கப் போராங்கோ ! ஆண்டே, சாமி, ரச்சிக்கோணும், பாவம் ! இப்பொ பொண மா கெடக்குது அது !

அம. என்ன கணக்காகப் பேசுகின்றான் இந்தப் புலையன் ! நாம் கவனத்துடன் வார்த்தையாட வேண்டும், இல்லாவிடின் கஷ்டப்பட்டுப் போவோம் !— ஈசனே ! ஹரிஹரா, இந்த மூன்று வருட காலங்களாக கவனித்து வருகிறேன். குடியானவனுடைய கட்டை விரல், கனவானது குதிக்கா லருகில் நெருங்கி மிதிக்கும்படி அத்தனை நாகரீகம் அதிகப்பட்டு

விட்டது — எத்தனை நாளாக மயானத்து வெட்டியானு யிருக்கின்றாய் நீ ?

வே 1. வர்சத்திலே இக்கர நாள்லே எல்லாம் நம்போ பயய ராசா, பார்த்திபனேச ராசாவே செயிச்சாரே அந்த நாளு மொதலா, ஆண்டே—

அம. அது நடந்து எத்தனை காலமாயது ?

வே 1. அது தெரியாதா ஆண்டே ஒங்களுக்கு? மடையங்ககூட செல்லுவாங்களே ! நம்போ எலவரசர் இர்க்குறாரே அவரு பொறந்த நாளு அது.—இப்போ பயித்யம் புடிச்சிப் போயி சிமெக்கி அனுப்பிச்சூட்டாங்களே அவரு-—

அம. ஆம் சரிதான்; அவரை யேன் அனுப்பினார்கள் சீமைக்கு ?

வே 1. ஏனு ? பயித்யம் புடிச்சிப் போச்சி இண்ணு; அங்கே போனு அவருக்கு புத்தி சரியா பூடுமிண்ணு; அப்படி சரியா போவாபோனுக்கூட அங்கே அவ்ளவு பரவா யில்லே—

அம. ஏன் ?

வே 1. அது அவ்ளவா தெரியாது அங்கே ! அந்த ஊர்லே இர்க்கரவங்கல்லாம் அவரெப் போலேயே பயித்யம் புடிச்சவங்க, அதுலே வித்யாஷம் தெரியாது !

அம. அவருக்கு எப்படிப் பயித்தியம் பிடித்தது ?

வே 1. அது ரொம்ப ஆச்சரியமா உண்டாச்சி இண்ணு செல்ராங்கோ.

அம. எப்படி ஆச்சரியமாக ?

வே 1. புத்தி பூட்டுதாம், பயித்யம் வந்தூட்டுதாம் !

அம. எந்த விதத்தில் ?

வே 1. இந்த வெடத்திலேதான், குர்ஜரத்துலே ; நான்தான் முப்பது வர்சமா புள்ளெ ஆயி, மனுசனாயி, வெட்டியானு இர்க்கரேனே இங்கே !

அம. ஒரு மனுஷன் எத்தனை காலம் இருப்பான் பூமியில், மக்கி மண்ணாய்ப் போவதன்முன் ?

வெ 1. இப்பொ வர்றோ பொணங்கல்லா, நோவு புடிச்சதுங்க, பூமியி லே வெக்காத்துக்கு முன்னேயே மக்கிப் பூடுதுங்கோ! சாவ ரத்துக்கு மின்னியே ஒருத்தன் மக்காப்போனு, ஒரு சுமாரு ஒப்பது எட்டு வர்சம் தாங்குவான்.—வாணிய ஓடலு ஒம்பது வர்சம் தாங்கும் நண்ணு.

அம. மற்றவர்களைவிட அவன் மாத்திரம் ஏன் அதிகம்?

வெ 1. அவென் ஒடம்புலே எண்ணெ ஊறி ஊறி நண்ணு பதெனிட்டு போயிருக்கும், அத்தொட்டு தண்ணி கோத்துக்காது சீக்ரத் துலே; பொணத்தெ கெடுக்கறது இந்த தண்ணிதாம் சாமி சீக்ரத்துலே. இந்தா பாரு ஆண்டே, இந்தத் தலெயெ லும்பே, இது வந்து, ஒரு சுமாரு, இருவத்தி மூணு வர்சம் மண்லே இந்துக்குது!

அம. யாருடையது இது?

வெ 1. அது ஒரு பித்தம் புடிச்சவன்து.—யார்து இண்ணு நெனெக் ரே ஆண்டே இது?

அம. உம் உம், எனக்குத் தெரியாது.

வெ 1. அவன் எய்வெடுக்க பித்தம் புடிச்ச படுக்காளி! என் தலெ மேலெ ஊத்தனு ஆண்டே ஒரு மொந்தெ கொயும்பு சாராயத் தே ஒரு தரம்! இந்த மண்டெ ஒடு நம்ப ராசாகிட்ட அவஸ் யக்காரன் இருந்தானே, அருகே, அவன்து ஆண்டே—

அம. இதுவா?

வெ 1. அத்தா!

அம. எதோ பார்க்கலாம் [கையிலெடுத்துக்கொண்டு] ஐயோ! அரு கா! அருகா!—ஹரிஹரா, அவனை நான் நன்று யறிவேன். அபாரமான விகட முடையவன்! அதி சூட்சுமமான புத்தி யுடையவன். அவன் தன் தோட்களின்மீது என்னை ஆயிரம் முறை தூக்கி யிருக்கின்றான். இப்பொழுது அதை நினைத்தா லும் என் மனம் என்ன வெறுப் படைகின்றது! எனக்கு வாந்தி வரும்போ லிருக்கின்றது. கணக்கிடக் கூடாதபடி

நான் எத்தனையோ முறை முத்தமிட்ட உதடுகள் இங்குதானிருந்தன.— இப்பொழுது உன் விளையாட்டுகளெங்கே? விநோதங்களெங்கே? ஆடல்களெங்கே? பாடல்களெங்கே? சபையோரையெல்லாம் சந்தோஷத்தால் ஆரவாரிக்கச் செயும் உனது சாதுர்ய மொழிகளெங்கே? உனது இளிப்பையாவது ஏளனம் செய்ய ஒன்றையாவது கூறமாட்டாயா? உன் முகவாய்க் கட்டை அடியுடன் அற்றுப் போயதா? இப்பொழுது நீ புறப்பட்டு என் காதலியின் கிருஹத்துக்குப் போய் கண்ணுக்கு அஞ்சனம் அரை அங்குலம் தீட்டியபோதிலும் அவளும் உன் கதிக்குத்தான் கடைசியில் வரவேண்டுமென்று சொல்லி வா; அதைக் கேட்டு அவள் நகைக்கும்படி செய்.— அப்பா, ஹரிஹரா, எனக்கு ஒரு சமாசாரம் தெரியவேண்டும்.

ஹ. என்ன அது அரசே?

அம. விக்கிரமாதித்யன் இவ்வாறுதான் ஆயினனென நினைக்கின்றாயா, மடிந்தபின் மண்மீது?

ஹ. அப்படித்தானாயிருக்க வேண்டும்.

அம. இவ்வாறு துர்க்கந்தமாய்? அப்பா!

[மண்டை யோட்டைக் கீழே வைக்கின்றான்.]

ஹ. ஆம், அதற்குச் சந்தேக மில்லை ஐயனே!

அம. நாம் மடிந்தபிறகு என்ன என்ன அற்ப விஷயங்களுக்கு உபயோக மாகும்படி மாறுகின்றோம், ஹரிஹரா, விக்கிரமாதித்யனுடைய உத்தமமான உடல் சாளரத் துவாரத்தை அடைக்கும் மண்ணும்வரையில் அதன் மாறுதல்களை நாம் ஏன் நமது மனத்தால் எண்ணிப் பார்க்கலாகாது?

ஹ. அவ்வாறு யோசித்தல் அவ்வளவு உசிதமா யிராது.

அம. அல்ல, அணுவளவும் அல்ல; அந்த மார்க்கத்தி லெல்லாம் நாம் மரியாதையுடன் பின் தொடர்கிறோம் அவரை! ஒரு

வேளை அதே மார்க்கத்தில் நாமும் போகவேண்டி வரினும் வரும். இந்தப் பிரகாரம்; விக்கிரமாதித்யன் மரித்தான், விக்கிரமாதித்யன் மண்ணில் புதைக்கப்பட்டான், விக்கிரமாதித்யன் மண்ணுனுன் மறுபடியும், அந்த மண்தான் புழுதி, புழுதியைச் சேறுக்குகின்றோம், சேற்றிலிருந்து களிமண் எடுக்கின்றோம், முன்பு விக்கிரமாதித்யனு யிருந்து பின்பு களிமண் உருண்டையாய் மாற்றப்பட்ட அதைக்கொண்டு மது பாண்டத்தின் ஒட்டையை ஏன் அடைக்கலாகாது ?

மன்னர்தம் மன்னவனும் விக்கிரமா தித்தியனும்
மடிந்து மண்ணுய்த்
தென்றலுமே புகாவண்ணம் மூடற்கா ஞனந்தோ
தெருவின் சந்தை
என்றுமிர்மண் டலமெல்லாம் மதித்திடச்செய்
யவன்மண்ணும் எய்து கின்ற
இன்றுமழைக் குளிர்மாற்றும் மட்சுவரை
அடைத்திடவே யியைவ தென்றே ?

பொறு ! பொறு ! ஒரு புறம் !— இதோ மகாராஜா வருகிறுர்.

பண்டாரங்கள் முதலானேர் தேவாரம் பாடிக்கொண்டு வருகிறுர்கள்.

அபலேயின் பிரேதம் கொண்டுவரப்படுகின்றது.

லீலாதரன், காலதேவன், கௌரீமணி, முதலானேர் வருகின்றனர்.

அம. மகாராணி ! பரிஜனங்கள் ! யாருடைய சபத்தை இவ்வாறு பின் தொடர்ந்து வருகின்கிறுர்கள் ? சமாதிச் சடங்குகளும் பின்னப்பட்டிருக்கின்றன. இதனுல் இவர்கள் பின்தொடரும் சவமானது தன்னுயிரைத் தன் கையால் போக்கிக்கொண்ட பிராணியினுடையதா யிருக்க வேண்டுமென்று தெரிகிறது. யாரோ கொஞ்சம் அந்தஸ்திலிருந்தவர்களுடையதா யிருக்க

வேண்டும். நாம் பதுங்கி யிருந்து சற்றே பார்ப்போம்.

[ஹரிஹரனுடன் ஒரு புறமாக ஒதுங்கி நிற்கின்றான்.]

லீ. இன்னும் என்ன சடங்குகள் ?

அம. அதோ அவன்தான் லீலாதரன், மிக்க உத்தமமான இளை ஞன் ; கவனி.

லீ. இன்னும் என்ன சடங்குகள் ?

ப. அந்த அம்மாளுடைய சமாதிக் கிரியைகளெல்லாம் நாங்கள் எவ்வளவு செய்ய உத்தரவுண்டோ அவ்வளவு செய்து முடித்தோம். மடிந்த விதமென்னமோ கொஞ்சஞ் சந்தேகத் திற் கிடமானது. நடக்க வேண்டிய ஒழுங்கைப் பெரிய இடத்து ஆக்கினை மாற்றி யிராவிட்டால் இந்த அம்மாள் சமாதி என்பதையே பெறாது சர்ம பூமிக்கு வெளியாகச் சாதாரணமாய்ப் புதைக்கப்பட் டிருக்கவேண்டும் கடை யுகம் வரையில். விபூதிக்குப் பதிலாக வெறுங் கல்லையும் கட்டியை யுமே போட்டிருக்கவேண்டும். இப்பொழுதோ கன்னிகைக் கோலமாய்க் கடிமலர் புனைந்து சர்வ மங்கள வாத்தியத்துடன் ஸ்மசான பூமிக்குக் கொண்டுவந்து சேர்த்தோம் !

லீ. செய்யக் கூடியது வேறொன்று மில்லையா ?

ப. அதற்குமேல் செய்ய லாகா தொன்றும். சாதாரணமாக சமாதி நிஷ்டையில் உயிர் துறந்தவர்களுக்குச் செய்யும் சடங்குகள் இங்கு செய்வோமாயின் அது சமாதிச் சடங் கிற்கு ஓர் பெரிய அபவாத மாகும்.

லீ. வையுங்கள் சவத்தைச் சமாதியில் ; பரிசுத்தமான அவள் அழ கிய உடலினின்றும் பாரிஜாத மலர் உற்பத்தி யாகுமாக !—பண் டாரப் பதரே ! நான் சொல்வதைக் கேள். நீ நரகத்தில் நாறிக் கிடக்கும்பொழுது என் தங்கை சுவர்க்கத்தில் சுகமாய் வசித்துக்கொண் டிருப்பாள் !

அம. என்ன ! அழகிய அபலையா ?

கௌ. கண்ணே ! என் கண்ணின் கருமணியே ! கண்வளராய் ! கண் வளராய் ! [புஷ்பங்களைத் தூவுகிறாள்.]

என்றன்மகன் மனையாவாய் என்றெண்ணி யிருந்தேன் நான்
இன்னவிதம் உனைக்காண எதுபாவம் செய்தேனோ ?
நின்சயன மிசைமலரை நினைத்திட்டேன் பரப்பிடவே
அன்னமேயிப் பாடைமிசை அமர்ந்திடப்பாழ்ங் காலமிதோ

லீ. உத்தமமான உன் மதியைக் கெடுத்து, உத்தமியே, உன்னை இக்கதிக்குக் கொண்டுவந்த பாதகனுக்கு உனக்கு நேர்ந்ததினும் பதினாயிர மடங்கு கேடான கதி சம்பவிக்குமாக !— பொறுங்கள் சற்றே மண்ணைத் தூவாது ; என் தங்கையைக் கடைசி முறை என் கரத்தால் கட்டி யணைக்கின்றேன் !

[சமாதிக்குள் குதிக்கின்றான்.]

இப்பொழுது போடுங்கள் மண்ணை, இறந்த பிணத்தின்மீதும் இருக்கும் பிணத்தின்மீதும் ஒன்றாக, இந்தச் சம நிலமானது வானத்தை யளாவும் நீலகிரியினும் பழமையான இமயமலையினும் அதிக உன்னதமாம் மலை யொன்றாகும்படி, எங்கள் தலைமீது.

அம. [முன்வந்து] அவ்வளவு அதிகமாய் எடுத்துச் சொல்லத்தக்க துயரம் உடையவன் யார் அவன் ? ஆருடைய அடங்காத் துக்கத்தைக் கண்டு ஆகாயத்திற் செல்லும் கிரஹங்களும் அசைவற்று நின்றுபோய் ஆச்சரியப்படுகின்றன ? இதோ நான் அமலாதித்யன் ! [சமாதிக்குள் குதிக்கின்றான்.]

லீ. யமன் உன்னுயிரைக் கொண்டு போக !

[அவனைக் கட்டிப் பிடித்து]

அம. உனக்கு ஆசீர்வாதம் செய்யத் தெரியவில்லை. நான் சொல்வதைக் கேள், எடு உன் கையை என் கழுத்தினின்றும். நான் ஆத்திரமும் அடங்காக் கோபமு மில்லாதவனாயினும் என்னிடம் அபாயகரமான குண மொன் றிருக்கின்றது, பத்திரம், அதற்காகப் பய மிருக்கட்டும் உன்னிடம் சற்றே ! எடு உன் கையை !

கா. அவர்களைப் பிரித்துவிடுங்கள்!

கேள. அமலாதித்யா! அமலாதித்யா!

எல்லோரும். ஐயா! ஐயா!

ஹ. என் அரசே, சற்றே சாந்தப்படுத்திக் கொள்ளும்.

[சேவகர்கள் அவர்களைப் பிரித்துவிட, அவர்கள் சமாதியினின்றும் வெளியே வருகிறார்கள்.]

அம. ஏன்? என் கண் இமைக்குஞ் சக்தியற்றுப்போகிற வரையில் இவ்விஷயமாக அவனுடன் நான் சண்டை செய்கிறேன்!

கேள. ஐயோ! என் கண்ணே! என்ன விஷயத்திற்காக?

அம. நான் அபலையீது காதல்கொண்டிருந்தேன். பதினாயிரம் அண்ணன் தம்பிகளுடைய ஆசையை ஒருங்கு சேர்த்தாலும் என் காதலின் காற் பங்கு ஆகாது.— அவள் பொருட்டு என்ன செய்வாய் நீ?

கா. ஐயோ, அவனுக்குப் பித்தம் பிடித்துவிட்டது லீலாதரா.

கேள. உங்களுக்குப் புண்ணியமாகும், யாராவது தடுங்கள் அவனை!

அம. ஈசன்மீதாணை! உன்னால் என்ன செய்ய முடியுமோ காட்டு பார்ப்போம். கண்ணீர் விட்டழுகிறாயா? கையால் சண்டை போடுகிறாயா? பட்டினியிருக்கின்றாயா? பல துண்டமாக உன்னுடலைக் கிழித்துக் கொள்ளுகிறாயா? காடிச் சாராயம் குடிக்கின்றாயா? முதலையை விழுங்குகின்றாயா? அதை நானும் செய்கின்றேன்! கூக்குரலிடவா இங்கு வந்தாய்? அவளுடைய சமாதியிற் குதித்து என்னை ஏளனமா செய்யப் பார்க்கிறாய்? உயிருடன் உன்னையும் புதைக்க உடன்படுகின்றனையா உன் தங்கையுடன்? அவ்வாறே நானும் செய்கின்றேன். குன்றுகளைப்பற்றி வாயாடுவதானால், நம்மிருவர் மீதும் மலை மலைகளாக அடுக்கி, பூமியை உயர்த்தி, பானுவின் மண்டலமதை முட்டி, சிகரம் கரிந்து, இமயமலையே எறும்புப் புற்றென மதிக்கச் செய்யட்டும்! அல்லது வீணா வார்த்தை

யாடுவதானால் சொல், உன்னைப்போல் நானும் வாயாடுகின்றேன் !

கௌ. ஐயோ ! இது வெறும் பயித்தியம் ! பித்தம் அதிகரித்துவிட்டால் இவ்வாறுதான் கொஞ்சம் நேரம் பிதற்றுவான், பிறகு முட்டை யிட்ட பெட்டைப் புறுவைப்போல் தலை வணங்கி முகம் வாடிப் பேசாது வாளா இருப்பான்.

அம. ஏன் ஐயா ? என்னை யேன் இவ்வாறு அவமதிக்கின்றாய் ? உன் மீது நான் எப்பொழுதும் பிரியம் வைத்திருந்தேனே !— சரி பெரிதல்ல, பீமசேனன் எதிர்த்துப் பேசிய போதிலும், பூனை கத்தித்தான் தீரும், நாய் குலைத்துத்தான் தீரும்.

[போகிறான்.]

கா. அப்பா, ஹரிஹரா, அவனைப் பின் தொடர்ந்து செல்.

[ஹரிஹரன் போகிறான்.]

[லீலாதரனுக்கு] நேற்றிரவு நாம் கூறியதைக் கொண்டு உனது சாந்தத்தைச் சற்றே திடப்படுத்திக் கொள் ; அந்த விஷயத்தை நாம் உடனே முடிவுக்குக் கொண்டுவருவோம்.— கண்ணே, கௌரீமணி, உனது மகனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி யாரையாவது திட்டம் செய்து வை. இந்தச் சமாதியை என்றும் மறவா வண்ணம் சாஸ்வதமான கட்டடம் ஒன்று கட்டுவோம். சீக்கிரம் கவலை யெல்லாம் நீங்கிச் சுகமாய்க் காலம் கழிப்போம் ; அதுவரையில் நமது காரிய மெல்லாம் சாந்தமாகத்தா னிருக்கவேண்டும்.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி.

அரண்மனையிலோர் மண்டபம்.

அமலாதித்யனும், ஹரிஹரனும் வருகின்றார்கள்.

அம. அப்பா, இதைப்பற்றி அவ்வளவு; இனி மற்றொன்றைப் பற்றி எடுத்துரைக்கின்றேன் உனக்கு—அதைச் சார்ந்த விஷயங்களெல்லாம் ஞாபகமிருக்கின்றதல்லவா உனக்கு?

ஹ. ஞாபகம் இருக்கின்றதா என்றோ கேட்கின்றீர் அரசே!

அம. அப்பா, என்னைக் கண்ணுறங்கவிடாதபடி என் மனத்தில் ஓர் விதமான கலக்கமொன்றிருந்தது. கடுவிலங்கிடப்பட்ட கப்பற்றிருடர்களைப் பார்க்கிலும் என் கதி அதிக கஷ்டமாய்த் தோன்றியதெனக்கு. நான் முன் பின் யோசியாது முரட்டுத்தனமாய்—அதனையும் புகழ வேண்டியிருக்கின்றது அநேக சமயங்களில், நாம் ஆய்ந்து செய்யும் கருமங்களெல்லாம் பயன் படாது பாழாகிப் போக, சில சமயங்களில் ஆராய்ந்து பாராது அவசரப்படுவதே அனுகூலத்தைத் தருவதாகின்றது நமக்கு என்பதை நாம் அறியவேண்டும். நம் மிச்சைப்படி நமது கருமங்களை நாம் எவ்வளவுதான் முடித்திட முயன்றபோதிலும், தன்னிச்சைப்படி முடித்திடும் தயாபரன் சங்கற்பமொன்றிருக்கிறது தரணியின் மீது, என்பதை அது நமக்குக் கற்பிக்கின்றது.

ஹ. அது மிகவும் நிச்சயமே.

அம. எனது கப்பல் அறையினின்றும் எழுந்தவனாய கறுப்புக் கம்பள ஆடையால் உடன் முழுதும் போர்த்தவனாய், கருக்கிருட்டில் அவர்களிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க அடிமேல் அடி வைத்துச் சென்றேன்; இச்சைப்படி நேர்ந்தது; அவர்களுடைய பைக்குள் பைய என் கையை விட்டுப் பார்த்தேன்; பிறகு முடிவில் விரைவாக என் சொந்த அறைக்குத் திரும்பினேன். அப்புறம், எனக்கிருந்த பயத்தில், நன்னடத்தையை மறந்தவனாய், தைரியங்கொண்டு, அவர்களு

டைய சாசனங்களின் முத்திரையை உடைத்துப் பார்த்தேன். அங்கே நான் கண்டது அப்பா ஹரிஹரா !—என்ன அரசனது அக்கிரமம் !— குர்ஜரத்தின் க்ஷேமத்தின் பொருட்டும், சிங்களத்தின் க்ஷேமத்திற்காகவும், இன்னும் இப்படிப்பட்ட அநேக விதமான காரணங்கள் பொருட்டும், அதைப் பார்வையிட்டவுடன், கால தாமதம் கொஞ்சமேனுமின்றி, வெட்டுக் கத்தியைக் கூராக்கவும் விருதாவில் காலம் கழிக்காது, என்னைச் சிரச் சேதம் செய்துவிட வேண்டுமென்று உத்தரவு ஒழுங்காய் வரைந்திருந்தது.

ஹ. இப்படியும் இருக்குமா !

அம. இதோ அந்தச் சாசனம், அவகாசம் அதிகமா யிருக்குங்கால் ஆதியோ டந்தமாய்ப் படித்துப்பார் அதை. பிறகு நான் என்ன செய்தேன் என்பதைக் கேட்க விரும்புகிறாயா ?

ஹ. ஆம், நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அம. கபடத் தனத்தால் நான்கு புறமும் இவ்வாறு கவரப்பட்டவனாய்— நான் நாந்தி பாடி முடிவதன்முன் அவர்கள் நாடகத்தையே ஆரம்பித்துவிட்டார்கள்.—ஆகவே நான் உட்கார்ந்து வேறொரு சாசனத்தை உற்பத்தி பண்ணினேன். பிறகு அதை ஒழுங்காய் வரைந்தேன். நமது அரண்மனை உத்தியோகஸ்தர்கள் எண்ணுவதுபோல் நானும், ஒரு சமயம் அழகாய் எழுதுதல் அற்பத்தனமென எண்ணி, அவ்வித்தையை மறந்திட அதிகமாய் முயன்றேன். ஆயினும் அது இச்சமயத்தில், எனக்கு மிகவும் பிரயோஜனப்பட்டது.—நான் எழுதியதின் தாற்பரியத்தை அறிய விரும்புகிறாயா ?

ஹ. ஆம், என் அரசே.

அம. மகாராஜா அவர்கள் மிகவும் வற்புறுத்தி வேண்டுவதாக, சிங்களத் தரசன் தனக்கு நம்பிக்கையுடைய நண்பனைபடியாலும், தங்க ளிருவருக்குள் அன்பானது தாளிப் பனைபோல் தழைத் தோங்க வேண்டியபடியாலும், சமாதானமாய் எங்கும் சம்பா நன்கு விளைய வேண்டியபடியாலும், இருவருடை

ய கட்டும் இணை பிரியா திருக்க வேண்டியபடியாலும், இவ்விதமாகப் பெருத்த விஷயங்க ளடங்கிய, 'படி' களையெல்லாம் அதிகமாய் அடுக்கி,— இதில் வரைந்ததைப் பார்த் தறிந்தவுடன், மேலொன்றும் யோசித்துப் பாராமல், ஏறக் குறைய ஈசனைத் தியானிக்கும் காலமும் விடாது, இதைக் கொண்டு வருபவர்களை உடனே கொன்றுவிட வேண்டுமென்று, வரைந்தேன்.

ஹ. இதை எப்படி முத்திரை செய்தீர் ?

அம. ஏன், ஈஸ்வர சங்கற்பம் இதிலும் ஒத்திருந்தது. என் பையில் என் தந்தையின் முத்திரை மோதிர மிருந்தது, அதினின்றும் தான் அச்சு வார்க்கப்பட்டது அந்த குர்ஜரத்தின் முத்திரை. பிறகு அந்தச் சாசனத்தைப்போல் மடித்து மேல் விலாசம் எழுதி, முத்திரை யிட்டு, பக்குவமாய் வைத்து விட்டேன், மாற்றியதை மற்றெவரும் அறியாதபடி. பிறகு, மறுநாள் தான் நாங்கள் சமுத்திரத்தில் சண்டை போடும்படி நேர்ந்தது ; அதன் பிறகு நடந்ததை நீ முன்பே அறிந்திருக்கின்றாய்.

ஹ. ஆகவே கிரிதரனும் ராஜகாந்தனும் அக்கதிக்குத்தான் போயிருக்கவேண்டும்.

அம. ஏன், அப்பா, அவர்களே அத்தொழிலிற்கு அத்தனை ஆசைப் பட்டார்களே ; அவர்களைப்பற்றி மனத்தில் எனக்குக் கவலையொன்று மில்லை. அவர்கள் செய்கையாலேயே அவர்களுக்கு மரணம் சம்பவித்தது. இரண்டு ஆட்டுக் கடாக்கள் முட்டி மோதிச் சண்டையிடுங்கால் இடையில் இரத்தம் குடிக்க வந்த நரியின் கதியைப்போல், பல முடை இருவர் பொரும் சமயம் மத்தியில் வரும் மடையர்கள் கதி அபாயகரமானதே !

ஹ. ஐயோ ! இதென்ன அரசன் இவன் !

அம. உனக்குத் தோற்ற வில்லையா ? இப்பொழுது என் கடைமை யன்றோ இவனை நான்—எனது தந்தையைக் கொன்று, என்

தாயாரை வேசையாக்கி, நான் கோரிய அரசாட்சிக்கும் எனக்கும் இடையில் வந்து முளைத்தவனுகி, என் உயிரைக் கொள்ளத் தூண்டி விட்ட இவனை—அதுவும் அத்தனை வஞ்சக வழியில்—இப்படிப்பட்டவனை என் கையினுல் கொல்லவேண்டியது அவசியமான தர்ம மன்ருே? மனுஷ்ய ஜன்மத்தையே கெடுக்கப் பிறந்த இக் கொடும் பாபி இன்னும் கெடுதி செய்ய விடுதல் மிகவும் பாதகம் அன்ருே?

ஹ. அங்கே நடந்த விஷயத்தின் முடிவு அவனுக்குச் சிங்களமிருந்து சீக்கிரம் தெரிந்து போகுமே.

அம. ஆம் சீக்கிரமே, அதுவரையில் காலம் என்னுடையது. ஒன்று என்று எண்ணுவதன்முன் ஒரு மனிதன் உயிர் போகுமல்லவா? ஆயினும் அப்பா ஹொரிஹரா, லீலாதரனிடம் நான் என்னை மறந்து பேசினேன் என்பது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது. எனக்கிருக்கும் காரணத்தின் உருவைக் கொண்டு அவனுடைய காரணமும் இப்படிப்பட்டதென்று நான் பார்த்தறிகின்றேன். நான் அவனது மன்னிப்பைக் கேட்கிறேன். ஆயினும், அவன் துக்கத்தைப் பாராட்டிய தைரியமானது எனக்கு உன்னதமான கோபம் விளைத்தது.

ஹ. பொறும்.— யார் இங்கு வருவது?

அசுரன் வருகிருன்.

அ. இளவரசர் க்ஷேமமாய் குர்ஜரம் திரும்பியது எங்களுக்கெல்லாம் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கின்றது.

அம. உமக்கு மிகவும் வந்தனஞ் செய்கிறேன் ஐயா,—இந்த வெட்டுக் கிளியைத் தெரியுமா உமக்கு?

ஹ. தெரியாதரசே.

அம. மிகவும் மெச்சத் தக்கதே உமது மன நிலைமை, ஏனெனில் இவரைத் தெரிந்திருத்தலே ஒரு துர்க்குணமாம். இவருக்கு ஏராளமான நிலங்களுண்டு, அதுவும் வளமையுடையன. ஒரு மிருகமானது மற்ற மிருகங்களுக்கெல்லாம் தலைமைய

தாக இருந்தால் அரசன் போஜனம் கொள்ளுமிடத்தில் அதற்கும் உண வளிக்கப்படும். அது ஒரு அண்டங் காக்கை தான், ஆயினும் அதற்குப் புழுதி அளவற்ற துண்டு, புரண்டு கிடக்க.

அ. என் இனிய அரசே, உமக்குச் சாவகாசமா யிருந்தால், மகா ராஜாவிடமிருந்து உமக்கு ஒரு விஷயம் தெரிவிப்பேன்.

அம. ஐயா, அதை நான் மிகுந்த கவனமுள்ள மனத்தினுடைய் பெற்றுக்கொள்ளுவேன். உமது தலைப் பாகையைத் தவறான வழியி லுபயோகப்படுத்தாதீர், அது தலைக்கே உரித்தானது.

அ. அரசே, என்னை மன்னிக்கவேண்டும், மிகவும் ஒடுக்கமா யிருக் கிறது.

அம. இல்லை. என்னை நம்பும், மிகவும் குளிர்ச்சியா யிருக்கிறது, காற்று வடக்குப் புறம் அடிக்கிறது.

அ. ஆம், ஒருவாறு குளிர்ச்சியாகத்தா னிருக்கிறது அரசே.

அம. ஆயினும் எனக்குத் தோற்றுகிறது மிகவும் புழுக்கமா யிருப்ப தாக ; என் முகமெல்லாம் வியர்க்கின்றது.

அ. ஆம், அதிகமாய், அரசே ; மிகவும் புழுக்க மாய்த்தா னிருக் கிறது இப்படி—எப்படி என்று என்னால் கூற முடியாது— அரசே, மகாராஜா அவர்கள் தங்கள்மீது ஒரு பெரும் பந்த யம் வைத்திருப்பதாகத் தெரிவிக்கச் சொன்னார் உம்மிடம். அரசே, அதன் விஷயம்—

அம. உம்மை நான் வேண்டிக் கொள்ளுகிறேன்—ஞாபக மிருக் கட்டும்—

[அமலாதித்யன் அவரைத் தலைப் பாகையை அணியும்படி செய் கிறான்.]

அ. இல்லை, உண்மையாகவே, என் சவுக்கியத்தின்பொருட்டே, வாஸ்தவத்தில். அரசே, லீலாதரர் இப்பொழுதுதான் அரண் மனைக்குத் திரும்பி வந்திருக்கின்றார் ; என் வார்த்தையை நம்பும், உத்தமமான கனவான், நானாவிதமான • நற்குணங்

MAHAMAHOPADHYAYA
Dr U. V. SWAMINATHAIYAR LIBRARY,
BESANTNAGAR, MADRAS-41.

கள் பூரணமாய்க் குடிகொண் டிருப்பவர், மிகவும் மிருதுவான சுபாவ முடையவர், வெளிக்கு வெகு காம்பீர முடையவர், பிரியமா யவரைப்பற்றிப் பேசுங்கால், உத்தம புருஷர்களு டைய இலட்சணங்களுக் கெல்லாம் அவரை யோர் களஞ்சிய மெனக் கூறவேண்டும், உத்தம புருஷனுக் குரிய குணங்களில் எதைக் காண வேண்டினும் அவரிடம் ஏராளமாய்க் காண லாம்.

அம. ஐயா, அவருடைய இலட்சணங்களை அடுக்கிக் கூறுவதில் உம்மிடம் அவதூறு கிடையாது. அவரது குணங்களை யெல் லாம் கணக்கிடுவதென்றால் மனத்திற்கே மயக்கத்தைத் தரும் என்பது நான் அறிந்திருக்கிறேன். உயர்த்திக் கூறும் உண் மையில் அவரை உத்தமமான வஸ்துவை யுடைய வோர் உயிரென உள்ளத்தில் எண்ணுகிறேன். கிடைத்தற் கரிய குணமும் அருமையும் அவரிடம் குடிகொண் டிருப்பதால், அவரைப்பற்றி உண்மையை உரைப்பதாயின் அவருக்குச் சமானத்தைக் காட்டுவது அவரது கண்ணாடியே ; அங்ஙன மின்றி அவரது உருவத்தை வர்ணிக்கப் புகுபவர்கள் அவ ரது அருவத்தையே வர்ணிக்கக்கூடும், அவ்வளவே.

அ. இளவரசர் அவரைப்பற்றி எடுத் துரைப்பதில் இம்மி யளவும் தவறில்லை.

அம. சங்கதியின் சம்பந்தம் என்ன ஐயா ? என்ன காரணம்பற்றி நமது புன்மையான நாவினால் இந்தப் பெரிய மனுஷனைப் பூசி மெழுகுகின்றோம் ?

அ. ஐயா ?

ஹ. வேறு வார்த்தையால் இந்த விசேஷத்தை யறிய முடியாதா ? ஐயா, கொஞ்சம் முயன்று பாரும் உண்மையில்.

அம. எதற்காக இந்தப் பெரிய மனுஷ்யருடைய பெயரை எடுத் துரைத்தது ?

அ. லீலாதரரையா ?

ஹ. அவரது பெட்டி இதற்குள் காலியாய்விட்டது, நாணயமாம் அவரது வார்த்தைகள் எல்லாம் செல வழிந்துபோயின.

அம. அவரைப்பற்றித் தான் ஐயா.

அ. நீர் அறியாதவ ரல்ல, என்று எனக்குத் தெரியும்—

அம. ஐயா, அதை நன்று யறிவீராக எனக் கோருகிறேன் நான். ஆயினும் அப்படிச் செய்வீராயின், அது எனக்கு உசிதமா யிராது— நல்லது ஐயா.

அ. நீர் அறியாத விஷய மன்று, லீலாதார் எவ்வளவு கெட்டிக்கா ரர் என்பது.

அம. அதை ஒப்புக்கொள்ள எனக்குத் தைரிய மில்லை, ஏனெனில் பிறகு, சிறந்த குணத்தில் என்னையும் அவரையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டி வரும்; ஆயினும், ஒரு மனிதனை நன்று யறிவ தென்றால், தன்னைத் தான் அறிதலே யாம்.

அ. நான் சொல்ல வந்தது அவருடைய ஆயுதப் பழக்கத்தைப் பற்றி; ஆனால் அவரைப்பற்றி அவர்கள எடுத் துரைக்கும் புகழ்ச்சியில் அவர் சரி சமானம் இல்லாதவரே.

அம. அவருடைய ஆயுதம் என்ன ?

அ. உடைவாளும் கட்கமும்.

அம. அவை அவரது இரண்டு ஆயுதங்களாம்: நல்லது அப்புறம்.

அ. அரசே, மகாராஜா அவர்கள் அவருடன் ஆறு அரபிக் குதி ரைகள் பந்தயம் வைத்திருக்கின்றார். இதற்கு எதிராக அவர், நா னறிந்தபடி ஆறு கேகய நாட்டு வாட்களையும் கட்கங்களையும் அவைகளுக் குரிய முஸ்தீப்புகளுடன், பந்த யம் வைத்திருக்கின்றார். அவற்றுள் மூன்றின் முஸ்தீப்பு கள் மிகுந்த அழகிய வேலைப்பா டுள்ளன, கையிற் பிடிப்ப தற்கு அழகாய் அமைந்தன, அதிக விலை யுயர்ந்தன.

அம. எதை முஸ்தீப்புகள் என் றழைக்கின்றீர் ?

ஹ. நீர் பேசி முடியுமுன் இப் பே ரறிஞரால் போதிக்கப்பட

வேண்டுமென்று முன்பே தெரியுமெனக்கு.

அ. ஐயா, முஸ்தீப்புகள் என்றால் தொங்கட்டங்கள் முதலியன.

அம. பீரங்கிகளை நமது பக்கலில் தூக்க முடியுமாயின், அவ் வார்த்தையானது விஷயத்திற்கு ஏற்றதா யிருக்கும். அது வரையில் அது தொங்கலாகவே யிருக்குமெனக் கோருகிறேன். ஆயினும் அப்புறம் சொல்லும். ஆறு அரபிக் குதிரைகளுக்கு எதிராக பிருந்த அழகிய வேலைப் பாடு அமைந்த விலை யுயர்ந்த தொங்கட்டங்களுடைய ஆறு கேகய நாட்டு உடைவாட்கள், அது குர்ஜரப் பந்தயத்திற் கெதிராக கேகய நாட்டுப் பந்தயம். நீர் கூறுகிறபடி, இந்தப் பந்தயம் ஏன் கட்டப்பட் டிருக்கிறது ?

அ. மகாராஜா அவர்கள் நீங்கள் இருவரும் லாகவம் பழகுவதில், பனிரண்டு முறையில், மூன்று தரத் துக்குமேல் உம்மை அவர் குறிப்படுத்த முடியாதென்று பந்தயம் வைத்திருக்கிறார். பன்னிரண்டிற்கு ஒன்பதாகப் பந்தயம் வைத்திருக்கிறார். இளவரசர் இதற் குடன்பட்டால் இது உடனே பரீட்சைக்கு

ரம.

அம. நாம் மாட்டேன் என்றாலோ ?

அ. நான் சொல்ல வந்தது வாள் பரீட்சையில் நீர் அவரை எதிர்ப்பதாயின் என்றே.

அம. ஐயா, நான் இங்கு மண்டபத்தில் உலாவிக்கொண் டிருக்கின்றேன். பகலில் இதுதான் எனக்குச் சாவகாசமான சமயம் என்று அரசருக்கு இஷ்ட மிருக்கு மாயின் அறிவியும் அவரிடம். ஆயுதங்கள் கொண்டு வரப்படட்டும், அச் சீமானும் இசைவதாய், நமது கோமானும் கூறிய வாக்கின்படி நிற்பதாயின், என்னா லியன்றபடி அவர்பொருட்டு ஜெயிக்கின்றேன், இல்லாவிடிலோ, நான் அடையும் லாப மெல்லாம் வெட்கமும் அதிக வெட்டுகளுமே யாம்.

அ. நீர் உரைத்த வண்ணம் அப்படியே நான் உரைப்பதா ?

அம. அந்த அர்த்தம் ஆகும்படி அமைந்திடும், அதற்குமேல் அலங்காரம் எல்லாம் உமது அறிவைப் பொருந்தியது.

அ. இளவரசருடைய சித்தம் என் பாக்கியம்.

அம. தங்களுடையதே எல்லாம்.

[அசரன் போகிறான்.]

அதை அவன்தான் கூறவேண்டும், இல்லாவிடின் அப்படிக் கூறுவார் வேறொருவரு மில்லை.

ஹ. இந்தக் கோழிக் குஞ்சு குடுமியையும் கொண்டு ஓடுகின்றது தன் தலைமீது.

அம. முன்னால் உத்தரவு பெற்றே முலைப்பா லருந்தி யிருப்பானிவன். இவனும், இவனை யொத்த அநேகரும், நான் அறிந்தபடி காலத்திற்குத் தக்கபடி தாளமும், சமயத்திற்குத் தக்கபடி வேஷமும் புனைந்து, புவியில் புன்மக்களால் புகழப்படுகிறார்கள். சில அடுக்கு வார்த்தைகளைக் கற்று அதைக் கொண்டு அவர்கள் மூடத்தனத்தை மூடிப் பொதிந்தவராய் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைச் சற்று ஆழமாய் ஆராய்ந்து பார்த்தாலோ, அவர்களது அற்பத்தன மெல்லாம் அரைக் கணத்தில் நீர்க் குமிழியைப்போல் அழிந்துபோம்.

பிர| ஒருவன் வருகிறான்.

பி. அரசே, மகாராஜா அவர்கள் வாலிபனாகிய அசரனை உம்மிடம் அனுப்பியதற்கு, அவன் தாங்கள் மண்டபத்தில் மகாராஜாவை எதிர் பார்ப்பதாக பதில் கொண்டு வந்தான். லீலாதரருடன் இப்பொழுதே கத்தி விளையாடுவதற்கு உமக்கு இச்சையிருக்கின்றதோ அல்லது கொஞ்சம் காலம் கழித்துச் செய்வதற் கிஷ்டமோ என அறிந்து வரும்படி அனுப்பினாரென்னை.

அம. எனது தீர்மானங்களி னின்றும் நான் மாறுவதில்லை, அவைகளோ அரசரது இச்சையைப் பின் தொடர்கின்றன. அவர் உத்தரவு செய்யச் சித்தமா யிருந்தால் நான் செய்வதற்குச் சித்தமா யிருக்கிறேன். என் தேக பலம் இப்பொழுது திருப்

பதுபோல் இருந்தால், இப்பொழு தாளுலுஞ் சரியே எப் பொழு தானாலும் சரியே.

பி. மகாராஜா, மகாராணி, எல்லோரும் வருகிறுர்கள் இங்கு.

அம. சரியான சமயம்.

பி. கத்தி விளையாட்டு ஆரம்பிக்குமுன் லீலாதாருடன் தாங்கள் நல்ல வார்த்தை ஏதாவது பேசவேண்டு மென்று மகாராணி அவர்கள் விரும்புகிறுர்கள்.

அம. அவர்கள் எனக்குக் கூறும் புத்திமதி உசித மானதே.

[பிரபு போகிறுன்.]

ஹ. இளவரசே, இந்தப் பந்தயத்தை நீர் இழப்பீர்.

அம. நான் அவ்வாறு நினைக்க வில்லை. கேகயத்திற்குப் போனபின் நான் இடைவிடாது அப்பியாசம் செய்து வந்திருக்கின் றேன்; நான் எப்படியும் ஜெயிப்பேன். என் மனத்தில் எவ் வளவு சஞ்சலம் குடிகொண் டிருக்கிறது என்பதை அறிகிலே நீ— ஆயினும் அது ஒரு பெரி தல்ல.

ஹ. இல்லை, இளவரசே, அப்படி யாயின்—

அம. இது மூடத்தனமாம்; பெண்கள் மனத்தைக் கலக்க வல்ல ஓர் பேதமைக்குச் சமானமாம்.

ஹ. உமது மனமானது ஏதேனும் ஒன்றை வெறுத்திடின் அதற் குக் கீழ்ப்படிந்து நடவும். இங்கு அவர்கள் வருமுன் அவர் களை நான் கண்டு, உமக்குத் தேகம் சௌக்கியமில்லை யென்று கூறிவிடுகின்றேன்.

அம. வேண்டா மப்படி, சகுனத்தை நாம் கவனிப்ப தில்லை. ஊர்க் குருவி விழுவதற்கும் திரு உள்ளத்தின் நியமம் வேண்டும். இந்தச் சமயம் வருவதாயின் எப்படியும் நேர்ந்தே தீரும்; இச் சமயம் நேரிடாததா யிருந்தால் எப்படியும் நேரிடாது. வரு வது எப்படியும் வந்தே தீரும், நாம் சித்தமா யிருக்க வேண் டியதுதான் முக்கியம், விட்டுப் போவதை ஒருவரும் கொண்டு போவ தில்லை, அங்ஙன மிருக்க எவ்வளவு சீக்கிரம் போனால் தானென்ன?—வரட்டும்.

காலதேவன், கௌரீமணி, லீலாதரன், அசரன், மந்திரிகள்,
கத்திகேட்யங்களுடன் சேவகர்கள் வருகின்றனர்.

கா. வாராய் அம்லாதித்யா, வா இங்கு; இந்தக் கரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொள்.

[காலதேவன், லீலாதரன் கரத்தை அமலாதித்யன் கரத்தில் வைக்கின்றான்.]

அம. ஐயா, என்னை மன்னிக்க வேண்டும் தாங்கள். தங்களுக்கு நான் தவறிழைத்தேன். தாம் பெருந் தன்மையுடையவர் ஆதலால் அதனை க்ஷமிக்கவேண்டும். இங்கு சமுகத்திற்குத் தெரியும், தாமும் கேள்விப்பட்டிருக்கவேண்டும், பெரும் பயித்தியத்தினால் நான் பிடிக்கப்பட்டிருக்கின்ற விஷயம். நான் செய்ததில் எது எது தமது சுபாவத்திற்கும், பெருமைக்கும், ஆட்சேபனைக்கும், முரட்டுத்தனமாய் விருத்தப் பட்டதோ அதையெல்லாம் எனது பயித்தியத்தினாலுண்டானது எனப் பயிரங்கமாய்ச் சொல்லுகின்றேன். அமலாதித்யனா லீலாதரரை அவமானப் படுத்தியது? ஒருகாலும் அமலாதித்ய னன்று. அவனிடமிருந்து அமலாதித்யனை எடுத்து விட்டால், அவன் அமலாதித்யனாயில்லாத காலத்தில், லீலாதரரை அவமானப் படுத்தினால், அப்பொழுது அமலாதித்யன் அங்ஙனம் செய்ய வில்லையே; அமலாதித்யன் தான் செய்ய வில்லையென்று மறுக்கின்றான். பிறகு யார் செய்கிறது? அவனுடைய பயித்தியம். அவ்வாறானால் அமலாதித்யன் அவமானம் செய்யப்பட்ட கட்சியில் சேர்கின்றான். அவனுடைய பயித்தியமே அமலாதித்யனுடைய பகைவன் பாபம்! ஐயா, இந்தச் சபை முன்பாக நான் நிர்மானித்துத் தீங்கிழைத்தபடி யன்று என்று உறுதியாய்க் கூறுவதானது, தமது தயாளமான யோசனையில், வீட்டிற் கப்புறம் நான் விற்கொண்டு எய்ய, அந்த அம்பானது என் அண்ணன்மீது அகஸ்மாத்தாய்ப் பட்டதுபோல், என்னைக் குற்றத்தினின்றும் நீங்கினவனாகக் கருதல் வேண்டும்.

லீ. உலக விஷயத்தைக் கருதும் பட்சத்தில், நான் உம்மீது உடனே பழிவாங்க வேண்டிய காரண முடையவனா யிருந்தபோதிலும், நான் திர்ப்தி அடைந்துவிட்டேன். நான் எனது கௌரவத்தைக் கருது மிடத்து, இவ் விஷயங்க ளெல்லாம் நன்றா யறிந்த ஆன்றோர்கள், உனது பெயர் ஒன்றுங் கெடவில்லை, நீ சமாதானமாய்ப் போதல் ஒழுங்குதான், இப்படி நடந்த துண்டு, என்று எடுத்துக் கூறும் வரையில், உம்முடன் ஒற்றுமைப்படாதுதான் தனியா யிருக்க வேண்டிவருகிறது. அக்காலம் சம்பவிக்கும்வரையில் நீர் இப்பொழுது என்னிடம் பாராட்டுகின்ற அன்பை அன்பாகப் பாவிப்பேன், அதனை அவமதியேன்.

அம. அதை நான் மனப் பூர்வமாக ஒப்புக்கொண்டு இந்தச் சகோதரர்கள் பந்தயத்தை மனத்தில் ஒன்று மின்றி, விளையாடுகின்றேன்.—கொடுங்கள் எங்களுக்கு வாட்களை—வாரும்.

லீ எதோ, எனக் கொன்று.

அம. லீலாதரனே, வாள் யுத்தத்தில் என் அறியாமையானது கருக்கிருளானது நட்சத்திரத்தின் காந்தியை எடுத்துக் காட்டுந் தன்மைபோல், உமது அதி வீரத்தை அதிகமாய் எடுத்துக் காட்டும்.

லீ. ஐயா, என்னை ஏளனம் செய்கின்றீர் நீர்.

அம. இந்தக் கைமீ தாணை, அப்படி யல்ல.

கா. அவர்களுக்கு வாட்களை கொடு அசரா,— அப்பா, அமலாதித்யா, பந்தயம் இன்னதென்று தெரியு மல்லவா உனக்கு ?

அம. நன்றாய்த் தெரியும் அரசே, தாங்கள் பலஹீனமான பட்சம் விட்டுக் கொடுக்கும்படி செய்திருக்கிறீர்கள்.

கா. நான் அவ்வாறு பயப்பட வில்லை. நான் உங்க ளிருவரையும் பார்த் திருக்கின்றேன். இப்பொழுது அவன் தேர்ச்சி யடைந் திருப்பதனால் உனக்குக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தோம்.

லீ. இது அதிக் பளுவா யிருக்கின்றது, இன்னொன்று பார்க்கின்றேன்.

அம. இது எனக்கு வாட்டமா யிருக்கின்றது. இந்த வாட்களெல்லாம் ஒரே நிகளமிருக்கின்றனவா ?

[வாள் யுத்தம் செய்ய ஆயத்தமாகிறார்கள்.]

அச. ஆம், என் ஐயனே.

கா. அதோ அந்த மேஜையின்மீது மதுபானக் குவளைகளை வையுங்கள். அமலாதித்யன் முதல் வெட்டு அல்லது இரண்டாம் வெட்டில் ஜெயித்த போதிலும் அல்லது மூன்றும் வெட்டில் சரிசமானமாய்ப் போனபோதிலும், நமது கொத்தளங்களிலுள்ள பேரிகைகளெல்லாம் முழங்கட்டும். மகாராஜா அமலாதித்யன் ஜெயிக்க வேண்டி மதுபானம் செய்வார். நான்கு தலை முறையாக குர்ஜர மன்னர் கிரீடத்திலமைந்திருந்த முத்தைப்பார்க்கிலும் விலையுயர்ந்த ஒன்றை அந்தக் குவளையிலிட்டுக் குடிப்பார். கொடுங்கள் என்னிடம் அந்தக் குவளைகளை, “இப்பொழுது மகாராஜா அமலாதித்யன் பொருட்டு மதுபானம் செய்கிறார்” என்று கைமேளம் குழலுக்குக் கூறட்டும், குழலானது வெளியிலிருக்கும் பேரிகைக்காரனுக்குத் தெரியச்செய்யட்டும்; பேரிகைகள் ஆகாயத்திற்கும், ஆகாயமானது பூமிக்கும் தெரியப்படுத்தட்டும்.— வாருங்கள், ஆரம்பியுங்கள்.—மத்யஸ்தர்களே, நீங்கள் ஜாக்கிரதையாகக் கவனியுங்கள்.

அம. வாரும், ஐயா.

லீ. வாரும், அரசே.　　[அவர்கள் விளையாடுகிறார்கள்.]

அம. ஒன்று !

லீ. இல்லை !

அம. தீர்மானம்.

அச. வெட்டுதான், நல்ல வெட்டு.

லீ. சரி—வாரும் மறுபடியும்.

கா. பொறுங்கள், கொடுங்கள் மதுவை என்னிடம்—அமலாதித்யா, இந்த முத்து உன்னுடையது!—இதோ உனக்கு ஜெயமுண்டாகுக!

[குழல் சப்திக்கின்றது, உள்ளே பேரிகை முழங்குகின்றது.]

கொடுங்கள் அவனிடம் இந்தக் குவளையை.

அம. இம்முறை வரிசையை முன்பு முடிக்கின்றேன்; அப்படி ஒரு புறமாய்க் கொஞ்சம் வைத்து வையுங்கள் அதை.—வாரும்.

[அவர்கள் விளையாடுகிறார்கள்.]

இன்னொரு வெட்டு.—என்ன சொல்லுகின்றீர்?

லீ. சும்மா தொட்டது, தொட்டது, ஒப்புக் கொள்ளுகிறேன்.

கா. நமது மகன்தான் ஜெயிப்பான்.

கௌ. உடல் பெருத்திருப்பதால் அவனுக்குப் பெருமூச்சு வாங்குகின்றது.—இதோ அமலாதித்யா, என் குட்டையை வாங்கி உன் முகத்தைத் துடைத்துக்கொள். மகாராணி உனது ஜெயத்தைக் கோரி மதுபானம் செய்கின்றாள், அமலாதித்யா—

அம. சந்தோஷம் அம்மணி!

கா. [ஒருபுறமாக] கௌரீமணி, குடியாதே!

கௌ. நான் குடிப்பேன் பிராணநாதா, என்னை மன்னியும், நான் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

கா. [ஒரு புறமாக] விஷங் கலந்த குவளையது! இனி மிஞ்சிவிட்டது!

அம. இதற்குள் மதுபானஞ் செய்யத் தைரியமில்லை அம்மணி; சற்றே பொறுத்தாகட்டும்.

கௌ. இப்படி வா, உனது முகத்தைத் துடைக்கின்றேன்.

லீ. அரசே, இப்பொழுது அவரைக் குறிப்படுத்துகின்றேன்.

கா. நான் நினைக்க வில்லை அப்படி.

லீ. [ஒரு புறமாக] ஆயினும் இது என் மனச்சாட்சிக்கு விரோதமாகும்.

அம. வாரும் மூன்றாம் தரம் லீலாதரரே. நீர் வேடிக்கை பண்ணுகின்றீர், உமது பல முழுவதும் கண்டு வீசும், நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்; எனக்கொன்றும் தெரியாதென்று ஏளனம் செய்கிறீர் என எண்ணுகின்றேன்.

லீ. அப்படியா சொல்லுகின்றீர்? ஆனால் வாரும்.

[விளையாடுகிறார்கள்.]

அச. ஒன்று மில்லை இரு புறமும்.

லீ. ஆனால் இதை வாங்கிக்கொள்ளும்!

[லீலாதரன் அமலாதித்யனைக் காயப்படுத்துகிறான், பிறகு பிரிக்கப்படும்பொழுது அவர்கள் கத்திகளை மாற்றிக் கொள்ளுகிறார்கள்.]

கா. விலக்குங்கள் அவர்களை! அவர்களுக்குக் கோபம் மூண்டு விட்டது.

அம. இல்லை— வாரும் மறுபடியும்!

[அமலாதித்யன் லீலாதரனைக் காயப்படுத்துகிறான்; மகாராணி கீழே விழுகிறாள்.]

அச. அதோ! மகாராணியைப் பாருங்கள்!— நிறுத்துங்கள்!

ஹ. இருவருக்கும் காயம்பட்டு இரத்தம் வடிகின்றது!—அரசே, எப்படி யிருக்கின்றது?

அச. லீலாதரரே, எப்படி யிருக்கின்றது?

லீ. ஏன்! நான் வைத்த புலனுக்கு நானே இரையாய் அகப்பட்டேன் அசரா; என்னுடைய மோச காரியத்தால் நான் தர்மத்தின்படி கொல்லப்படுகின்றேன்.

அம. மகாராணி எப்படி யிருக்கிறார்கள்?

கா. அவர்களுக்கு இரத்தம் வருவதைக் கண்டு மூர்ச்சையாயி ஞள்.

கௌ. இல்லை! இல்லை!—அந்தப் பானம்—பானம்,—கண்ணே! அமலாதித்யா!— அந்தப் பானம்—பானம்!— எனக்கு விஷம் கொடுத்துவிட்டார்கள்! [மடிகின்ருள்.]

அம. ஹா! மோசம்!— ஆஹா! சாற்றுங்கள் கதவை! இந்த மோசத்தை உடனே கண்டுபிடிக்க வேண்டும்!

லீ. இதோ இருக்கின்றது அது அமலாதித்யா! அமலாதித்யா, நீ கொல்லப்பட்டாய்! உலகத்திலுள்ள எந்த ஔஷதமும் உன்னைக் குணப்படுத்தாது. உன் உயிர் இன்னும் அரை நாழிகையும் நிலைத்திராது. மோசம் விளைத்த ஆயுதம் உன் கரத்தி லிருக்கின்றது, கூர் மழுங்கப்படாது — விஷம் தடவப் பட்டு!—நான்செய்த சூது என்மீதே திருப்பிக்கொண்டது. ஐயோ! இதோ நான் வீழ்ந்து கிடக்கின்றேன்.— இனி எழப் போகிற தில்லை. உன தாயார் விஷத்திஞல் கொல்லப்பட்டாள்!— இனி என்னல் முடியாது.— அரசன்!— அரசன் தான் அத்தனைக்குங் காரணம்!

அம. முனையில் விஷம் இருக்கின்றதா! ஆனல் விஷமே! உன் வேலையைப் பார்!

[மகாராஜாவைக் குத்திக் காயப் படுத்துகின்ருன்.]

எல்லோரும். இராஜத்துரோகம்! துரோகம்!

கா. ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்! நண்பர்களே!— எனக்குக் காயம்தான் பட்டிருக்கின்றது!

அம. இதோ பழிக் கஞ்சா விபசாரக் கொலைபாதகனை குர்ஜரனே! குடி இந்தப் பானத்தை! உன்னுடைய முத்தம் இருக்கின்றதா இங்கு? போ என் தாயாரைப் பின் தொடர்ந்து!

[அரசன் இறக்கின்ருன்.]

லீ. அவனுக்குத் தக்க கதியே கிடைத்தது! அது அவனல் சித்

தஞ் செய்யப்பட்ட கொடு விஷமே! அமல ஆதித்யா! நாம் ஒருவரை யொருவர் மன்னித்துக்கொள்வோம்.— என்னையும் என் தந்தையையும் கொன்ற பழி உன்னைப் பிடிக்கா திருக்குமாக! உன்னைக் கொன்றபழி என்னைத் தொடரா திருக்குமாக! [இறக்கின்றான்.]

அம. ஈசன் அப்பழியினின்றும் உன்னை விடுவிப்பாராக! நானும் உன்னைத் தொடருகின்றேன்—நானிறந்தவனே! ஹரிஹரா!— துரதிர்ஷ்டம் பிடித்த அரசியே! எனக்கு விடை யளியும். ஐயோ! இங்கு நடந்ததை யெல்லாம் கண்டு, முகம் வெளுத்து, நடு நடுங்கி, வாய் திறவாது, வாளா பார்த்து நிற்கும் உங்களுக்கு—எனக்குக் காலம் மாத்திரம் இருக்குமாயின்!— ஐயோ! எல்லாம் நான் எடுத் துரைப்பேன்!— காலன் கால் நிமிஷமும் காத்து நிற்கமாட்டானே!—அது இருக்கட்டும். ஹரிஹரா, நான் இறந்தவனே, நீ ஜீவித் திருக்கின்றாய், திருப்தி அடையாதவர்களுக்கெல்லாம் என்னைப்பற்றியும் நான் மேற்கொண்ட காரியத்தைப்பற்றியும் உண்மையை எடுத் துரைப்பாய்.

ஹ. அதை நம்பவேண்டாம் ஒரு பொழுதும், நீர் இறந்தபின் நான் இருப்பேன் என்று எண்ணுகிறீர், துர்ஜரத்தா னாயினும் நான் ஒரு க்ஷத்திரியனே, இதோ இன்னும் கொஞ்சம் மது இருக்கின்றது!

அம. நீ ஒரு ஆண் பிள்ளையானால்—அந்தக் குவளையைக் கொடு என்னிடம்!—விடு அதை!—ஈசன் தடுத்தாலும் அதை நான் பெற வேண்டும்!—அப்பா, ஹரிஹரா, இவ்விதமே, இவ் விஷயங்களின் உண்மை வெளியாகாவிட்டால் எனக்குப் பிற்காலம் என் பெயர் எவ்வளவு புண்பட்டதா யிருக்கும்! உனது ஹிருதயத்தில் என்னை உனது நண்பனென நீ பாவித்தது உண்மை யானால், உலக சுகங்களினின்றும் சற்றே விடை பெற்றவனாய் எனது சரித்திரத்தைக் கொடுமையான இவ்வுலகத்திற்

குத் தெரிவிக்கும் கஷ்டத்தை மேற்பூணுவாய்.—

[வெளியில் யுத்த கோஷம், பேரிகை முழக்கம்]

என்ன யுத்த முழக்கம் இது ?

அச. பாலெ நாட்டினின்றும் பார்த்திபநேசன் ஜெயத்துடன் வந்தவனாய் சிங்களத்திலிருந்து வந்த ராயபாரிகளுக்கு இந்த யுத்த முழக்கத்தைத் தருகின்றான்.

அம. ஆ ! நான் சாகின்றேன் ! ஹரிஹரா ! அக்கொடிய விஷமானது என் ஆவியைக் குன்றச் செய்கின்றது. சிங்களத்திலிருந்து வந்த சமாசாரத்தைக் கேட்குமளவும் என் உயிர் நிலைத்திராது ! ஆயினும் பார்த்திபநேசனைத்தான் ஜனங்கள் கோருவார்களென்று எனக்குத் தோற்றுகிறது. சாகும்பொழுது என் வாக்கினால் அதை நான் ஒப்புக்கொண்டதாக அவனிடம் சொல்லுவாயாக,—நடந்த விஷயங்களையும், அதிகமோ குறைவோ, அவைகளின் காரணத்தையும்,—மற்றதெல்லாம் மௌனம் ! [மரிக்கின்றான்.]

ஹ. அந்தோ ! உடைகின்றதே உத்தமமான ஓர் ஹிருதயம் !— என் இனிய அரசே, ஏகுவீர் சுவர்க்கம், இந்திரன் முதலிய தேவர் உம்மை எதிர்கொண்டழைத்துச் செல்வாராக தெய்வலோகம் !—யுத்த பேரிகை இங்கேன் முழங்கி வருகின்றது ?

[உள்ளே படைவீரர் நடையொலி.]

பார்த்திபநேசன், சிங்களத்து ராயபாரிகள், மற்றவர்கள் வருகிறார்கள்.

பா. எங்கே யிந்தக் கோலம் ?

ஹ. எதைக் காண விரும்புகின்றீர் ? அவலமும் ஆச்சரியமுமான விஷயமாயின், அதைத் தேடுவதை இனி விடலாம்.

பா. பிணக்களம்போல் பட்டுக் கிடக்கின்றனரே !—கடுநெஞ்சுடை நமனே ! அறிவிலா உனது ஊரில் நடக்கும் எந்த விருந்தின் பொருட்டு இத்தனை அரச வம்சத் துயிர்களை ஒரே அடியில் உதிரம் சிந்த அடித்து அழைத்துக் கொண்டு போயினை ?

மு-ரா. பார்ப்பதற்கே பயங்கரமா யிருக்கின்றது. சிங்களத்திலிருந்து செய்தி காலம் கடந்து வந்து சேர்ந்தது. அவரது கட்டளை பூர்த்தி செய்யப்பட்டு ராஜகாந்தனும், கிரிதரனும் மடிந்தனர் என்கிற விஷயத்தை கேட்கத்தக்க செவிகள் கேட்குஞ் சக்தி யற்றுக் கிடக்கின்றன. நாங்கள் வந்தனம் பெறுவதெங் விட மிருந்து ?

ஹ. உங்களுக்கு வந்தனம் செய்ய வல்லமை வாய்ந்ததாயினும், அவரது வாயினின்றும் அதைப் பெறமாட்டீர் நீர். அவர்களைக் கொல்லும்படி அவர் கட்டளை யிடவே யில்லை. சாக்காடாம் இவ் விஷயத்தில், சரியான சமயத்தில், நீங்கள் பால தேசத்துச் சண்டையி னின்றும், நீர் சிங்களத்தி னின்றும், இங்கு வந்து சேர்ந்திருக்கிறபடியால், உயர்ந்த வோ ரிடத்தில் பலர் காணும் வண்ணம், இப் பிரேதங்களை வைத்திடும்படி உத்தரவு செய்யும். இவைகளெல்லாம் எங்ஙனம் நேர்ந்ததென இன்னும் அறியாத உலகத்தினர்க்கு நான் தெரிவிக்கின்றேன். அப்பொழுது நீங்கள் பிரகிர்திக் கேலாத கோரமான கொடுஞ் செய்கைகள், அகஸ்மாத்தாய் நேரிட்ட கொடுங் கொலைகள், தெய்வீகமாய் நடந்தேறிய பழி தீர்ப்பு, கபடத்தால் இழைக்கப்பட்ட மரணங்கள், உந்தப்பட்ட காரணங்களால் உண்டான உயி ரழிவுகள், இந்தக் களேபரத்தில் எண்ணங்கள் சரியா யறியப்படாது உண்டுபண்ணினவன் தலைமீதே உடைந்து வீழ்ந்த விஷயங்கள், முதலியவை யெல்லாம் கேட் டறிவீர் ; இவற்றை யெல்லாம் நான் உண்மையாய் உரைக்கக் கூடும்.

பா. அதைக் கேட்டிட நாம் விரைந்திடுவோம் ; அதன் பொருட்டு எல்லா உத்தம சிலர்களையும் வரவழைப்போம். என் விஷயத்தில், எனக்கு நேரிட்ட அதிர்ஷ்டத்தை நான் விசனத்துடனேயே வகிக்கின்றேன்; இந்த இராஜ்ஜியத்தில் எனக்குக் கியாபகமிருக்கிறபடி எனக்குச் சில சுதந்தரங்கள் உண்டு ; என் அதிர்ஷ்டமானது அதை நான் அடையும்படி என்னை இப்பொழுது வரிக்கின்றது.

ஹற. இனி தானகத் தரணியில் பேச ஏலாத அவர் வாயினின்றும் கேட்டபடி அவ்விஷயத்தைப் பற்றியும் நான் பேசவேண்டி யிருக்கிறது. மனிதர்களுடைய மனமெல்லாம் மருண்டு கிடக்கும் பொழுதே, இவ்விஷயம் முதலில் உடனே முடித்தாகட்டும், கலகங்களும் குற்றங்களும் இன்னும் நேரிடாவண்ணம்.

பார. மண்டபத்திற்கு, நான்கு சேனைத் தலைவர்கள் மகாராஜாவுக்குரிய மரியாதையுடன் அமலாதித்யரை எடுத்துச் செல்லட்டும். அவர் இவ்வரசை அடைந்திருந்தால், அருங்குணமுடைய அரசனாய் ஆண்டிருப்பார் என்பதற் கையமில்லை. ஆகவே அவரது பிரேதத்தை எடுத்துச் செல்லுங்கால் வீர சுவர்க்க மடைந்தவர்கட் குரிய சடங்குகளும் சங்கீத ஒலியும், அவரது புகழை எத் திக்கிலும் பரவச் செய்யட்டும். பிரேதங்களை எடுங்கள்.— இத்தகைய காட்சியானது படுகளத்திற்கே ஏற்றதானது, இவ்விடத்திற்கு அதிகப் பொருத்த மின்மையாய்த் தோற்றுகின்றது. நீங்கள் போய்ப் படை வீரர்களை பேரிகைகளை முழங்கும்படி சொல்லுங்கள்.

[பிரேதங்களைத் தூக்கிக்கொண்டு எல்லோருமாகப் போகிறார்கள்; அதன் பிறகு பேரிகைகள் முழங்கப்படுகின்றன.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY